# காந்திமதியின் கணவன்

If you want more free e-Books
https://telegram.me/tamilbooksworld



விக்கிரமன்

Click & Join - https://t.me/tamilbooksworld

www.pustaka.co.in

If you want more free e-Books

http://www.pustaka.co.in

# காந்திமதியின் கணவன்

## Ganthimathiyin Kanavan

Author:

கலைமாமணி விக்கிரமன்

## Kalaimamani Vikiraman

For more books

http://www.pustaka.co.in/home/author/vikaraman

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

1. உடன் பிறவாச் சகோதரி

2. வெற்றி கூறுமின்

3. உள்ளொன்று வைத்து ....

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

4. சுருதியும், இசையும்

5. மாநகர்க்கு ஈந்தார் மணம்

6. காதோடு ரகசியம்

7. தாமோதரன் யோசனை

8. அது என்ன ரகசியம்?

9. சீதாவின் கணவன்

10. பாட்டு முடியும் முன்னே...

11. அண்ணா வந்தார்

12. எரிகிறதே தீ

13. கனவும் கல்யாணமும்

14. தோழியின் கணவன்

15. புஷ்பக விமானம்

16. தப்பிய இரை

17. மருந்தும் மனமும்

18. பாடும் மணிகள்

19. ஊருக்கு ஒரு கும்பிடு

20. வழக்கு முடியுமுன்னே...

21. யோகீஸ்வரர் அருள்வாக்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

22. நல்ல காலம் வருகிறது

23. யோகீஸ்வரர் வாக்கு

24. தேவியின் சித்தம்

1

# உடன் பிறவாச் சகோதரி

“எனக்குத் தெரியாதா, சீதா கையை எடு” என்று காந்திமதி கூறினாள். அவளுடைய ஒரு கரம் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூட மற்றொரு கரத்தால் சீதாவின் கரத்தை மெல்ல நீக்கினாள்.

“ஆமாம் உன் கண்ணைப் பொத்தியது நான்தான் என்று உனக்கு எப்படித் தெரிந்ததடீ காந்தி? கமலி, ஜானு, உஷா, மங்கையர்க்கரசி வேறு யாராவதாக இருக்கக் கூடாதா?” என்று கூறிக்கொண்டே காந்திமதியின் எதிரே அமர்ந்தாள் சீதா.

“என் கண்களை மூடுமளவுக்கு நெருங்கிய சிநேகிதி நீதானே சீதா! உன்னைத் தவிர வேறு யார் அவ்வளவு உரிமையுடன் என் வீட்டிற்கு, இந்த மூன்றாம் கட்டுக் குகைக்கு வந்து கண்ணை மூடி விளையாடுவார்கள்?” என்று காந்திமதி சொல்லி மெல்ல நகைத்தாள், தன் இதயத்தில் அழுத்துகின்ற உணர்ச்சியை முகத்தில் பிரதிபலிக்காமல் மாற்ற முயன்று.

“ஆகா எனக்குத் தெரியுமே! நீ பாரதியார் கட்சி என்று”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்றாள் சீதா.

"எதற்குச் சொல்கிறாய் சீதா? பாரதியார் கட்சி என்று ஒன்று புதிதாகப் புறப்பட்டிருக்கிறதா?" என்று காந்தி கேட்டாள்.

"அதில்லைடி கானகத்தில் இராமர் அமர்ந்திருக்கிறர். சீதை பின்பக்கமாக அவர் கண்களை மூடுகிறாள். 'யாரது?' என்று கேட்கிறார் இராமர். சீதாதேவி சிணுங்கி,'யாரது என்று கேட்கிறீர்களே? என்னைத் தவிர தங்கள் கண்களை மூட யார் இருக்கிறார்கள்?' என்றாளாம். ஆனால் மகாகவி பாரதியாரோ கடற்கரையில் அமர்ந்திருக்கும் காதலன் ஒருவனைச் சிருஷ்டிக்கிறார். அவன் காதலி கண்ணம்மா வந்து கண்களை மூடும் போது, கண்ணம்மா கையை எடு' என்று அவன் கூறுகிறான் கண்ணம்மாவைத் தவிர தன் கண்களை மூடும் உரிமை வேறு யாருக்கு இருக்கும் எனும் துணிவுடன், இப்போது விளங்குகிறதா? நீ பாரதியார் கட்சி என்று" என்றாள்.

காந்திமதி சீதாவின் கன்னத்தை மெல்லத் தட்டி,"சீதா! நீ நல்ல மேடைப் பிரசங்கியாகலாமடீ! நிறைய இலக்கியங்களைப் படிக்கிறாய். எனக்கு எங்கே முடிகிறது?" என்றாள்.

சீதா அவள் முகவாயை மெல்ல வருடி,"நான் ஆராய்ச்சி செய்கிறேன் என்றால் நீ சங்கீதம் பயில்கிறாய் நடனம் கற்றுக் கொள்கிறாய். அதில் மேதையாகி விடுவாய்"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்றாள். இருவரும் கலகலவென்று நகைத்தனர்.

சீதாவும், காந்திமதியும் ஒரு வயதுத் தோழிகள். ஒரே பள்ளிக் கூடத்தில் எஸ்.எஸ்.எல்.சி படிப்பை முடித்துப் பரீட்சை எழுதியவர்கள். சீதாவின் தகப்பனார் பிரபல காண்ட்ராக்டர். சீதா பள்ளிக்கூடம் வருவதும் காரில் தான். காலையில் ஓர் உடை பகல் உணவுக்கு வீட்டிற்குப் போய் விட்டுத் திரும்பி வரும்போது வேறு உடை. காரில் வரும் போது காந்திமதியையும் அவள் அழைப்பாள். வீட்டில் கொண்டு விட்டு விட்டுப் போவதும் 'ஓரிரு நாள்' அப்படியே நடந்தது. ஆனால் காந்திமதியின் அண்ணன் அதை ஆட்சேபிக்கவே காந்திமதி காரில் வருவதை நிறுத்திக் கொண்டாள். "நமக்கு எதற்கு காந்தி கார் - ஏரோப்ளேன் எல்லாம்? உனக்குத் தெரியுமோ தெரியாதோ, நான் மவுண்ட் ரோட்டிலிருந்து எழும்பூர் ஸ்டேஷனுக்குத் தினமும் நடந்தே வருகிறேன், நடந்தே செல்கிறேன். எப்போதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். இது விஷயங்களுக்கு ஆடம்பரம் கூடாது" என்று அண்ணன் கூறியதிலும் நியாயம் இருந்ததாகவே பட்டது காந்திக்கு. தனக்காகவே அண்ணன் சிக்கனம் பிடித்துக் கஷ்டங்களை மேற்கொள்கிறான் என்பதை அவள் அறியாமலிருப்பாளா? தாய் தந்தையற்ற தன்னை ஒருவிதத் துன்பமும் தெரியாமல் வளர்க்க அவன் படும்பாடு காந்திமதிக்குப் புரியாதா என்ன? முப்பது வயதைத் தாண்டப் போகும் அவன் கல்யாணம் செய்து கொள்ளாததும் எதற்காக?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

'காந்திமதியின் கல்யாணத்தை முடித்து அவளைத் தக்கவர் வீட்டிற்கு அனுப்பிய பிறகு தான் எனக்குக் கல்யாணம்' என்று பெண் கொடுக்க வருபவர்களிடம் அழுத்தமாகவும் கூறுவது எதற்காக -

காந்திமதியின் கல்யாணம் நடக்க வேண்டுமானால் குறைந்தது மூவாயிரம் ரூபாயாவது வேண்டும். அவன் ஐந்து வருடங்களாக சேமித்து வந்த மொத்த பணம் பாங்கியில் சேர்ந்திருப்பது எழுநூறு கூட இல்லை. ஒரு வேஷ்டி உடுத்தி மறு வேஷ்டியைத் துவைத்து உலர்த்தி வைக்கும் நிலை தான். பகல் டிபன் அரை மைல் தூரம் நடந்து ஒரு தண்ணீர்ப் பந்தல் ஓட்டலில் இரண்டனா தயிர் சாதம் தான்! காந்திமதியை உபாத்தியாயினி வேலைக்குப் படிக்க வைத்து அவள் ஓரிரு வருடங்கள் வேலை பார்த்தால் குறைந்தது ஆயிரமாவது சேர்ந்துவிடும். பிறகு 'ஜாம் ஜாம்' என்று கல்யாணம் செய்துவிடலாம் என்று காந்திமதியின் சகோதரன் கோட்டை கட்டினான். நல்ல கோட்டை தான். கருங்கல் கோட்டை தான். அண்ணாவின் விருப்பப்படி தான் காந்திமதி நடப்பாள்.

சீதாவைத் தவிர காந்திமதிக்குப் பல சிநேகிதிகள் உண்டு. காந்திமதியின் நிலையைப் போன்ற வசதியுடையவர்களும் உண்டு. என்றாலும் அந்தப் பள்ளிக்கூடத்தில் பணக்காரர்கள் வீட்டுப் பெண்கள் தாம் அதிகம் கல்வி கற்றனர். நாள்தோறும் விதவிதமான உடையணிவதைப் பற்றியே எப்போதும் பேசிக்கொள்ளும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவர்கள் கோஷ்டியில் காந்திமதிக்குப் பிடிமானம் இல்லாது போனதில் வியப்பில்லை. அதனால் சீதா தான் அவள் இதயத்திற்கு ஏற்ற தோழி ஆனாள். சீதாவும் தன் அந்தஸ்தைக் குறுக்கே நிறுத்தாமல் காந்திமதியின் வீடுதேடி வருவாள்.

காந்திமதி குடியிருக்கும் வீட்டில் ஏழெட்டுக் குடித்தனங்கள். இரண்டு கட்டு வீடு. முன் கூடம், தாழ்வாரத்தில் இரண்டு குடித்தனம். பின் கட்டில் மூன்று. காந்திமதி குடியிருந்தது கிணற்றருகே. அறைக்குள் அறை உள்ள சிறு இடம். போதுமே. அதுவே பன்னிரண்டு ரூபா! வருமானத்தில் பத்துச் சதவீதம் தான் வாடகை ஒரு மனிதன் தரலாம் என்ற பொருளாதார நிபுணர்கள் கூறுவது காந்திமதியின் சகோதரனைப் பொருத்தவரை சரிப்பட்டு வருவதில்லை. என்ன ஆனாலும் அவனுக்கு அந்த வாடகை சிக்கனமாகத் தான் காட்சியளித்தது. காந்திமதி என்னதான் நவ நாகரிகக் கோலங்களில் சிக்காமல் தியாகம் செய்தாலும் மாதம் அவள் வரையில் ஐந்து ரூபாயாவது செலவாகி விடும். ஒரு 'பௌடர்' ஒரு சோப்பு கூட இல்லாமல் ஒரு வாழ்க்கையா?

"நான் வரும்போது என்ன வைத்துக் கொண்டிருந்தாய் காந்திமதி? என்னிடம் கூடக் காட்டாமல் மறைத்து எழுத்து வைத்துவிட்டாயே?" என்று கேட்டாள் சீதா.

காந்திமதி இதுவரை சீதாவிடம் எதையும் மறைத்தது கிடையாது. தன் வீட்டுக் கஷ்ட நஷ்டங்கள், துயரங்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அனைத்தையும் சீதாவிடம் சொல்லத் தயங்கமாட்டாள். 'ஏதாவது கஷ்டமென்றால் நான் உதவ மாட்டேனா காந்தி? என்னிடம் ஏன் சொல்லக் கூடாதா' என்று சீதா கேட்பாள். உதவி கேட்டுப் பெற்றால் தன் சகோதரன் சுட்டுவிடுவான் சுட்டு என்பது காந்திமதிக்குத் தெரியாதா? அதனால் அவள் சீதாவிடம் குறையைச் சொல்வாளேயன்றி அதற்கு உதவியைப் பெறமாட்டாள்.

அன்று சீதாவிடம் காந்திமதி படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மறைத்தது உண்மை தான். சினிமா நடிகைகளின் வாழ்க்கை வர்ணனையும் அவர்களுடைய புகைப்படங்களும் நிறைந்த புத்தகம் அது. ஒவ்வொரு நடிகையின் விசித்திர உடையலங்காரங்களையும், உடலலங்காரங்களையும், அவள் பலமுறை பார்த்து ரசித்தாள். அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஆவலுடன் படித்தாள்.

இவ்வளவு நாள் இல்லாத புதிய மாறுதல் அவளுள்ளத்தில் இப்போது தான் உதயமாகியிருந்தது. அதைச் சீதாவிடம் சொல்வதற்கு அவளுக்கு ஏனோ மனம் வரவில்லை. ஆனால் சீதாவோ அதற்கு நேர்மாறாக ஒரு சந்தோஷ சமாசாரத்தை காந்திமதியிடம் சொல்ல ஓடோடி வந்திருந்தாள்.

காந்திமதி பேச்சை மாற்ற விரும்பி,"சீதா, எங்கோ ஊருக்குப் போகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாயே போகவில்லையா?" என்று கேட்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சீதாவும் அவள் மறைத்த புத்தகத்தைப் பற்றிக் கேட்பதை மறந்து,“ஊருக்குப் போவதாகத் தான் இருந்தது, ஆனால் அது கடைசி நிமிடம் ‘கான்ஸல்’ ஆகிவிட்டது” என்றாள்.

“ஏன் அப்படி?”

“அதைச் சொல்லத்தானே நான் ஓடோடி வந்தேன்.”

“ஓடோடி வந்தாயா? முதல் கட்டு முற்றத்துப் பாசியில் வழுக்கி விட்டிருக்குமே?” காந்தி! இப்படிக் கேட்கவும் சீதா கன்னங்குழியச் சிரித்தாள். பிறகு,“காந்தி, ஒரு சந்தோஷச் சேதியைச் சொல்வதற்காக நான் வந்திருக்கிறேன். வெளியே போகலாம் வருகிறாயா? கோயில் வரை போகலாமே” என்று அழைத்தாள்.

“அண்ணா ஆபீசிலிருந்து எப்போது வருவான் என்று தெரியவில்லை. இருக்கட்டும் பூட்டி சாவியை வாசல் மாமியிடம் கொடுத்துவிட்டு வருகிறேன்” என்று காந்திமதியும் கிளம்பினாள்.

அவளிடமிருந்து சாவியை வாங்கிக் கொண்ட வாசல் வீட்டு மாமி அவர்கள் போனபிறகு எதிர்த்த போர்ஷனில் இருந்தவளிடம் கூறினாள்! “காலா காலத்தில் கல்யாணத்தைச் செய்து கொண்டு குடித்தனம் பண்ணும் வயசாச்சு.” அதற்கு அவள் பதில் கூறினாள்: “இவள் வயதில் எனக்குக் கல்யாணம் ஆகிக் குழந்தையும் பிறந்து விட்டது.”

“காந்தியின் அண்ணனுக்கு அந்த நினைவே இல்லை.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தங்கைக்கு வயது ஆகிக்கொண்டே வருகிறதே, சட்டு புட்டுன்னு வரன் பார்ப்போம் என்ற நினைவே இல்லை."

"அப்பா அம்மா இல்லாத பொண்ணு என்றாலே இந்தக் கஷ்டம் தான்" என்று மிகவும் அங்கலாய்ப்பவள் போல் பேசினாள். காந்திமதியின் காதிலும் கடைசி வார்த்தை விழுந்தது. கல்யாண நினைவு அவளுக்கு மட்டும் கிடையாதா? அவள் அண்ணனும் அதற்கு முயற்சி செய்யாமலா இருக்கிறான்? இவர்கள் ஏன் இப்படி வாய் புளித்ததோ - மாங்காய்ப் புளித்ததோ என்று பேசுகிறார்கள் என்று வருத்தப்பட்டுக் கொண்டாள் காந்திமதி.

சட்டென்று அவள் சீதாவைக் கேட்டாள்: "உனக்கு என்ன வயது சீதா இப்போ?"

"ஏன்? பத்தொன்பது முடியப்போகிறது. உனக்கு?"

"உன்னைவிட ஒரு வயதுப் பெரியவள்"

சிறிது நேரம் அவர்களிடம் மௌனம் நிலவியது. காந்திமதியே பேச்சை ஆரம்பித்தாள்: "சீதா, உனக்கு எப்போது கல்யாணம்?"

அவள் கண்கள் சுவரில் ஒட்டப்பட்டிருந்த புது சினிமா போஸ்டரை நோக்கின. அதில் பிரபல நட்சத்திரம் மஞ்சுளாவும், நடிகர் நாராயணனும் சேர்ந்து ஒரு படகில் செல்வதைப் போன்ற காட்சி. வண்ணங்களைக் கொட்டி அச்சிட்டிருந்தார்கள் அந்தப் போஸ்டரை.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“காந்தி! திடீரென எப்படி என் கல்யாணத்தைப் பற்றிக் கேட்டாய்?” என்றாள் சீதா.

“என்னவோ கேட்கவேண்டும் போல் தோன்றியது.”

“அதைக் கூறத்தானே நான் வந்தேன் காந்தி! நாளை மாலை பெண் பார்க்க வருகிறார்கள். உன்னை அழைத்துப் போகத்தான் நான் வந்தேன்!”

காந்திமதிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. சீதா விளையாட்டாகக் கூடப் பொய் சொல்லமாட்டாள். சீதாவுக்குக் கல்யாணம்! மேல் படிப்பு படிக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாளே திடீரென இப்படி முடிவு ஆனதற்குக் காரணம் என்ன?

“காந்தி! ஏனடி ஏதும் பேசாமல் ‘கப்சிப்’ என்றாகி விட்டாயே. முன்பு நான் கூறிய வாக்கை மீறுவதாக எண்ணுகிறாயா?” என்றாள் சீதா.

முன்பு ஒரு முறை வேடிக்கையாக இருவரும் மணவாழ்க்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். காந்திமதியின் கல்யாணத்திற்காக அவள் சகோதரன் பணம் சேர்க்கச் சிரமப்படுவது சீதாவுக்குத் தெரியும். அதனால் அவள்,“உனக்குக் கல்யாணம் ஆகாமல் நான் மட்டும் செய்து கொள்ள மாட்டேன்” என்று கூறியிருக்கிறாள். இப்போது சீதாவுக்குப் பெண் பார்க்க வருகிறார்கள்!

“சீதா! என்ன இது திடீரென்று பெண் பார்க்கும் படலம்?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்னென்னவோ நீ என்னிடம் சொன்னாயே. அதெல்லாம் என்ன ஆச்சு?" என்றாள் காந்திமதி. அவள் விளையாட்டாகத்தான் அப்படிக் கேட்டாள். பெண் பார்க்க வருவது - மாப்பிள்ளையை ரகசியமாக ஓரக்கண்ணால் பார்ப்பது - கல்யாணப் பேச்சு எல்லாவற்றையும் பற்றிப் பேசிக் கேட்கவேண்டும் போல் ஒருவித உணர்ச்சிகரமான மனப்பான்மை அவளுக்கு எழுந்தது.

"நீ இப்படிக் கேட்பாய் குத்திக் காட்டுவாய் என்று எனக்குத் தெரியும். நான் என்ன செய்வேன்? உன்னால் அண்ணா சொல்லை எப்படித் தட்டமுடியாதோ, அதுபோல் என்னாலும் அப்பா இட்ட கோட்டைத் தாண்ட முடியாது!" என்று சீதா கூறும்போது அவள் நெஞ்சைத் துக்கம் அடைத்தது.

சீதா அவர்கள் வீட்டில் செல்லப்பெண் தான். நான்கு சகோதரர்களுக்குப் பிறகு தவம் இருந்து பிறந்த பெண் குழந்தை. பெண்ணாகப் பிறக்கிறதே என்று சிலர் வருத்தப்படுவார்கள். சீதாவின் தாய் அம்மணி எல்லாம் பிள்ளைக் குழந்தையாகப் பிறக்கிறதே என்று வேதனைப்பட்டாள். தெய்வங்களை வேண்டினாள் என்று சொன்னால் எல்லாரும் ஆச்சரியப்படுவார்கள். எப்படியோ தவம் பலித்துப் பெண்ணாக அந்தக் குடும்பத்திற்கு சீதா பிறந்தாள். அன்பு என்றால் அதை மழையாகவே அவள் மீது அந்த வீட்டில் பொழிந்தார்கள். அவள் பிறந்த பிறகு தான் அவள் தந்தைக்கு ஒரு காண்டிராக்டில் நல்ல இலாபம் கிடைத்தது. அதன் பிறகு எல்லாம் அந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீட்டில் சீதாவின் அதிகாரம் தான் அன்பு ஆட்சி தான். ஆனால் சீதா - தகப்பனார் பேச்சை மீறமாட்டாள். எதிர்த்துப் பேசத் தெரியாது. காந்திமதியைத் தவிர நெருங்கி ஒருவருடனும் பழகவும் தெரியாது.

“என்னம்மா சீதா! ஜட்ஜ் வீட்டு சங்கரி டாக்டர் வீட்டு வள்ளி வக்கீல் வீட்டு வகுளம் எல்லாம் உன் வகுப்பில் படிக்கிறார்களே, அவர்களை விட்டு விட்டு காந்திமதியை அவ்வளவு உயிருக்கு உயிராக பாவிக்கிறாயே!” என்பார் அவள் தந்தை.

“வேண்டுமானால் நாளையிலிருந்து அவளுடன் பழகாமல் இருந்துவிடுகிறேன் அப்பா!” என்று நகைத்தவாறு கூறுவாள் சீதா.

“அடடே… அதற்குச் சொல்லவில்லையம்மா! எனக்கு எதற்கு உன் ‘பிரண்ட்ஷிப்’பைப் பற்றிய கவலை? ஏழைகளுடன் அதிகம் பழகக் கூடாதம்மா. தங்களுக்கும் நம்மைப் போன்ற வசதியில்லையே என்று மனம் புழுங்குவார்கள். ஒருவேளை பொறாமையாகக் கூட மாறலாம். ஹ_ம் அதற்காகச் சொன்னேன். காந்திமதி அப்படிப்பட்ட பெண் இல்லையென்றால் ரொம்ப சந்தோஷம்” என்று கூறிவிடுவார் அவள் தந்தை.

அவ்வளவு செல்லமாக வளர்க்கப்படும் சீதாவும் தந்தை கூறிய எந்த வார்த்தைக்கும் மாறுதல் கூறமாட்டாள். இப்போது அவளுக்குத் திடீரென மணமகனைத் தேடி ‘பெண் பார்க்கும்’ படலத்தை நடத்துகிறார் என்றால் சீதா

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அதற்கு எதிர்ப்பு எப்படி கூறமுடியும்?

சீதாவின் தந்தையும் அந்த வருடம் தன் பெண்ணுக்குக் கல்யாணம் செய்வதில்லை என்று தான் நினைத்திருந்தார். பெண்ணைக் காலேஜில் சேர்ப்பது தான் அவருடைய திட்டம். ஆனால் கோடீஸ்வரனுடைய ஒரே மகனுக்கு உடனே வரன் பார்த்துக் கல்யாணம் செய்துவிடப் போவதாக செய்தி வந்துவிட்டதே! சீதாவுக்கு அந்த இடத்துச் சம்பந்தம் நல்லது என்று அவர் எண்ணினார். கோடீஸ்வர அய்யர் என்றால் பெயர் மட்டும் அப்படியன்று செல்வ நிலையிலும் அப்படித்தான். அவருடைய காபி தோட்டமும், ரப்பர் எஸ்டேட்டும், பல நஞ்சை - புஞ்சை நிலங்களும் பல லட்சம் பெறும். அத்தனை செல்வத்தையும் நிர்வகிக்க ஒரே வாரிசு கந்தநாதன் தான்! ஒரே பிள்ளை.

சீதாவிடமிருந்து காந்திமதி ஒன்று விடாமல் எல்லாவற்றையும் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டாள்.

சீதாவைப் பெண் பார்க்க வருகிறார்கள்! அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. “ஆமாம் பெண் பார்க்க வருவது என்ற பழங்கால வழக்கத்தை இன்றும் ஏன் கடைப்பிடிக்கிறார்கள்? உன் வருங்காலக் கணவர் ரொம்பவும் முற்போக்கு மனப்பான்மை உடையவர் என்றாய். அவர்கள் வீட்டிலே எல்லாம் நவீனமுறை என்கிறாய். அதுவே போகட்டும் நேரே பார்த்துத்தான்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அந்த 'ராமன்' உன்னை மணக்க வேண்டுமா? நானாயிருந்தால் கண்ணை மூடிக்கொண்டு மணந்து கொள்வேன்!" என்று கூறினாள் காந்திமதி.

"இன்னும் பெண் பெண்ணை மணக்கும் வழக்கம் வரவில்லையே காந்தி!" என்று கூறிச் சீதா சிரித்தாள். காந்தியும் நகைத்தாள்.

"அப்போது நாளை மாலை நான்கு மணிக்கே உன்னை எதிர்பார்க்கிறேன். நீ என் அருகில் இருந்தால் தான் காந்தி, எனக்குத் தைர்யம். அம்மா கூட என்னை,"அசடு இதற்கெல்லாம் பயப்படலாமா? நான் கல்யாணம் செய்து கொள்ளும்போது எனக்கு வயது பதின்மூன்று. உன் அப்பா என்னைச் சரளி பாடு: நிரவல்செய் என்றெல்லாம் கேட்டுப் பயமுறுத்தி விட்டார். நீ படித்த பெண். பயப்படலாமோ?" என்று கூறித் தைரியமூட்டினாள். ஆனால் எனக்கு என்னவோ பயமாயிக்கிறதடி. நீ வராவிடில் நான் பிள்ளை வீட்டார் முன்பாக போகவே மாட்டேன்" என்றாள் சீதா.

"சீ, அப்படியெல்லாம் செய்து விடாதே! நான் எதற்கு அங்கெல்லாம் என்று தான் நினைக்கிறேன். உங்கள் வீட்டில் வைரங்கள் ஜ்வலிக்கும். பட்டுப்புடவை சரசரக்கும். அந்தஸ்து கூத்தாடும். அங்கே நான் பழைய 'காட்டன்' புடவையுடன் ரோல்டுகோல்டு செயினுடன் வந்து நின்றால் உனக்குத்தான் அகௌரவம், சீதா" என்றாள் காந்திமதி.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என்ன சொல்கிறாய் காந்தி? மறுபடியும், மறுபடியும் அந்தஸ்து அந்தஸ்து என்ற அதே முழக்கம் தானா? எனக்கு அதே ஜாக்கெட் அதே ஸ்லிப்பர் அதே தோடு, அதே சங்கிலி. தலையிலும் அதே விதமான பூ. ஆனால் ஒன்று மட்டும் முடியாதே காந்தி - உன் கவர்ச்சிகரமான முக அழகு எனக்கு வர முடியாதே! கூடியமட்டும் இரண்டு கோட்டிங் பவுடரைப் பூசிக் கொள்வேன். அதை மட்டும் உனக்குக் கொடுக்க மாட்டேன்! சரியாகக் காலை நான்கு மணிக்குத் தயாராக இருக்க வேண்டும். என்ன சரிதானே? நீ வராவிட்டால் நாலு பதினைந்துக்கு நான் உன் வீட்டிற்கு வந்து விடுவேன்!” என்று கண்டிப்பாகக் கூறினாள் சீதா.

சீதாவின் அன்பு காந்திமதியை நெகிழச் செய்தது. அது கோயில் என்பதைக் கூடப் பாராமல் அவளை அணைத்து,“சீதா! நீ என் உடன் பிறவாச் சகோதரியடீ! உன் கணவரைத் தேர்ந்தெடுக்க நான் வருவது நியாயம் தான்” என்றாள்.

## 2

# வெற்றி கூறுமின்

கோடீஸ்வரனுடைய செல்வமும், செல்வாக்கும் அவரால் சொந்தமாகச் சேர்க்கப்பட்டவை. அவருடைய வாழ்க்கையைப் பற்றிக் கூறுகிறவர்கள் பதினெட்டாவது வயதில் அவர் மேல் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு சென்னைக்கு வந்தவர் என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சொல்வார்கள். இன்னும் சிலர் அவர் ஜட்ஜ் சதாசிவம் வீட்டில் சமையல்காரராகச் சேர்ந்தார் என்றும் கதையாகச் சொல்வார்கள். ஜட்ஜ் சதாசிவத்துக்குக் கோடீச்வரனை மிகவும் பிடித்துவிட்டதாம். அதனால் படிப்படியாக அவர் முன்னேறுவதற்கு ஜட்ஜே வழி செய்தார் என்றும் கூறுவார்கள். நாற்பது வருடங்களுக்கு முன்பு நடந்த அந்தக் கதையை இப்போது யார் நினைவில் வைத்துக் கொண்டிருப்பார்கள்? எப்படியோ கோடீஸ்வரன் மிகவும் சௌகரியமாக இருந்தார். அந்த அதிர்ஷ்டங்களுக்குக் காரணம் தன் மனைவி என்றே அவர் பூர்ணமாக நம்பினார். காவேரியை அவர் மணந்த பிறகு தான் அதிர்ஷ்ட தேவதை பெருக்கெடுத்தோட ஆரம்பித்தாள் என்பது அவரது திட நம்பிக்கை. அடையாற்றங்கரை ஓரமாக முப்பது கிரௌண்டு விசாலமான இடத்தில் கட்டப்பட்டிருந்த அந்தப் பங்களாவுக்கு அவர் 'காவேரி பவனம்' என்று பெயர் சூட்டியிருந்தார். காவேரியாற்றிலிருந்து கால்வாய் ஒன்று வெட்டி அடையாற்றுடன் இணைப்பதென்றால் அவருக்கு மிக மகிழ்ச்சி தான். அது நிறைவேற என்ன ஆகும் என்று தனிப்பட்ட என்ஜினிரிங் கம்பெனி ஒன்றைத் திட்டம் தயாரிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டு, பிறகு அத்திட்டத்தைக் கைவிட்டு விட்டதாகவும் கேள்வி!

காவேரி பவனத்தில் காவேரியும், கோடீஸ்வரனும் மட்டும் கொட்டு கொட்டென்று இருக்கவில்லை. சொந்தக்காரர் குழந்தைகள், சமையல் காரர் பரிவாரம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்று வீடு கலகலப்பாக இருக்கும். அவர்களுடைய ஒரே மகன் கந்தநாதன் மட்டும் இருக்குமிடமே தெரியாது. ராஜா, ராஜா என்பார்களே அது அவனுக்குப் பொருந்தும். தாயைப்போல நல்ல எலுமிச்சை நிறம். உயர்ந்த நெற்றி நீண்ட நாசி. அவன் சிரித்தாலே நதரத்னம் கொட்டும் அளவுக்கு அதிர்ஷ்டக்களை! ஆனால் கலகலப்பாகப் பழகும் சுபாவம் மட்டும் குறைவு. காலேஜில் படிக்கும் போது அவனுண்டு அவன் படிக்கும் அறை உண்டு. தாயுடன் மட்டும் மணிக்கணக்கில் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்து பேசிக்கொண்டே இருந்தான் என்றால் பொழுது போவதே தெரியாது! நாள்தோறும் பள்ளிக்கூடத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள், அன்று நடந்த பாடம் எல்லாம் ஒன்று விடாமல் தாயிடம் கூறுவதில் அவனுக்குத் தனித் திருப்தி. ஒரு சமயம் அம்மாவின் பட்டுப் புடவை வேண்டும் என்று கேட்டான். தாய் எதற்கு என்று கேட்டாள். பள்ளிக்கூட நாடகம் ஒன்றில் அவனுக்குப் பெண் வேடம் கொடுத்திருந்தார்கள். புதுப்புடவை ஒன்றை வாங்கித் தந்துவிட்டாள் அவன் தாயார். உரக்கப் பேசுவதற்கே கூச்சப்படும் கந்தநாதன் நாடகத்தில் எப்படிப் பேசினான்? அவனுடைய நடிப்பு இயற்கையாக இருந்தது என்று எல்லாரும் போற்றினர்.

கந்தநாதனின் கூச்சம் வயதாகியபின் சிறிது சிறிதாக மாறியது. டென்னிஸ், செஸ், கேரம் போன்ற போட்டிகளில் கலந்து கொள்வது அவனது பொழுதுபோக்கு. அவனுக்கும் விருப்பமான நண்பர்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எனச் சிலர் அமைந்தனர். பணக்காரர் வீட்டுப் பையனான அவனைச் சூழ்ந்து நண்பர்கள் குழாம் இருப்பதற்குக் கேட்க வேண்டுமா? நண்பர்கள் குழாத்தின் நடுவே தலைவனாக விளங்கினான். அவனுடைய அழகிய தோற்றம் அனைவரையும் கவர்ந்துவிடும். பி.ஏ. படிப்பை முடித்த பிறகு கோடீஸ்வரன் கந்தநாதனை மேலே படிக்கவைக்க விரும்பவில்லை. அவன் படித்து என்ன ஆக வேண்டும் என்பது அவர் கட்சி. மேலும் தன் எஸ்டேட் விவகாரங்களைக் கவனிக்க அவன் சேவை அவருக்கு அவசியமாகப்பட்டது. தன்னால் அதிக நாள் உயிர் வாழ முடியாது என்பது அவருக்குத் தெரிந்து விட்டது. இப்போதிருந்தே தன் மகனுக்கு எஸ்டேட் விவகாரங்களில் பழக்கப்படுத்தி வைக்கவேண்டும் என்று விரும்பினார்.

காலேஜ் படிப்பு நிறுத்தப்பட்ட பிறகு கந்தநாதன் சிறிது சிறிதாக எஸ்டேட் விவகாரங்களை அறியத் தொடங்கினான். அது சம்பந்தமான பிரயாணங்கள் பல செய்தான். குன்னூர் எஸ்டேட்களிலும், எர்ணாகுளம், திருச்சூர் பகுதிகளிலும் அவனது சுற்றுப்பிரயாணம் அடிக்கடி நடைபெற்றது. ஒவ்வொரு முறையும் அவன் ஊருக்குப் புறப்படும் போது காவேரியம்மாள் கண் கலங்குவாள். நூறு முறை பத்திரமாகப் போய் வருமாறு கூறுவாள். அவன் தங்கவேண்டிய இடம், சாப்பிட வேண்டிய வகைகள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கூறுவாள். அவன் தனியே போக

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேண்டியிருக்கிறதேயென வருத்தம் தான் அவளுக்கு. “எஸ்டேட் எஸ்டேட் என்று இப்படிக் கட்டிக் காத்து என்னதான் செய்யப் போகிறீர்களோ” என்று கணவரைச் சில சமயம் கோபிப்பாள் காவேரி.

கந்தநாதனுக்கு வெளியூர்களுக்குச் செல்வதில் தான் மகிழ்ச்சி அதிகம். வானுயர்ந்த யூகலிப்டஸ் மரங்களின் நடுவே காரில் செல்லும்போது கந்தநாதனுக்குச் சென்னையின் நினைவே மறந்துவிடும். அப்படியே பிரயாணம் செய்து கொண்டயிருக்கலாம் என்ற ஆர்வம் தோன்றும். சுற்றுப் பிரயாணத்திற்குப் பிறகு தாயிடம் தான் கண்ட காட்சிகளை எல்லாம் வர்ணிப்பான், தந்தையிடம் வெறும் 'பிஸினஸ்ஸைப்' பற்றி மட்டுமே பேசுவான்.

'அம்மா பிள்ளையாக' வளரும அவனைப் பார்த்து கோடீஸ்வரன் நகைப்பார். “நீ கல்யாணம் செய்து கொண்ட பிறகும் அம்மாவை விட்டு நகர மாட்டாயா?” என்று கேட்பார்.

தன் மகனுக்குக் கல்யாணம் செய்து எஸ்டேட் நடுவிலே தனிப் பங்களாவில் குடியேற்றினால் தான் அவனுடைய பிறவிக் கூச்சம் நீங்கும் என்று கோடீஸ்வரன் விரும்பினார். காவேரியிடம் கூறினால் மகன் கல்யாணத்தைத் தடுத்து விடுவாள் என்று தக்க இடமாகக் கிடைப்பதற்கு வலைவீசிக் கொண்டிருந்தார்.

குபேரர் கோடீஸ்வரனின் மகனுக்கு வரன் என்றால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வந்து குவிவதற்குக் கேட்க வேண்டுமா? ஆனால் அவர் அவ்வளவு எளிதில் வரன்களை ஒப்புக்கொண்டு விடவில்லை. தன் அந்தஸ்துக்கு ஏற்றவராகத் தேடிவந்தார். காவேரிக்குச் சொல்லக் கூடாதா? அவள் விரும்பமாட்டாளா? தவறாக அவர் எண்ணினார். தனக்கு மருமகள் வரவேண்டும் என்ற ஆசை காவேரிக்கு தான் அதிகம் உண்டு. அதை எப்படிக் கணவரிடம் தெரிவிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

சீதாவின் தந்தை முரளிதரனைக் கோடீஸ்வரன் ஒரு கட்டட விஷயமாகச் சந்தித்தார். அவரை முதல் சந்திப்பிலேயே கோடீஸ்வரனுக்குப் பிடித்து விட்டது. அவர்கள் தொழில் நிமித்தம் அடிக்கடி சந்தித்தனர். முரளிதரனின் குடும்பத்தைப் பற்றி ஒருநாள் விசாரித்தார் கோடீஸ்வரன். முரளிதரனுக்குக் கல்யாண வயதில் பெண் இருப்பதை அறிந்தார். அந்தக் குடும்பத்தோடு கல்யாணத் தொடர்பு வைத்துக் கொள்வதில் அவருக்கு அப்போதே பிடித்தம் ஏற்பட்டு விட்டது. சீதாவுக்கு விவாகம் செய்ய வேண்டும் எனும் பிரச்னையையே மனத்தில் கொள்ளாத முரளிதரனுக்குக் கோடீஸ்வரன் வீட்டுச் சம்பந்தம் என்றவுடன் பரபரப்பு ஏற்பட்டது.

கோடீஸ்வரன் இந்தச் செய்தியைத் தன் மனைவியிடம் தெரிவிக்க முதலில் சிறிது யோசனை செய்தார். பிறகு சுற்றி வளைத்துக் கந்தநாதனுக்குப் பெண் பார்த்திருக்கும் விஷயத்தைத் தெரிவித்தார். அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக காவேரி அதிக ஆர்வம் காட்டினாள். பெண்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எப்படி இருப்பாள் அவர்கள் குடும்பம் எப்படி வயது என்ன என்று சரமாரியாகக் கேள்வி கேட்டு துளைத்து எடுத்து விட்டாள். கோடீஸ்வரனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. “பெண்ணைப் பார்க்க வர உனக்கு இஷ்டமா? அப்படியென்றால் மீதியெல்லாம் நீயும் நானும் சேர்ந்தே விசாரித்துக் கொள்வோம்” என்று கூறினார்.

பெண் பார்க்க வருகிறோம் என்ற செய்தியைப் ‘போன்’ மூலம் அறிவித்து விட்ட கோடீஸ்வரனுக்குக் காவேரி கூறிய செய்தி தூக்கி வாரிப் போட்டது. கந்தநாதனுக்குக் கல்யாணத்தில் விருப்பமில்லையாம்.

கோடீஸ்வரன் காவேரியிடம் வேகமாக வந்தார்.

“காவேரி! கந்தநாதன் என்ன சொன்னான்?” என்று பரபரப்புடன் கேட்டார்.

“என்ன சொன்னான்? தனக்குக் கல்யாணம் வேண்டாமாம்.”

“ஏனாம்?”

“அதற்குக் காரணமா சொல்கிறான்?”

“உன்னிடமா செல்லமாட்டான்? எந்த வாலிபனும் தனக்குக் கல்யாணம் வேண்டும் என்று உடனே சொல்வானா?”

“இல்லை. இல்லை. கந்தநாதன் சொல்வது அதுபோல்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இல்லை… கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லையாம், எப்போதும் ஊர் உலகமெல்லாம் சுற்றிப் பார்த்துப் பிரயாணம் செய்துகொண்டு சந்தோஷமாயிருப்பதிலேயே கழிக்க வேண்டுமாம்…”

“ஏன் கல்யாணம் செய்து கொண்டு மனைவியுடன் சுற்றட்டுமே! அவன் ஏதாவது விளையாட்டுக்காக உன்னிடம் கூறியிருப்பான். நான் அவனைக் கேட்கிறேன்… முரளிதரனிடம் நாளைய தினம் பெண் பார்க்க வருவதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். இவன் இப்படிச் சொல்கிறானே. அவன் வந்தால் என்னிடம் வரச்சொல்லு…” என்று கூறி விட்டுப் போய்விட்டார். காவேரி அம்மாளுக்கு ஏனோ திகில் பிடித்தது. கந்தநாதன் ஏன் கல்யாணம் செய்துகொள்ள விரும்பவில்லை என்பது அவளுக்குப் புதிராக இருந்தது.

கந்தநாதன் வந்தவுடன் தயக்கத்துடனே தந்தையைக் காணச் சென்றான். அவன் எதிர்பார்த்தபடி அவர் அவனைக் கோபமாக வரவேற்கவில்லை. அவனுடைய திருமண அபிப்பிராயத்தை அவர் எடுத்த எடுப்பிலேயே கண்டிக்கவும் இல்லை. பொதுவாக அவர் எஸ்டேட்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். தமக்குள்ள சொத்துகளின் விவரத்தையும் அவை நிர்வகிக்கப்பட வேண்டிய முறையைப் பற்றியும் அவர் பேசிக் கொண்டே இருந்தார். கந்தநாதனும் உற்சாகமாகப் பேச்சில் கலந்து கொண்டான். நிர்வாக விஷயமாகப் பல யோசனைகளைக் கூறினான். தொழிலாளர்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பிரச்னைகளைக் கூறினான். அவற்றை வெற்றிகரமாகத் தீர்ப்பது குறித்துப் பேசினான் - தன் மகனது பரந்த அறிவு கோடீஸ்வரனையும் பிரமிக்க வைத்தது. பணக்கார வீட்டுப் பிள்ளையால் ஆஸ்தியை நிர்வகிக்க முடியாது போய்விடும் என்று பொதுவாகக் கூறுவார்கள். அதற்கு மாறாக கந்தநாதன் இருப்பது குறித்து அவர் உள்ளூர மகிழ்ந்தார். கல்யாணத்தைப் பற்றி பேசப் புகுந்தவர் அந்த விஷயத்தை மகனிடம் எடுக்க முடியாமல் எங்கோ சுற்றி வளைக்க வேண்டியிருந்தது.

“ஏலமலை எஸ்டேட்டிற்குப் போயிருந்தேன் அப்பா! அங்கேயே தங்கிவிட வேண்டும் எனும் ஆசை எனக்கு ஏற்பட்டு விட்டது. இயற்கைக் காட்சிகளும், எப்போதும் மேகம் தவழ்ந்து கொண்டிருக்கும் மலைச் சிகரங்களும் காண ரம்மியமாக இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அங்குள்ள தொழிலாளர்களின் அன்பே, அன்பு. அங்குள்ள வாட்ச் மேனும் அவன் மனைவியும் நம்மிடம் செலுத்தும் பக்தியிருக்கிறதே ஆகா, அந்த அந்நியோந்நியத் தம்பதி இன்றும் என் கண்முன்னே நிற்கின்றனர்.” கந்தநாதன் மிகவும் அனுபவித்துக் கூறினான்.

கோடீஸ்வரன் மெல்ல நகைத்து,“ஏலமலையைத் தான் நான் முதன் முதலில் வாங்கினேன். அந்த எஸ்டேட் மேல் தான் எனக்கும் பிரியம் அதிகம். அங்கேயே பங்களா கட்டிக்கொண்டு போய்விடலாமா என்று எனக்குத் தோன்றும்” என்றார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஏன் அப்படியே செய்து விடலாமே அப்பா?”

“செய்துவிடலாம். எங்கள் கடைசிக் காலத்தில் உன் ஆதரவு இருந்தால்...” என்று கூறிக் கொண்டே மகன் முகத்தைப் பார்த்தார்.

கந்தநாதன் திடுக்கிட்டு,“என்னப்பா சொல்கிறீர்கள்? என் ஆதரவா? ஐயோ, ஏதோ பெரிய பெரிய வார்த்தைகளைப் பேசுகிறீர்களே...?” என்றான்.

“இல்லையடா! இருப்பதைச் சொல்கிறேன். நானும் உன் அம்மாவும் மட்டும் அங்கு போயிருந்தால் எங்களுடைய கடைசி காலத்தில் பணிவிடை செய்ய வேறு யாராவது வேண்டாமா?”

“ஏன் தக்க வேலைக்காரர்களை நியமிக்கலாமே?”

“ஐயோ - மகனே! உன் குழந்தை மனம் எப்போது மாறப் போகிறதோ! வேலைக்காரர்களிடமிருந்து உண்மை அன்பை எதிர்பார்க்க முடியுமா? விலை கொடுத்துச் சொந்தப் பிள்ளையைப் போல் வாங்க முடியுமா?”

“என்ன சொல்கிறீர்கள் அப்பா?”

“நான் சொன்னால் உனக்குப் புரிவதில்லை. நீ கேட்பாயோ மாட்டாயோ?”

“என்னப்பா இப்படியே பேசுகிறீர்கள். நீங்கள் சொல்லி எதைய்யா தட்டியிருக்கிறேன்...?”

“இதுவரையில் தட்டவில்லை. இனிமேல் தட்டலாம்.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“அப்படிச் சொல்லாதீர்கள். சொல்லுங்கள். அப்படியே தவறாது செய்கிறேன்.”

“ஏலமலையிலே பங்களா கட்டிக்கொள்ள வேண்டும். அந்த வீட்டிற்கு நானும், உன் அம்மாவும், நீயும் என் மருமகளுமாகச் சென்று சுகமாக வாழவேண்டும்...” இப்படிக் கூறி மகனை ஒருமுறை நோக்கினார்.

“அ...ப்...பா...”

“என்ன கந்தநாதா?”

“நீங்கள் அம்மா... நான்....”

“நீ, உன் மனைவி.”

“அப்பா!”

“ஆமாம் : கந்தநாதா! உனக்குக் கல்யாண ஏற்பாடு செய்து வருகிறேன். நல்ல இடத்தில் பெண் பார்த்து வந்திருக்கிறேன். நீயும் பெண்ணைப் பார்க்க வேண்டாமா? நாளைய தினம் நாமெல்லாரும் பெண் பார்க்கப் போகிறோம்.”

“அப்பா - எனக்கு...?”

“தெரியும், தெரியும். நீ என்ன சொல்கிறாய் என்று. கல்யாணமே வேண்டாம் என்று அம்மாவிடம் கூறினாயாம். இப்படிப் பேச யாரிடம் கற்றுக் கொண்டாய்? என் ஏராளமான ஆஸ்தி முழுமையும் உனக்குப் பிறகு வாரிசு இன்றிச் சிதைந்து போவதற்கு நீ

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

திட்டம் போடுகிறாயா? அப்படிப்பட்ட எண்ணம் உனக்கு இருக்குமானால், நான் எல்லா எஸ்டேட்டையும் இப்போதே விற்று ரொக்கமாக்கி, பொக்கிஷத்தையெல்லாம் ஏதாவது தர்ம ஸ்தாபனங்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுவேனே… நீ இப்படியெல்லாம் பேசுவாய் என்று எனக்குத் தெரியாது."

தந்தையின் சொல்லில் கடுமை ஏறி வருவதைக் கண்ட கந்தநாதன் கண்கலங்க,"அப்பா!" என்று அழைத்தான்.

மகன் மனம் மாறுகிறது என்பதைக் கண்டு கொண்டார் கோடீஸ்வரன்.

"என்ன?.."

"பெண் பார்க்க வருவதாக ஒப்புக்கொண்டு விட்டீர்களா?"

"ஆமாம்… என்ன அதற்கு? உனக்கு இஷ்டமா இல்லையா? என் 'பிரிஸ்டிஜ்' பற்றி உனக்கு ஏதாவது அக்கறை இருந்தால் ஒப்புக்கொள்."

கந்தநாதன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். பிறகு,"நான் கல்யாணம் வேண்டாம் என்பது அதற்காக இல்லைப்பா!"

"பின் எதற்காக" என்று கர்ஜித்தார் கோடீஸ்வரன். கந்தநாதன் மறுபேச்சு பேசாமல்,"சரி அப்பா, நாளைக்கு எப்போது போக வேண்டும்?" என்றான்.

கோடீஸ்வரன் முகத்தில் புதுத் தெம்புப் பிறந்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நாளைக்கு இராகு காலத்திற்கு அப்புறம் தயாராயிரு. நல்ல பிள்ளையாக புத்திசாலித்தனமாகப் பிழைத்துக் கொள். என்னைவிடப் புத்திசாலி, சாமர்த்தியசாலி என்று பெயர் எடு. நான் உன் ஒருவனைத்தான் பெற்றெடுத்தேன். இந்த ஏராளமான ஆஸ்தியை ஆண்டு அனுபவிக்க நீ நாலு ஐந்து என்று பெற்று நீண்ட காலம் வாழ வேண்டும்” என்று கூறும்போது அவர் குரல் தழுதழுத்தது. கந்தநாதன் கண்களிலும் நீர் ததும்பியது. வாய்விட்டு ‘அப்பா’ என்று கதறவேண்டும் போல் தோன்றியது. அவன் விசும்பலுக்கு இடையே “சரி அப்பா...” என்றான்.

“காவேரி, என்று கூப்பிட்டுக் கொண்டு விரைந்தார் கோடீஸ்வரன் தன் வெற்றியைத் தெரிவிக்க.

3

# உள்ளொன்று வைத்து ....

மணி நான்கடித்தது. சீதா வீட்டுக் கார் ‘பீம்’ என்று ஒலித்துக் கொண்டு காந்திமதியின் வீட்டின் முன் வந்து நின்றது. கூடத்து வீட்டுக் காரர்கள் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தனர். அந்த வீட்டு இரண்டு டஜன் குழந்தைகள் வாண்டும் கோண்டும் பரபரவென்று ஓடிவந்து காரைச் சூழ்ந்து கொண்டு அதிசய மிருகத்தைக் காண்பது போல் பார்க்கலாயினர். காரின் “ஹாரனை” அடிப்பதற்கு ஒரு குழந்தை துடித்தது. ஒன்று, சக்கரத்தின் பளபளப்பான கிண்ணத்தில் தன் முகத்தைப் பார்த்து அது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பூதம் போல் தெரிவதைக் கண்டு முகத்தைக் சுளித்துக் கொண்டது. கார் டிரைவர் குழந்தைகளை அதட்டி ஒட்டிவிட்டு, அவை அழுக்குப் படுத்தியதற்காகச் சபித்துக் கொண்டான். எதிர் வீடு, பக்கத்து வீடு, கோடி வீடு, என்று காந்திமதி வீட்டு வாசலில் கார் வந்து நிற்கும் செய்தி எங்கும் பரவியது.

“கார் யார் வீட்டிற்கு?” குடித்தனக்கார மாமி ஒருத்தி கேட்டாள்.

“அது யாருக்கோ - உனக்கும் எனக்கும் இல்லை. நாமும் சிறுசா இன்னும் கல்யாணம் செஞ்சுக்காமெ இருந்தா கார் என்ன விமானமே வரும்” என்றாள் மற்றொரு ‘போர்ஷன் குடித்தனக்காரி.

காந்திமதியின் சகோதரன் பகல் ஒருமணிக்குத் தான் வந்தான். அவன் ஓர் இடத்தில் ‘பார்ட் டைம்’ வேலை செய்கிறான். அங்கே ‘லொங்கு லொங்கு’ என்று டைப் அடித்துவிட்டுக் கொதிக்கும் வெயிலில் காலில் செருப்பும் கூட இல்லாமல் நடந்து வந்தான். காந்திமதிக்கு அன்று காலையிலிருந்து பரபரப்பு அதிகமாயிருந்தது. மாலை நான்கு. மாலை நான்கு என்று முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள். பாட்டு வகுப்பு. நடன வகுப்பு. இரண்டிற்கும் அவள் செல்லவில்லை. மளமளவென்று வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டாள்.

அண்ணன் வந்து உட்காருவதற்கு முன்பே “தட்டு போடட்டுமா அண்ணா?” என்றாள். ஆனால் தட்டில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சாதமும் போடப்பட்டுத் தயாராய் இருந்தது அவனுக்கே ஆச்சர்யமாயிருந்தது. சாப்பிட்டுவிட்டு அன்றைய தினசரியுடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவனைத் தூக்கம் வந்து கௌவிக் கொண்டது. இரண்டு, மூன்று, மூன்றரை என்று மணி ஆகிக் கொண்டு வந்தது. காந்திமதி, வாசலைப் பார்ப்பதும் தன் அண்ணன் உறங்குவதைப் பார்ப்பதுமாக நிலை கொள்ளாமல் தவித்தாள். சீதா சொன்னால் சொன்னபடி நாலுமணிக்குக் காரை அனுப்பி விடுவாள். உடனே புறப்பட்டாக வேண்டும். அண்ணா இன்னும் தூங்குகிறாரே என்று கையைப் பிசைந்து கொண்டாள்.

'பீம்... பீம்" கார் வந்து நின்ற ஒலியை விட முன் இரண்டு கட்டிலும் ஏற்பட்ட பரபரப்பு காந்திமதிக்குக் கார் வந்த செய்தியைத் தெரிவித்தது. "காந்தி, காந்தி! உன்னை அழைத்துப் போகக் கார் வந்திருக்கிறது. உனக்குக் கல்யாணமாம்" என்று கூடத்து வீட்டு குப்பு கூறவும் காந்திமதி முகம் ஒரு கணத்தில் குப்பென்று சிவந்தது. இப்படிச் சொன்னதற்காக அந்த 'வாண்டுக்கு' அவனது வீட்டில் முதுகில் பூசை கிடைத்தது! "காந்திமதிக்குக் கல்யாணமா! அடுத்த மாமாங்கந்தான!" என்று கேலி பேசினர்.

நொடியில் விஷயதிதை அறிந்து வந்து விட்டவள் போன்று ஒரு குடித்தனக்காரிக்கு வந்து, அதான் "சீதா... சீதான்னு ஒரு 'குதிரை' வருமே அது அனுப்பிச்சிருக்கு காரை. அவளும், இவளும் எங்காவது சினிமாவுக்குப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

போவார்கள். அண்ணன்காரன் உழைசசு ஓடாப்போறான்ற இவ என்னடான்னா ஜாலியா சுத்தறா!" என்று அபிப்பிராயம் தெரிவித்தாள்.

"அண்ணா, அண்ணா" என்று காந்திமதி தன் அண்ணனை எழுப்பினாள். ரகு விழித்துக் கொண்டான். அவன் எதிரே காந்திமதி தலையை இழைய இழைய வாரிக்கொண்டு, பவுடர் பூசி நெற்றிக்குப் பொட்டிட்டுக் கொண்டு நின்றாள். ஏதாவது மியூசிக் கிளாஸ், டிராமா - டான்ஸ் போகணுமா? போய்விட்டு வாயேன். அசதியாக இருந்தது தூங்கி விட்டேன்" என்றான்.

"இல்லை அண்ணா! சீதா வீட்டிலிலிருந்து கார் அனுப்பியிருக்கா. இன்னிக்கு அவளுக்குப் பெண் பார்க்க வராளாம். என்னை வரச் சொல்லியிருக்கா" என்றாள் காந்திமதி.

ரகு ஒருகணம் ஏதும் பேசவில்லை. 'சீதாவுக்குக் கல்யாணத்துக்கு முனைந்து விட்டார்கள். காந்திமதிக்கு இன்னும் நாம் ஏற்பாடு செய்யாமல் இருக்கிறோம். ஹ_ம்' என்று பெருமூச்சு விட்டான் ரகு. அண்ணா ஏதும் பேசாமலிருப்பதைப் பார்த்து காந்திமதிக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. கார் வந்து நின்று பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகப் போகிறது.

"அண்ணா" என்று, மெல்ல அழைத்தாள் காந்திமதி.

"என்ன காந்தி! சீதா உன்னை எதற்கு வரச்சொன்னாள்?" என்று ரகு கேட்டான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“அவளுக்குத் துணையாக நான் இருக்க வேண்டுமாம்” என்று கூறுவதற்கு காந்தி மிகவும் சிரமப்பட்டாள்.

“நீ ரொம்ப தைரியசாலி என்று அவளுக்கு எண்ணமோ?” என்று ரகு கேட்டுவிட்டு “ஆமாம் சீதாவைப் பார்க்க வரன் வரப் போகிறார்கள் என்றால் அந்த வீடே அமர்க்களப்படுமே! நீ அங்கே போய் நின்றால் உன்னை யார் கவனிப்பார்கள் காந்தி?” என்று கவலைக் குரலில் கேட்டான் ரகு.

“முடியாது என்று நான் எவ்வளவோ வற்புறுத்திக் கூறினேன். கேட்டால்தானே அவள். நான் அங்கு வந்த பிறகு தான் ‘டிரஸ்’ செய்து கொள்ளவே ஆரம்பிப்பாளாம். எப்படி அண்ணா மறுப்பது?” என்று கெஞ்சுங் குரலில் கூறினாள் காந்தி.

“சரி இராகு காலத்திற்கு முன் புறப்பட்டுப் போய் வந்து விடு. ஒரு ரிக்ஷா வைத்துக் கொண்டு போகிறாயா? காசு வேண்டுமா?” என்று கேட்டான்.

“கார் அனுப்பியிருக்கிறாள். காரிலே போய்விடுகிறேன்” என்று கூறியவுடன் ரகுவும் எழுந்து அவருடன் வாசலுக்கு வந்தான். எங்கே, காரிலே போவதைத் தடுத்துவிடப் போகிறானோ என்ற திகிலுடன் இருந்த காந்திமதிக்கு அண்ணன் மனமாற்றம் வியப்பை அளித்தது.

பணக்கார வீட்டுக் கார் வருவதும் அதிலும் தன் தங்கை செல்வதும் அவனுக்குப் பிடிக்கவில்லை தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்றாலும் தன் தங்கை போகாததால் மற்றொரு கல்யாணம் தடைப்பட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் ஏதும் சொல்லவில்லை.

கார்க் கதவை டிரைவர் திறந்தான். காந்திமதி ஏறிப் பின் ஸீட்டில் அமர்ந்தாள். அந்தக் காரில் அமர்ந்து போகும் காந்திமதி நல்ல ஆடைகளை உடுத்திச் சென்றால் நன்றாயிருக்குமே என ரகு எண்ணினான். அவனால் மன அமைதி அடைய முடியவில்லை. உள்ளே செல்வதற்குத் திரும்பினான்.

“என்ன மிஸ்டர் ரகு! காந்திமதிக்குக் கல்யாணமா?” என்று கேட்டார், முன் போர்ஷனில் குடி இருப்பவர். அவராகக் கேட்கவில்லை. அவர் சகதர்மிணி கேட்கச் சொல்லிக் கேட்டார். அதில் கிண்டலும் கேலியும் இருக்கின்றன என்று அவருக்குத் தெரியாது.

ரகு மெல்ல நகைத்தான். “காந்திமதிக்குக் கல்யாணம் என்றால் உங்களுக்கெல்லாம் தெரியாமல் நடந்துவிடுமா?” என்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டான்.

காந்திமதி வந்தவுடன் தான் சீதாவுக்கு உயிரே வந்தது என்று கூறலாம்.

“நீ எங்கே வராமல் இருந்து விடுவாயோ என்று பயந்தே போனேன்” என்றாள் சீதா.

“வராமல் இருப்பேனா சீதா! அண்ணா தூங்கி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எழுந்திருப்பதற்கு நேரமாதிவிட்டது. நீ கார் அனுப்பாமல் இருந்தாலும் நான் வந்திருப்பேன். கார் வந்தால் வீட்டெதிரே வேறுவிதமாகப் பிரசாரம் ஆகிவிட்டது."

"என்னவென்று?"

"எனக்குக் கல்யாணம் என்று குடித்தனக்காரர்கள் வம்பு பேசத் தொடங்கி விடடனர்."

"வம்பு என்ன? அவர்கள் அப்படிக் கூறிய முகூர்த்தம் நிஜமாகவே உனக்கும் கல்யாணம் ஏற்பாடு செய்துவிட்டால் போகிறது. நேற்று இரவு என் அப்பாவிடம் உன்னைப் பற்றி நான் பேசிக் கொண்டிருந்தேன். உன் அண்ணாவை அப்பாவுக்குத் தெரியுமாம். அவரே வரன் பார்த்து முன் நின்று நடத்தி விடுவதாகக் கூறியிருக்கிறார்."

சீதா உணர்ச்சி பூர்வமாக இதைக் கூறினாள். "அதெல்லாம் எதற்கு சீதா? அப்பாவை ஏன் தொந்தரவு படுத்துகிறாய்? இன்னும் இரண்டு வருடத்திற்குக் கல்யாணப் பேச்சு எடுப்பதற்கு நான் விரும்பமாட்டேன். இந்த வருஷம் பைனல் பரீட்சை, பிறகு ஒரு வருடம் எங்காவது கட்டாயம் வேலை செய்தாக வேண்டும்... பிறகு பார்த்துக் கொள்வோம். எனக்கு என்று வயதான கிழவன் எங்காவது வளர மாட்டானா?' என்றாள் காந்தி.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? இரண்டாம் தாரமாகத்தான் கல்யாணம் செய்து கொள்வதாக உன் முடிவா?"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“அப்படியில்லை சீதா! எங்களுக்கு இருக்கும் வசதியில் வரதட்சிணை கொடுக்க ஏது பணம்? நீயே யோசித்துப் பார். நான் ஸெகண்டரி கிரேட் டீச்சர். என்னை மணக்க வேண்டியவருக்கு என்னைவிட ‘குவாலிபிகேஷன்’ அதிகமாக இருக்க வேண்டும். அல்லது சமமாகவாவது இருக்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.ஸி படித்த வரனுக்கு ஆயிரம் ரூபா வரதட்சணை. சீர் வகையறா - எல்லாம் என்ன சிக்கனம் செய்தாலும் இரண்டாயிரம் ரூபா வேண்டும். எங்கே போவார் என் அண்ணா? அதற்குத் தான் அப்படிச் சொன்னேன்” என்றாள் காந்தி.

“அதைப் பற்றி உனக்கு என்ன காந்தி? நான் ஏற்பாடு செய்கிறேன்” என்று கூறிய சீதா, பேச்சை வேறு திக்கில் செலுத்த எண்ணி,“காந்தி! நான் என்னென்ன செய்ய வேண்டும் என்று சொல்லேன் எனக்குப் பயமாயிருக்கு” என்றாள்.

“எதற்கடி பயம்? உன்னைப் பலி வாங்கவா போகிறார்கள்? நான் உன் அருகில் இருக்கிறேன். பயப்படாதே.”

“ஆமாம் பெண் பார்க்கிறது என்று எதற்காக ஓர் ஏற்பாடு வைத்திருக்கிறார்களோ, எனக்காகவே ஏற்பட்டது போல் இருக்கிறது. இவ்வளவு வருஷம் நாம் படித்தோமே ஒரு பாடத்திலாவது பெண் பார்க்கும் நிகழ்ச்சியைப் பற்றிய பாடம் இருக்கிறதா படித்திருக்கிறாயா?” என்று சீதா குழந்தை போலக் கேட்டாள்.

“சீதா - என் - சீதா. நீ இன்னும் குழந்தை போலவே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இருக்கிறாயே - நீ நன்றாக டிரஸ் செய்துகொள். பெண் பார்க்க வருபவர்கள் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு உன்னை நான் மெல்ல அழைத்து வருகிறேன். நீ பதற்றப் படாமல் நடந்து வந்து அவர்களுக்கு நமஸ்காரம் செய்து விட்டு வந்துவிட வேண்டும்" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே சீதாவின் தாயார் அங்கு வந்து விட்டாள். "சொல்லடி அம்மா நல்லா சொல்லு. காலையிலிருந்து நான் சொல்கிறேன். கேட்க மாட்டேன் என்கிறாள். சீக்கிரம் தலைவாரிப் பின்னிக் கொள் சீதா! காந்தி! நீயும் சரியான சமயத்துக்கு வந்து விட்டாய். சீதாவைப் பெண் பார்க்க வரப்போகிறவர்கள் பெரிய பணக்காரர்கள். ஒரே பிள்ளை. சீதா அந்த வீட்டு ராணிபோல் வாழலாம். இவள் சாமர்த்தியமாய் நடந்து கொள்வதில் இருக்கிறது!" என்று கூறினாள்.

சீதா அதிகப் பகட்டில்லாத உடை அணிந்தாள். காந்திமதிக்கும் ஒரு புதுப் பட்டுப் புடவையை எடுத்துக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொன்னாள். காந்திமதி பட்டுப் புடவையை விரும்பவில்லை. "உனக்காக வேண்டுமானால் நான் ஒரு வாயில் புடவையை அணிந்து கொள்கிறேன்" என்றாள். எந்தவித ஆடையிலும் காந்திமதி எழில் மிக்கவளாகவே காட்சியளித்தாள்.

மணி ஆறு பதினைந்து. முரளிதரன் பங்களாவுக்குள் பெரிய கார் சந்தடியின்றி நுழைந்தது. ஆறு பேருக்குக் குறையாமல் அந்தக் காரில் இருந்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“அவர்கள் வந்து விட்டனர் வந்து விட்டனர்” என்ற ஒலி அந்த வீட்டின் மூலை முடுக்குகளில் ஒலித்தது.முரளிதரனும், அவர் மனைவியும் வாசலுக்கு விரைந்தனர், கோடீஸ்வரன் குடும்பத்தாரை வரவேற்க. காரினின்று கடைசியாக இறங்கினான் கந்தநாதன். முரளிதரன் ஒரு முறை கந்தநாதனைக் கவனித்தார். ராஜா மாதிரித்தான் இருக்கிறான் என்று முணுமுணுத்துக் கொண்டார். எலுமிச்சை நிறம், சுருள் சுருளான கிராப். உயர்ந்த ஸ_ட்டும் அணிந்திருந்தான். வாசனை அந்த இடத்தில் சூழந்து கொண்டது. கோடீஸ்வரன் பழுத்த பழம்போல் காட்சியளித்தார். மெல்லிய ஆடை, ஸில்க் ஜிப்பா, மேலே அங்கவஸ்திரம், நெற்றியிலே பளிச்சென்ற விபூதி நடுவே குங்குமம். அவருடன் காவேரி அம்மாளும் வந்தாள். குங்குமப் பொட்டும், வைர அட்டிகையும், ஒளிவீசும் தோடும், மூக்குப் பேசரியுமாக அவளது வருகையே லட்சுமிகரமாகத் திகழ்ந்தது.

நடு ஹாலில் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. மின்சார விளக்குகள் ஒளி வீசின. மின்சார விசிறி குளிர் காற்றை அள்ளிக் கொட்டியது. சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்கள் பளிச்சென்று துடைக்கப் பட்டு விளங்கின. சோபாக்களுக்குப் பச்சை நிற உறை போடப்பட்டிருந்தன. நடு டீப்பாய் வெற்றிலைத் தட்டும் பழங்களுடனும் திகழ்ந்தது. நுழைவாயில், நடுக்கட்டிற்குச் செல்லும் வாயில் ஆகியவற்றில் வண்ணச் சீலைகள் அசைந்தாடின.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கோடீஸ்வரன் ஹாலை ஒருமுறை பார்த்தவாறு அமர்ந்தார். அவரருகே சற்றுத் தள்ளி காவேரி அம்மாள் அமர்ந்து கொண்டாள். மற்றொரு தனிச் சோபாவில் கந்தநாதன் அமர்ந்தான். வந்த மற்றும் மூவரும் மற்றொரு நீண்ட சோபாவில் அமர்ந்தனர்.

முரளிதரன் நின்றவாறே தன் மனைவிக்கு ஜாடை காட்டவே அம்மாள் சமையற்காரருக்கு உத்தரவு போடவே பெரிய டீப்பாயில் பலகாரத் தட்டுகள் வந்தன. ஒவ்வொரு சோபாவுக்கு முன்பும் ஒரு சிறு டீப்பாய் போடப்பட்டது. அதிலே ரவா கேசரியும், பஜ்ஜியும் கொண்ட டிபன் பிளேட் வைக்கப்பட்டது. ஒரு சமையற்காரன் சிறு கண்ணாடி பேசினில் தண்ணீரை ஒவ்வொருவர் முன்பும் நீட்டியவாறு சென்றான். கைகழுவிப் போலும்!

“இதெல்லாம் எதற்கு பார்மாலிடிஸ்?” என்று கோடீஸ்வரன் கேட்டார். அதற்குள் காவேரி அம்மாள் தான் கொண்டு வந்திருந்த பையிலிருந்த புஷ்பங்களையும், வாழைப்பழங்களையும் வெற்றிலை பாக்கையும் எடுத்து வைத்தாள்.

ஹாலின் ஒரு கோடியில் மாடிப் படிக்கட்டுகள் இருந்தன. மாடிப் படிக்கட்டுகளில் மாடி ஹாலுக்குச் செல்லும் கதவுக்கருகில் நின்று பார்த்தால் கூடத்தில் அமர்ந்திருப்பவர்கள் நன்றாகப் புலப்படுவர். ஆனால் கீழே இருப்பவர்களுக்கு மாடியில் இருப்பவர் கண்களில் பட

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாட்டார்கள்.

காந்திமதி மாடிப் படிக்கட்டுகளின் ஓரமாக நின்று ஹாலில் வந்து அமர்ந்திருப்பவர்களை ஒரு நோட்டம் விட்டு விட்டு சீதாவிடம் ஓடிச் சென்று அவள் முதுகைத் தட்டிக் கொடுத்து, முகவாயை இலேசாகக் கிள்ளி,"சீதா! உனக்குக் கணவனாக வரப் போகிறவனை நான் நன்றாக இங்கிருந்து பார்த்து விட்டேன். சிவப்பு நிறம். நீண்ட மூக்கு. சுருள் சுருளான கிராப். நல்ல அழகன்தாண்டி. உனக்கு ஒரு குறையும் இல்லை" என்று கூறினாள்.

சீதா வெட்சமுற்றவளாக,"போதும் உன் வர்ணனை" என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"ஆமாம் இப்போது தானே நான் வர்ணிக்கலாம். நாளைக்கு மூன்று முடிச்சு உன் கழுத்தில் ஏறியபிறகு உன் அகமுடையானை நான் வர்ணிக்க முடியுமா? வர்ணிப்பதும் நியாயமாயிருக்குமா?" என்றாள்.

அதற்குள் சீதாவின் தாயார் மாடியேறி வந்து "காந்தி, சீதாவை கீழே அழைத்து வா. மெல்ல அழைத்து வா. வந்தவுடன் அங்குள்ளவர்களுக்கு நமஸ்காரம் செய்யச் சொல்லு, தலைப்பை இழுத்து மூடி அழைத்து வா" என்றாள்.

சீதாவின் உள்ளம் படபடத்தது. இலேசாக அவள் கரம் நடுங்குவதை உணர்ந்த காந்தி,"சீதா! தையர்மாக இரு. வாழ்க்கையிலே ஒரே ஒரு முறை தான் நீ இந்தப் பரீட்சையை அனுபவிக்கப் போகிறாய். அதற்குப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பயப்படலாமா? என்றாள்.

“ஆமாம், ஆமாம் நீ சொல்ல மாட்டாயா? அந்தப் பரீட்சையை நீ வெகு சுலபமாகத் தெரிந்து கொள்கிறாய். நாளைக்கு உனக்கு மகா தைர்யம் வந்துவிடும். எனக்கு இப்போது சொல்ல மாட்டாயா? என்று மெல்ல அன்புடன் கடிந்தாள்.

சீதாவை அழைத்துக் கொண்டு மாடிப்படி வழியே காந்திமதரி இறங்கிவந்தாள். சீதா ஒருமுறை அந்தக் கூடத்தைப் பார்த்தாள். அவள் எப்போதும் பார்க்கும் ‘ஹால்’ தான் அது. அவள் தினமும் பழகும் கூடம் தான் அது. கூடத்துச் சோபாவில் தான் அவள் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். அந்த மின்சார விசிறி வேகமாகச் சுழலும். அதே படங்கள் தாம். ரவிவர்மாவின் தமயந்தியும் அன்னமும், விசுவாமித்திரர் மேனகை, கங்கையைச் சிவபெருமான் தடுத்தல் போன்ற அதே ஓவியங்கள் தாம். எல்லாம் அவளுக்கு இன்று புதுமையாக இருந்தன. அவற்றை ஏறெடுத்துப் பார்க்க அவளுக்கு ஏனோ வெட்கமாகவும் இருந்தது.

சீதாவின் காதில் மட்டும் கேட்கும்படியாக காந்திமதி சொன்னாள்: “சீதா! நமஸ்காரம் செய்யடி உன் வருங்காலக் கணவர் மாமனார், மாமியார் மற்றும் உறவினர்கள்.”

“அடீ நீயும் கூட வாடி. அங்கேயே நின்றுவிட்டாயே. நான் நமஸ்காரம் செய்யாமல் வந்து விடுவேன்” என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்தியின் செவியில் மட்டும் படும்படி சீதா கிசுகிசுத்தாள்.

கந்தநாதன் ஒருமுறை சீதாவையும், காந்திமதியையும் நோக்கினான். சீதாவின் தோழி காந்தி என்று தெரிந்து கொள்ள அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

“குழந்தை பாடுவாளா?” காவேரியம்மாள் கேட்டாள். முரளிதரனும் அவன் மனைவியும் பரபரப்படைந்தனர். அவர்கள் கேட்டுத் தங்கள் மகளைப் பாடச் சொல்லாமல் இருக்கலாமா? இருவரும் ஒரே குரலில் சீதாவைப் பார்த்து “சீதா! அப்படியே உட்கார்ந்து பாடம்மா…” என்றனர்.

“சீதாவுக்கு வீட்டிலேயே பாட்டு வாத்தியாரைக் கொண்டு சொல்லிக் கொடுத்தோம்” என்றார் முரளிதரன். சீதா ஒரு கணம் தாயின் முகத்தைப் பார்த்தாள்.

“ஏனம்மா… தம்புரா வேண்டுமா சுருதிக்கு? காந்தி! தம்புராவைக் கொண்டு வாம்மா..” என்றாள். காந்தி உதவிக்கு வருவாள் என்று தெரிந்தவுடன் சீதாவுக்குச் சற்றுத் துணிவு பிறந்தது. கந்தநாதன் இருவரையும் பாதாதிகேசம் வரை ஒருமுறை பார்த்து மனத்துள் இருத்திக் கொண்டாள்.

காந்தி மீட்டிய தம்புராச் சுருதியினின்று மெல்லிய ரீங்கார ஒலி எழுந்தது. ஊதுவத்தியின் மணம் காற்றிலே மிதந்து வந்தது. கிருஷ்ணன் படத்திற்கு அணிவித்திருந்த பூமாலையினின்று ஒரு பூ உதிர்ந்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கந்தநாதனுக்கு இசையின் மீது மோகம் அதிகம். தாய் தன் விருப்பத்தை நிறைவேற்றத்தான் அவளைப் பாடச் சொல்லியிருக்கிறாள் என எண்ணினான்.

சீதா காந்திமதியினிடம் ஏதோ மெல்லச் சொன்னாள்.

காவேரியம்மாள் அப்போது கேட்டாள் முரளிதரனின் மனைவியிடம்,"அந்தக் குழந்தை சீதாவின் சிநேகிகியோ?" என்று.

"ஆமாம், ஆமாம்...சீதாவும் அவளும் இணைபிரியாச் சிநேகிதிகள். எங்கள் குழந்தை மாதிரி தான்" என்று முரளிதரனின் மனைவி கூறிக் கொண்டாள்.

சீதாவுக்கும் அம்மாவின் வார்த்தை பெருமையாகத்தான் இருந்தது.

சீதா கணீரென்ற குரலில் பாடத் தொடங்கினாள்.

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற

உத்தமர் தம் உறவு வேண்டும்

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்

உறவு கலவாமை வேண்டும்....

பெருமை பெறும் நினதுபுகழ் பேசவேண்டும்

பொய்ம்மை பேசாதிருக்க வேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பேய் பிடியாதிருக்க வேண்டும்

மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்

உனை மறவாதிருக்க வேண்டும்…”

கந்தநாதன் செவிகளில் பாடல் ரீங்காரமிட்டது. கணீரென்ற குரலில் சீதா ‘ஒருமையுடன்’ பாடவும், காந்திமதி உடன் பாடி மேல் ஸ்தாயியில் பாடுவதற்கு அவளுக்கு உதவவும், காந்தியின் நீண்ட விரல்கள் நெளிந்து நெளிந்து தம்புராவின் கம்பிகளைத் தடவி ரீங்காரத்தை எழுப்பவும் கந்தநாதன் லயித்துப் போய்க் கவனித்து வந்தான்.

‘மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்.’ சீதாவின் குரல் கம்பீரமாக ஒலித்தது. அவள் ஏதோ தன்னையே பார்த்து அழுத்தந் திருத்தமாகப் பாடுவது போல் அவனுக்குத் தோன்றியது.

பாடி முடித்தவுடன் கோடீஸ்வரன் “தியாகய்யர் வாள் கீர்த்தனை ஏதாவது தெரியுமா?” என்று கேட்டார்.

ஆனால் சட்டென்று கந்தநாதன் எழுந்துவிட்டான். எல்லாருமே உடனே எழுந்துவிட்டனர். கந்தநாதன் போய் வருகிறேன் என்று கூட முரளிதரனிடம் கூறாமல் வெளியே வந்துவிட்டான். கோடீஸ்வரனும் மெல்ல நகர்ந்தார். முரளிதரன் அவருடன் வாசல் வரைக்கும் வந்தார். காவேரி அம்மாளுடன் சீதாவின் தாயார் வந்தார்கள். காவேரி அம்மாள் மெதுவாகச் சொன்னாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“எனக்கு உங்கள் பெண்ணைப் பிடித்துவிட்டது. அவள் இஷ்டம் எப்படி என்று கேட்டு முடிவு செய்து சொல்லி அனுப்புகிறேன்” என்றாள்.

கார்க் கதவு பட்டென்று சாத்தப்பட்டது. பெண் பார்க்க வந்தவர்களை ஏற்றிக் கொண்டு கார் விர்ரென்று சென்றது.

அப்போது டெலிபோன் மணி கணகணவென்று ஒலித்தது. முரளிதரன் அறையில் டெலிபோன் இருந்தது. முரளிதரன் டெலிபோனை எடுத்துப் பேசினார். பேச்சு ஐந்து நிமிடங்கள் நீடித்தது.

கூடத்தில் காந்திமதியும், சீதாவும், அவள் தாயாரும் மற்றும் அந்த வீட்டைச் சேர்ந்தவர்களும் உட்கார்ந்திருந்தனர்.

“அதென்ன சீதா அந்தப் பாட்டைப் பாடினாய்?” என்று சீதாவின் தாயார் கேட்டாள்.

“அவள் பாடியது சரிதான் இப்போது அதற்கென்ன? சீதா! நீ போய் டிரஸ் மாற்றிக்கோ… காந்தியை அவள் வீட்டில் கொண்டு விடட்டு வரச் சொல்கிறேன்” என்று முரளிதரன் கூறிக்கொண்டே வந்தார். டெலிபோனில் பேசிய பிறகு அவர் மனம் மாறியிருந்தது. உள்ளத்தில் பெரும் சலனம் ஏற்பட்டது. டெலிபோனில் கந்தநாதனைப் பற்றி அவரது நெருங்கிய நண்பர் ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிவித்தது தான் அவருள்ளத்தில் சலனத்தை ஏற்படுத்தியது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

4

# சுருதியும், இசையும்

காந்திமதி சீதாவைச் சில நாள்கள் சந்திக்கவில்லை. கல்யாண ஏற்பாடு வேகமாக நடந்து கொண்டிருக்கும் என்று அவள் எண்ணினாள். பட்டுப் புடவை எடுக்கக் காஞ்சிபுரம் ஒருநாள் சென்றிருப்பார்கள் என் நினைத்தாள். வெள்ளி பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்கள் எல்லாம் வாங்குவது துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதனால் தான் சீதாவுக்கு வருவதற்கே நேரமில்லை என் நினைத்தாள்.

ரகுவும் காந்திமதியிடம் சீதாவின் கல்யாணத்தைப் பற்றி விசாரித்தான். மேற்கொண்டு ஏதும் விவரம் தெரியாது என்று காந்திமதி கூறிவிட்டாள். தனக்குக் கல்யாணம் ஆகாத கவலையால் காந்திமதி வெறுப்புடன் கூறுகிறாள் என நினைத்தான் ரகு. காந்திமதிக்குப் பரீடசை மார்ச் மாதம். அது முடிந்தவுடன் எப்படியாவது கல்யாணத்தை முடித்துவிடுவது என்ற திட சங்கல்பத்துடன் இருந்தான். இரண்டு மூன்று இடங்களில் கடனுக்கும் ஏற்பாடு செய்து வைத்திருந்தான். வரனுக்கு ஏற்பாடு செய்தவுடன் பணம் தருவதாகச் சிலர் வாக்களித்திருந்தனர். வரன் தான் எங்கிருக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லை.

காந்திமதி ஒருநாள் சீதாவின் வீட்டுப் பக்கம் சென்றாள். சீதாவின் வீட்டில் வெளியே காவல்காரன் மட்டும் இருந்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சீதாவின் வீட்டில் ஒருவரும் இல்லையென்றும் அவசரமாக டில்லிக்குச் சென்றிருக்கிறார்கள் என்றும் அவன் தெரிவித்தான். காந்திமதி திகைத்தாள்.

கல்யாணம்?

சீதாவின் கல்யாணத்தைப் பற்றிக் காவல்காரனிடம் எப்படிக் கேட்பது? ஒன்றும் புரியவில்லையே... காந்திமதி அங்கிருந்து புறபட்டுச் சென்று கொண்டிருந்தபோது தோட்டக்காரன் எதிரே வந்தான். காந்திமதிக்கு அவன் அறிமுகமானவன். சீதாவின் கல்யாணத்தைப் பற்றி அவனிடம் விசாரித்தாள். சீதாவின் கல்யாணம் நின்றுவிட்டது என்று மட்டும் அவன் தெரிவித்தான். சீதாவும் அவள் பெற்றோரும் டில்லிக்குச் சென்று ஒருவாரம் ஆகிறதென்றும் அவன் தெரிவித்தான்.

தன்னிடம் சொல்லாமல் சீதா ஊருக்குச் சென்றது காந்திமதிக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு நெருங்கிப் பழகியவள் இப்படிச் செய்துவிட்டாளே என்று துக்கமாகக் கூட இருந்தது அவளுக்கு.

சீதாவின் கல்யாணம் ஏன் நின்றுவிட்டது? காந்திமதிக்கு ஏதும் புரியவில்லை. அன்று அவளுக்கு ஒன்றிலும் நாட்டம் செல்லவில்லை. விளக்கு ஏற்றக்கூட நினைவில்லாமல் அமர்ந்திருந்தாள். ரகு அன்று வழக்கத்திற்கு விரோதமாக விரைவாக வீடு திரும்பினான்.

“காந்தி, காந்தி! ஒரு நல்ல செய்தி” என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கூவிக்கொண்டே ரகு உள்ளே நுழைந்தான். காந்திமதி திடுக்கிட்டு எழுந்து விளக்கேற்றினாள்.

"காந்தி, காந்தி! சீதாவைப் பெண் பார்க்க வந்தவர்கள் பெயர் என்னவென்று சொன்னாய்?" என்று கேட்டான். அவன் வழக்கத்துக்கு விரோதமாக, ஷர்ட்டைக் கூடக் கழற்றாமல் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டான்.

காந்திமதி சுவாரஸ்யமில்லாமல்,"அவர்கள் பெயர் எனக்குத் தெரியாது. பெரிய கோடீஸ்வரராம்! மாப்பிள்ளையும் லட்சணமாக இருந்தான். அந்த இடம் வாய்த்தது சீதாவுக்குப் பெரும் அதிர்ஷ்டம் என் நினைத்திருந்தேன். கல்யாணம் நின்று போய்விட்டதாம்..." என்றாள்.

"அது எப்படி வேண்டுமானாலும் போகட்டும் நீ ஏன் கவலைப்படுகிறாய்? உனக்குப் பெரிய அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது" என்றான் ரகு.

காந்திமதி மௌனமாயிருந்தாள்.

"காந்தி! நாளைக்குச் சாயங்காலம் நாம் கபாலி கோயிலுக்குப் போய்விட்டு, அப்படியே அடையாறில் ஒரு வீட்டிற்குப் போகிறோம்" என்று ரகு தொடங்கினான்.

"கபாலி கோயிலுக்கா அண்ணா? ரொம்ப நாளாகப் போக வேண்டும் என்று ஆசை. கற்பகாம்பிகை கண் திறந்து பார்க்க மாட்டாளா என்று எவ்வளவோ நாள்கள் ஏங்கி இருக்கிறேன்" - காந்திமதியின் குரலில் புதுத் தெம்பு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இருந்தது.

"கற்பகாம்பிகை கண் திறக்கத்தான் போகிறாள் காந்திமதி! அதிர்ஷ்டம் நம் வீட்டுக் கதவைத் தட்டிவிட்டது!" என்ற உற்சாகமாகக் கூறினான் ரகு.

"என்ன அண்ணா, நாடக வசனம் பேசுகிறாய்? சுற்றி வளைத்துப் பேசாமல் நேரே சொல்லக்கூடாதா?"

"சொல்லத்தானே இவ்வளவு சீக்கிரம் வந்திருக்கிறேன் காந்தி! நாளைய தினம் வெள்ளிக்கிழமை. லாண்டரி இருக்காது. இன்றே லாண்டரிக்குப் போய் சலவை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். உனக்கும் பளிச்சென்று உடுத்திக் கொள்ள ஒரு புடவை வேண்டாமா? வா, போய் ஓர் ஆர்ட் ஸில்க் புடவையாவது வாங்கி வருவோம்."

ரகுவின் இந்த உற்சாகமான பேச்சு காந்தியை மேலும் திகைக்க வைத்தது.

"இப்போது எதற்கண்ணா புடவை? பால்காரனின் பழைய பாக்கியைக் கொடுக்க வேண்டும்!" என்று காந்திமதி கூறவும்,"எல்லா பழைய பாக்கியையும் அடைத்து விடலாம். வா பேசிக்கொண்டே போவோம். இங்கே பேசினால் ஒட்டுக் கேட்கும ஜன்மங்கள் ஏதாவது கலைத்துத் தொலைத்து விடும்" என்றான்.

தன் அண்ணனுக்கு இவ்வளவு உற்சாகம் ஏற்பட்டு இதுவலை காந்தி கண்டதில்லை. மேலும் ஒரு கோயில்,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

குளம் என்று அவளை அவன் அழைத்துச் சென்றதுமில்லை. நல்ல சினிமா வந்திருக்கிறது, போய்ப் பார்த்துவா என்று கூறியதும் கிடையாது. கலகலப்பாகப் பேசி வெளியே போவோம் என்று அழைத்ததுமில்லை. இன்று வழக்கத்திற்கு விரோதமாக அழைக்கிறான். புடவை வாங்கித் தருவதாகக் கூறுகிறான். எங்கோ அடையாறுக்குச் செல்ல வேண்டுமாம் - ஹ_ம்!

காந்திமதி தன் சகோதரனுடன் வெளியே புறப்பட்டாள். ரகு மிகவும் குஷியாகப் பேசிக் கொண்டே வந்தான். அவள் கல்யாணத்திற்கு வரன் தேடி அலைவதையும், பணத்திற்காகப் பலரைக் கேட்டிருப்பதையும், அப்படிக் கேட்டு வாக்களித்திருப்பவருள் ஒருவர் காந்திமதியைக் காண வேண்டும் என்று கூறியதையும் மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே வந்தான்.

“அது என்ன அண்ணா, என்னைப் பார்த்தால் தான் கல்யாணத்திற்குப் பணம் தருவதாக ஒருவர் சொல்கிறார் என்றாயே…” என்றாள் காந்தி.

“ஆமாம் காந்தி! அவர் மிகவும் நல்லவர். மகா பணக்காரர். அவர் கேட்டதும் பணம் கொடுப்பதற்காக மட்டுமில்லை. என்னை அவருக்குப் பிடித்துவிட்டது. எனக்கு ஒரு ‘பார்ட் டைம்’ வேலை தருவதாகக் கூறியிருக்கிறார். எனக்கு ஒரு தங்கை கல்யாணத்திற்கு இருப்பதாகவும், அதற்காகத் தான் பணம் கடன் கேட்கிறேன் என்றும் கூறியவுடன் உன்னைப் பார்க்க

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேண்டும் என்று அந்த வீட்டு மாமி தன் ஆவலைத் தெரிவித்தான். அதனால் தான் உன்னை அழைத்தேன். வேறு யாராவது அதைப் போல கூப்பிட்டால் நான் சம்மதித்திருப்பேனா?" என்று ரகு கூறும்போது உணர்ச்சி வசப்பட்டு அவன் பேசுகிறான் என்று காந்தி தெரிந்து கொண்டாள்.

கபாலீஸ்வரர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்து கொண்டு அங்கிருந்து பஸ் ஏறினர் ரகுவும் காந்தியும். காந்திக்குக் கற்பகாம்பிகை நினைவுதான். அம்பிகையின் அருள் தனக்குப் பாலிக்க வேண்டும் என்று அவள் வேண்டிக் கொண்டாள்.

அது வீண்போகவில்லை. ரகுவும், காந்திமதியும் அடையாறை அடைந்து பெரும் மாளிகை போன்ற அந்தப் பங்களாவில் நுழையும்போது தான் அந்த வீட்டின் சொந்தக்காரரின் கார் வந்தது. சற்று முன்பு வந்திருந்தால் கூட அவர்களைக் கண்டிருக்க முடியாது.

கார் டிரைவர் திறக்க - காரிலிருந்து அந்தப் பெரியவரும் அவர் மனைவியும் இறங்கினர். ரகு போர்டிகோ அருகில் நின்றுகொண்டு கைகூப்பி அவர்களை வணங்கினான். அவன் அருகே காந்திமதி ஒன்றும் புரியாமல் விழித்து நின்று கொண்டிருந்தாள்.

அவளுக்கு ஏதும் புரியாமலில்லை. நன்றாக எல்லாம் புரிந்து விட்டது. அந்தக் காரிலிருந்து இறங்கியவர் யார் எனப் புரிந்து விட்டது. அவரது சகதர்மிணி இன்னாரெனப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

புரிந்து விட்டது. அவர்களுடைய அடையாளத்தை அவ்வளவு எளிதிலா அவள் மறந்து விடுவாள்!

கோடீஸ்வரனும் அவரது மனைவி காவேரியம்மாளும் தான் ரகு கூறிய அந்த மாபெரும் பணக்காரர்.

கோடீஸ்வரனும், காவேரியம்மாளும் ரகுவையும் காந்திமதியையும் உள்ளே அழைத்தனர். பெரும் பணக்காரர் என்ற கர்வமோ, பகட்டோ, வீண் மதிப்போ அவர்களிடம் இல்லை. சோபாவில் அமரச் சொல்லியும் ரகுவும் காந்தியும் உட்காராமல் நின்று கொண்டிருந்தனர்.

"பரவாயில்லை, உட்காரம்மா" என்று காவேரி கூறினாள். பிறகு,"உட்காருவதில் என்ன உயர்வு தாழ்வு வந்துவிடும் என்று இப்படி நிற்கிறீர்கள்?" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

ரகுவும் - காந்தியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். "அண்ணா! இந்த மாமியை நான் பார்த்திருக்கிறேன்..." என்று அவள் வாயெடுப்பதற்குள் சமையற்காரன் ஒரு தட்டில் காபி டம்ளர்களுடன் வந்து அவர்கள் எதிரே நின்றான். காந்திமதியும் ரகுவும் சோபாவில் உட்கார்ந்தே காபி சாப்பிடும் படியாகிறது. அதற்குள் கோடீஸ்வரன் கூப்பிடுவதாக ஒரு வேலையாள் வந்து ரகுவை அழைத்தான்.

கோடீஸ்வரன் தன் அறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். ரகுவை வரவேற்று உட்காரச் சொன்னார். ரகு உட்காராமல் நின்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொண்டேயிருந்தான்.

“உன்னை வரச்சொல்லிவிட்டு நான் கோயிலுக்குப் போய் விட்டேன்” என்றார் கோடீஸ்வரன்.

“ஆகா அதனாலென்ன - நாங்களும் கோயிலுக்குப் போயிருந்தோம். ஸ்வாமி தரிசனம் நன்றாகக் கிடைத்தது” என்று ரகு மிகவும் பணிவாகக் கூறினான்.

“உன் தங்கையும் வந்திருக்கிறாளோ?” என்று அவர் கேட்டார்.

“ஆமாம்... மாமி அன்றே அழைத்துவரச் சொன்னார்கள். அழைத்து வந்தேன். மிகவும் பயந்த சுபாவமுள்ளவள். கூச்சமும் வெட்கமும் அதிகம்” என்றான் ரகு.

அதற்குள் அங்கே கூடத்தில் அமர்ந்திருந்த காந்திமதி, காவேரியம்மாள் வரவும் எழுந்து நின்றாள்.

“உட்காரம்மா உன்னை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே” என்று காவேரியம்மாள் காந்திமதியை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள்.

காந்திமதி ஒரு முடக்கு எச்சிலைத் தொண்டைக்குள் தள்ளி, காய்ந்த உதட்டை நனைத்துக் கொண்டு “சீதாவின் வீட்டிற்கு வந்தீர்களே...” என்றாள்.

“எந்த சீதா குழந்தே?” என்று காவேரி கேட்டாள். எந்த சீதா என்று கூறுவாள் காந்திமதி!

“என் சிநேகிதி சீதா. அவளைப் பெண் பார்க்க வந்தீர்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவளைப் பாடச் சொன்னீர்கள். கூட நானும் சுருதி போட்டுக் கொண்டு பாடினேன்."

காந்திமதி இவ்வாறு சொன்னவுடன் காவேரியம்மாளுக்குப் புரிந்துவிட்டது. "ஆமாம்... ஆமாம்" என்று உற்சாகமாகச் சொன்னவள் ஏனோ சட்டென்று மௌனமாகி விட்டாள். அவள் முகம் சுண்டியது. ஏதோ ஏமாற்றம் நேர்ந்து விட்டவள் போல சூள் கொட்டிவிட்டு,"இங்கிதம் தெரியாதவர்கள் நல்ல சம்பந்தத்தை உதறித் தள்ளி விட்டார்கள்.போகட்டும். துரதிர்ஷ்டம் அவர்களுக்குத்தான்" என்று முணுமுணுத்துக் கொண்ட காவேரியம்மாள், சட்டென தன் முகத்தில் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு,"ஓகோ! அந்தப் பெண் தானா நீ? உன் பாட்டை நான் ரொம்பவும் அனுபவித்தேன். அதை விட என் பிள்ளையும் உன் குரலினிமையைக் கூர்ந்து கவனித்திருக்கிறான். அவனுக்குப் பாட்டு என்றால் உயிர். அதுவும் கணீரென்ற குரல் அவனுக்கு ரொம்பவும் பிடிக்கும்" என்று கூறி நிறுத்தி விட்டு ஒருமுறை காந்தியை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு,"உன்பேர் என்னவென்று சொன்னாய்?" என்று கேட்டாள்.

"காந்திமதி."

"காந்திமதி... நல்ல பெயர். திருநெல்வேலியிலுள்ள அம்மன் பெயர். உன் அண்ணா நல்ல பிள்ளை. நீ நன்றாகப் பாடுவாய் என்று சொன்னான். உன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கல்யாணத்திற்காக எங்கள் வீட்டாரைப் பணம் கடன் கேட்டிருந்தான். நான் தான் உன்னை அழைத்து வரச் சொன்னேன். எனக்கென்னவோ மனமே சரியில்லை… காந்தி! ஒரு பாட்டுப் பாடேன்…. சுவாமி பேரில் பாடுகிறாயா… இன்றைக்கு வெள்ளிக்கிழமை…" என்று கூறிய காவேரியம்மாள் எழுந்து பூசை உள்பக்கம் போய் அங்கிருந்த தம்பூராவை எடுத்து வந்தாள்.

தம்பூராவைக் காவேரியம்மாளிடமிருந்து வாங்கிய போது கூடத்துக் கடிகாரம் ஏழுமுறை அடித்தது.

"காந்திமதி! இந்தத் தம்பூராவை ஒரு வருடத்திற்கு முன்பு என்னிடம் வளர்ந்த என் சொந்தக்காரப் பெண் மீட்டிக் கொண்டிருந்தாள். அவள் நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டுப் புத்தகம் சென்றுவிட்டாள். அதற்குப் பிறகு இதை யாரும் மீட்டவில்லை. இன்று நீ வந்திருக்கிறாய். உனக்கும் நல்ல இடத்தில் கல்யாணம் ஆகவேண்டும்" என்று வாழ்த்து கூறினாள்.

காந்திமதி, தம்புராவை மடியில் சாய்த்து வைத்துக்கொண்டு சுருதியைச் சரிபார்த்தாள். 'ஞொய்ங் ஞொய்ங்' என்று மிருதுவான ஒலி அந்தக் கூடத்தில் எதிரொலித்தது.

காந்திமதி "கபாலி… கருணை நிலவு பொழியும் வதனம்…" என்று கிருதியைப் பாடத் தொடங்கினாள்.

"நல்ல கீர்த்தனை கபாலி கோயிலுக்கு இன்று போய் வந்தோம். பாடலும் சுவாமியின் பேரில் அமைந்து மிகத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

திருப்தியை அளிக்கிறது" என்று கூறி ஆனந்தப்பட்டாள்.

பாட்டோசை கேட்டவுடனேயே கோடீஸ்வரன் தன் அறையினின்று எழுந்தார்: "ரகு யார் பாடுகிறார்கள் உன் தங்கையா?" என்று கேட்டுக் கொண்டே ஹாலுக்கு வந்தார்.

காந்திமதி மெய்மறந்து பாடினாள் அந்தப் பாட்டை என்று சொல்லலாம். அவளுடைய உள்ளத்தில் காவேரியின் அன்பு நிறைந்து விட்டது. அன்பால் எழுந்த ஒரு வேகமும், இசையில் ஈடுபாடும் சேரவே, காந்திமதி பாடலிலே மனம் ஒன்றினாள்.

காந்திமதி பாடிக் கொண்டிருக்கும் போது வெளியே கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. கந்தநாதன் உள்ளே நுழையும் போதே தோடிராக இசை அவனை வரவேற்றது. அவன் இதயத்தில் சுழன்று கொண்டிருந்த அந்த இசையின் ஒலியை மீண்டும் நேரிடையே கேட்டான்... ஒரு கணம் வாயிற்படியருகே நின்ற கந்தநாதன் பூட்ஸைக் கழற்றிவிட்டுச் சந்தடியின்றி உள்ளே நுழைந்தான்.

இசை ஓசையை மட்டும் அவன் முன்பே கேட்டதாக இல்லை அதைப் பாடுபவளையும் அவன் எங்கோ பார்த்திருக்கிறான்.

அவன் மனத்தில் சில நாள்களாகத் தோன்றிக் கொண்டிருந்த அந்த முகம் -

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வண்டினைப் போன்று குறுகுறுக்கும் காந்திமதியின் கண்கள் குண்டு மல்லிகை போல் மலர்ந்த முகம். மாநிறமாக இருந்தாலும் முகத்திலே குறுகுறுப்பு. இதழ்கள் இரண்டும் உணர்ச்சியை உள்ளடக்கிய அமுதகலசம் போன்றே தோன்றின. பற்களின் முன் வரிசையில் ஒரே ஒரு பல் சற்றுச் சாய்ந்திருந்தது கூட அவள் அழகை அதிகப்படுத்தித்தான் இருக்கவேண்டும். இல்லாவிடில் கந்தநாதன் ஏன் ஒருமுறை, இருமுறை, மும்முறை என்று அவள் முகத்தை ஜாடைமாடையாகப் பார்க்கிறான்? அவள் அருகே சீதா உட்கார்ந்து பாடினாள். சீதா - சிவந்த மேனி அகன்ற புருவம். குங்குமம் போல் எப்போதும் சிவந்த உதடுகள் - இத்தகைய அழகுடைய சீதா அவனைக் கவரவில்லை. அவளருகே அமர்ந்து உடன்பாடிக் கொண்டிருந்த காந்திமதி தான் அவனைக் கவர்ந்தாள். அவள் முகத்தைத் தான் மற்றொரு முறை அவனுக்குப் பார்க்கத் தோன்றியது.

பெண்கள் உருவம் கந்தநாதனை வாழ்க்கையில் இவ்வளவுநாள் கவர்ந்தோ, எந்தவிதச் சலனத்தையோ ஏற்படுத்தியதில்லை. பெரிய விருந்துகளில் அவனுக்கு அறிமுகப்படுத்தும் செல்வந்தர் வீட்டுப் பெண்கள் மகிழ்ச்சியுடன் அவனைக் கை குலுக்க வரும்போது கூட அவன் சாதாரணமாக ஒரு வாலிபனிடம் கை குலுக்கும் உணர்ச்சியைத் தான் அடைவான். அவர்கள் குழைந்து குழைந்து பேசும் போதோ, நாணம் மிகுதியால் பேசாமல் முகஞ்சிவக்க நிற்கும் போதோ கந்தநாதன் தன் மனத்தில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எந்தவித எண்ணத்தையும் உருவாக்கிக் கொள்ள மாட்டான்.

ஆனால் காந்திமதி அவனுள்ளத்தில் சிறிதளவு சலனத்தை ஏற்படுத்திவிட்டாள். சிறிதளவு என்று தான் சொல்ல வேண்டும். அன்று முரளிதரன் வீட்டிலிருந்து பெண் பார்த்துவிட்டு அவன் காரில் ஏறிக் கொண்டான். அவனைத் தொடர்ந்து அவன் பெற்றோரும் வந்து காரில் அமர்ந்தனர். கந்தநாதன் ஏதும் பேசவில்லை.

கோடீஸ்வரன் நடுவழியில் பெண்ணைப் பற்றிய பேச்சைத் தொடங்கினார்:

“காவேரி, பெண் எப்படி? லட்சணமாக இருக்கிறாளில்லையா?”

“களையான முகம். அடக்கமும், மரியாதையும் இருக்கின்றன.”

“முரளிதரனும் அப்படித்தான். கொஞ்ச காலத்தில் நல்ல பணம் சேர்ந்து விட்டாலும் போலி கர்வம், ஆடம்பரம் இல்லை. தந்தையைக் கொண்டிருக்கிறாள் பெண்.”

“எதற்காக இதெல்லாம் நாம் பார்க்க வேண்டியிருக்கிறதென்றால், பெண் வீட்டுக்கு வரும் வேளை வீட்டில் சந்தோஷத்தை நிலவச் செய்ய வேண்டும் என்பதற்குத்தான்.”

“என்ன காவேரி! எனக்கு மட்டும் அவ்வளவு அக்கறையில்லையா? நான் எல்லாவற்றையும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

யோசித்துவிட்டுத் தான் முடிவு செய்திருக்கிறேன்…”

“அதற்குச சொல்லவில்லை. கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஒரே ஒரு முறை நடப்பதுதான். கந்தநாதனைப் போன்ற சாதுபிள்ளைக்கு ஏற்றவள் தான் வரவேண்டும் என்பதற்காகக் கேட்டேன்.”

பேச்சு இப்படித் தொடர்ந்தது. கந்தநாதன் ஏதும் பேசவில்லை. மௌனமாக வந்தது ஆச்சரியமாக இருந்தது.

வீட்டை அடைந்ததும் காவேரி அம்மாள்,“அப்படியென்றால் இப்போதே போன் செய்து விடுங்கள், பெண் பிடித்திருக்கிறது என்று. அவர்கள் ஏதும் கொடுக்க வேண்டாம், ஆனால் கல்யாணத்தை மிகச் சிறப்பான முறையில் செய்து விட வேண்டும் என்று சொல்லி விடுங்கள்” என்றாள்.

கந்தநாதன் இப்போது தான் வாய் திறந்தான். “அம்மா! ஏதும் போன் செய்ய வேண்டியதில்லை” என்றான்.

கோடீஸ்வரனும், காவேரியும் திடுக்கிட்டனர்.

“ஏன், ஏன்?” என்ற கேள்வியே இருவரிடமும் பிறந்தது.

கந்தநாதன் உடனடியாக ஏதும் சொல்லவில்லை. அவனை வற்புறுத்திக் கேட்கவும் முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். என்றாலும் கோடீஸ்வரனுக்குப் பரபரப்பு ஏற்பட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஏன் ஏதும் போன் செய்ய வேண்டாம் என்று கூறுகிறான்?” என்று சிந்திப்பதிலேயே அவர் இரவைக் கழித்தார்.

காவேரி அம்மாள் எழுந்ததும் காபியைக் கந்தநாதனுக்குக் கொடுக்கும் போது அவன் அபிப்பிராயத்தைக் கேட்டுவிட்டாள்.

“அம்மா! என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்றால் நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். அவர்களுக்குப் போன் செய்து விடுங்கள்” என்றான் கந்தநாதன்.

“என்னப்பா, திடீரென்று குண்டைத் தூக்கிப் போடுகிறாய்? ஏதாவது காரணம் சொல்லாமல் திடுதிப்பென்று கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் அவர்கள் என்ன நினைப்பார்கள்?”

“பெண் பிடிக்கவில்லை என்று சொல்லி விடுங்கள் அம்மா!” தான் இப்படிச் சொன்னது கந்தநாதனுக்கே வியப்பாக இருந்தது. இதுவரை வெளிப்படையாகத் தன் கருத்தை அவன் கூறியதேயில்லை.

“என்ன, என்ன சொல்கிறாய் கந்தநாதா? பெண் பிடிக்கவில்லையா?’ என்று மறுபடியும் காவேரியம்மாள் கேட்டாள். அவள் அதிர்ச்சி அடையவில்லை. தன் மகன் இவ்வளவு துணிவாகக் கருத்தைக் கூறுவதில் அவளுக்கு மிக மகிழ்ச்சியே.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“இந்தப் பெண் பிடிக்காவிட்டால் போகிறது வேறு எந்தப் பெண்ணாவது உனக்குப் பிடித்துக் கல்யாணம் செய்து கொண்டால் சரிதான்” என்று மட்டும் காவேரியம்மாள் கூறினாள். கந்தநாதன் ஏதோ கூற வாயெடுத்தான். ஆனால் அவன் பேசவில்லை. வெளியே போய்விட்டான். கோடீஸ்வரனுக்கு விஷயம் தெரிந்தது. “சீதாவைப் பிடிக்கவில்லை என்று கூறுகிறானே. அந்தப் பெண்ணை விட அடக்கமும், அழகும் கொண்ட வேறு பெண் இவனுக்குக் கிடைக்கப் போகிறாளாமா?” என்று அலுத்துக் கொண்ட அவர் மிகுந்த கவலையடைந்தவராய்,“முரளிதரனுக்கு நான் என்ன பதில் சொல்வேன்?” என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

அவருக்கு இரவு தூக்கமே வரவில்லை. ஆனால் பொழுது விடிந்தவுடன் அவருக்கு டெலிபோன் அழைப்பு வந்தது. முரளிதரன் பேசினார். எதிர்பாராத விதமாகக் கல்யாண விஷயத்தைத் தள்ளிப் போட நேர்ந்து விட்டது என்று கூறி மன்னிப்பு கேட்டுக் கொண்டார். நாசூக்காகப் பேசினார் முரளிதரன். ஏன் என்று கேட்கக் கோடீஸ்வரனுக்குத் தோன்றவில்லை. கந்தநாதன் பிடிவாதமாகக் கூறியதற்கு ஏற்றவாறு முரளிதரனே கல்யாண விஷயத்தை ஒத்திவைத்து விட்டது அவருக்கு ஒரு விதத்தில் நிம்மதி தான் என்றாலும் திடீரென முரளிதரன் கல்யாண நிகழ்ச்சியைத் தள்ளிப்போட்டு விட்ட காரணம் அவருக்குப் புரியவில்லை.

கோடீஸ்வரன் சிந்தனையிலே சில நாள்களைக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கழித்தார். காவேரி அம்மாளுக்கும் மகன் கல்யாண விஷயம் இப்படித் தடைப்பட்டது குறித்து வருத்தம் தான். இந்தச் சமயத்தில் தான் ரகு கோடீஸ்வரனை அணுகினான். காவேரி அம்மாளும் காந்திமதியை அழைத்துவரச் சொன்னாள். கந்தநாதன் காந்திமதியைக் கண்டு ஒரு கணம் திகைத்து நின்றான்.

காந்திமதி பாடிக் கொண்டிருந்த போது சட்டெனக் கந்தநாதன் கூடத்து வாசற்படியருகே நிற்பதைக் கண்டாள். மேலே பாடுவதற்கு ஓடவில்லை, காவேரியம்மாளும் அப்போது தான் உணர்ந்தான் கந்தநாதன் வந்து நிற்பதை. கோடீஸ்வரனும் ரகுவும் வந்தனர்.

“ஏனம்மா நிறுத்தி விட்டாய்? பாட்டை முடித்துவிடு…” என்றார் கோடீஸ்வரன்.

காந்திமதி நாணத்தால் தலைகுனிந்து கொண்டாள். கந்தநாதனும் அங்கே நிற்காமல் மாடிக்குப் போய்விட்டான்.

எல்லார் மனத்திலும் சலனம் ஏற்பட்டது. காந்திமதியால் மேலே பாட முடியவில்லை. அவள் ரகுவை நோக்கினாள், போகலாமா என்று கேட்கும் பாவனையில்.

காவேரியம்மாளும் எழுந்து,“காந்தி! உனக்கு ஆண்டவன் நல்ல சாரீரத்தைக் கொடுத்திருக்கிறான். நான் காரை அனுப்புகிறேன் அடிக்கடி வந்து உன் குரல் இனிமையையும், உன் சங்கீத ஞானத்தையும் நானும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அனுபவிக்க வழி செய். இந்த வீடு மாற்றார் வீடு என்று நீ நினைக்க வேண்டாம் உன் வீட்டைப் போலவே நினைக்கலாம்” என்றாள்.

குங்குமச் சிமிழை எடுத்தாள் அது தவறிக் கீழே சிந்தியது. “நல்ல சகுனம் தான்” என்று மனத்தில் எண்ணிக் கொண்டாள். குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்ட காந்திமதி,“போய்விட்டு வருகிறேன் மாமி” என்றாள் கன்னங்குழியச் சிரித்துக்கொண்டே.

போய்விட்டு அவள் அடுத்த முறை வரும்போது அந்தப் பெரிய பங்களாவின் மருமகளாக வரப்போகிறாள் என்பது அவளுக்கும் தெரியாது அவளை வாஞ்சையுடன் வழி அனுப்பிய காவேரியம்மாளுக்கும் அப்போது தெரியாது.

## 5

# மாநகர்க்கு ஈந்தார் மணம்

ரகுவால் நம்பவே முடியவில்லை. அவன் கோடீஸ்வரன் எதிரே அமர்ந்திருந்தான். அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்கு எங்கோ கனவு பூமியில் கேட்கும் குரல் போன்றிருந்தது. அவர் மகனுக்குத் தன் தங்கையை மணம் புரிந்து கொடுப்பதா - அவர் ஏதாவது வேடிக்கை செய்கிறாரா? அல்லது அவன் காதுகளில் விழும் வார்த்தைகள் வேறுவிதமாக ஒலிக்கின்றனவா?

அவன் உடல் வியர்த்தது. காந்திமதியின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கல்யாணத்திற்காக அவன் அலைந்து திரிந்த கஷ்டம் வேறு யார் அறிவர்? பணத்திற்காக அவன் படும் சிரமமும், கடன் கேட்டு அவன் பல நண்பர்களிடம் நடையாக நடப்பதும் கனவாகவல்லவா ஆகிவிடும் போல தோன்றுகிறது.

கோடீஸ்வரனின் திருநிறைசெல்வன் கந்தநாதன் பி.ஏ.வுக்குச் சாதாரண டைப்பிஸ்ட் கிளார்க் ரகுநாதனின் சகோதரி சௌபாக்யவதி காந்திமதியைப் பாணிக்கிரகணம் செய்து கொடுக்க வேண்டுமா!

“நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?’ என்று ரகு ஒரு முடக்கு எச்சிலை நெஞ்சில் விழுங்கிக் கொண்டே கேட்டான்.

“மிஸ்டர் ரகு! நான் ஏதோ விளையாட்டாகப் பேசுவதாக நினைக்க வேண்டாம். ஸீரியஸாகத்தான் கேட்கிறேன். உன் தங்கையை என் மனைவிக்குப் பிடித்து விட்டது. எனக்குப் பூரண திருப்தி. எல்லாவற்றிற்கும் மேலாக என் மகனும் சரி என்று கூறிவிட்டான் ரகு! இந்தச் சமயத்தை நான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் என் சந்ததியே இருளடைந்து விடும். அதனால் தான் உன்னைக் கார் அனுப்பிக் கூப்பிட்டு வரச் செய்தேன். உன் சம்மதம் பெற்றவுடன் கோபாலபுரம் சோதிடரை வரவழைத்து முகூர்த்தத்திற்குத் தேதி வைத்து விடுவேன்” என்றார்.

ரகு சிலையென அமர்ந்திருந்தான். பிறகு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொன்னான்: "தங்களுடைய சம்பந்தியாக ஆவதற்கு எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்று நீங்கள் நினைத்து இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்?"

கோடீஸ்வரன் தன் புருவத்தைச் சுருக்கிக்கொண்டு "ரகு! என்ன அப்படி நினைக்கிறாய்? தகுதி எனும் பேச்சு இங்கே எப்படி வந்தது? நான் பிறக்கும்போதே பணக்காரனாகப் பிறந்தேனா? குணம் ஒன்றைத்தான் தகுதியாகப் பார்க்க வேண்டுமே தவிர பணத்தைப் பார்க்கக் கூடாது. உன் நிலை தெரிந்து தானே நான் உன்னுடன் சம்பந்தம் கொள்ள விரும்புகிறேன்?" என்றார்.

தனக்குத் தங்கை ஒருத்தி இருப்பது கோடீஸ்வரனுக்கு முன்பே தெரியும். இவ்வளவு நாள் கலியாணப் பிரச்னையை எடுக்காதவர் இப்போது ஏன் திடீரென முடிவு செய்கிறார்…? ரகு குழம்பினான்.

கோடீஸ்வரன் அவ்ன குழப்பத்தைத் தீர்த்தார். "ரகு, நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. இவ்வளவு நாட்கள் இல்லாமல் இப்போது திடீரென்று உன்னுடன் சம்பந்தப்பட்ட நான் வருகிறேனே என் நினைக்கலாம். அது உண்மை தான் நான் பெரிய இடமாக நாடினேன். கலியாணமே வேண்டாம் என்று பிடிவாதம் பிடித்த என் மகனே உன் தங்கையை மணக்கச் சம்மதித்து விட்டான். அது ஒன்று தான் எனக்கு மகத்தான வெற்றி. என் மகனுக்குப் பிடித்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விட்டதென்றால் நான் எந்த ஏற்றத் தாழ்வையும் பார்க்கக் கூடாது. நீ சரியென்று சொன்னால் உனக்கு ஒருவிதச்சிரமமும் வைக்காமல் நானே முன் நின்று கலியாணத்தை முடித்து விடுகிறேன். உனக்குக் காலணா செலவு கூட ஏற்படாது” என்றார்.

ரகு சற்று நிம்மதியடைந்தான். மேலும் அவர் தொடர்ந்து,“உன் தங்கை இந்தப் பெரிய பங்களாவின் ராணியானாள் என்றால் உனக்குப் பெருமை தானே! நீ விரும்பினால் உனக்கும் என் எஸ்டேட்டில் நல்ல சம்பளத்தில் உத்தியோகம் தருகிறேன். உன் தங்கையின் இசையில் தான் என் பிள்ளை மயங்கிவிட்டான் என்று நினைக்கிறேன்…” என்று அவர் கூறும்போது அவர் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

காந்திமதியைக் கேட்காமல் எப்படிச் சம்மதிப்பது என்று எண்ணினான் ரகு.

“என் தங்கையை ஒரு வார்த்தை கேட்டு வருகிறேன் ஸார்! அவளுக்குப் பிடித்திருந்தால் எனக்கு ஒருவித ஆட்சேபணையுமில்லை. அவள் தானே இந்த வீட்டில் வாழ்க்கைப் படப் போகிறாள்” என்று ரகு சொல்வதற்கே தடுமாறினான்.

எதையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என உடனே பதிலை விரும்பும் கோடீஸ்வரன் கூட சற்று திகைத்தார்.

“உன் தங்கையை என்ன கேட்பது? நீ சரியென்றால் அவள் சரியென்று கூறிவிட மாட்டாளா?” எனக் கேட்டு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விடத் துடித்தார் கோடீஸ்வரன். அப்படிக் கேட்டுவிட்டு தன் கௌரவம் என்ன ஆவது என்று ஒருகணம் எண்ணிய அவர் அகத்தில் எழுந்ததை வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளாமல்,"ரகு! உன் குணம் எனக்குப் பிடித்துவிட்டது. வேறு ஒருத்தராக இருந்தால் பணக்கார இடம் வருகிறதை விட்டு விட மாட்டார்கள். பெண்ணின் கருத்தைக் கேட்காமலேயே சம்மதித்து விடுவார்கள். ஆனால் ஒன்று கூறவேண்டும். எனக்கு ஒரே பிள்ளை கந்தநாதன். அவனுடைய குணத்தைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. இவ்வளவு நாள்களாகக் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை என்றவன் இப்போது சம்மதித்திருக்கிறான். பிறகு மனம் எப்படி மாறி விடுமோ, மிஸ்டர் ரகு! என் பிள்ளையின் மனம் மாறுவதற்கு முன்பே கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்பது என் அவர். அதனால் இப்போதே போய் உன் தங்கையிடம், அபிப்பிராயம் கேள். நீயும் நன்றாக யோசனை செய். நாளைக் காலையில் வந்து எனக்கு முடிவைச் சொல்லு" என்றார். இவ்வளவு கூறுவதற்குள் அவருக்கு எப்போதும் இல்லாத படபடப்பு ஏற்பட்டது.

ரகு வணக்கம் தெரிவித்துவிட்டுப் புறப்பட்டான். அவன் போர்டிகோவை அடைந்திருக்க மாட்டான். கோடீஸ்வரன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார். "ரகு! நாளைக் காலையில் எனக்கு டெலிபோன் மூலம் சமாசாரம் தெரிவிக்கிறாயா? எட்டுமணிக்கு உன் 'காலை'

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எதிர்பார்ப்பேன். உன்னிடமிருந்து போன் வந்தால் சம்மதம் என்று அர்த்தம். இல்லாவிடில் ஈஸ்வர சங்கல்பம்” என்று சொல்லும்போது அவர் நா தழுதழுத்தது. ஏராளமான செல்வமும், செல்வாக்கும் இருந்தும் மகன் விஷயத்தில் அவர் வேதனை அடையத்தான் நேர்ந்தது.

ரகு வீட்டிற்குள் நுழையும்போது அவன் கால்கள் பூமியிலே பாவியதாகத் தோன்றவில்லை. ‘காந்தி, காந்தி’ என்று கூவியவாறு இரண்டு எட்டில் முதல் கட்டையும், இரண்டாவது கட்டையும் தாண்டினான். குடித்தனக்காரர்கள் சிலர் விளக்கை அணைத்துவிட்டுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். சிலர் காலை நீட்டிக்கொண்டு குழந்தைகளைக் காலில் போட்டுத் தட்டியவாறு தூங்கச் செய்து கொண்டிருந்தனர். குழந்தைகள் முதுகில் பொத்பொத்தென்று அவர்கள் தட்டுவதால் குழந்தை தூங்கிவிடும் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்கள் வம்பு பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கும் குழந்தை எப்படித் தூங்கும்?

ரகு அவ்வளவு வேகமாக வந்ததை இதுவரை ஒருவரும் கண்டதில்லை. முதல் கட்டிலிருந்தே அவன் காந்தியைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தது அவர்களுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. ஐம்பது வயதுக்கு மேலான யமுனாப்ப பாட்டி ரகுவைப் பார்த்து,‘காந்தி இல்லையே ரகு! அவ இராமாயணக் கதை கேட்கப் போயிருக்கிறாள். இன்னிலேருந்து சுந்தர காண்டம் ஆரம்பமாம். வந்தால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொடுக்கச் சொல்லி சாவியைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறாள்” என்று கூறிவிட்டுச் சாவியை எடுக்க மெல்ல எழுந்தாள். யமுனாப் பாட்டிக்குக் காந்தியின் மீது பிரியம் உண்டு. தாய் தந்தையற்ற பெண் சுய முயற்சியால் முன்னுக்கு வரும் குடும்பம் என்பதில் பாட்டிக்கு அலாதியான வாஞ்சையும் அனுதாபமும் உண்டு.

“கதை கேட்கப் போயிருக்காளா? அவள் தனியாகவா போய் போயிருக்கிறாள்?” என்று ரகு கேட்டான்.

“தினமும் தான் போகிறாள். சினிமா, டிராமா என்று போகாமல் நல்ல விஷயங்களைக் கேட்கப் போகிறாளே அதுவரையில் நல்லகாலம் தான்...” என்று அனுதாபக் குரலில் கூறினாள் பாட்டி.

“நல்லகாலம் தான் பாட்டி நல்லகாலம் வந்துவிட்டது காந்திக்கு. கற்பகாம்பிகை கண்திறந்து விட்டாள்” என்று உற்சாக மிகுதியால் கூறினான் ரகு.

“கால் கைகை அலம்பிக் கொண்டு இரண்டு வாய் சாப்பிட்டு வா ரகு! என்றுமே இல்லாத உற்சாகத்தோடு வந்திருக்கிறாயே, நல்ல சமாசாரம் கொண்டு வந்திருக்கிறாயா?” என்று பாட்டி கேள்விக்கணையை வீசினாள்.

ரகு அங்கேயே துவைக்கும் கல்லின்மீது உட்கார்ந்து விட்டான். “கஷ்டப்படும்போது எல்லாரிடமும் சொல்வது போல் நல்லகாலம் வரும்போது எல்லாரிடமும் கூறி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சந்தோஷத்தைப் பங்குபோட்டுக் கொள்ள வேண்டும் பாட்டி!” என்றான் ரகு.

“உனக்குத் தங்கமான மனசு. உன் குணத்துக்காகவே பகவான் வேண்டிய நல்லதைச் செய்வார். ஆபீசுலே பிரமோஷன் கிடைச்சுதாடா? இப்ப நீ என்ன சம்பளம் வாங்கறே? ஏதாவது பத்து இருபதாவது கூடப் போட்டுக் கொடுத்தாளா ஆபீசுலே? ராப் பகலா உழைச்சு ஓடாப் போறயேன்னு எனக்கு அஞ்ஞானம்…”

“பாட்டி! உங்களைப் போல நல்ல மனசுடையவாகிட்டே முதல்லே சொன்னாத் தான் எனக்கும் திருப்தி. எனக்கு நல்லது வந்தா என்ன? என் சகோதரிக்கு வந்தா என்ன? நான் ஒன்றும் அதிகச் சம்பளத்துக்கு ஆசைப்படலே பாட்டி காந்திக்கு நல்ல வரன் கிடைத்துக் கல்யாணம் நடந்து புக்ககத்திற்குப் போகவேண்டும் என்று ஒரே லட்சியம் தான் எனக்கு.”

“நம்ப கையிலே அது இருக்காடா ரகு? பகவானின் சித்தம் எதுவோ அப்படித்தான் நடக்கும். பாரேன்… காந்தியைத் தேடிண்டு ஒரு பணக்கார வீட்டுப் பெண்வருமே… அதற்குக் கூடக் கல்யாணம் நிச்சயமாகி நின்னுடுத்தாம்… காந்தி சொன்னாள். அது அது பிராப்தம் எப்படியோ அப்படித்தானே நடக்கும்” என்று பாட்டி சொன்னவுடன் ரகுவுக்குச் ‘சுருக்’ கென்றது.

ரகு சிறிது நேரம் பேசவில்லை. பாட்டியே தான் பேசிக் கொண்டிருந்தாள். காந்தி சொல்லியிருக்க வேண்டும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அந்தச் செய்தியை வைத்துக் கொண்டு பாட்டி கண்ணும் காதும் மூக்கும் இன்னும் கொஞ்சம் சேர்த்துச் சொன்னாள். பெரும் பணக்கார வீட்டுப்பிள்ளை தானே கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று தேடிக்கொண்டு வந்தானாம், பெண்ணும் பிடிச்சிருந்ததாம். திடீரெனப் பிள்ளைக்கு என்ன தோன்றியதோ வேண்டாம் என்று விட்டானாம்! 'பணக்காரப் பெண்ணுக்கும் அதிர்ஷ்டம் என்பது ஒன்று வேண்டும்' என்று பாட்டி சொல்லி முடித்தவுடன் ரகு உற்சாகம் கொண்டவனாய்,"பாட்டி! பணக்காரப் பெண்ணுக்குத் தட்டிப்போன அந்த வரன் நம்ம காந்திக்குக் குதிர்ந்து விட்டது. காந்தியின் பாட்டுக்காகவே அவர்கள் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். நம்ம சம்மதம் தான் பாக்கி" என்றான்.

"நம்ம சம்மதம்னு ஒண்ணு இருக்குமோடா குழந்தே! எப்படியாவது காதும் காதும் வைச்சாப்லே முடிக்கப் பாருடா நல்ல காலம் வர ஆரம்பிச்சா அது எங்கேயிருந்து எப்படி வரும்னு தெரியாதுடா ரகு!" என்று பாட்டி உள்ளத்துணர்ச்சியுடன் கூறினாள்.

"காந்தியின் சம்மதம் கேட்டுத் தெரிந்துகொண்டால் நாளைக்கே பறந்துபோய்ச் சொல்லிடுவேன்!" என்றான் ரகு.

"நன்னாயிருக்கு. பொண்ணின் சம்மதம் கேட்கறதுன்னு வழக்கம் உண்டோ? எங்க காலத்துலே பெரியவா

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பார்த்துச் சொன்னா பதிலே பேசமாட்டோம்" என்று யமுனா பாட்டி கூறியபோது, இவ்வளவு நேரமும் அங்கு நடைபெறும் பேச்சை ரேழி இருட்டில் நின்று கேட்டுக் கொண்டிருந்த வாசல் போர்ஷனில் குடியிருப்பவள்,"ஆமாம் ஆமாம் கல்யாணப் பொண்ணு இஷ்டத்தைக் கேட்காமல், பாழுங்கிணற்றிலா கொண்டு தள்ளுவது? உங்க காலத்துக் கதையெல்லாம் இப்போ சொல்றேளே?" என்று கூறிவிட்டு விடுவிடு என்று போய்விட்டாள். ரகுவுக்கு மனசை என்னமோ செய்தது. சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது.

காந்திமதியே கதை முடிந்து திரும்பி வந்துவிட்டாள்.

"அண்ணா, வந்து ரொம்ப நேரமாகிறதா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

"அடி பொண்ணே! சீக்கிரம் போய் அண்ணாவுக்குச் சாதத்தைப் போட்டு நல்ல செய்தியைக் கேட்டுச் சட்டுப் புட்டுன்னு ஒரு முடிவுக்கு வா. இராமர் படத்துக்கு நமஸ்காரம் பண்ணு" என்று கூறிய யமுனா பாட்டிக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றியது.

காந்திமதிக்கு ஒரு நிமிடம் ஏதும் புரியவில்லை. மங்கிய வெளிச்சத்தில் யாருடைய முகமும் அவளுக்குத் தெரியவில்லை.

"ஏனண்ணா, கதவைத் திறந்து இன்னும் அறைக்குள்ளேயே போகவில்லையா? விளக்குக் கூட ஏற்றவில்லை போலிருக்கிறதே" என்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நீயே விளக்கேற்று காந்தி! இன்னொரு வீட்டிற்குப் போய் விளக்கேற்றப் போகிறவள் சொந்த வீட்டு விளக்கையும் பிரகாரமாக ஏற்று” என்று யமுனாப் பாட்டி கொட்டாவி விட்டபடி கூறினாள்.

காந்தி கதவைத் திறந்தாள். “நீங்களெல்லாம் இருந்து தான் கல்யாணத்தை நடத்த வேண்டும் பாட்டி!” என்று ரகு கூறினான். காந்திமதிக்கு அப்போது தான் விவரம் புரிந்தது. ‘எனக்குக் கல்யாணம் எனக்குக் கல்யாணம்.’ என்று அவள் முணுமுணுத்தாள்.

“காந்தி! கதைக்குப் போய்விட்டு வருகிறாயா?” என்று ரகு கேட்டான்.

“ஆமாம், அண்ணா! இன்றைக்கு அனுமார் சீதைக்குக் கணையாழி தரும் படலம். நீங்களும் நல்ல சேதி சொல்கிறீர்கள்” என்று காந்திமதி மெல்லிய குரலில் கூறினாள்.

“அன்றைக்குப் போனோமே கோடீஸ்வரன் வீட்டிற்கு - அந்த மாமி உன்னை மாட்டுப் பொண்ணாய் ஏற்றுக் கொள்ள பிரியப்படுகிறாள். உன் அபிப்பிராயம் என்ன காந்தி?” என்று ரகு கேட்டான்.

காந்திமதியின் முகம் வெட்கத்தால் சிவந்தது. கல்யாணச் செய்தி என்றவுடன் அவளை நாணம் வந்து சூழ்ந்து கொண்டது.

காந்திமதி ஏதும் பேசாது இருப்பது கண்ட ரகு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒருவேளை அவளுக்குப் பிடிக்கவில்லையோ என்பதற்காக,“காந்தி! உன் விருப்பம் எதுவாயினும் என்னிடம் தைரியமாகச் சொல்லு உனக்குப் பிடிக்காவிடில் நான் இந்தக் கல்யாணம் பேச்சைத் தொடரமாட்டேன். ஆனால் காந்தி! எனக்கு என்னவோ கோடீஸ்வரனை மிகவும் பிடித்துவிட்டது. பெரும் செல்வர், எவ்வளவு எளிமையாக இருக்கிறார்! அந்த மாமிக்கு மட்டுமென்ன? மகாலட்சுமி மாதிரி. அவ்வளவு நல்ல குணமுடையவர் சம்பந்தம் நமக்குக் கிடைப்பதே கஷ்டம்…” என்று அவன் கூறிவரும்போது காந்திமதி குறுக்கிட்டு,“அண்ணா! நான் வேண்டாம் என்று சொன்னால் அல்லவா நீ இவ்வளவு பீடிகை போட வேண்டும்? எனக்காக நீ படும் கஷ்டம் தெரியாதா? நீயாக முடிவு செய்வது எதுவும் சரியாகத் தானிருக்கும்…” என்றாள்.

ரகு பரபரப்புடன்,“அப்படியென்றால் உனக்குச் சம்மதமா? அந்த வீட்டு மருமகளாகச் செல்ல உனக்கு இஷ்டம் தானா? அந்தப் பெரிய மாளிகையில் ராணிபோல் உலவ நீ தயார் தானா? சொல்லு காந்தி! சொல்லு. நாளைய தினம் காலையில் நான் போன் செய்தாக வேண்டும்… சொல்லு காந்தி!” என்று அவர் கரங்களைப் பிடித்துச் சிறு குழந்தை போல் குலுக்கினான்.

காந்திமதியின் கண்களில் மகிழ்ச்சிக் களிப்பு பொங்கியது. அவள் பெண்! வாயைத் திறந்து அவளால் எப்படி ஆமாம் என்று சொல்ல முடியும்?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அன்று இரவு முழுவதும் ரகுவுக்குத் தூக்கமே வரவில்லை. எப்போது விடியப் போகிறது என்று காத்திருந்தான். இரவெல்லாம் யோசனை செய்தவன் அதிகாலையில் தூங்கி விட்டான். அவன் கண்விழிக்கும் பொழுதே மணி என்ன என்ற பரபரப்புடனேயே எழுந்தான்.

போன் செய்ய அவன் புறப்படும் முன்பே வாசலில் பெரும் கார் ஒன்று தெருவை அடைத்துக் கொண்டு வந்து நிற்பதை அறிந்தான். கோடீஸ்வரனுடைய கார் அது!

அந்தப் பெரிய படகு போன்ற காரின் ஓர் ஓரத்தில் கோடீஸ்வரன் வெள்ளை வெளேரென்று ஆடை அணிந்து பட்டுச் சரிகை அங்க வஸ்திரத்துடன் நெற்றியில் விபூதி பளிச்சென்று விளங்க அமர்ந்திருந்தார். ரகு இருக்கிறாரா பார் என்று டிரைவரிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரகு கார் அருகே விரைந்தான்.

“வாங்கோ, வாங்கோ… வீட்டிற்குள் வாங்கோ” என்று முகமலர்ச்சியுடன் அழைத்தான்.

அதற்குள் எதிர்வீடு, பக்கத்து வீடு, என்று வீட்டிலுள்ளவர்கள் ஏதோ ஊர்வலத்தைப் பார்ப்பது போல் வெளியே வந்துவிட்டார்கள்.

கோடீஸ்வரன் காரினின்று இறங்குபவராகத் தோன்றவில்லை. ரகுவின் முடிவு என்னவென்று அறிய அவர் ஆவலுடன் இருப்பது போல் தோன்றியது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நான் போன் செய்யப் புறப்பட்டுக் கொண்டே இருக்கிறேன் ஸார்! உங்களுக்கு இவ்வளவு சிரமம் வைத்து விட்டேனா?” என்று ரகு கூறும்போது கோடீஸ்வரனுக்குப் பெரும் பாரம் நீங்கியதுபோல் தோன்றியது. ‘போன் செய்யப் புறப்படுகிறேன்’ என்றால் கல்யாணத்திற்குச் சம்மதம் என்றுதானே அர்த்தம்! கோடீஸ்வரனின் முகம் மலர்ந்தது.

அது குறுகிய சந்து. ஒரு கார் வந்துவிட்டால் எதிரேயுள்ள கார் நிற்க வேண்டியதுதான். நின்று கொண்டிருந்த அந்தக் காரின் பின்புறம் குப்பைவண்டி வந்து நின்று கொண்டிருந்தது. காரையும் கார் சொந்தக் காரர்களையும் ஏசிக்கொண்டே இருந்தான் வண்டிக்காரன்.

“ரகு! நான் போய்வருகிறேன். நல்ல சமாசாரத்தைச் சொன்னதற்குச் சந்தோஷப்படுகிறேன். இனிமேலே ஆக வேண்டியதை வேகமாகச் செய்யவேண்டியது தான். இப்போதே பாஸ்கர ஜோதிடரை வீட்டிற்கு வரச்சொல்லி தகவல் அனுப்பிவிட்டுப் போகிறேன். நீயும் சாயங்காலம் வந்துவிடு” என்றார்.

கார் புறப்பட்டது. திருமணச் செய்தி உற்றார் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ரகு வீட்டிற்குள் நுழையும்போதே குடித்தனக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர். “காந்திக்கு கல்யாணம் நிச்சயமாயிடுத்தாமே எங்களுக்குச் சொல்லவே இல்லையே” என்று எல்லாரும் ஒரே குரலில் கேட்டனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

'காந்தி அதிர்ஷ்சாலி.'

'எனக்குக் கோடீஸ்வரனைத் தெரியும். நல்ல குணவான். தர்மிஷ்டர்.' என்று பலவாறு பேசிக்கொண்டனர்.

6

# காதோடு ரகசியம்

சுபேதார் மாணிக்கம் தெரு என்று அந்தச் சந்திற்குப் பெயர். தேரடித்

தெருவையும், திருவல்லிக்கேணி பெரிய சாலையையும் சேர்க்கும் குறுக்கு வழி. இருபது வீடுகள் தாம் அந்தத் தெருவில். இரண்டு மாடி, மூன்று மாடிக் கட்டடங்கள். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஏழு எட்டுக் குடித்தனங்கள். நடுத்தர வருமானக்காரர்களுக்கு வரப்பிரசாதம் போல் அவை அமைந்திருந்தன. அந்தத் தெருவில் ஒரு வீட்டில்தான் ரகு குடியிருந்தான். சந்திரனுக்கு மனிதன் பறக்குமளவுக்கு விஞ்ஞான முன்னேற்றம் கண்டுள்ள இந்த நாளில் எட்டாம் எண்ணுள்ள அந்த வீட்டிற்கு மின்சாரம் போடுவதில் அதன் சொந்தக்காரர் சுமன்லால் தாதாவுக்கு நம்பிக்கை கிடையாது. ஏனென்று அவரைக் கேட்டுவிட்டு அவர் செய்யும் பிரசங்கத்தைக் காதில் போட்டுக் கொள்வதை விட நமக்குக் கல்யாணக் காரியம் ஏகப்பட்டது ஆக வேண்டியிருக்கிறது, அதைப் பார்ப்போம்.

நம்மை விட எட்டாம் நம்பர் வீட்டிலுள்ள

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

குடித்தனக்காரர்களுக்குத் தான் காந்திமதியின் கல்யாணத்தில் மிகவும் அக்கறை. மகாநாடு கூடிக் கூடி அலுக்கவில்லை அவர்களுக்கு. காந்திக்கு வந்த அதிர்ஷ்டத்தை ஒருவர் பாராட்டினார். அது ஒன்றும் பெரிய அதிர்ஷ்டம் இல்லையென்றும் அதைவிட அதிர்ஷ்டகரமான செயல்கள் உலகில் பல நடந்திருக்கின்றன என்றும் மற்றொரு குடித்தனக்காரர் கதை கதையாகச் சொன்னார்.

முன்கட்டுக் குடித்தனக்காரி இவ்வளவு நேரம் மௌனமாக இருந்தவள் இப்பொழுது திருவாய் மலர்ந்தாள்: “எனக்கு அப்போதே தெரியும். அந்தப் பொண்ணு குதிரை மாதிரி ஒசரமா காரிலே வருமே, அது பெண் பார்க்க வர அன்னிக்குக் காந்தியைக் கூப்பிட்டுண்டு போனா - அப்பவே அந்தப் பொண்ணுக்கு கல்யாணம் ஆகாதுன்னு எனக்கு தெரியும். மாப்பிள்ளைக்காரப் பையன் காரிலே வரப்போ காந்தியைப் பார்த்திருக்கான். பெண் பார்க்கப்போன இடத்திலே இருந்த காந்தி தெருவிலே வந்துண்டிருந்ததைப் பார்த்தவுடனே நிறுத்தி விசாரிச்சிருக்கான். காந்திக்குச் சொல்லித் தரணுமா? விழியாலே ஒரு சுழற்று சுழற்றினா யாரு மயங்கிடமாட்டா? மறுநாளே தன் அண்ணாவை அவர் வீட்டுக்கு அனுப்பிட்டா. இதுதான் விஷயம். அதிர்ஷ்டமும் இல்லை ஒண்ணும் இல்லை. எல்லாம் சாமர்த்தியம் தான்” என்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவள் பேசியது நிஜம் போலவே இருந்ததால் எல்லாரும் நம்பிவிட்டார்கள். காந்திமதிக்கு அவ்வளவு சாமர்த்தியமா என்று கூட வியப்படைந்தார்கள். சிலர் காந்திமதியின் இந்தக் குணத்தை வெறுத்தார்கள்.

ஆனால் முன்கட்டுக் குடித்தனக்காரியின் மனத்தில் பொறாமை கொழுந்து விட்டெரிந்தது. தன் தாபத்தைத் தன் கணவனிடம் தெரிவித்தாள்.

“கோடீஸ்வரனாமே உங்களுக்குத் தெரியுமோ?” என்று கேட்டாள் முன்கட்டுக் குடித்தனக்காரி கோமதி. தன் கணவன் சகலகலா வல்லவன் என்று அவள் நினைப்பு.

“ஆகா! கோடீஸ்வரனை எனக்குத் தெரியாதா? இந்த ஊருக்கு வரும்போது துண்டை உதறித் தோளிலே போட்டுண்டு வந்தார். என் அப்பா அப்போ செல்வாக்குள்ளவர். என் அப்பாவிடம் ஓர் இட்டிலிக்குத் தொங்குவார்.”

“அப்போ! உங்களுக்கு அவரை நன்றாகத் தெரியும்னு சொல்லுங்கோ”

“தெரியுமாவாவது? நான் அவர் வீட்டிற்குப் போனேன்னா எனக்கு இராஜோபசாரம் நடக்கும்.”

கோமதிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. தன் கணவணால் முடியாததே ஏதும் இல்லை எனும் எண்ணத்தில் தன் உள்ளத்தில் ஒரு கணத்தில் எழுந்த பொறாமைத் தீயைக் கக்கிவிட்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“அப்படிண்ணா ஒண்ணு செய்யுங்கோ, நேரே கோடீஸ்வரனிடம் போய்ச் சொல்லி கல்யாணத்தை நிறுத்த ஏற்பாடு செய்யுங்கோ!”

இதைக் கேட்ட கோமதியின் கணவனுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

“என்ன சொல்கிறாய் கோமதி?”

“பக்கத்திலிருந்து சொல்றேனே காதிலே விழலியா?”

“விழறது, விழறது. உனக்குத் திடீரென ஏன் இப்படி புத்தி போகுது?”

“ஆமாம் அப்படித்தான். அந்தக் காந்திக்கும் கர்வம் ஜாஸ்தி. என்னைக் கண்டா ரொம்பவும் அலட்சியம்... உங்களுக்கு நம்ப ரேவதி கல்யாண வயசிலே இருக்கிறது கண்ணிலே படலே.. ரேவதிக்கு கோடீஸ்வரன் பிள்ளையை முடியுங்கோ...?”

“அவர் அந்தஸ்து என்ன நம்ம அந்தஸ்து என்ன..?”

“காந்தியைவிட நம் அந்தஸ்து குறைந்து விட்டதா? நம்ம ரேவதி அழகிலே தான் குறைச்சலா? உங்களுக்கு ஏன் ரேவதியைப் பற்றிய நினைவே தோன்றவில்லை?”

கோமதியின் வார்த்தை ஒவ்வொன்றும் அவள் கணவனுக்கு ஆச்சரியமாகத் தானிருந்தது. கோமதிக்கு என்ன வந்துவிட்டது? அவள் உடலில் ஓடுவதே வெறுப்பும் பொறாமையும் நிறைந்த ரத்தமா? கணவனின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மௌனத்தைக் கண்ட ரேவதி,“என்ன யோசனை செய்யறேள்? நாளைக்கே போய் எப்படியாவது கல்யாணத்தை நிறுத்தி விடவேண்டும். அந்த வரனை ரேவதிக்கு முடித்துவிட வேண்டும்” என்றாள்.

அவள் கணவன் திடீரெனச் சிரித்தான்.

“கோமதி! உன் திட்டம் புரிகிறது. கல்யாணத்தை வேண்டுமானாலும் நிறுத்தலாம். எனக்கும் மாப்பிள்ளை கந்தநாதன் தெரிஞ்சவன் தான், ஆனால் ரேவதிக்கு அந்த வரன் வேண்டாம்” என்றான்.

“உங்களுக்கு நல்லதே ஆகாதோ?”

“அட பைத்தியமே… இடம் என்னமோ உசத்தி தான் ஆனால் நமக்கு வேண்டாம்.”

மீண்டும் அவன் சிரித்துவிட்டு அந்தச் செய்தியை எப்படி கோமதியிடம் சொல்வதென்று சிறிது யோசித்தான். பிறகு அவள் காதருகில் கந்தநாதனைப் பற்றித் தானறிந்த உண்மை ரகசியத்தைச் சொன்னான். அதைக் கேட்ட கோமதிக்கு அதிர்ச்சி தாங்கவில்லை.

“நிஜமாவா?” என்று கூவினாள்.

“உன்னிடம் நான் ஏன் பொய் சொல்லப் போகிறேன்? இப்போது சொல்லு ரேவதிக்கு அந்த வாசனை ஏற்பாடு செய்யட்டுமா?”

“வேண்டாம்.. வேண்டாம்… நல்ல வேளை சொன்னீர்களே!

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திக்கே கல்யாணம் நடக்கட்டும். அவள் கலியாணமாகித் திண்டாடட்டும்” என்று பரபரப்புடன் கூறினாள். பிறகு,“நானும் அவள் கல்யாணத்தில் உற்சாகம் காட்டுவது போல் நடந்து கொள்கிறேன். அந்தக் கல்யாணம் நடப்பதன் மூலம் அவள் கொட்டம் அடங்கட்டும். திமிர் தீரட்டும்!” என்று ஏதோ சாபமிடுபவள் போல் கூறினாள்.

## 7

# தாமோதரன் யோசனை

கந்தநாதன் ஸோஷியல் கிளப்புக்கு நுழையும் போதே அவனது நண்பர்கள் முகமலர்ச்சியுடனும்,‘புது மாப்பிள்ளைக்கு வருக வருக’ எனும் கோஷத்துடனும் வரவேற்றார்கள். அது ‘பெரிய மனிதர்கள்’ வந்து களித்துக் குலாவிப் பொழுதைக் கழிக்குமிடம். பரம்பரைப் பணக்காரர்கள் மாஜிப் பணக்காரர்கள் இப்படியாக அனைவரையும் அங்கத்தினராகக் கொண்ட அந்தக் ‘கிளப்’ எப்போதும் கலகலப்பாக இருக்கும்.

“புது மாப்பிள்ளையா? யாரைப் பார்த்துச் சொல்லுகிறாய் சங்கரா?” என்று மோகன் சங்கரனைப் பார்த்துக் கேட்டான். கறுப்புக் கண்ணாடியை அவன் அணிந்திருந்ததால் கந்தநாதனைப் பார்த்துக் கொண்டே கேட்பது மற்றவருக்குத் தெரியாது. சங்கரன் சிரித்தவாறு,“ஊரே அமர்க்களப்படுகிறது. கந்தநாதனுக்குக் கல்யாணம் நடக்க போவது உனக்குத் தெரியாதா? பல

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வர்ணங்களில் அச்சிடப்பட்ட அழைப்பிதழ் வந்திருக்கிறதே உனக்குக் கொடுக்கவில்லையா?" என்றான்.

மோகன் வாயை ஒருவிதமாகக் கோணிக் கொண்டு,"அவன் எனக்கு ஏனப்பா கொடுக்கப் போகிறான்? நானென்ன அவனுக்கு ஈடா?" என்று சொல்லிவிட்டு,"சங்கரா! அதுமட்டுமல்ல, நான் அவனை மிஸ் கந்தநாதன் என்று கூப்பிடுவது வழக்கம். அதை அவன் ஒருதரம் இன்ஸ்ல்ட்டாக எடுத்துக்கொண்டு விட்டான், அது முதல் என்னிடம் பேசுவதே கிடையாது" என்றான்.

சங்கரன் உதடுகளில் புன்முறுவல் நெளிய வார்த்தைகளில் இரு அர்த்தம் த்வனிக்க,"நீ கேலி செய்ததற்காகவாவது அவன் சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்கிறான். இனிமேல் நீ ஒன்றும் சொல்லமாட்டாயல்லவா? நான் அவனிடம் உன்னைப் பெர்ஸனலா அழைக்கச் சொல்கிறேன்" என்றான்.

"வேண்டாம், வேண்டாம். அவனென்ன என்னை அழைப்பது? அவன் கல்யாணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணின் அண்ணனை எனக்குத் தெரியும். அவன் என்னை அழைப்பான். அப்போது ஜம் என்று வருகிறேன். ஹ_ம் ஆனால் அந்தக் கல்யாணம் நடந்தால் தானே? பார்த்துக் கொள்வோம். அந்தப் பெண்ணின் அண்ணனுக்குக் கந்தநாதனைப் பற்றித்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெரிந்தால் நிச்சயம் தன் சகோதரியைக் கல்யாணம் செய்து கொடுக்கமாட்டான்…"

"என்னப்பா இது பெரிய புதிர் போடுகிறாய்? ஏதோ ஏழைப் பெண்ணுக்கு பணக்கார இடம் கிடைக்கிறதென்றால் அதை நிறுத்திவிடுவாய் போலிருக்கிறதே. உனக்கென்னப்பா அவ்வளவு ஆத்திரம்?"

"எனக்கென்ன தனிப்பட்ட முறையில் கந்தநாதனிடம் விரோதமா? ஏழையாயிருந்தாலென்ன, பணக்காரராயிருந்தால் என்ன? ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழ் பண்ணக் கூடாது பார்!"

சங்கரன் அவனை ஒருமுறை வியப்புடன் பார்த்துவிட்டு,"நீயா பெண்ணைப் பற்றிப் புகழ்ந்து சொல்கிறாய் மோகன். உனக்கு இரையான பெண்கள் எத்தனையோ - அப்படியிருக்கும் போது கந்தநாதனைப் பற்றிச் சொல்வது சரியன்று என்பது என் அபிப்பிராயம்" என்றவுடன் மோகன் கடகடவென்று நகைத்து,"நான் சொல்ல வந்தது வேறு சங்கரா! கந்தநாதனிடம் தைரியமாக நூறு பெண்களைக் கூட ஒப்படைக்கலாம்" என்று கூறிவிட்டு சங்கரன் காதுகளுக்கு மட்டும் கேட்கும்படியாக சிலவற்றைக் கூறியவுடன் சங்கரன் ஒரு கணம் திகைத்தே விட்டான்.

"மோகன்!நிஜமாகவா சொல்கிறாய்?" என்று தன் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தக் கேட்டான். "ஆமாம், ஆமாம். இல்லாவிடில் நான் ஏன் அவனை மிஸ்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கந்தநாதன் என்று கேலி செய்கிறேன்? அது உனக்குத் தெரியவில்லையா?" என்று மோகன் விஷமப் புன்னகை செய்தான். "புரிந்தது, புரிந்தது மோகன்!மேலும் விளக்கம் கொடுத்து ரசாபாசம் செய்யாதே. ஆனால் நீ மிஸ் கந்தநாதன் என்று கூறுவதும் தவறுதான்..." என்றான். மோகன் மேலும் ஹோஹோ என்று நகைத்து "சரி....சரி... அப்படியானால் இனி புது அடைமொழி கண்டு பிடிக்கவேண்டியதுதான்" என்றான்.

கந்தநாதன் காதில் இந்தச் சம்பாஷணை விழாமலில்லை. அவனுக்கு மோகன் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நேருக்கு நேர் கேட்டு விட வேகமாக அவனை நோக்கிச் செல்ல முயன்றவனைக் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்திய அவனது நெருங்கிய நண்பன் தாமோதரன் அவனை அங்கிருந்து அழைத்துச் சென்றான். தாமோதரனைப் பார்த்தவுடனேயே கந்தநாதன் கோபமும், படபடப்பும் மாறிவிட்டன. தாமோதரன் பிரபல சாக்லேட் கம்பெனியின் பிரதான விற்பனையாளன். கல்யாணம் ஏற்பாடு சம்பந்தமாக அவன் உதவி பெரிதும் தேவையாக இருந்தது. கந்தநாதனோடு பள்ளியில் ஆரம்ப காலத்திலிருந்து ஒன்றாய்ப் படித்தவன் அவன். தாமோதரனும் பணக்கார வீட்டுப் பிள்ளை தான். கந்தநாதனின் தகப்பனாருக்கு இருக்கும் அளவுக்கு ஆஸ்தி அவனுக்கு இல்லாவிடினும் தாமோதரன் வேலை செய்து சம்பாதித்துச் சாப்பிட வேண்டிய அவசியமில்லாத அளவுக்குப் பணம் இருந்தது. ஆனால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தாமோதரன் வேலை செய்யாமல் வீட்டில் உட்கார்ந்து சாப்பிட விரும்பவில்லை.

கந்தநாதன் வீட்டு அந்தரங்கம் முழுவதும் தாமோதரனுக்குத் தெரியும். அதேபோல் கந்தநாதனின் சொந்த விஷயங்களையும் அவன் அறிவான்.

தன் தந்தையும், தாயும் கல்யாண ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி விட்டார்கள் என்றறிந்தவுடனேயே கந்தநாதன் தாமோதரனிடம் ஓடிவந்தான். தாமோதரன் ஊரிலில்லை. தாமோதரன் வரட்டுமே என் முடிவைச் சொல்கிறேன் என்று கூடத் தாயிடம் வாதாடினான் கந்தநாதன். காவேரியம்மாள் அவன் கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் திருமண ஏற்பாடுகளில் முனைந்தாள். ஆனால் ஒரே ஒரு வார்த்தை மட்டும் அவள் சொன்னது கந்தநாதனை மேலே பேசவொட்டாமல் அடித்துவிட்டது. "இந்தக் கல்யாணம் தடைபட்டு விட்டால் பிறகு உனக்குக் கல்யாணமே ஆகாது கந்தநாதா!" என்ற வார்த்தைக்குப் பதிலே சொல்ல அவனால் முடியவில்லை. 'ஆகாவிட்டால் போகட்டுமே' என்ற ஒரு சொல்லை மட்டும் அவன் உதடுகள் முணுமுணுத்தன. அதைக் காவேரியம்மாள் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை.

தாமோதரன் ஊரிலிருந்து வந்த செய்தி அறிந்தவுடன், டெலிபோனில் திருமணச் செய்தியைக் கூறவே,'ஸோஷியல் கிளப்பில்' சந்திப்பதாகச்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சொன்னான் கந்தநாதன். தாமோதரன் வருவதற்கு முன்பே கந்தநாதன் வந்துவிட்டான். மோகன் பேசியவற்றால் கோபங்கொண்டு அவனிடம் விரைந்த கந்தநாதனைத் தடுத்து அழைத்துச் சொன்ற தாமோதரன் தனியே ஓரிடத்தில் அமர்ந்து,"நல்லவேளையாக நான் வந்தேன். மோகனைப் போன்ற கீழ்க்குணம் படைத்தவர்களிடம் பேசுவதே தவறு" என்று கூறிவிட்டு,"அது போகட்டும். உன் கல்யாண ஏற்பாட்டை நீ எனக்குச் சொல்லவில்லையே" என்றவாறே கந்தநாதன் கொடுத்த அழைப்பிதழைப் பிரித்துப் படித்துவிட்டு "பேஷ் பேஷ்" எத்தனை வர்ணங்களைக் கொட்டி அச்சடித்திருக்கிறாய், பிரமாதமாயிருக்கிறதே!" என்றான்.

"எல்லாம் அப்பாவின் ஐடியா தான். அவரும் அம்மாவும் தான் பம்பரம் போல் சுற்றுகிறார்கள்." என்றான் கந்தநாதன், தாமோதரனின் முகத்தைப் பார்த்தவாறு. தாமோதரன் மீண்டும் ஒருமுறை கல்யாணக் கடிதத்தைப் படித்துவிட்டு,"பெண் யார்... ரகுவின் 'இளைய சகோதரி சௌபாக்கியவதி காந்திமதி...' ஏன் கந்தநாதா! பெண் வீட்டாருக்குத் திருநெல்வேலி மாவட்டமோ!" என்று கேட்டான்.

"எந்த மாவட்டம், எந்த ஊர், பெண்ணின் அப்பா பெயர் என்ன என்று ஒன்றையும் என்னைக் கேட்காதே, அப்பா, அம்மா சொன்னார்கள்? கடைசியாக நான் சம்மதித்து விட்டேன்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஆகா! பெற்றோர் சொல்லும் வார்த்தையை அவசியம் கேட்டுத் தானாக வேண்டும். ஆனால்…” என்று தாமோதரன் கூற முற்பட்டவுடன் கந்தநாதன் குறுக்கிட்டு,“நான் செய்த தவறு ஒன்றே ஒன்றுதான். அந்தப் பெண்ணின் குரலினிமையில் மனத்தைப் பறிகொடுத்தேன். நின்று ரசித்துக் கேட்டேன்… அதை என் தாயாரிடம் கூறினேன். அவ்வளவு தான். பாட்டுப்பாடிய பெண்ணைப் பாணிக்கிரகணம் செய்து கொள்ளச் சொல்லிவிட்டார்கள். தாமோதரன்! மறைக்காமல் சொல்லு. என் உயிர் நண்பன் நீ. உயர் நண்பன். நீ. இந்தத் திருமணத்தைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன? நீ என்ன முடிவு சொல்கிறாயோ அதன்படி நான் செய்யத் தயார்!” என்றான். அவன் குரல் உணர்ச்சியால் தழுதழுத்தது. தாமோதரன், அழைப்பிதழைப் பிரிப்பதும் மீண்டும் படிப்பதுமாகச் சிறிது நேரம் தாமதித்து,“வரதட்சணை பலம் தான் என்று சொல்லு…” என்றான்.

கந்தநாதன் குபீரென்று சிரித்துவிட்டு,“உனக்கு நடந்தவற்றையெல்லாம் சொன்னால் தான் விளங்கும்” என்று கூறி தான் முதன் முதல் பெண் பார்க்கப் போனதையும், அந்தக் கல்யாணம் நின்றுவிட்டதையும், ஒருநாள் எதேச்சையாகத் தன் வீட்டிற்குக் காந்திமதியும் அவள் சகோதரனும் வந்ததையும், காந்திமதி பாடிக் கொண்டிருந்ததையும் அவள் பாட்டின் இனிமையைக் கேட்டு ஒரு கணம் ரசித்து நின்று விட்டதையும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒன்றுவிடாமல் தெரிவித்தான்.

தாமோதரன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு,"உன் தந்தை தனக்குச் சமதையில்லாத இடத்தை எப்படி தேர்ந்தெடுத்தார்?" என்று கேட்டான்.

"அப்பாவுக்குப் பணம் ஒன்று தான் இலட்சியம் என்று நினைத்தாயா என்ன? குணத்தைத் தான் அவர் முக்கியமாகக் கருதுகிறார். தனக்குப் பிறகு எஸ்டேட்டின் நிர்வாகமும், குடும்ப நிர்வாகமும் தக்கபடி நடக்கவேண்டும் என்பதில் அவருக்கு மிகவும் கவலை... அந்தப் பிரச்னை வரும்போது தான் என்னால் கல்யாண விஷயத்தைத் தட்ட முடிவதில்லை.." என்றான் கந்தநாதன். தனக்குக் கல்யாணம் என்றவுடன் தாமோதரன் உற்சாகம் காட்டியதை அவன் குறிப்பாகத் தெரிந்து கொண்டான்.

சிறிது நேரம் அவர்களிடையே மௌனம் நிலவியது. பிறகு தாமோதரன் சொன்னான்: "ஒரு காரியம் செய்யும் முன்பு நூறு முறை யோசித்துச் செய்ய வேண்டும் என்று சொல்வார்கள்... அதே பெரியவர்கள் ஆயிரம் பொய் சொல்லியேனும் கல்யாணத்தைச் செய்துவை என்பார்கள். அதனால் எதை ஏற்றுக் கொள்வது என்றே தெரியவில்லை."

"நீ என்ன சொல்கிறாய் தாமோதரன்? நேரிடையாகச் சொல்ல உனக்கு உரிமை கிடையாதா? எதையோ சொல்லத் தயங்குகிறாய் என்பது எனக்குத் தெரிகிறது"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்று கந்தநாதன் தாமோதரன் முகத்தைப் பார்த்தான்.

தாமோதரன் கந்தநாதனின் உண்மையான நண்பன். ஆனால் கந்தநாதன் கல்யாணம் செய்து கொள்வதைத் தடை செய்ய விரும்பவில்லை. அதற்குப் பதிலாக எதையோ நினைத்துக் கொண்டவன் போல,"நாம் ஒரு சமயம் பேசிக் கொண்டிருந்தோமே நினைவிருக்கிறதா? ஜப்பானுக்குப் போகவேண்டும் என்று. கல்யாணம் முடிந்தவுடனே நாம் புறப்பட ஏற்பாடு செய்துவிட வேண்டும்" என்றான்.

கந்தநாதனுக்குப் புரிந்துவிட்டது. ஜப்பானில் டோக்யோ நகரில் உள்ள பிரபல டாக்டர் ஒருவரிடம் - கந்தநாதன் உடலைப் பரிசோதனை செய்து தக்க சிகிச்சை அளித்துக்கொண்டு திரும்ப வேண்டியது என்பது தாமோதரனின் திட்டம். அப்போதே தாமோதரன் ரகசியமாகக் கூறியிருக்கிறான், அந்த சிகிச்சை முடியும் வரை கல்யாணம் செய்து கொள்ளாதே என்று.

'ஆமாம் தாமோதரன் நல்லதற்காகவே கூறினான். அதை நாம் எப்படி மறந்து விட்டோம். இப்போது மட்டும் வெள்ளம் தலைக்குமேல் போய்விடவில்லை திருமணத்தை ஆறுமாதத்திற்குத் தள்ளிப் போட்டு விடலாமா?" என்று எண்ணியவனாய்,"தாமோதரன்! நீ சொன்னதைச் செய்யாமல் நான் மறந்துவிட்டேன். ஒரு நொடியில் என் தாயாரின் வற்புறுத்தலுக்கும், தந்தையின் கண்டிப்பான உத்தரவுக்கும் பணிய வேண்டியதாகி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விட்டது. உடனே நான் போய் கல்யாணத்தைத் தள்ளி வைத்து விட்டு, அவசர நிமித்தமாக ஜப்பான் போக வேண்டியிருப்பதால் திருமணம் வேறொரு தேதிக்குத் தள்ளி வைக்கப்பட்டு விட்டது என்று அறிவித்து விடுகிறேன். நீயும் உடனே பாஸ்போர்ட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய். நாம் எதற்காகப் போகிறோம் என்று யாருக்கும் தெரியவேண்டாம். என் பெற்றோருக்குக் கூடச் சொல்ல வேண்டாம்" என்றான்.

தாமோதரன் ஏதும் பேசவில்லை. ஏதோ சிந்தனையிலாழ்ந்திருந்தான். பிறகு கந்தநாதனைப் பார்த்து,"என்னை மன்னித்து விடு கந்தநாதா! இந்தச் சமயத்தில் நான் அந்த விஷயங்களை நினைவுபடுத்தக் கூடாது. கடவுள் விட்டவழி என்று இருந்திருக்க வேண்டும். ஏதேதோ கூறி உன்னைக் கலக்கிவிட்டேன்" என்றான்.

"என்னைக் கலக்கவில்லை தாமோதரா! என் கண்களைத் திறந்தாய். ஒரு பெண்ணின் வாழ்நாளைச் சோக மயமாக்க நான் விரும்பவில்லை உடனே ஜப்பானுக்குப் போவோம். போய் வந்து, கல்யாணத்தை முடித்துவிட்டால் போகிறது' என்று கந்தநாதன் ஏதோ திடமான முடிவுக்கு வந்தவனைப் போல் கூறினான்.

தாமோதரன் கந்தநாதன் கரங்களைப் பிடித்துக் கொண்டு,"அவசரப்படாதே கந்தநாதா! இந்தச் சமயத்தில் கல்யாணத்தை நிறுத்திவிட்டால் உன் தந்தை பெரும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அதிர்ச்சியடைந்து விடுவார். மேலும் பல பல வதந்திகளுக்கு அது இடமளிக்கும். அதனால் திட்டமிட்டபடி கல்யாணம் நடக்கட்டும். கல்யாணம் நடந்த மூன்றாம் நாளே நாம் புறப்பட்டு விடுவோம். அப்போது யாரும் சந்தேகப்பட மாட்டார்கள். சங்கடம் ஏதும் நேராது. அதனால் இப்போதைக்கு எந்தவிதக் கவலையுமின்றி, குழப்பமுமின்றி கல்யாண ஏற்பாடுகளில் ஈடுபடு" என்றான். மேலும் அவன் வற்புறுத்திப் பல யோசனைகளைக் கூறியது அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

திருமண அழைப்பிதழ்களை வெகுவேகமாக விநியோகித்தான் கந்தநாதன். திடீரென்று தன் மகன் உற்சாகத்தோடு வேலை செய்வது கோடீஸ்வரனுக்கும், அவர் மனைவிக்கும் நிம்மதியாக இருந்தது.

## 8

# அது என்ன ரகசியம்?

கந்தநாதன் - காந்திமதி திருமணம் சென்னையில் மிகவும் தடபுடலாக நடந்தேறியது. ஆக்லண்டு மாளிகை எனும் விஸ்தாரமான தோட்டத்தில் பிரம்மாண்டமான பந்தலின் கீழ் இரட்டை நாதஸ்வரம் ஒலிக்க, பாண்டு வாத்தியம் முழங்க, ஏராளமான கார்களில் பிரமுகர்கள் வந்திருந்து வாழ்த்த மிக்க கோலாகலமாகவே திருமண இடம் காட்சியளித்தது. ஒரு நொடியில் காந்திமதி செல்வச் சீமாட்டியாகி விட்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காதிலே வைரத்தோடு, மூக்கில் ஜ்வலிக்கும் பேசரி, கழுத்திலே பலவிதத் தங்க ஆபரணங்கள், கையில் நான்கு ஜோடி தங்க வளையல்கள்.

மாநிறமுடைய காந்திமதி சர்வாலங்கார பூஷிதையாக பட்டுப் புடவை சரசரக்க முகத்திலே புன்னகை மின்னத் தோன்றினாள். நேற்று வரையில் உடுக்க மாற்றுடை அற்றிருந்தவள் என்று அவளை யாரும் சொல்ல முடியுமா? காந்திமதி குடித்தனமிருந்த வீட்டின் மற்ற குடித்தனக் காரர்களையும் அவள் சகோதரன் அழைத்திருந்தான். ஒருவருக்கொருவர் விசித்திரமாக வம்புகள் பேசியவர்கள் கூட 'ஆக்லண்டு' தோட்டத்து நுழைவாயிலைக் கண்டு பிரமிக்க விட்டார்கள். நுழைவாயிலிருந்து கல்யாண மண்டபம் சுமார் ஒரு பர்லாங்கு தொலைவு இருக்கும். பகல் வேளையிலும் செடி கொடிகளில் மின்சார விளக்குகள் விதவிதமான வர்ணங்களில் ஒளிவீசிக் கொண்டிருந்தன. கோமதி இடுப்பில் குழந்தையுடன், தன் கணவனுடன் கல்யாணத்திற்கு வந்திருந்தாள்.

"ஏன்னா, காந்திக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தேளோ?" என்று அவள் தன் பிரமிப்பைப் பளிச்சென வெளிக்குக் காட்டிக் கொண்டாள்.

"நீயே பாரேன்!" என்று நகைச்சுவையுடன் பதிலளித்தான் அவள் கணவன்.

"இல்லை... நீங்கள் என்னவோ அவள் கணவனைப் பற்றிச்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

COME AND JOIN OUR TELEGRAM GROUP!

Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சொன்னீர்களே! பார்த்தால் ராஜா மாதிரி இருக்கிறானே" என்று மீண்டும் கோமதி கேட்டாள்.

"இருக்கட்டுமே கோமதி! காந்திமதி தன் கணவன் அழகை மட்டும் பார்த்துத் தினம் தினம் ரசித்துக் கொண்டே இருக்க வேண்டியது தான். வீடு மாதிரி இங்கே உரக்கப் பேசாதே. யாராவது கேட்டுத் தவறாக நினைக்கப் போகிறார்கள்" என்று கூறி பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் அவள் கணவன்.

கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களில் பலரும் அது போன்று பேசிக் கொண்டிருந்தனர். மேள சப்தத்திலும், கந்தநாதனின் நண்பர்களின் குதூகலப் பேச்சிலும் அந்த வார்த்தைகள் யார் காதிலும் விழவில்லை.

தாலி கட்டும் நேரம் வரையில் ரகு அந்த இடத்தை விட்டு அசையவில்லை. கல்யாணத்திற்கு இரண்டு நாள்களுக்கு முன்பே அவனுக்கு மோகனிடமிருந்து டெலிபோன் வந்தது. மோகனை ரகுவும் ஓரளவுக்கு அறிவான். மோகன் ரகுவை எதற்காகச் சந்திக்க விரும்பினான்? கந்தநாதனைப் பற்றிய பயங்கர உண்மையை மிகவும் நாசூக்காக எடுத்துச் சொன்னான். ரகு அவன் வார்த்தையை நம்பவில்லை. அவன் சொல்வதைத் தலையசைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"இப்போது கூட ஒன்றும் தாமதமாகி விடவில்லை மிஸ்டர் ரகு! கல்யாணத்தை நிறுத்திவிட. உங்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஸிஸ்டருக்கு வரனா கிடைக்காது? நான் ஏற்பாடு செய்கிறேன். அதே 'ஆக்லண்டு' தோட்டத்திலேயே கல்யாணத்தை வைத்துக் கொள்வோம். நீங்கள் ஒரு பைசா கூட செலவு செய்யவேண்டாம். கோடீஸ்வரனுக்கு இணையான பணக்கார இடம் தான். மறைத்துச் சொல்வானேன்? எங்கள் குடும்பம் தான். என் தந்தையிடம் சொல்லி என் சகோதரனுக்கே அதே முகூர்த்ததத்தில் முடித்து விடலாம். என் சகோதரனுக்கு முடியாவிடில் நானே உங்கள் தங்கை கழுத்தில் மூன்று முடிச்சுப் போடுகிறேன், போதுமா? ஏன் இவ்வளவு தூரம் சொல்கிறேன் என்றால் - நீங்கள் பணமற்றவராயிருக்கலாம். கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். உங்கள் சகோதரி அழகற்றவளல்லள். படித்தவள். நன்றாகப் பாடுகிறாள். பாட்டினாலேயே பணம் சம்பாதிக்கக் கூடிய திறமை இருக்கிறது. அப்படியிருக்க அவள் ஏன் வாழ்நாள் முழுவதும் வேதனைப்பட்டு வாழ்க்கையை அனுபவிக்காமல் போக வேண்டும்?" என்று மோகன் அனுதாபமும், கவலையும் ஆதரவும் நிறைந்த குரலில் கூறினான்.

"வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட வேண்டுமா? ஏன் வாழ்க்கையை அனுபவிக்காமல் போக வேண்டும்? அவர்கள் வசதிக் குறைவானவர்களா?" என்று ரகு திருப்பிக் கேட்டான்.

மோகன் விஷமப் புன்னகையுடன் கையிலே கனிந்து கொண்டிருந்த சிகரெட் சாம்பலைத் தட்டிவிட்டு,"ஐயோ,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மிஸ்டர் ரகு! நீங்கள் இன்னும் உலக அனுபவமற்ற குழந்தை தானா? ஒரு பெண்ணுக்கு வேண்டியது என்ன?" என்று கண்களை இடுக்கிக்கொண்டு ஒரு விதமாக ரகுவைப் பார்த்தவாறு கேட்டான்.

"பெண்ணுக்கு வேண்டியதென்று எதைச் சொல்லி எதை விட முடியும்? முதலில் பெண்ணுக்கு வேண்டியது கண் நிறைந்த கணவன் பிறகு கலங்காமல் வாழும் வாழ்க்கை. பிறகு தான் மற்றவை எல்லாம். காந்திமதிக்கு அந்தக் குறை ஏதுமில்லை மிஸ்டர் மோகன்! கந்தநாதனின் அழகுக்குக் காந்தி கூட ஏற்றவள் இல்லை அழகு, குணம், பணம் எல்லாம் சேர்ந்து காந்திமதிக்குக் கிடைத்தது பெரும் அதிர்ஷ்டமே. அதைக் கெடுத்து விடாதீர்கள்" என்று ரகு கூறினான்.

'மிஸ்டர் ரகு! எனக்கு என்ன உங்கள் தங்கைக்கு வரும் அதிர்ஷ்டத்தைக் கண்டு பொறாமையா? உங்கள் தங்கை கல்யாணத்தைத் தடுத்துவிட்டு என் தங்கைக்கா கல்யாணம் செய்து வைக்கப் பெண்ணுக்கு வேண்டியது கண் நிறைந்த கணவன் மட்டும் தானா? -கொஞ்சம் யோசனை செய்யுங்கள்" என்று மோகன் கூறும்போது ரகுவுக்குப் புரிந்து விட்டது. "ஐயா, போதும் போதும். மேலும் பேசி என்னைக் குழப்பாதீர்கள். நான் போய் வருகிறேன்" என்று புறப்பட்டான்.

"அப்போ - எனக்கு எப்போ தகவல் சொல்லி அனுப்புகிறீர்கள்?" என்று மோகன் மீண்டும் கேட்டான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவனிடமிருந்து தப்பினால் போதும் என்கிற அவசரத்தில்,“ஆகட்டும் நாளைக்குப் போன் செய்கிறேன்” என்று கூறி விடை பெற்றுக் கொண்டான்.

அப்படிச் சொல்லிவிட்டானே தவிர ரகுவிற்கு மனவேதனையாக இருந்தது. தன் சகோதரிக்கும், மாப்பிள்ளைக்கும் தான் சேர்த்து வைத்திருந்த பணத்தில் பட்டுப் புடவையும், பட்டு வேஷ்டியும் வாங்கி கொண்டு கோடீஸ்வரனிடம் சென்றான். அவர் புடவையையும், வேஷ்டியையும் வாங்கி அதைப் பிரித்துக் கூடப் பார்க்காமல்,“ரகு! உனக்கு ஏன் இந்தக் கஷ்டமெல்லாம்? நானே புடவை, வேஷ்டி எல்லாம் வாங்கிவிட்டேன். இதோ பார்” என்று பீரோவைத் திறந்து எடுத்துக் காட்டினார். புடவையின் வர்ணமும் சரிகையும் கண்ணைப் பறித்தன.

ஒரு பைசா செலவு கூட வைக்காமல் எல்லாவற்றையும் கோடீஸ்வரனே செலவு செய்கிறார். கல்யாண ஏற்பாடுகள் வெகு வேகமாக நடக்கின்றன. அப்படியென்ன உயர்வை அவர்கள் காந்திமதியிடம் கண்டார்கள்? ஒரு வேளை மோகன் சொன்னது போல் இருக்குமோ? தன் மகன் குறையை மறைக்க ஏழை இடத்துச் சம்பந்தம் விரும்புகிறாரோ? என்று கூடத் தோன்றியது. ஏன் - அவரையே கேட்டுவிடுவது கந்தநாதனுக்குள்ள குறைபாடு குறித்துக் கேட்டே விடுவது என்ற எண்ணத்தில் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். பேச்சு வரவில்லை.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என்ன ரகு, ஒன்றுமே பேசவில்லை… புடவை, வேஷ்டியெல்லாம் பிடித்துத் தானே இருக்கிறது?” என்று கோடீஸ்வரனே பேச்சைத் தொடங்கினார். ரகு தலையை அசைத்தான். முகத்தில் சிரிப்பை வரவழைத்து கொண்டான் என்றாலும் அவன் எண்ணமெல்லாம் கேள்வியின் மீதே இருந்தது. தொண்டையைக் கனைத்துக் கொண்டாலும் முகத்துணர்ச்சியை அவனால் மறைக்க முடியவில்லை. அவர் கேட்பதற்கெல்லாம் ஒரு மாதிரியாகத் தலையை அசைத்துப் பதில் கூறிவிட்டுச் சட்டென்று கோடீஸ்வரனை நோக்கி அந்தக் கேள்வியைக் கேட்டே விட்டான்: “மாப்பிள்ளைக்கு என்ன உடம்பு?” என்று அவன் கேட்பதற்குள் தவித்து விட்டான்.

ரகு என்ன கேட்கிறான்? கந்தநாதனுக்கு என்ன உடம்பு? எல்லாருக்குமிருப்பது போல் தோலாலான உடம்பு தான். தசை, நரம்புகள், இரத்தம் எலும்புகளால் ஆன உடம்புதான். இப்படிப் பதில் கூறியிருப்பார். ஆனால் ரகுவின் முகத்தைப் பார்த்தவுடன் நகைச்சுவை பேசத் தோன்றவில்லை.

“கந்தநாதன் உடம்பு இருக்கட்டும். உனக்கு என்ன உடம்பு ரகு? முகமும் கண்ணும் என்னவோ போலிருக்கிறதே, ஏதாவது கவலையா?” என்று கோடீஸ்வரன் கேட்டார்.

ரகு என்னவென்று சொல்வான்? அவன் கேள்விப் பட்டதைச் சொல்லாமா? ரகுவும், கோடீஸ்வரனும் சிறிது நேரம் மௌனமாயிருந்தனர். அவர்கள் மௌனத்தைக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கலைப்பது போல் டெலிபோன் மணி அடித்தது. கோடீஸ்வரன் டெலிபோனை எடுத்துப் பேசினார். பேசி முடித்தவுடன் அவர் முகமலர்ச்சியுடன்,"ரகு! உனக்கு நல்ல வேலை கிடைத்துவிட்டது. அடுத்த வாரம் முதல் மெர்சண்ட்ஸ் பாங்கியில் அக்கௌண்டென்டாக உன்னை நியமிக்க டைரக்டர் ஒப்புக்கொண்டு விட்டார். சம்பளம் என்ன தெரியுமா ஐநூறு ரூபா. குமாஸ்தா என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாயே - இனி நீ ஆபீசர்! கல்யாண சமாச்சாரத்துடன் இந்த நல்ல சேதியும் வந்துவிட்டது" என்றார்.

ரகுவுக்கு அந்தச் செய்தி சந்தோஷத்தைத் தான் அளித்தது. அவன் மனத்தைக் கலக்கிய மோகன் சொன்ன செய்தியை மறந்து விட்டான். அன்று கல்யாணக் கலகலப்பின் போது அவன் மோகனைச் சந்தித்தவுடன் மீண்டும் அவன் மனத்தில் சலனம் ஏற்பட்டது.

கல்யாணம் நடந்த மறுநாள் காந்திமதி அடையாறு பங்களாவுக்கே சென்றுவிட்டாள். இனி அவள் அந்த வீட்டு ராணி. இரண்டாவது மாடியில் பின் பக்கத்துப் போர்டிகோவில் நின்று பார்த்தால் அடையாறு நதியும், கடலும், ஒன்று சேருமிடம் தெரியும். மழைகாலம் தவிர மீதி நாள்களில் ஆற்றையும் கடலையும் சேரவிடாமல் மணல் மேடு ஒன்று தடைபடுத்தும்.

காந்திமதி அந்த மணல் மேட்டையே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றாள். கடலும் ஆறும் அவளுக்கு ஏதோ

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேதனையை அளித்தன. காலையில் வந்த செய்தியும் அவள் கலக்கத்தை அதிகப்படுத்தின. தன்னைப் கைப்பிடித்த கணவர் நாளை ஜப்பானுக்குப் பயணமாகப் போகிறாராம். ஏதோ அவசர வேலையாம். ஜப்பான் போய் வந்தபிறகு தான் திருமணத்தின் பயனான சாந்தி முகூர்த்தம் நடக்குமாம்.

தனக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டத்தைப் பாராட்டி சிநேகிதிகள் எல்லாரும் புகழ்ந்தபோது அவளுக்குப் பெருமையாகத் தான் இருந்தது. கண்நிறைந்த கணவன், குபேர சம்பத்து, கப்பலைப் போல் வீடு - தனக்குக் கிடைத்தது சற்று அதிகமோ என்று கூட எண்ணினாள். தனிமை எப்போதும் பொல்லாதது. மனத்தில் தேவையற்ற எண்ணங்களைச் சேர்த்து விடும்.

காந்திமதி இரண்டாவது மாடி முழுவதும் சுற்றினாள். முதல் மாடி முழுவதும் ஒவ்வோர் அறையாகப் போய்ப் பார்த்தாள். எங்கு பார்த்தாலும் தன் கணவரின் விதவிதமான தோற்றமுள்ள போட்டோக்கள். காந்திமதி மெல்ல ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே நேரம் போவது தெரியாது இருந்தபோது, காவேரியம்மாள் படிக்கட்டு ஏற முடியாமல் ஏறிவந்து,“காந்தி! இங்கேயா இருக்கிறாய்? உன்னை எங்கெல்லாம் தேடுவது? அவன் நாளைக்கு ஊருக்குப் போகிறானாம். இப்போது போகக்கூடாது என்று நீ சொல்லித் தடுக்கக் கூடாதோ? இனி அவன் காவேரியின் பிள்ளை இல்லை காந்திமதியின் கணவன் பெண்ணே, காந்திமதியின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கணவன்!” என்று காவேரியம்மாள் பெருமூச்சு விட்டுக்கொண்டே சிரித்தவாறு கூறினாள்.

“நான் சொல்ல வேண்டுமாமே” என்று காந்திமதி நினைத்தபோது அவளை வெட்கம் வந்து சூழ்ந்து கொண்டது. அவருடன் ஒரு வார்த்தை கூட அவள் இதுவரை பேசியதில்லை. அவர் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்த்ததில்லை. ஏன் அவராக வந்து பேசியிருக்கக் கூடாதா? காலையிலிருந்து மாடியில் தானே இருக்கிறோம். காந்திமதிக்கு அனுபவம் புதிது வீடு புதிது. நிகழ்ச்சிகளும் புதிது புதிதாக இருக்குமே என்ற கலக்கம் ஏற்பட்டது.

காந்திமதிக்கு மெல்ல நாணமும் சூழ்ந்து கொண்டது. அவள் பேசாமல் இருப்பதைப் பார்த்த காவேரி,“காந்தி காலையில் அவன் மாடிக்கு வந்தானே, அப்போது உன்னிடம் அயல்நாடு போவதைப் பற்றிச் சொல்லவில்லையா?” என்று கேட்டாள்.

‘காலையில் மாடிக்கு வந்தாரா? இங்கேயே தான் நின்று கொண்டிருக்கிறோம். எப்படி அவர் வந்தது தனக்குத் தெரியாமல் போய்விட்டது’ என்று எண்ணிய காந்திமதி, பதில் சொல்லாமல் மாமியாரின் முகத்தைப் பார்த்தாள். அதிலே ‘அவர் எப்போது வந்தார்?’ என்ற கேள்வி தொக்கி நின்றது.

“அடி பெண்ணே! காந்திமதி! நீ இந்தக் காலத்துப் புதுப்பெண் இல்லை போலிருக்கிறது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கல்யாணமானவுடனேயே கணவனும் மனைவியும் வெகுநாள் சிநேகம் மாதிரிப் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். சொந்தக் காரர்களுக்கு நமஸ்காரம் செய்யப் போகிறோம் என்று தனியே காரில் சுற்றுகிறார்கள். மாடிக்கு உன்னைத் தேடி வந்த கணவரிடம் நீ பேசவில்லை. நாளைக் காலையிலே ஜப்பான் சுற்றுப்பிரயாணம் போகிறானாம். மூன்று மாதங்களாகுமாமே! நீ அவனைப் பார்த்து ஒரு வார்த்தை பேசக்கூடாதா?" என்று காவேரியம்மாள் வாஞ்சையும், கவலையும் நிறைந்த குரலில் கேட்டாள். அந்த வார்த்தையைக் கேட்கக் கேட்க காந்திமதிக்கு அழுகை பொங்கியது. அவள் கண்களில் கீழே உதிர்ந்துவிடக் கண்ணீர் தயாராக இருந்தது. அவள் முன்னைப்போல சாதாரண காந்திமதியாயிருந்தால் அழுது விடுவாள். இப்போதோ இலட்சாதிபதி மகனின் மனைவி, சட்டென்று அழுதுவிடலாமா? அண்ணா ரகு எவ்வளவோ சொல்லிக் கொடுத்து இருக்கிறான், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று-

காவேரியம்மாள் அங்கிருந்து போய்விட்டாள். காந்திமதி அங்கேயே சுற்றிச் சுற்றிக் கூண்டில் அடைபட்டிருக்கும் பறவை போல் அலைந்தாள். திருவல்லிக்கேணியின் அதே குடித்தன வீட்டில் என்றால் இத்தனை நேரம் எவ்வளவோ வேலைகளைச் செய்திருக்கலாம். காலையில் எழுந்து கிணற்றிலிருந்து பத்துக் குடம் தண்ணீர் எடுத்திருக்கலாம். அடுப்பு மூட்டி காபி,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சமையல் செய்திருக்கலாம். நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு சங்கீத வகுப்புக்குப் போயிருக்கலாம். சங்கீத வித்யாலயத் தலைவி ஏன் கல்யாணத்திற்கு வரவேயில்லை? காந்திமதியின் கவனம் கல்யாணத்திற்கு வந்தவர்கள், வராதவர்கள் மேல் சென்றது. கல்யாணத்திற்கு சீதா வரவில்லை. ஆனால் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தாள். சீதா ஊரிலே தான் இருந்திருக்கிறாள். ஏன் கல்யாணத்திற்கு வரவில்லை? அழைப்பிதழ் கூட அனுப்பியிருந்தோமே.

அப்போது ஒரு வேலைக்காரன் கீழே இருந்து மாடிக்கு வந்த மிகவும் பணிவான குரலில்,“உங்களுக்குப் போன் வந்திருக்கு. ஐயா சொல்லச் சொன்னாங்க” என்றான். அவன் மரியாதையுடனும், பயபக்தியுடனும் பேசியது காந்திமதிக்கு வியப்பாகியிருந்தது. தன்னிடம் கட்டளையை ஏற்கக் காத்து நிற்கும் பூதம் போல் அந்த வயதான வேலைக்காரன் நின்றது அவளுக்குப் புது அனுபவமாயிருந்தது.

காந்திமதி மாடியை விடடுக் கீழே இறங்கினாள். கீழ்க் கூடத்தில் யார் யாரோ வந்திருந்தார்கள். சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். காவேரியம்மாளின் உறவினர் பாலக்காட்டுத் தமிழில் கணகணவெனப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“மாடிக்கு ஓர் எக்ஸ்டென்ஷன் போன் வைக்கக் கூடாதோ?” என்று வந்தவருள் ஒருவர் கேட்டது காதில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீழ்ந்தது.

"ஆமாம், ஆமாம், என் மாட்டுப் பொண்ணுக்குச் சிநேகிதைகள் அதிகம். இப்போ கூட பெரிய என்ஜினியர் பெண் தான் கூப்பிடுகிறாள்" என்றாள் காவேரியம்மாள்.

அதையெல்லாம் கேட்கப் பெருமையாகத் தானிருந்தது. டெலிபோனில் அவள் பேசுவது இதுதான் முதல் முறை. கோடீஸ்வரனுடைய அறையில் தான் போன் இருந்தது. தயங்கித் தயங்கி அங்கே நுழைந்தாள். காந்திமதி வந்ததைப் பார்த்த கோடீஸ்வரன்,"குழந்தே! உன் பள்ளிக்கூட சிநேகிதியாம். கூப்பிடுகிறாள்" என்று கூறிவிட்டு அவர் வெளியே வந்துவிட்டார். ஒருவர் பேசும்போது மற்றவர் அருகே இருப்பது பண்பன்று என்பது அவர் எண்ணம்.

டெலிபோனைக் காதருகில் தட்டுத் தடுமாறி வைத்துக் கொண்ட காந்திமதி,"ஹலோ" என்றாள்.

"யாரு காந்திமதியா?"

"ஆமாம், காந்திமதி தான், நீங்க யாரு?"

"என் குரல் தெரியலையா காந்திமதி? கண்ணைப் பொத்திய போது அன்று சீதாவைத் தவிர வேறு யார் மூட முடியும் என்று கேட்டாயே - இன்று என் குரல் கேட்கவில்லையா?"

"ஓ மன்னிச்சுக்கோ சீதா - சட்டென்று புரிந்து கொள்ள முடியவில்லை. சௌக்யமா? - உன் பேரில் எனக்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ரொம்பவும் கோபம்.”

“சௌக்யமாய் இருப்பதால் தான் உன்னுடன் பேசுகிறேன். கோபப்பட வேண்டியவள் நான் அல்லவா? உனக்கு எப்படிக் கோபம் வரமுடியும்?”

“ஆமாம் சீதா! உள்ளூரிலிருந்து கொண்டே கிரீட்டிங்ஸ் மட்டும் அனுப்பிவிட்டாயே. இதுதான் நாம் பழகியதற்கு அடையாளமா? நாம் என்னென்ன கனவுகள் கண்டோம், கோட்டைகள் கட்டினோம். அதெல்லாம் மறந்துவிட்டாய்..”

“கனவும் - கோட்டையும் நிலையாய் இருப்பதில்லையே…”

“அது சரி - சீதா உன்னுடன் நான் வாதாட விரும்பவில்லை. நீ என் வீட்டிற்கு எப்போ வருகிறாய்?”

“நீ பழைய வீட்டிலா இன்னும் இருக்கிறாய்?”

“திருவல்லிக்கேணியிலிருந்து அண்ணா மந்தைவெளி டிரஸ்ட் புரத்திற்கு மாறிவிட்டார். நான் இப்போது அடையாறில் இருக்கிறேன். என் வீடு என்றால் இங்கே அடையாறு பங்களாவைச் சொல்லுகிறேன்-“

“ஓகோ! கல்யாணமான மறுநாளே புத்தகக் கட்சி பேச ஆரம்பித்து விட்டாயா? ஆமாம் உன் வீடு தான் இனி நீ கோடீஸ்வரி! மறந்து விட்டேன்.”

“அப்படியெல்லாம் குத்தலாகப் பேசாதே சீதா! ஒவ்வொரு நிமிடமும் உன் வரவை நான் எதிர்பார்த்திருக்கிறேன்…. நீ

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எப்போது வருகிறாய்? உங்கள் கார் டிரைவருக்கு வழி தெரியுமே…"

"கார் இல்லை காந்திமதி! அப்பா காரை விற்றுவிட்டார், என் கல்யாணச் செலவுக்காக…"

"உன் கல்யாணமா…எப்போ நடந்தது? எனக்குச் சொல்லவே இல்லையே, என் மீது உனக்கென்ன கோபம் சீதா?"

"அது சரி. நீ கோடீஸ்வரர் பிள்ளையைக் கல்யாணம் செய்து கொண்டாயே, வரன் நிச்சயமானவுடன் எனக்குச் சொன்னாயா? உனக்கு என் மீது என்ன கோபம் காந்திமதி?"

போன் சம்பாஷணை ஒரு கணம் தடைப்பட்டது. அவளுடன் நேரிடையே பேசித்தான் அவளுக்குள்ள குறையைத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணிய காந்திமதி "சீதா, டெலிபோனில் எவ்வளவு நேரம் பேசுவது? உன்னால் நேரிடையே வர முடியுமா, முடியாதா சொல்லு - நான் காரை அனுப்பட்டுமா?" என்று கேட்டாள்.

"நான் வருவது கஷ்டம் என்பது உனக்குத் தெரியாதா? வந்தால் என்னுடன் என் கணவரும் வருவார். அவரையும் அழைத்துக் கொண்டு வந்தால் அங்கே சௌகரியப்படாது, அதனால்…"

"சரி… நான் வருகிறேன். வருவதற்கு முன்பு போன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செய்துவிட்டு வருகிறேன்.”

அவளுக்கே ஆச்சாரியமாயிருந்தது. எப்படி இவ்வளவு தூரம் பேசிவிட்டோம் என்று. உடலெல்லாம் வியர்த்து விட்டிருந்தது. எப்போதும் பட்டுப்புடவையே உடுத்திக் கொண்டிருந்து பழக்கமில்லை. டெலிபோன் இருக்கும் இடத்தை விட்டு வெளியே வந்து நடு ஹாலுக்குள் நுழைந்தவுடனேயே ஹாலில் இன்னும் பலர் குழுமியிருப்பதை அவள் கண்டாள். மாடிக்கே போய்விடலாமா, அல்லது ஸ்டோர் ரூமுக்குப் போகலாமா என்று நினைத்துக்கொண்டே தலையைக் குனிந்து கொண்டு நடந்தாள். அவள் கண்களில் கந்தநாதன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. இப்படி இவர் இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பதை விட மாடிக்கு வந்து என்னுடன் பேசிக் கொண்டிருந்தால் என்னவாம்?” என்று அவள் கேட்பது போல் விழியை ஒருமுறை உயர்த்தி அவனை நோக்கினாள்.

காவேரியம்மாள் ஹாலுக்குள் வந்து கொண்டிருந்தாள். காந்திமதியைப் பார்த்தவுடன்,“உன்னைத் தான் தேடிக் கொண்டிருந்தேன். உன் பாட்டைக் கேட்க வேண்டுமாம். ஒரு பாட்டுப் பாடடி பெண்ணே! தம்புராவைக் கொண்டோடி சோனு” என்று வேலைக்காரப் பெண்ணுக்கு உத்தரவு போட்டுத் தானும் சோபாவின் ஒரு புறமாக அமர்ந்தாள். ‘இதென்ன நினைத்த நேரத்தில் பாடச் சொல்கிறார்கள்? இனி, இப்படியே பழக்கப்பட்டு விடுமோ?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பாடும் மனநிலையிலே நானில்லை என்று சொல்லி விடுவோமா!' என்று ஒருகணம் திகைத்தவளை வந்திருந்தவர்களுள் துணிச்சலான சாரதா என்பவள் பார்த்து, கொச்சைத் தமிழில்,"காவேரியம்மாள் இப்படி ஆதரவாகச் சொல்வதே பெரும் அதிர்ஷ்டமடி பொண்ணே. யோசிக்காமல் பாடு" என்றாள்.

"அவள் பிகு ஏதும் செய்து செய்யமாட்டாள். முதன் முதலில் அவளுடைய குரல் தான் என்னை மிகவும் கவர்ந்தது" என்று காவேரியம்மாள் கூறி, எல்லாரையும் மேலும் திகைக்க வைத்து விட்டாள்.

காந்திமதி தம்பூராவை மீட்டியவாறு பாடத் தொடங்கினாள். பாடும் போது தன் கணவரை ஒரு முறை பார்த்தாள். ஒருமுறை நேருக்கு நேரே அவன் விழியுடன் தன் பார்வையைக் கலந்தாள். ஒரு முறை அந்த விழிகளில் ஏக்கம் இருந்தது. கேள்வி இருந்தது காதல் இருந்தது. பாடலும் அதற்கேற்றபடி அமைந்திருந்தது.

"பாரா முகம் ஏனய்யா, அடிமையிடம் பாரா முகம் ஏனய்யா…"- என்ற அந்தப் பாடல் அங்கிருந்தோர் அனைவரையும் மெய்மறக்கச் செய்தது. இசைக்கு அவ்வளவு சக்தியுண்டு. ஆனால் பாடல் முடிந்தவுடனே மனிதரெல்லாம் மண்ணுலகிற்கு வந்து விடுகிறார்களே! ஒவ்வொருவர் மனமும் அரக்க எண்ணத்திலல்லவா ஈடுபடத் தொடங்கிவிடுகிறது. ஏழைப் பெண்ணிற்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அடித்த பேரதிர்ஷ்டத்தைப் பற்றியல்லவா எல்லாரும் நினைக்க ஆரம்பித்தனர்?

காந்திமதி மீண்டும் மாடிக்குப் போய்விட்டாள். அவளைத் தொடர்ந்து யாரோ வந்து கொண்டிருந்தார்கள். காந்திமதி திரும்பிப் பார்க்கவில்லை. தன் கணவர் தான் வருவதாக எண்ணினாள். இடுப்பில் சவலைக் குழந்தையை எடுத்துக் கொண்டு சாரதா வந்தாள். சட்டென்று அவளைப் பார்த்தவுடன் திகைத்தாள் காந்திமதி.

“ஏண்டி பொண்ணே! பாட்டுப் படிச்சயே உனக்கு எவ்வளவு பாட்டு தெரியும்?” என்றாள் சாரதா. அவள் வம்பு அதிகம் பிடித்தவள் என்பது காந்திமதிக்குத் தெரியாது. மேலும் அவள் பேசும் தமிழ் வார்த்தைகள் சட்டெனப் புரியவில்லை காந்திமதிக்கு.

“என்ன கேட்கிறீர்கள்?” என்று மெதுவாகக் கேட்டாள் காந்திமதி.

“ஏண்டி உனக்குக் காது மந்தமோ?” என்று சட்டெனக் கேட்ட சாரதா, பேச்சை வேறுபக்கம் திருப்ப விரும்பியவளாக “நான் இந்த மாடிக்கு வந்து பத்து வருஷம் ஆகியிருக்கும் எங்களையெல்லாம் உன் மாமியார் அழைப்பதில்லை… நாங்களும் எங்கள் அந்தஸ்தை விட்டுக் கொடுப்பதில்லை…” என்று பேச்சைத் தொடர்ந்தாள். காந்திமதி ஏதும் பேசவில்லை.

“நீ வாழ்க்கைப் பட்டிருக்கிறாயே அவனைத் தான் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தது” என்று சாரதா

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மேலும் பேசினாள்.

காந்திமதி இப்போதும் ஏதும் பேசவில்லை. “ஏன் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தது” என்று சாரதா மேலும் பேசினாள்.

காந்திமதி இப்போதும் ஏதும் பேசவில்லை. “ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?” என்று கேட்கவேண்டும் எனும் ஆவல் மட்டுமிருந்தது.

“எனக்கு உன் மாமியார் பாத்தியப்பட்டவள் தான். தன் பிள்ளைக்கு என்னை எப்படியும் முடித்துவிட வேண்டும் என்று தலைகீழாய் நின்றாள். எங்களுக்கும் காடும் கரம்பும் கொஞ்சம் இருக்கத்தான் செய்கின்றன. கந்தநாதன் கண்ணுக்கு லட்சணமாயிருந்ததைக் கண்டு எனக்கும் சம்மதமாய்த் தானிருந்தது. கல்யாணத் தேதியும் கூட நிச்சயமாகி விட்டது. ஆனால், ஒரு நாள் திடீரென என் அப்பா ஊருக்கு வந்தார். கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்” என்று மூச்சு விடாமல் கூறி நிறுத்தினாள். அதற்குள் இடுப்பிலே அவள் வைத்திருந்த குழந்தை அழ ஆரம்பித்து விட்டது. அதன் மூக்கு வற்றாத கங்கையாய் ஒழுகிக் கொண்டிருந்தது. அதைச் சிந்திப் பளபளப்பான சுவரில் தடவினாள்.

“ஏன் - எதற்காக என்று என் அப்பாவைக் கேட்கவில்லை. அம்மா மட்டும் கொஞ்சநாள் புலம்பிக் கொண்டிருந்தாள். பெரும் ஆஸ்தி கிடைக்காமல் போய்விட்டதே என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தாள். நான் அப்போ ரொம்ப சின்னவள். எனக்கு ஏதும் தெரியாது. ஆனால் அப்பா சொன்னது மட்டும் காதில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. 'என் பெண்ணுக்குப் பணம் காசு மட்டும் பிரதானமில்லை. அவள் மற்ற பெண்களைப் போல் குழந்தை குட்டிகளுடன் வாழவேண்டும்.' இதற்கு அர்த்தம் அப்போது எனக்குப் புரியவில்லை. கொஞ்ச காலத்துக்கு முன் தான் நாலஞ்சு குழந்தைகளைப் பெற்ற பிறகு தான் புரிஞ்சது" சாரதா இப்படிக் கூறிவிட்டு ஏதோ வெற்றி கண்டுவிட்டவள் போல் மேல்மாடிக்குச் சென்று விட்டாள்.

காந்திமதி சிலையென நின்றுவிட்டாள். அந்த வீட்டிற்கு வந்த முதல் நாளே மனக்கலக்கம் ஏற்படுகிறதே என்று அவளுக்குத் தோன்றியது. சீதாவின் கல்யாணம் நின்றதும், சாரதாவின் கல்யாணம் நின்றதும் ஒரே காரணத்திற்காக இருக்குமோ - என்ன காரணமாயிருக்கும்? அவரிடம் என்ன குறைபாடு? அல்லது அந்தக் குடும்பத்தில் தான் என்ன ரகசியம் இருக்கிறது? அண்ணா இவை ஏதும் கேட்டறியாது கல்யாணம் நிச்சயம் செய்து விட்டாரா?

மீண்டும் சாரதா கீழே இறங்கி வந்தாள். "சமுத்திரமெல்லாம் தெரிகிறதே. காற்றும் நன்றாக வருகிறது. இது தான் உனது படுக்கும் அறையோடி? உன் பேரு என்ன - ஆமாம் - காந்திமதி காந்திமதி! நான் கொஞ்ச முன்னே சொன்னதை மனசில் வைச்சுக்காதே.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எல்லாம் அவர், அவர் தலை எழுத்துப்படி நடக்கும். எனக்குக் கூட இப்பத் தோண்றது குழந்தை குட்டிகள் மட்டுமிருந்தா உலகத்தில் சௌக்யமா வாழ்ந்திட முடியா, வசதியும் வேணும். உனக்கிங்கே எந்தக் குறைச்சலும் கிடையாது. நீ கெட்டிக்காரத்தனமா நடந்தா அத்தனை ஆஸ்தியும் உனக்குத் தான்" என்று மிகவும் பரிவுள்ளவள் போல் சொன்னாள். பிறகு காந்திமதியின் அருகே வந்து,"காந்திமதி! நான் சொன்னதை உன் மாமியாரிடம் சொல்லிவிடாதே. அதோட யார் எது சொன்னாலும் நீ மனசை மாத்திக்காதே"- சாரதா சொல்லிக்கொண்டே போனாள். மேலே அவள் சொன்னது ஏதும் காதில் விழவில்லை தலையைச் சுற்றுவது போலிருந்தது. கண்ணை மூடிக்கொண்டு படுக்கையில் சாய்ந்து விட்டாள்.

அவள் கண்விழித்த போது கீழே கலகலப்பு குறைந்திருந்தது. எல்லாரும் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டார்கள். காந்திமதி கீழே இறங்கினாள். ஹாலில் யாருமில்லை. காவேரியம்மாள் எதிரே வந்தாள்.

"நாளைக்கு மத்தியானம் கார் கிடைக்குமா? என் சிநேகிதியைப் போய்ப் பார்க்க வேண்டும்" என்று கேட்டாள் காந்திமதி.

"என்னைக் கேட்க வேண்டுமாடி பொண்ணே? உன் கார் தானேடீ அது" என்றாள் காவேரி.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதிக்கு அந்தச் சொல் மகிழ்ச்சியளித்தது. சீதாவிடம் மனம் விட்டுப் பேசவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் மறுநாள் எப்போது வரும் என்று காத்திருந்தாள்.

9

# சீதாவின் கணவன்

சீதாவைச் சந்தித்துப் பேசும்போது இருந்த குதூகலம் அவள் வீட்டிலிருந்து திரும்பி வரும்போது காந்திமதிக்கு இல்லை. சீதா பழைய சீதாவாக இல்லை. கல்யாணமான பிறகு அவளிடம் பல மாறுதல்கள் தெரிந்தன. உடையில் கூடத்தான். முன்பு எல்லாம் 'நைலான்','டெரிகாட்டன்' என்றால் திரும்பிக் கூடப் பாராதவள் இப்போது அந்த மாதிரிப் புடவைகளை விதவித வர்ணங்களில் வாங்கிப் பீரோவில் அடுக்கியிருந்தாள்.

"என் பீரோவில் இருப்பதைப் போல் பத்துமடங்கு இருக்கும் உனக்கு! கோடீஸ்வரனின் மருமகளாயிற்றே" என்று சீதா கூறும்போது காந்திக்கு விகல்பமாகப் படவில்லை. ஆமாம் ஆமாம் கட்டிய புடவையைத் தவிர மறு புடவைக்கு வழியில்லாதிருந்த அவள் வாழ்வில் ஏற்பட்ட திடீர் திருப்பத்தினாலன்றோ இரும்புப் பீரோ நிறையப் புடவைகள்! விதவிதமான புடவைகள்.

கண்ணாடியைப் போன்ற வெங்காயச் சருகு சேலையின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மீது சீதாவுக்கு எப்போது நாட்டம் ஏற்பட்டது என்று காந்திமதி கேட்காமலில்லை.

"என் கணவருடைய 'டேஸ்ட்' தான் எல்லாம். அவர் 'ஸெலக்ஷன்' படிதான் நான் புடவை கட்டிக்கொள்ள வேண்டும். இன்று நீ வரப்போகிறாய் என்றேன். தாழம்பூ நிறப்புடவை கிளிப் பச்சை சோளி மாநிற ஸ்லிப்பர் - என்று உத்தரவு போட்டுவிட்டார். 'மேட்ச்'சாக இருக்கிறதா காந்திமதி?" என்று பெருமை பொங்க சீதா கேட்டாள். சீதா பேசும்போது முன்பெல்லாம் வெண்ணிறப் பற்கள் பளிச்சிடும். இப்போது வெற்றிலைக் காவி அதில் இலேசாகப் படிந்துவிட்டது. நகத்துக்கு 'வர்ணப் பூச்சு' சீதாவின் கன்னங்களில் இப்போது இலேசாக ஓரிரண்டு பருக்கள். பூசினாற்போல் பருத்தும் இருந்தாள். கூந்தல் காதுகளை மூடியிருந்தது.

"சீதா" என்ற குரல் கேட்டது. "காந்திமதி! சற்று இரு. அவர் கூப்பிடுகிறார். ஒரு நிமிடம் கூட என்னை விட்டுப் பிரிந்திருக்க அவருக்கு முடிகிறதில்லை. நீ வந்திருக்கும் போது கூட அவருக்கு இங்கிதம் தெரிவதில்லை" என்று சலிப்பது போல் கூறிவிட்டுத் துள்ளி ஓடினாள்.

காந்திமதி உட்கார்ந்திருந்த மாடிக் கூடத்து இடப் பக்கத்து அறையில் தான் சீதாவின் கணவன் இருந்தான். உள்ளே நுழையும்போது சீதா கதவை மெல்லச் சாத்திக் கொண்டு சென்றாள்.

"ரொம்ப உன்னைக் காக்கவைத்து விட்டேனாடி காந்தி?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவரோடு சண்டை போட்டுத்தான் வந்தேன். சுத்தமா அவருக்கு 'மேனர்ஸ்' தெரிவதில்லை" என்று கூறிச் சிரித்துக் கொண்டாள் சீதா. அவள் நெற்றிக் குங்குமம் சற்றுக் கலைந்திருந்ததையும் காதில் தவழ்ந்த கூந்தல் சற்று மாறியிருந்ததையும் அவளால் மறைக்க முடியவில்லை.

"அப்படியெல்லாம் சொல்லாதே சீதா! உன் கணவருக்கு உன்னிடம் அன்பு அதிகம், அதனால் தான் உன்னை விட்டுப் பிரியாமல் இருக்க விரும்புகிறார்" என்றாள் காந்திமதியும் மெல்லச் சிரித்தது.

"பிரியமா? ஒரே குறும்புத்தனம். காலேஜ் குறும்புத்தனம் அவரை விட்டுப் போகவில்லை. காலேஜில் குறும்பு செய்ததற்காக அவரைப் பதினைந்து நாள் ஸஸ்பென்ட் கூடச் செய்தார்களாம். என்னிடம் அதெல்லாம் நடக்குமா?" என்று சீதா கூறும்போது பலத்த கொட்டாவி வந்தது.

சீதாவிடம் ஏற்பட்ட மாறுதலைப் படிப்படியாக உணர்ந்தாள் காந்திமதி. அவர்கள் என்னென்னவோ பேசிக் கொண்டார்கள். பள்ளிக்கூடத்தில் சேர்ந்த காலத்திலிருந்து, படிப்பு முடிந்தவரையில் குதூகலமாகப் பேசிக் கொண்டார்கள். இடையிடையே இருவரும் ஹோ ஹோ என்று சிரித்தார்கள். சீதாவின் கணவன் ஒருமுறை அந்தப் பக்கம் வந்து பார்த்து விட்டுச் சென்றான். ஜாடையாக சீதாவின் கணவனின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தோற்றத்தைக் காந்திமதி கவனித்து பார்த்தும் பார்க்காதது போல் இருந்தாள்.

சீதா சோபாவில் காலை நீட்டிக்கொண்டு,"நான் சொன்னேனே என் உயிர்த்தோழி காந்திமதி - இவள் தான். இவள் சாதாரண காந்திமதி இல்லை கோடீஸ்வரி காந்திமதி" என்று கூறி கலகலவென்று சிரித்தாள் சீதா. காந்திமதியால் அவனை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

"ஹவ் டூ யூடு?" என்று கூறி கை குலுக்குவதற்காகக் கையை நீட்டினான் சீதாவின் கணவன்.

காந்திமதிக்கு கூச்சமாக இருந்தது. வெட்கத்தால் குப்பென்று முகம் சிவந்தது. அவள் கரம் துணிவுடன் சீதாவின் எதிலே நீளவில்லை.

"காந்திமதி! இன்னும் நாகரிகம் தெரிந்து கொள்ளவில்லையே! 'ஷேக்ஹேண்ட்' செய்வது மரியாதையாகும். நாளைக்கே நீ உன் கணவனுடன் பெரிய பெரிய பார்ட்டிக்கெல்லாம் செல்கிறாய் என்று வைத்துக் கொள் அப்போ என்ன ஆகும்?" என்று சீதா அவள் கரத்தை வலிய எடுத்துத் தன் கணவனிடம் நீட்டினாள்.

காந்திமதியின் உடல் சிலிர்த்தது. சற்றுக் கோபமும் பொங்கியது. சீதா எவ்வளவு தூரத்துக்கு நாகரிகத்தின் உச்சிக்கே அவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டாள் என்பதை அறிய அவளுக்கே வியப்பாயிருந்தது. நம்பவே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முடியவில்லை அவளால்.

“பரவாயில்லை சீதா! எல்லாம் போகப் போகப் பழகிப் போய்விடும். நீ சொல்லித் தாயேன் உன் அருமைத் தோழிக்கு!” என்று கூறிவிட்டு அசட்டுச் சிரிப்பு ஒன்றுடன் அங்கிருந்து சென்ற சீதாவின் கணவன் சட்டெனத் திரும்பி வந்து,“சீதா! உன் தோழியின் ‘ஹஸ்பண்ட்’ பெயர் என்னவென்று சொன்னாய்?” என்று கேட்டான்.

“மிஸ்டர் கந்தநாதன்” என்று கூறி ஏனென்று கேட்கும் பாவனையில் முகத்தைத் தூக்கினாள்.

அவள் கணவன் ‘த்சோ த்சோ’ என்று ஏதோ பரிதாபமாகக் கூறுவது போல் ஒலி எழுப்பிவிட்டுச் சென்றுவிட்டான். சீதாவும் அவனுடன் போய் சிறிது நேரங் கழித்து வந்தாள். அவன் எழுப்பிய ஒலி, அவன் பார்வை எல்லாம் காந்தியைத் திடுக்கிட வைத்தன.

“சீதா! உன் கணவர் என்ன சொல்கிறார்? என் கணவரை அவருக்குத் தெரியுமா?” என்று காந்திமதி கவலையுடன் கேட்டாள். சீதா சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு பெருமூச்சு விட்டுக்கொண்டே,“அதைப் பற்றியெல்லாம் பேசலாம் என்று தான் உன்னை வரச் சொன்னேன். என் கணவர் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன் என்கிறாரே சரி நாம் போர்டிகோவில் போய் உட்கார்ந்து பேசுவோம்” என்று காந்திமதியை அழைத்துச் சென்றாள்.

சீதா, காந்திமதியுடன் பேசும்போது மனம் விட்டுத்தான் ஒன்றுவிடாமல் சொன்னாள். சீதாவின் கண்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கலங்கின. காந்திமதிக்கு எவ்வித உணர்ச்சியும் முதலில் தோன்றவில்லை. கந்தநாதன் - சீதா திருமணம் ஏன் நின்றது? அப்போது தான் சீதா விவரித்துக் கூறினாள்.

“என் தந்தைக்கு மிகவும் வேண்டியவரிடமிருந்து போன் வந்தது காந்திமதி! ‘திருமண ஏற்பாட்டை உடனே நிறுத்துங்கள் மிகவும் பணக்கார இடம் நல்ல இடமாக இருந்தாலும் உங்கள் மகள் சுகப்பட முடியாது’ என்று அந்த நண்பர் கூறிவிட்டார். டெலிபோனில் அதற்கு மேல் ஏதும் பேச முடியவில்லை.

“என் தாய்க்கு முதலில் மிகவும் வருத்தம் தான். நல்ல இடத்துச் சம்பந்தம் ஏற்படாமல் போகிறதே என்று. என் தந்தை நண்பரை நேரிலேயே சந்தித்து வந்த பிறகு என் அம்மாவிடம் விளக்கிச் சொல்லியும் என் தாயார் நம்பவே மறுத்துவிட்டார்கள். ‘நல்ல காரியத்துக்குக் குறுக்கே நிற்பது என்று இந்த உலகத்தில் சிலர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் நம்பக் கூடாது” என்று கூறினாள். ‘கோடீஸ்வரன் பிள்ளையைப் பார்த்தால் ராஜா போல் இருக்கிறான். நம் சீதாவுக்கு ஏற்ற வரன். அவனைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்கிறீர்களே உங்களுக்கே நியாயமாயிருக்கிறதா?” என்று கூறினாள். “எங்கள் காலத்தில் சின்னஞ்சிறு வயதிலேயே கல்யாணத்தை முடித்தார்களே அப்போதெல்லாம் இப்படிப்பட்ட பேச்சு ஏதும் ஏற்பட்டதே கிடையாது. அப்படியே கல்யாணத்திற்குப் பிறகு ஏதாவது நேர்ந்தாலும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காலத்தைக் கன்னியாகவே கழிக்க வேண்டும்' என்று முழக்கினாள்.

"ஆனால் என் தந்தை அந்த ஒரு விஷயத்தில் மட்டும் தாயார் சொல்லைக் கேட்கவில்லை. 'இப்பொழுது என் மகளுக்கு கல்யாணம் செய்யப் போவதில்லை' என்று கோடீஸ்வரனுக்கு, போன் செய்துவிட்டார். நாங்களும் டில்லிக்குப் போய் விட்டோம். அப்பாவுக்கு வியாபாரத்தில் பெரும் நஷ்டமேற்பட்டது. காலை விற்றார். அந்தச் சமயத்தில் 'இவர்' வந்து அப்பாவுக்குக் கைகொடுத்தார். என்னையும் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தார். என் அழகைக் கண்டு ஆசைப்பட்டுத் தான் என் அப்பாவுக்கே உதவுவதற்கு என் கணவர் முன் வந்ததாகச் சொல்கிறார். என்னை விட்டு ஒரு நொடி கூடப் பிரிவதில்லை. அது கிடக்கட்டும். உன் நிலை என்ன ஆச்சு காந்திமதி? என் தந்தை வேண்டாம் என்று கூறிய வரனை உன் அண்ணா எப்படி முடிவு செய்தாரோ? என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கக் கூடாதா?" என்று சீதா சொல்லிவரும் போது காந்திமதி குறுக்கிட்டு,"சீதா! இப்போது என்ன வேண்டுமானாலும் கூறலாம். உன் கல்யாணம் நின்றுவிட்ட செய்தியை எனக்குச் சொன்னாயா? டில்லி போகப் போகிறேனென்று சொன்னாயா? அல்லது உன் கல்யாணத்திற்குத் தான் எனக்கு அழைப்பு அனுப்பினாயா? ஏன் சீதா இப்போது இப்படியெல்லாம் கூறி என் மனத்தைக் குழப்புகிறாய்?" என்று கம்மிய குரலில் கூறினாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“காந்தி! நீ வருத்தமடைய வேண்டும் என்று நான் இவற்றையெல்லாம் கூறவில்லை. நடந்தது இவ்வளவே. நீ இனிமேல் புத்திசாலித் தனமாகப் பிழைத்துக் கொள்ள வேண்டும் - இது என் உபதேசமில்லை. என் தந்தையின் உபதேசம். உன் நிலைக்காக அவர் மிகவும் வருத்தப்பட்டார்” என்று கூறினாள் சீதா.

சீதாவிடமிருந்து காந்தி விடை பெறும்போது நன்றாக இருட்டிவிட்டது. கார் டிரைவர் உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்துப் போய் காரின் முன் ஸீட்டிலேயே படுத்துத் தூங்கியவன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு,“பெரியம்மா கவலைப்படுவாங்களே” என்ற ஒரு வார்த்தை மட்டும் கூறிவிட்டுக் காரைப் புறப்படச் செய்தான்.

காந்திமதிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. சாலையின் இரு புறத்திலும் ஒளிவீசும் கடைகளைத் தாண்டிக் கார் சென்றதையும் காந்திமதி கவனிக்கவில்லை. சீதாவிடம் பேசவந்தபோது இருந்த குதூகலம் அவளிடம் இப்போது இல்லை. மயிலைக் கபாலி கோயிலைத் தாண்டும் போது தெரிந்த கோபுரத்தைப் பார்த்து வணங்க வேண்டும் என்றும் கூட அவளுக்குத் தோன்றவில்லை. அந்தப் பெரிய மாளிகையின் காம்பவுண்டுக்குள் கார் விளக்கு வெளிச்சத்தை உமிழ்ந்து நுழைந்தபோது ‘கூர்க்கா’ காந்திமதிக்கு ஸல்யூட் அடித்து நின்றான்.

போர்டிகோவில் கார் நின்ற போது காவேரியம்மாள் வாசலில் ஸோபாவில் அமர்ந்திருந்தாள். காந்திமதியைப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பின் தொடர்ந்து,“அவன் அப்போதே மாடிக்குப் போய்விட்டான் அவன் முகம் கணங்காமல் நடந்து கொள்ளம்மா குழந்தை! ஒரு பிடி சாப்பிட்டு விட்டு, பால் கூஜாவுடன் மாடிக்குப் போ. இன்று நல்ல நாள் தான் காந்திமதி!” என்று சொல்லிக் கொண்டே அவள் வரும்போது காந்திமதிக்குக் கண்ணில் நீர் தளும்பியது. இவ்வளவு நல்ல மாமியாரும், செல்வ, சுகபோகங்களும் கண் நிறைந்த கணவனும் தனக்கு வாய்த்திருப்பதைக் கண்டு பொறாமைப்பட்டுத் தன் கணவர்மேல் இல்லாததையும் பொல்லாததையும் கூறுகிறார்களே என்று எண்ணினாள். கால் மெட்டி குலுங்க, கையில் பால் கூஜாவுடன் மாடிப் படியேறினாள். கூஜாவில் குங்குமப் பூவும், கல்கண்டும் போட்டுக் காய்ச்சிய இளம் சூடான பால் மணந்து கொண்டிருந்தது. இலையில் உட்கார்ந்து அவள் பேருக்குத் தான் சாப்பிட்டாள். ஆனால் பசி இல்லாமலில்லை. கூஜா பாலையும் குடித்துவிட வேண்டும் எனும் பரபரப்பு இருந்தது. கணவருடன் பங்கிட்டுக் கொண்டு குடிக்கப் போகிறோமே எனும் மகிழ்ச்சியில் அவள் வேகமாகப் படி ஏறினாள்.

கந்தநாதன் படுக்கை அறை மேஜை அருகே உட்கார்ந்த டைரி எழுதிக் கொண்டிருந்தாள். கால் மெட்டியின் ஒலி அவன் காதில் விழுந்தவுடன் சட்டென டைரியை மூடி, மேஜை அறையில் போட்டு விட்டுத் திரும்பினான்.

அது தான் காந்தியும் - கந்தநாதனும் நெருங்கிப் பேசும் முதல் முறை. காந்திமதிக்கு புதுவிதப் பரபரப்பு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஏற்பட்டது.

கந்தநாதனுக்கும் அவ்வாறே தான். பெண்களைச் சந்திக்காதவனல்லன் பேகாதவனல்லன் ஆனால், இதுபோல் நேருக்கு நேர் நெருங்கிப் பேசிப் பழகிக் கொண்டே இருக்கப் போகும் அனுபவம் புதிது. ஒருவித அச்சமும் அவனுக்கு இருந்தது.

ஜப்பான் போகும் பயணம் நிறைவேறியிருந்தால் இந்தச் சங்கடமே ஏற்பட்டிருக்காது. தாமோதரனும் எவ்வளவோ முயன்று தான் பார்த்தான். வருமானவரி சர்டிபிகேட் வருவதில் ஏற்பட்ட தாமதத்தால் பயணம் தடைப்பட்டது. அதனால் திருமணத்தின் பயனை நேருக்கு நேர் ஏற்கும் படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

அன்று இரவு காந்திமதியை -அவன் கைத்தலம் பற்றியவளைச் - சந்திக்கும்படி எப்படியும் நேரிடும் என்று அவன் எதிர்பார்த்தான். உயிர் நண்பன் தாமோதரனிடம் இதுபற்றிக் கலந்து ஆலோசித்தான்.

“என் தாய், இப்படி ஓர் ஏழைப் பெண்ணின் பாவத்தை ஏற்றிருக்க வேண்டாம்” என்று கந்தநாதன் சொன்னவுடன், தாமோதரன் ‘உஸ்’ என்று சைகை செய்து,“அப்படி மட்டும் நினைக்காதே. உன் அந்தஸ்துக்கு ஏற்ற ஒரு பெண்ணை நீ மணந்திருந்தாயானால் நிச்சயம் பெரும் தொல்லைகளெல்லாம் ஏற்பட்டிருக்கும். நீ இனி தான் மிகவும் ஜாக்கிரதையாக தள்ளிவிடு. ஜப்பான் போய் வந்து விட்டால் உனக்கும் புதுவாழ்வு தான் கந்தநாதா!”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்று யோசனை கூறினான்.

## 10

# பாட்டு முடியும் முன்னே...

கந்தநாதன் மெல்லச் சிரித்தான். ‘ஜாக்கிரதையாக நடப்பது என்றால் எப்படி என்று சொல்கிறாய்?’ என்று கேட்ட அவன் முதுகில் செல்லமாகத் தட்டிய தாமோதரன்“இதையெல்லாம் என்னைச் சொல்லித் தருமாறு கூறுகிறாயா?” என்று கூறி நகைத்தான். பிறகு வெகுநேரம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

கந்தநாதன் வீட்டிற்கு வரும்போது அவன் மனத்தில் ஒரு நிம்மதி இருப்பது போல் தோன்றியது. மகனது தெளிவு, காவேரியம்மாள் கவலையை ஓரளவுக்குப் போக்கியது. திருஷ்டி சுற்றிக் கழிப்பது போல் அவன் கன்னத்தைத் தடவி தன் கைகளைச் சொடுக்கினாள். “கந்தநாதா! என் மனம் இப்போது போல் எப்போதும் நிம்மதியாக இருக்கச் செய்யப்பா” என்று வாஞ்சையுடன் முதுகைத் தடவிக் கொடுத்தாள். கந்தநாதன் மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பிலும் தனி அழகு இருந்தது. அவன் சிரிக்கும்போது கூர்மையான அந்த மூக்கு சற்று விரிந்தும் கூட எழிலுடன் விளங்கியது. காந்திமதி மாடியில் இருப்பாள் என்று எண்ணிக் கொண்டு வந்தான். அவள் அங்கில்லாததால் விடுபட்டுப் போயிருந்த டைரியை எழுத உட்கார்ந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் மெட்டியின் ஒலி கேட்டது, அவனது மிக அருகே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மல்லிகையின் மணம் நாசியைக் கவர்ந்தது. டைரியை மூடி மேஜை அறையில் போட்டுவிட்டு நிமிர்ந்து பார்த்தபோது காந்திமதியின்கண்களை அவன் கண்கள் சந்தித்தன.

காந்திமதியைப் பார்ப்பவர் எவரும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள் என்று சொல்ல மாட்டார்கள். அந்த மை தீட்டிய விழியின் கோடியில் தான் எத்தனை காந்தசக்தி! அவளுக்கென்று ஏற்பட்டதா அந்த அழகிய புருவம்! மூக்கில் பிரகாசித்த வைர பேசரி விளக்கொளியில் நட்சத்திரம் போல் பிரகாசித்தது. அவள் உடுத்தியிருந்த புடவை காற்றிலே சலசலத்தது.

கூஜாவினின்று பாலை வெள்ளி டம்ளரில் ஊற்றிக் கணவரிடம் நீட்டினாள். டம்ளரை மட்டும் கரத்தில் வைத்திருந்தால் போதுமா?

“பால் ஆறிவிடப் போகிறது. சாப்பிடுங்கள்” என்றாள். அவள் பேசிய முதல் பேச்சு பேச்சில் சளைக்காத அவள் அதைக் கூற மிகப் பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

கந்தநாதன், காந்திமதியை ஏறிட்டுப் பார்த்தான். ‘வாழ்க்கைத் துணை இல்லாள், இல்லத்தரசி மனைவி, வீட்டு எஜமானி’ என்றெல்லாம் பட்டப் பெயர் தாங்கிய அவள் - கந்தநாதனின் வாழ்வெல்லாம் உறுதுணையாக இருக்கப் போகிறவள். கந்தநாதன் என்ன சொல்லப் போகிறானோ என்று, இதயம் படபடக்க உடல் வியர்க்க,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இனம் புரியா நாணம் பரவ நின்று கொண்டிருந்தாள். திருமணத்தன்று அக்கினியை வலம் வரும்போதும், அம்மி மிதிக்கும்போதும் அவன் கரஸ்பரிசம் அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்போது கந்தநாதனைப் பற்றிய மாறுதலான எண்ணம் ஏதும் அவள் மனத்திலேற்படவில்லை. சில நாள்களாக அவள் மனத்தைக் குழப்பும் செய்திகளைக் கேட்ட பிறகு கணவனை அவள் முதல் முதலாகச் சந்திக்கும் அந்த வேளை - காந்திமதியின் இதயம் இன்னும் வேகமாக அடித்துக் கொண்டது.

“நீ சாப்பிட்டு விட்டாயா காந்தி?” கந்தநாதன் முகத்தில் புன்னகையை வரவழைத்து கொண்டான், தாமோதரன் சொல்லியிருந்தபடி.

அப்பாடா என்ன இனிமையான குரல்! காந்திமதி எண்ணினாள். அழகான பல்வரிசை. புருவமும், புருவத்தினடியில் சிறிய விழிகளும், கூர்மையான நாசியும், அழகிய உதடுகளும், செழுமையான கன்னங்களும் ஆகா! அவள் இப்போது ஏன் திருட்டுத்தனமாகப் பார்த்து ரசிக்க வேண்டும். கீழுதடும் மேலுதடும் அளவான அமைப்புடனேயே இருந்தன. காதுக்கருகே மெல்லிய வடு. சிறுவயதில் எங்கேயாவது விழுந்திருப்பார்.

காந்திமதி பதில் சொல்லவில்லை. தலையை மட்டும் அசைத்தாள். கந்தநாதன் தன்னையே கூர்ந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நோக்குகிறான் என்றறிந்த காந்திமதி வெட்கத்தால் தலைகுனிந்தாள். கந்தநாதன் இன்னும் பால் டம்ளரை வாங்கிக் கொள்ளவில்லை. காந்திமதி மீண்டும் பதில் பேசாமல் டம்ளரை அவனருகே நகர்த்தினாள்.

"இவ்வளவு நேரம் எங்கே போய்விட்டு வந்தாய் காந்தி? உன் அண்ணாவைப் பார்த்துவிட்டு வந்தாயா? இப்போது வேறு எங்கோ வீடு மாறிவிட்டாராமே?" என்று கந்தநாதன் மீண்டும் காந்திமதியை நோக்கிக் கேட்டான். இப்போது அவன் கரம் அவள் முகவாயைத் தொட்டு நிமிர்த்தியது. மற்றொரு கரத்தால் அவள் விலாப் பக்கமாகத் தழுவித் தன்னருகே மெல்ல இழுத்து அணைத்தான்.

காந்திமதியின் உடம்பு இலேசாக நடுங்கியது. அது எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் ஏற்பட்டதாக இருக்கலாம். முதன் முறையாக ஓர் ஆடவனின் ஸ்பரிசம் தன் மீது பட்டதால் ஏற்பட்டதாக இருக்கலாம். அல்லது கணவன் தன்னை அணைப்பதற்குத் திடீரென முயலுவான் என்பதை எதிர்பாராதிருக்கலாம்.

பெண்மைக்கே உரிய இயற்கையான நாணத்துடன் அவள் துவண்டாள். ஊடல் குறுக்கிட்டது. உணர்ச்சியின் உந்துதல் மெல்ல மெல்லச் சேரத் தொடங்கியது. அவனது பிடியிலிருந்து நழுவிச் சென்று கட்டிலில் அமர்ந்தாள்.

கந்தநாதன் நாற்காலியில் அமர்ந்தபடியே பின்பக்கம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

திரும்பிப் பார்த்து,“காந்திமதி! உனக்கு இது புது அனுபவமில்லையா?” என்று கேட்டான்.

எது புது அனுபவம்? காந்திமதியின் உடல் சிலிர்த்தது. ‘இவர் பொல்லாதவர் போலிருக்கிறதே. திடீரெனப் பச்சையாகக் கேட்கிறாரே ஒரு பெண் எப்படி வாய் திறந்து பதில் சொல்வாள்? வெட்கமாக இருக்காதோ?’ என்று எண்ணியவள் குறும்புத்தனம் மிளிரத் தன் கணவனை நோக்கினாள். ‘இவரைப் போய் என்னவோ சொன்னார்களே - பெண்களைக் கண்டாலே காத தூரம் ஓடுபவர் என்று’ என எண்ணும்போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

“என்ன சிரிக்கிறாய் காந்திமதி? இதுபோல் இந்த வீட்டின் மேல்மாடி அறையில்,‘டன்லப் பில்லோ’ மஞ்சத்தில் நீ அமர்வாய் என்று எப்போதாவது எண்ணியதுண்டா?” என்று கந்தநாதன் கேட்டான். இனியும் வாயை மூடிக்கொண்டு இருக்கக் கூடாது என்று முடிவு செய்து,“எதுதான் நாம் நினைப்பது போல் நடக்கிறது? நீங்கள் தாம் என்னைக் கல்யாணம் செய்து கொள்வீர்கள் என நினைத்தீர்களா? என் தோழி இந்த இடத்தில் இருக்க வேண்டியவள்” என்று மெல்லச் சொன்னாள்.

“இல்லை இல்லை காந்தி! அப்படி இல்லை. சீதாவைப் பெண் பார்க்க வந்தபோது அவள் என் கண்ணில் படவில்லை. நீதான் தோன்றினாய். உன் இனிய குரல் என்னைக் கவர்ந்தது. பிறகு என் வீட்டிலே நீ வந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பாடினாய். உண்மையில் நான் மயங்கினேன். அதனால் நீ இந்த வீட்டரசியாக வருவாய் என்பது நான் எதிர்பார்த்தது தான். ஆனால் நீ எதிர்பார்த்தாயோ?" என்று கந்தநாதன் கேட்கும்போது காந்திமதியால் ஏதும் சொல்ல முடியவில்லை. ஆனால் ஏதாவது பேச வேண்டும். "நான் என்ன அவ்வளவு ஒசத்தியாப் பாடறேனா என்ன?" என்று கேட்டாள்.

"ஆமாம் ஆமாம், உன் இசை மிகவும் பிடித்திருக்கிறது. இப்போது கூட வீணையோடு ஒரு பாட்டுப் பாடினால் நான் சந்தோஷப் படுவேன். நீ பாடுவாய் என்று தான் நான் மாடிக்கு வந்தேன்" என்றான் கந்தநாதன்.

பாடினால் அவர் வருவார். ஓகோ! பாட்டிலே மந்திர சக்தி - கணவரை மயக்கும் மந்திர சக்தி இருக்கிறது. காந்திமதி துள்ளிக் குதித்துக் கீழே சென்றாள். வீணையைக் குழந்தையைப் போல் ஏந்திக் கொண்டு ஓடிவந்தாள்.

வீணையின் நாதம் எழுந்தது. உடனே காந்திமதியின் இனிய குரலும் ஒலித்தது. கந்தநாதன் மெய்மறந்து இசையின் இன்ப வெள்ளத்தில் மூழ்கினான். ஆனால் காந்திமதியோ அவனது அரவணைப்பு எனும் குளத்தில் மூழ்கித் திளைக்க ஆசை கொண்டாள். வாய் பாடியது கை மீட்டியது. மனமோ அவன் திரேகத்தின் மீது லயித்தது. செக்கச் சிவந்த கன்னங்களில் தன் பட்டுக் கன்னத்தைப் பதிக்கத் துடித்தது. பாடலும் அதற்குத் தகுந்தபடி 'வேலன் வருவாரோடி' என்றிருந்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அப்போது -

'ட்ரிங்....ட்ரிங்...' எனும் காலிங் பெல் ஓசை கந்தநாதன் இசையில் லயித்திருப்பதைக் குலைத்தது. கீழே டெலிபோனில் கந்தநாதனை யாராவது கூப்பிடுகிறார்கள் எனில், மேலே மாடியிலிருக்கும் கந்தநாதனை அழைக்க மணி ஓசை பயன்படும்.

"என்னை யாரோ டெலிபோனில் கூப்பிடுகிறார்கள் போலிருக்கிறது. இதோ பேசிவிட்டு வருகிறேன்" என்று கந்தநாதன் மாடிப் படிக்கட்டுகளில் விரைந்து இறங்கிச் சென்றான். அப்போது மணி பத்து. வீணையின் நாதம் நின்றது.

கந்தநாதனை டெலிபோனில் கூப்பிட்டவன் தாமோதரன் தான். முன் ஏற்பாட்டின் படிதான் அவன் அழைத்தான். 'இதோ வருகிறேன்' என்று விரைந்து காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் கந்தநாதன்.

கார் செல்லும் ஓசை காந்திமதியின் காதுகளில் வீழ்ந்தது. விரைவில் திரும்பி வந்துவிடுவார் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள் காந்திமதி. டிக் டிக் எனும் கடிகார ஓசையும், டிங் டாங் என்று அரைமணிக்கு ஒருமுறை அது ஒலிக்கும் ஓசையும் மட்டுமே கேட்டன. சாலையில் எவ்வளவோ கார்கள் விரைந்து சென்றன. ஆனால் கந்தநாதன் கார் மட்டும் வரவில்லை.

வீணையின் மீதே தலையைக் கவிழ்த்துக்கொண்டு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதி தூங்கி வழிந்தாள். மணி ஒன்று, இரண்டு, மூன்று என்று ஓடிக் கொண்டேயிருந்தது. அவள் வாழ்க்கையிலும் இரவில் மணி இப்படித்தான் விரைந்து ஓடுமா?

## 11

# அண்ணா வந்தார்

கந்தநாதன் அன்று எப்போது வந்தானோ தெரியாது. காலையில் காந்திமதி தூங்கி எழுந்து வரும்போது குளிக்கும் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்ததைக் கண்டாள். குளிக்கும் அறை வசதி நிறைந்த அளை. வெந்நீர், குளிர்நீர் எது வேண்டுமானாலும் பூச்சொரிவது போல் கொட்டும். தொட்டியில் அமிழ்ந்து குளிப்பதென்றாலும் ஆனந்தமாக நீராடலாம். வழவழப்பான சலவைக் கல்லால் ஆன தளவரிசைச் சுவர். பெரிய நிலைக்கண்ணாடி. மின்சார விசிறி முதல் நாள் காந்திமதி அந்த அறையைப் பார்த்துப் பிரமித்தவாறு ஒருமணி நேரம் செலவழித்தாள். தான் வசித்த வீட்டு இருட்டுக் குளியலறையில் அவசர அவசரமாகக் குளித்து விட்டு, ஒன்றும் பாதியுமாகப் புடவையைச் சுற்றிக் கொண்டு தன் அங்கம் வெளியே தெரியாவண்ணம் வேகமாக அறையை நோக்கி ஓடியது எங்கே? இந்தச் சுவர்க்க அறை எங்கே? அன்று அணிய வேண்டிய ஆடை அணிகளை வைப்பதற்கு ஒரு பீரோ பாத்ரூமிலிருந்து வரும்போதே புத்தம் புதுத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தோற்றத்திலேயே வரலாம் -

கண்ணாடிக்குத்தான் எவ்வளவு பொல்லாத்தனம்? உள்ளது உள்ளபடி அல்லவா அது பிரதிபலிக்கிறது? நாம் என்ன அதற்குள்ளாகவா பெருத்து விட்டோம். உள்ளத்துக் களிப்பா? அல்லது வயது - பருவம் என்று கூறுகிறார்களே அது தான் காரணமா? - காந்திமதி நினைத்தாள். 'ஷவர்பாத்' அடியில் உட்கார்ந்து நேரம் போவது தெரியாது குளித்தாள். அவளைக் கேட்க அந்த வீட்டில் யாரும் கிடையாது. அவள் தான் அரசி!அரசி என்று எண்ணும்போது மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறது. ஆனால் -

அரசி - வெறும் பாலும் பழமும் சாப்பிட்டுக் கொண்டு இருந்தால் போதுமா? - உள்ளத்துக்கு உணவு வேண்டாமா? காந்திமதி அந்த எண்ணத்துடன் பாத்ரூம் அருகே சென்றாள். குளிக்கும் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதே சமயம் கதவு ஒருக்களித்துதான் இருந்தது. உள்ளே கந்தநாதன் உடலைத் துடைத்துக் கொண்டிருந்தான் துவாலையினால்.

முதுகுப்புறம் தெரிந்தது. மஞ்சள் நிற மேனி, உயர்ந்த பிடரியினின்று இறங்கிய அகன்ற முதுகு. ஈரம் அங்கங்கே முத்தினைப் போன்ற வடிவில் தேங்கி நின்றது. கந்தநாதன் துவாலையை குறுக்கே முதுகில் இட்டுத் துடைத்துக் கொண்டிருந்தான். உள்ளே நுழைந்து முதுகைத் துடைத்து விடுவோமா என்று ஒருகணம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதி எண்ணினாள். கதவருகே வந்துவிட்டாள். ஆனால் ஏனோ உள்ளே நுழையத் துணிவில்லை. திரும்பவும் மனமில்லை. அவள் கண்கள் ஒரு கணம் வலப்புற முதுகில் காலணா அளவுக்குத் தென்பட்ட தழும்பு ஒன்றைக் கண்டன. அது மச்சமாக இருக்கவேண்டும். மச்சம் வலப்புறம் இருந்தால் அதிர்ஷ்டம் என்பார்களே. அந்த மச்சம் அழகாகத்தான் இருக்கிறது. ஒருமுறை அதைத் தடவி பார்க்கலாமா எனும் ஆவல் துள்ளியது.

கந்தநாதன் சட்டெனத் திரும்பினான். அவன் காந்திமதியை அந்த நேரத்தல் அங்கே எதிர்பார்க்கவில்லை. அவசர அவசரமாக அவன் ஆடையைப் போர்த்திக் கொண்டபோது தான் ஒண்டிக் குடித்தன வீட்டில் பாத்ரூமில் இப்படித் தான் புடவையைப் போர்த்திக் கொண்ட நினைவு அவளுக்கு வந்தது.

கந்தநாதன் மெல்லப் புன்முறுவல் பூத்தான்.

“இப்போது தான் எழுந்தாயா?” என்று கேட்டான். காந்திமதி தலையை அசைத்தாள். வாய் திறந்து பேசியிருக்கலாம். ஏனோ அவளுக்குப் பேச்சு வரவில்லை. அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையின் வேகம் தாங்காத கந்தநாதன் பேச்சை மாற்ற விரும்பி,“மேலே நம் அறையிலேயே வாஷ்பேஸின் இருக்கிறதே. பல்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தேய்த்து முகம் அலம்பிக் கொண்டு வந்திருக்கலாமே” என்றான்.

ஆமாம், ஆமாம் அதோ கண்ணாடி சொல்கிறதே? சிவந்த கண்கள் கலைந்த தலை. இந்தத் தோற்றத்துடன் ஏன் வந்தாய் என்பதைச் சொல்லாமல் சொல்கிறாரோ? இப்போது அவர் அழகுக்கு எதிரே என் அழகும் தோற்றமும் மட்டம் தான். இருக்கட்டுமே! என் கண்கள் சிவந்தது எதனால்? என் முகம் கலங்கியது யாரால்? இவ்வளவு நேரம் உறங்கியது ஏனாம்? அதற்கெல்லாம் காரணம் யார் என்று அவருக்குத் தெரியுமா? கேட்பாரா? கேட்டால் சொல்லிவிடலாம் - என்று எண்ண வலையைப் பின்னியவாறே நின்று கொண்டிருந்தாள்.

கந்தநாதன், பாத்ரூமில் அணிவதற்காக வைத்திருந்த பேண்டையும், ஷர்ட்டையும் பனியனையும் உள் உடையையும் எடுத்துக் கொண்டு தன் அறைக்குச் செல்வதற்காக கதவருகே வந்துவிட்டான். அவன் செல்வதற்கு வழி வழி விட்டாக வேண்டும். காந்திமதி மெல்ல விலகினாள்.

கந்தநாதன் ஒரே கணம் தான் அவளைப் பார்த்தான் பிறகு,“நேற்று அவசர வேலை. அதனால் தான்” என்று கூறினான். நேற்றிரவு வராததை அவர் நினைவில் கொண்டிருக்கிறார் மறந்துவிடவில்லை. ஆனால் இன்று -

காந்திமதி தன்னை அறியாமலேயே “இன்று?” என்று கேட்டு விட்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“இன்று வந்துவிடுவேன் சீக்கிரம். ஒருவேளை தாமதமாகி விட்டால், மேலே படுத்துக் கொள்வதற்குப் பயமாயிருந்தால் கீழே கூடத்துக்கு வந்துவிடேன். இந்த வீட்டில் பயம் ஏதுமில்லை” என்று சொல்லிக்கொண்டே கந்தநாதன் விரைந்து தன் அறையை நோக்கிச் சென்றுவிட்டான். இன்னும் அவள் அந்த அறையைப் போய்ப் பார்க்கவில்லை.

அவசரம் அவசரமாகப் பல் துலக்கி, முகம் கழுவிக் கொண்டு காபி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு கந்தநாதனின் அறையை நோக்கிச் சென்றாள். ‘இன்று கட்டாயம் சீக்கிரமாக வந்துவிட வேண்டும்’ என்று கண்டிப்பு உத்தரவு போடவேண்டும் என்ற எண்ணத்துடன் சென்றாள்.

கந்தநாதன் உடை உடுத்திக்கொண்டு வெளியே புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தான். மேலும் அவனுடன் அறையில் வேறு ஒருவரும் இருந்தார். காந்திமதி அறைக்குள் நுழையாமலேயே திரும்பி வந்துவிட்டாள். காபியையும் ஹாலில் உள்ள மேஜை ஒன்றின் மீது வைத்துவிட்டு அங்கேயே நாற்காலியில் அமர்ந்தாள். காலையிலேயே ஏதோ ஏமாற்றம் அவளைச் சூழ்ந்து கொண்டது போல் தோன்றியது. சூடான காபியினின்று ஆவி பொங்கிக் கொண்டிருந்தது.

பெரிய மனிதர் வீடென்றால் இப்படித்தானா? சாதாரண குடும்பத்தவர் போல் கணவருடன் கலகலப்பாக பேசவே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பொழுதிருக்காதா? அல்லது இங்குத்தான் இப்படியா! அல்லது தன் கணவர் வேண்டுமென்றே தன்னைச் சந்திக்க விரும்பாமலிருக்கிறாரா? அல்லது ஊரினின்று வந்த உறவுக்காரி சொன்னாளே அப்படியோ?

காபி ஆறிக்கொண்டிருந்தது.

இன்று முழுவதும் என்னவேலை செய்வது? கூப்பிட்ட குரலுக்கு - குரல் எழுப்ப வேண்டாம் - காலிங் பெல்லைத் தட்டினால் போதும், வேலைக்காரன் வருகை வேளைக்குச் சாப்பாடு இவ்வளவு தானா தனக்கு வேலை? இந்த அண்ணாவாவது வந்து பார்க்கக் கூடாதா?

காந்திமதி கன்னத்தில் கையை வைத்துக் கொண்டாள். சீதாவின் வீடும், அவளது திடீர் மாறுதலும், அவளும் அவள் கணவனும் பழகும் விதமும் அவள் மனத்திரையில் நடமாடின. நாம் பொழுது போகவில்லை என்று இப்போது எண்ணுகிறோமே - அவன் பொழுது போதவில்லை என்றல்லவா அன்று கூறினாள்!

காபி நன்றாக ஏடு படிந்துவிட்டது. வெளியே கார் புறப்படும் ஓசை கேட்டது. கந்தநாதனும்,அவன் நண்பன் தாமோதரனும் காரில் இருந்தனர்.

அன்றைய பொழுது, காந்திமதியைப் பொருத்தவரை மெல்லவே நகர்ந்தது போல் தான் தோன்றியது. சீதாவிடமிருந்து டெலிபோன் வந்தது. 'இன்று வரவில்லை' என்று கூறிச் சட்டென்று வைத்துவிட்டாள். அவள் சகோதரன் ரகு வந்தான். தன் மனக்கவலையை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவன் எதிரே புலப்படுத்திக் கொள்ள அவள் விரும்பவில்லை. அந்த வீட்டில் சந்தோஷமாக இருப்பதாகவே காட்டிக் கொண்டாள். அவள் கணவனைப் பற்றி ரகு, காந்திமதியிடம் விசாரித்தான்.

"உன்னிடம் அன்பாக இருக்கிறானா மாப்பிள்ளை?" என்று ரகு கேட்டான். காந்திமதி என்னவென்று சொல்வாள்? கந்தநாதனுக்குக் காந்திமதியிடம் அன்பில்லையா? இன்சொல் கூறுவதில்லையா? ஆனால் அவள் அந்த ஒன்று மட்டும் தானா விரும்புகிறாள்?

ரகுவுக்கு மேலும் மேலும் தன் சகோதரியிடம் கேள்வி மேல் கேள்வி கேட்கவேண்டும் என்ற எண்ணம். ஆனால் தன் சகோதரியிடமிருந்து புன்முறுவலைத் தவிர வேறு எதையும் அவனால் எதிர்பார்க்க முடியவில்லை. இடையே அண்ணாவுக்குக் காபி கொண்டு வர சமையல் கட்டிற்குச் சென்றாள். எதிலே காவேரி அம்மாள் வந்தாள்.

"உன் அண்ணா வந்திருக்கிறாரோ?" என்று கேட்டாள்.

"ஆமாம் அம்மா! அவருக்குக் காபி கொண்டு வரத்தான் வந்தேன்" என்றாள் காந்தி.

'அம்மா' என்று காந்திமதி அழைக்கும் குரல் காவேரியின் உள்ளத்தைச் சிலிர்க்க வைத்தது. இந்தப் பெண்ணின் குணத்துக்கு எந்தவிதமான மனக்கஷ்டமும் வராமல் இருக்க வேண்டும் என்று மனத்திலேயே வேண்டிக்கொண்ட காவேரியம்மாள்,"காந்தி! உன் அண்ணாவைச் சாப்பிட்டுவிட்டுப் போகச் சொல்லேன்"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்றாள். காபியை எடுத்துக் கொண்டு வரும்போது அவள் ஏதோ மறந்துவிட்டவளைப் போன்று “காந்தி! உன் அண்ணாவுக்குச் செலவுக்குப் பணம் வேண்டுமென்றால் கொடு-“ என்றாள்.

காந்திமதி சற்று நின்றாள். ஒருவேளை அண்ணா அதற்குத்தான் வந்திருப்பாரோ? பணக்கஷ்டம் தீர்ப்பதற்காகவே என்னை இவ்வளவு பெரிய இடத்தில் மணம் புரிந்து கொடுத்தாரோ?

காந்திமதி காபியைத் தன் சகோதரனிடம் கொடுக்கும் போது,“எப்படி அண்ணா பொழுது போகிறது உனக்கு?” என்று பேச்சை எடுத்தவள் “செலவுக்குப் பணக்கஷ்டம் ஏதாவது இருக்கிறதா?” என்று கேட்டு விட்டாள்.

ரகு மெல்லச் சிரித்துக் கொண்டான். “எனக்கு இனிப் பணக்கஷ்டம் ஏதம்மா? இனி நான் யாருக்காகக் கஷ்டப்பட வேண்டும்? பணம் ஒன்று நடுவே மலைபோல் இருந்திராவிட்டால் நான் நிச்சயம் இந்த இடத்துச் சம்பந்தம் கொண்டிருக்க மாட்டேன்” என்று கூறியவுடன் காந்தி திடுக்கிட்டாள்,‘உஷ்’ என்று சைகை காட்டினாள்.

“ஆமாம் காந்தி! எனக்குத் தினமும் உன் நினைவே தான். உன் வாழ்க்கை சந்தோஷமாயிருக்கிறதா? நிம்மதியாக நீ வாழ்கிறாயா? என்ற கவலை தான். அது சரி உன் கணவன் எங்கே, காந்தி?” என்றான் ரகு.

“அவர் காலையிலேயே வெளியே போய்விட்டார்”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்றாள் காந்தி.

“ராத்திரி வருவாரா?” என்று மெல்லக் கேட்டான் ரகு. காந்திமதி அதற்கு நேரிடையே பதில் சொல்லாமல்,“அண்ணா! ராத்திரி சாப்பிட்டுவிட்டுப் போயேன் அண்ணா! அம்மா சொல்லச் சொன்னார்” என்றாள்.

அ..ம்...மா.. என்ற இந்தச் சொல் ரகுவின் உடலைச் சிலிர்க்கச் செய்தது. இவ்வளவு பேதைப் பெண் - இதே வீட்டில் வாழ்வதற்கு ஆண்டவன் அருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

“நான் சாப்பிடுவதற்கு வரவில்லை காந்திமதி! உன்னைப் பார்த்துப் போகத்தான் வந்தேன். இரவிலே எனக்கு உறக்கமே வருவதில்லை. ஒவ்வொரு சமயம் நான் உன்னை அதலபாதாளத்திலே தள்ளிவிட்டேனோ என்று கூட எண்ணுவேன்...”

“என்ன சொல்கிறாய் அண்ணா? வா” என்று ரகுவின் கரத்தைப் பிடித்து மாடிக்கு அழைத்துச் சென்றாள்.

மாடி அறை விசாலமானது. கிழக்கு ஜன்னல் வழியாக சமுத்திரம் நிலக்கோடிட்டது போல் அழகாகக் காட்சியளித்தது. தெற்கு ஜன்னல் வழியாகப் பார்த்தால் அடர்த்தியான தென்னந்தோப்பு. வடக்குப் பக்கம் மொட்டைமாடி. செடி கொடி படர்ந்து இருந்த பந்தல். இரண்டு பிரம்பு நாற்காலி. அங்கே உட்கார்ந்தால் காந்திமதியின் அறை நன்றாகத் தெரிந்தது. இரட்டைக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கட்டில். ஜன்னலுக்கெல்லாம் விதவிதமான திரைச்சீலை. அறையிலேயே சீன அழகிகளின் வண்ணப்படம் - அந்த மாதிரிப் படங்களை சிகை சிங்காரிக்கும் நிலையங்களில் தான் ரகு பார்த்திருக்கிறான். அவற்றைப் பார்க்கவே சகிக்கவில்லை. ஒருவேளை மாப்பிள்ளைக்குப் பிடித்திருக்கலாம். சிருங்கார ரசமான படங்கள் அங்கே நிறைந்திருந்தன. மாப்பிள்ளை மகா ரசிகராயிருக்கலாம்.

காந்திமதி இரும்பு பீரோவைத் திறந்து ஆடை அணிகளையெல்லாம் காட்டினாள். ரகுவின் கவனம் எதிலும் செல்லவில்லை. மற்றொரு முறை அவன் காந்திமதியைப் பார்த்துக் கேட்டான்:

"காந்திமதி! உன்னையொன்று கேட்கிறேன் - தைரியமாகச் சொல்லு. நீ மனக்குறை ஏதும் இல்லாமல் இருக்கிறாயா?"

காந்திமதி சற்று நேரம் மௌனமாயிருந்தாள். புடவைகளை மடித்து வைத்துக்கொண்டே தன் சகோதரனைத் திரும்பி பார்த்தாள். அந்த விழிகளின் எதிரொலியை மற்றோர் ஆனால் அறிந்து கொள்வது கஷ்டம் தான். அந்த விழிகள் சொல்லாமல் சொல்வதை அறிந்து கொள்ள ஒருவேளை தாயே மறுபிறவி எடுக்க வேண்டுமோ என்னவோ?

"என்ன காந்திமதி மௌனமாகிவிட்டாய்? சொல்ல வேண்டாம் என்றால் வேண்டாம். உன் மகிழ்ச்சியே என் நல்வாழ்வு" என்றான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதி அதற்கு நேரிடையே பதில் கூறவில்லை. “அண்ணா! என் கல்யாணத்தை முடித்து விட்டாய். இனி உன் கல்யாணத்தைப் பற்றி யோசிக்க வேண்டாமா? எனக்கு ஒரு மன்னி வரவேண்டாமா? தாய்க்குப் பின், அண்ணனின் மனைவி தான் ஆதரவு என்று சொல்வார்களே, எனக்கு ஆதரவு தர அண்ணி எப்போது வரப்போகிறாள்?” என்று கேட்டுப் பேச்சைத் திருப்ப முயன்றாள்.

ரகு சற்று முகமலர்ச்சியுடன்,“ஆமாம், ஆமாம். விரைவில் நான் கல்யாணம் செய்து கொண்டு தானாக வேண்டும். உனது முதல் பிரசவம், பிறந்த வீட்டில் தானே நடக்க வேண்டும். அதற்கு உதவ வீட்டிலே ஒரு பெண் வேண்டாமா?” என்று கூறி அர்த்த புஷ்டியுடன் சிரித்தான் ரகு.

காந்திமதியின் உடல் ஏனோ சிலிர்த்தது. அண்ணாவுக்குத் தன் நல்வாழ்வு மீது எவ்வளவு கொள்ளை ஆசை என்று எண்ணினாள்.

ரகு அவளிடமிருந்து விடைபெறும் போது மீண்டும் கேட்டான்: “காந்தி! உன் கணவரும் நீயும் சந்தோஷமாகத் தானே இருக்கிறீர்கள்?”

காந்திமதியின் இதயத்தை யாரோ பிடித்து அழுத்துவது போலிருந்தது. பலவந்தமாக மகிழ்ச்சியை வரவழைத்துக்கொண்டு,“இருக்கிறேன் அண்ணா! நீயும் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்” என்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ரகு நடந்து வாயிற்கததவை அடையும் வரை பார்த்துக் கொண்டிருந்த காந்திமதிக்கு ஏனோ குலுங்கக் குலுங்க அழ வேண்டும் போலிருந்தது.

## 12

# எரிகிறதே தீ

காந்திமதி ஒருமுறை உறங்கித் திடீரென்று விழித்துக் கொண்டாள். எங்கும் அமைதி. காற்று பலமாக வீசியதால் தாளிடப்படாத ஜன்னல் கதவு படார் படார் என்று அடித்து கொண்டது. திரைச்சீலைகள் படபடவென காற்றில் அசைந்தன. படுக்கையில் ஒருமுறை திரும்பிப் படுத்த காந்திமதிக்கு நன்றாகத் தூக்கம் கலைந்துவிட்டது. மணி ஒன்றும் அதிகமாகி விடவில்லை. பத்து அடித்து பத்து நிமிடம் தான் ஆகியிருக்கிறது. காலையில் சென்ற கணவர் இன்னும் வரவில்லை. இன்று வரவேமாட்டாரா?

காந்திமதி எழுந்து விளக்கைப் போட்டு விட்டு பால்கனி அருகே வந்தாள். ஒளியை உமிழ்ந்து கொண்டு கார் ஒன்று வேகமாக தோட்டத்திற்குள் நுழைந்து கொண்டிருந்தது. காந்திமதி கண்ணைக் கசக்கிக் கொண்டு உற்று நோக்கினாள். தன் கணவர் தான் காலை ஓட்டிக் கொண்டு வருகிறார் என்பதைத் தெரிந்து கொண்டாள். ஒரு கணம் அவள் இதயம் மேலெழுந்து தணிந்தது. உடலில் ஒரு பரபரப்பு காணப்பட்டது. எங்கோ பறவைகள் இரண்டு சிறகைச் சடசடவெனத் தட்டி ஓசைப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

படுத்துவது அவள் காதில் விழுந்தது. கீழே இறங்கிச் செல்வதற்கு முன்பே கந்தநாதன் மாடிப் படிக்கட்டுகளில் ஏறிவரும் ஓசை கேட்டது.

கந்தநாதன் புன்முறுவலுடன் உள்ளே நுழைந்தான். “இன்னும் தூங்கவில்லையா காந்திமதி?” என்று கேட்டுக் கொண்டே வெளியே அணிந்து சென்ற ஆடைகளை மாற்றி கொண்டான். இழந்த ஏதோ ஒன்றை அடைந்தவள் போல் பெருமகிழ்ச்சி கொண்ட காந்திமதி பரபரவென்று கலைந்திருந்த தன் தலையை மெல்லக் கோதிக் கொண்டு,“சாப்பிட்டு விட்டீர்களா?” என்று கேட்டாள். கந்தநாதன் தலையை அசைத்தான்.

“இதோ பால் கொண்டு வருகிறேன்” என்று காந்திமதி விரைந்து கீழே ஓடினாள். “எனக்குப் பால் வேண்டாம் காந்தி!” என்று கந்தநாதன் சொல்லிக்கொண்டே இருந்தும் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலேயே காந்திமதி கீழே சென்றாள்.

பாலுடன் மாடிக்கு வரும்போது அறைக்கு வெளியே இருந்த பால்கனியில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான் கந்தநாதன். காந்தி பால் கோப்பையை அவனிடம் நீட்டினாள்.

“பால் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டே இருந்தேன் காந்திமதி! ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டாயே” என்றான் கந்தநாதன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதி என்று அவன் அழைக்கும் இனிமை ஒன்றே அவளுக்குப் போதும் என்று சொல்லிவிட முடியுமா? அந்த 'ஒன்றே' போதுமா?

"கொண்டு வந்துவிட்டேன். சாப்பிடுங்கள்" என்றாள் காந்திமதி.

"அப்படிக் கொண்டு வருவதென்றாலும் நீ ஓடவேண்டுமா? காலிங்பெல்லை அழுத்தினால் வேலைக்காரன் வருவானே" என்றான் கந்தநாதன்.

"ஏன் - நான் கொண்டுவரக் கூடாதா? ஒரு வேலையும் செய்யாமல் பதுமைபோல் என்னால் இருக்க முடியாது. பொழுதும் போவதில்லை" என்றாள் காந்திமதி.

"லேடீஸ் கிளப்பில் சேர்ந்தால் பொழுது போதவில்லை என்பாய்?"

"எனக்கு ஒரு கிளப்பும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். உங்கள் அருகிலேயே இருந்தால் அதுவே போதும்" என்று கூறியபோது காந்திமதியின் முகத்தில் ஏற்பட்ட பருவத் துடிப்பின் பிரதிபலிப்பை கந்தநாதன் புரிந்து கொண்டானோ என்னவோ? காந்திமதி மெல்ல அவன் மேல் சாய்ந்தாள். கந்தநாதன் அவள் வளைக்கரத்தை மெல்ல வருடியவாறே "அதெப்படி முடியும் காந்திமதி? நாள் முழுவதும் உன்னுடனேயே நான் இருக்க முடியுமா?' என்று கேட்டான்.

"இருந்தால் என்னவாம்? இருந்த இடத்திலிருந்தே ஏவி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் சக்தியும் செல்வமும் உங்களுக்கு இல்லையா?”

காந்திமதியோ கேட்கிறாள்! கந்தநாதன் வியந்தான், ஏன் - காந்திமதியே ஆச்சரியப்பட்டாள். நாமா கேட்டு விட்டோம். என்ன சொல்வாரோ - என்ன நினைப்பாரோ?

கந்தநாதன் ஏதும் நினைக்கவில்லை. “அதெப்படி முடியும் காந்திமதி? மலை எஸ்டேட்டுக்குப் போய் நான் செய்ய வேண்டியதை நானே தான் செய்ய முடியும். இப்போது எனக்கு அவசரமான வேலை இருக்கிறது” என்று கூற வந்தவன்,“இந்த பால் டம்ளரை அலம்பி வைத்துவிடு இல்லாவிடில் எறும்பு மொய்த்துவிடப்போகிறது” என்றான். காந்திமதி டம்ளரைக் கழுவி வைத்துவிட்டுக் கட்டிலுக்குச் சென்று அமர்ந்துவிட்டாள். கந்தநாதனும் தொடர்ந்து வருவான் என்று தான் எண்ணினாள்.

கடிகாரத்தில் பெரிய முள் சுற்றி வந்தது. சிறிய முள் அலட்சியமாக மெல்லத்தான் நகர்ந்தது. பெண்டுலமோ தன் வேலையை ஒழுங்காகச் செய்தது. கணீரென மணி ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது. காந்திமதியின் காதுகளில் அவை ரீங்காரமிட்டன. இதய வீணையை அவ்வொலி மீட்டியது. உலகமே அமைதியில் ஆழ்ந்துவிட்ட அந்த வேளையில் கந்தநாதன் மும்முரமாக ஏதோ படித்துக் கொண்டிருந்தான் புத்தக எழுத்திலே அவன் கவனம் இருந்தது என்று சொல்ல முடியாது. இதயத்தில் கொந்தளித்துக் கொண்டிருக்கும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஏதோ ஓர் எரியும் தீப்பிழம்பை வெளியிட முடியாது, தணிக்கும் பணியில் அவன் ஈடுபட்டிருந்தான்.

காந்திமதியின் உள்ளத்திலே எழுந்த பெரும் புயலில் அங்கம் ஒவ்வொன்றும் நிலை கொள்ளாமல் ஆடிக் கொண்டிருந்தன. இதோ அது தான் கடைசிப்பக்கம் புத்தகத்தை மூடி வைத்து வந்துவிடுவார். ஏமாற்றம் பக்கங்கள் மேலே மேலே புரண்டு கொண்டிருந்தன. மின்சார விளக்கு ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது. அவர் விழிகளுக்குச் சோர்வே இராதா?

காந்திமதியின் கண்கள் சுழன்றன. இதய பலத்தையும், வைராக்கியத்தையும் உறக்க தேவதை வென்றது. இமைகள் சேர்ந்து விழிகளின் மேல் கவிழ்ந்தன. அவள் அப்படியே தலையணையின் மேல் சாய்ந்தாள். காற்று இதமாகத்தான் வீசிக் கொண்டிருந்தது. தொலைவில் அலை ஓசை தாலாட்டைப் போல் மெல்ல எழுந்து கொண்டிருந்தது. எதையும் கவனியாதது போல் இரவு தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது.

மறுநாளும் அப்படித்தான். அதற்கு மறுநாளும் அப்படித்தான். காந்திமதியும் ஒரு பெண் தான். அந்தஸ்தும், செல்வமும், செழிப்பான உணவும், மாளிகையும் இட்ட பணி செய்ய எடுபிடி ஆட்களும் வாஞ்சையுடன் பேசும் மாமியாரும் இருந்தும் உணர்ச்சி என்ற ஒன்று இருக்கிறதே! அதை எட்டித் தட்டிக் கழித்திட முடியும்?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாடி அறையில் தனியே உட்கார்ந்து கொண்டிருந்தாள் காந்திமதி. அந்த வீட்டுத் தோட்டக்காரக் கிழவன் ஒரு வாழை இலையில் சுற்றி ரோஜா மலர்களைக் கொண்டு வந்தான். இந்த வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தில் விதவிதமான பூஞ்செடிகள் இருந்தன. மணமுள்ள மலர்கள் அழகிருந்து மணமில்லா மலர்கள் என்று தோட்டத்து வனப்பை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தபோது தோட்டக்காரக் கிழவன் கைகட்டி வணங்கி நின்றான். சின்ன எஜமானியம்மாளுக்குத் தோட்டத்தின் மீது பிரியம் என்பதைக் கண்டவுடன் அவனுக்குக் காந்திமதியிடம் மேலும் மரியாதை அதிகமாகியது. ஒவ்வொரு பூவின் பெயராகத் தெரிவித்தான். அந்த வீட்டில் முப்பது ஆண்டுகளாக வேலை செய்து வருவதைத் தெரிவித்தான். அன்றிலிருந்து தினமும் பகல் வெயில் தாழ்ந்தவுடன் தோட்டத்து மலரில் சிலவற்றைப் பறித்து வாழை இலையில் சுற்றி மாடி அறைக்கு வந்து காந்திமதிக்குக் கொடுத்து விட்டுச் செல்வான்.

அன்றும் அவன் மாடி அறைக்கு வந்தபோது காந்திமதி ஏனோ சிந்தனையிலாழ்ந்தவளாக அறைவாயில் நிலைப்படியருகே அமர்ந்திருப்பதைக் கண்டான். தலை வாரப்படாமல் கலைந்திருந்தது. கண்களின் அடியில் கருமை நிற வளையம் -

'அம்மா, அம்மா' என்று தோட்டக்காரக் கிழவன் இரண்டு முறை அழைத்தவுடன் தான் காந்திமதி சுயநினைவு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வந்தவளாய்த் திடுக்கிட்டு எழுந்தாள்.

“என்ன தாத்தா?” என்று கேட்டுக்கொண்டே தன் முக சோக பாவத்தை மாற்ற முயன்றாள். கண்கள் சிவந்திருப்பதைக் கிழவன் கண்டுவிட்டான்.

“என்னம்மா உடம்பு உங்களுக்கு” என்று கிழவன் வாஞ்சையுடன் கேட்டான்.

“ஒன்றுமில்லை... என்ன கொண்டு வந்திருக்கிறாய்?” என்று கூறி பேச்சை மாற்ற முயன்றாள் காந்திமதி. என்றாலும் தோட்டக்காரக் கிழவனுடன் சிறிதுநேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. அந்த வீட்டிலே முப்பது ஆண்டுகளாக வேலை செய்யும் அவனுக்கு வீட்டு அந்தரங்கம் முழுமையும் தெரிந்திருக்கும் என்று அவள் எண்ணினாள்.

“சின்னம்மா! எங்கிட்டே நீங்க அப்படிச் சொன்னாக்கூட உங்க முகம் காட்டுதுங்களே. தலைவலியா, வவுத்து நோவா? பெரியம்மாகிட்டே சொன்னீங்களா? சொன்னா தான் என்ன பண்றது. அம்மா தானுண்டு, தன் வேலை உண்டுன்னு இருந்துடுவாங்க. சொல்லுங்க, போன் செய்து நான் டாக்டரைக் கூட்டியாரேன்” என்று மளமளவென்று பேசினான்.

“வேண்டாம், வேண்டாம். எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை...” என்று புன்முறுவலை வரவழைக்க முயன்றாள் காந்திமதி.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என்னம்மா அப்படிச் சொல்லிட்டே? இந்த வீட்டிலே மனசுக்குள்ளே வெச்சுக்கினு இருந்தா அப்படியே தான் இருக்கணும். ஏனுன்னு கேக்க ஆளு கிடையாது. எல்லாம் நாமே தான் நடத்திக்கணும். சொல்லுங்கம்மா” என்று கிழவன் கூறியவுடன் காந்திமதி தடுத்து, தாத்தா உனக்கு இருக்கிற கரிசனம் கூட மற்றவர்களுக்கில்லை. நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்று கேட்க ஈ காக்காய் கூட இந்த வீட்டிலில்லை. நீ என்ன நினைக்கிறாயோ - என்னவோ நான் உன்னிடம் இப்படிப் பேசுகிறேன்” என்று காந்திமதி திடீரென கிழவனைத் தனக்கு ரொம்பவும் வேண்டியவன் போல் உயர்த்திப் பேசிவிட்டாள்.

“சொல்லுங்க சின்ன எசமானிம்மா! நான் இந்த வீட்டிலே பிறக்காவிட்டாலும் இந்த வீட்டு மனுசன் போலவே வளர்ந்துவிட்டேன். பெரிய எசமான் கோடீச்வரய்யரு இந்தப் பங்களாவைக் கட்டின போதிருந்தே நான் இங்கேயே இருக்கிறேன். சின்ன எசமானை நான் தோளிலே தூக்கி வளர்த்தேன். மூணு மைலு சுமந்துண்டு போய் இங்கிலீசு பள்ளிக்கூடத்துலே நாள்தோறும் விட்டு, அழைச்சுண்டு வந்திருக்கேன். சின்ன எஜமான் இப்பன்னா என்னைத் திரும்பிக் கூட பார்க்கிறதில்லை. கல்யாணம் ஆச்சே இந்தாடா மாரி வெத்திலை பாக்குக்கு ஒரு ரூபான்னு கொடுக்க நினைக்கலே. கல்யாணம் ஆகுமான்னு நாங்க கவலையா இருந்தோம். ஏதோ மகராசியா நீ வந்து சேர்ந்துட்டே. ஏம்மா, கோச்சுக்காதேங்க. தப்பாயிருந்தா கிழவனை வவுத்துலே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அடிக்காதீங்க, முதுகிலே இரண்டு அடி அடிச்சிடுங்க. உங்களுக்கு அப்பா அம்மா யாரும் கிடையாதா?"

காந்திமதியின் உடல் மெல்ல நடுங்க ஆரம்பித்தது. எதிரேயுள்ள படம் மெல்ல தலைகீழாய் மாறத் தொடங்கியது. தோட்டக்காரக் கிழவன் எதற்காகவோ இந்தக் கேள்வியைக் கேட்கிறான். என்ன சொல்வதற்காகவோ இப்படியெல்லாம் சுற்றி வளைத்துப் பேசுகிறான். பேசட்டுமே - கேட்கட்டுமே? நாமே அவனிடம் மனம்விட்டுப் பேசத்தானே எண்ணினோம்!

"எனக்கு அண்ணா ஒருத்தர் இருக்கிறார். இரண்டு மூன்று நாள்களுக்கு முன்பு கூட வந்து போனாரே ஒல்லியாய் - சிவப்பா"- என்று காந்தி கூறி தனக்கும் ஆதரவு இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்பினாள். அவள் சொல்லி வாய் மூடுமுன் "ஓ! அவருங்களா? நேற்றுச் சாயங்காலம் கூட பெரிய அய்யாவிடம் வந்து பேசிக் கொண்டிருந்தாரே. கடைசியா பெரிய அய்யா கூப்பிடக் கூப்பிடத் திரும்பிக்கூட பார்க்காமே போனாருங்களே அவரு தானுங்களா? பின்னே கோபம் வராதா? என்ன தான் பணக்கார சம்பந்தியாயிருந்தால் கூட, கூடப் பிறந்தவ சுகமா வாழாட்டி கோபம் வராதுங்களா?" என்றான் கிழவன்.

தோட்டக்காரக் கிழவன் என்ன சொல்லுகிறான்? நான் 'சொகமா வாழவில்லை' என்று இவன் எப்படிக் கண்டான்? அது சரி. என் அண்ணா வந்தாரா? என்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாமனாருடன் பேசினாரா? சண்டை ஏதாவது போட்டிருப்பாரோ? எதற்காகப் போட்டிருப்பார். ஏன் என்னை வந்துப் பார்க்கவில்லை, காந்திமதி மனம் குழம்பியது. எதிரே இருந்த படம் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைகீழாய் மாற ஆரம்பித்தது. ஜன்னல் கதவுகள் ஆடுவது போல் தோன்றின.

“அம்மா! நீங்க எனக்கு எசமானியம்மா. இருந்தாலும் என் பேத்திபோல, அதிலேயும் நான் தூக்கி வளர்த்த சின்ன எசமானர் தொட்டுத் தாலி கட்டினவங்க. எனக்கும் ஒரே ஒரு பொண்ணு இருந்துச்சு. அலையா அலைஞ்சு புருசனைப் பார்த்துக் கல்யாணம் கட்டிக் கொடுத்தேன். இப்ப என் மருமவனும், மவளும் திண்டுக்கல்லுக்கிட்டே தோட்ட வேலை தான் செஞ்சிக்கிட்டு இருக்காங்க. நாலு கொழந்தைங்க. சௌகரியமாயிருக்காங்க. வருமானம் பத்தலேன்னாலும் சந்தோசமாயிருக்காங்க.”

கிழவன் என்ன சொல்ல வருகிறான்? என் அண்ணா அவசரப்பட்டு இந்த இடத்திலே சம்பந்தப்படுத்திட்டார்னு சொல்ல வரானா? அவன் வாயாலேயே சமாசாரத்தை வரவழைத்து விடுவோம்-

“தாத்தா! - உங்க சின்ன எசமானரு வீட்டிலேயே தங்க மாட்டேங்கறாரே? அவருக்கு என்னைக் கண்டாப் பிடிக்கலையோ?” என்று பளீரெனக் கேட்டுவிட்டாள்.

தோட்டக்காரன் ஒரு கணம் மௌனமாயிருந்தான். தன் வாழ்நாளில் இத்தகைய வம்பு தும்பிலெல்லாம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சிக்கியவனல்லன். கோடீஸ்வரன் வீட்டு விவகாரம் ஒரு துரும்பு கூட இதுவரை வெளியில் சென்றது கிடையாது. கந்தநாதனைச் சிறுவயது முதல் அறிவான். அந்தஸ்து கூட அவர்கள் இருவரிடையேயும் எந்தவிதப் பிளவையும் ஏற்படுத்தியது கிடையாது. சின்ன எஜமான் என்று தோட்டக்காரன் மிகவும் மரியாதையுடன் தான் எப்போதும் பழகுவான். ஆனால் சின்ன எசமானுக்குக் கல்யாணம் என்றவுடன் தான் அவனுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. கல்யாணத்தின் போதும், அதற்குப் பிறகும் கந்தநாதன் இவனைச் சரிவரக் கவனிக்கவில்லை என்பது ஒரு குறையாக அவனுக்கு இருந்தால் கூட அதனாலெல்லாம் அந்தக் குடும்ப ரகசியத்தைக் கூறிவிட வேண்டும் என்று அவன் முடிவு செய்துவிடவில்லை. ஆனால், காந்திமதி இதுபோன்று திடீரென்று கேள்வி ஒன்றை வீசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

“நீ தயங்க வேண்டாம், எனக்கே தெரியும். என்னைக் கண்டால் அவருக்குப் பிடிக்கவில்லை. அப்படித்தானே?” என்று காந்திமதி கேட்டாள்.

“இல்லை அம்மா, அப்படி இல்லை. உங்கமேலே பிரியம் இல்லைன்னு எப்படிச் சொல்லிவிட முடியும்? அவருக்கு மொத்தத்திலே கல்யாணம் கட்டிக்கிறதன் மேலேதான் பிரியம் இல்லைன்னு சொல்லணும்” என்று கிழவன் மென்று விழுங்கினான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“பின் ஏன் கல்யாணம் செய்துகொண்டார்?” காந்திமதி சற்று ஆத்திரத்துடன் தான் கேட்டாள். தோட்டக்காரன் என்ன சொல்வான் என்பது அவளுக்குத் தோன்றவில்லை. குரலும் அந்த மாடி அறையைத் தாண்டி ஒலிக்கும் வகையில் இருந்தது. தோட்டக்காரனும் ஓரளவுக்கு நடுங்கித் தான் விட்டான்.

“என்ன செய்யறதுங்க? பெரியம்மாவின் வற்புறுத்தல், கட்டாயம். அவரு என்ன செய்வாருங்க?” என்றான்.

காந்திமதிக்கு இப்போது எதிரே இருந்த அனைத்துமே சுழல்வது போல் தோன்றியது. உடலில் நரம்புகளில் ஓடும் ரத்தம் திடீரென பொங்கி வழிவது போல் தோன்றியது.

“மகனைக் கல்யாணம் செய்து கொள்ளக் கட்டாயப்படுத்திய அம்மாவால், மகனை ஒழுங்காக வீட்டிற்கு வரச் சொல்லவோ, மனைவிக்கு ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்யச் சொல்லவோ ஏன் தோன்றவில்லை?” என்று கிரீச்சிட்டுக் கூவிய காந்திமதியின் முகத்தைப் பார்க்கவே தோட்டக் காரனுக்குப் பயமாயிருந்தது. அந்தச் சமயம் பார்த்துக் கீழே இருந்து காவேரியம்மாள் அவனை அவசரமாகக் கூப்பிட்டதால் ஒரே நொடியில் அவன் அங்கிருந்து கீழே ஓடினான். மேலே மாடியில் நடந்த பேச்சு அனைத்தையும் காவேரியம்மாள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நீ ஏன் மாடிக்குப் போனாய்?”

“அம்மாவுக்குப் பூ கொடுத்தேன்.”

“கொடுத்துவிட்டு வராமல் அங்கே இருந்து என்ன பேசினாய்?”

“ஒண்ணும் தப்பா பேசலீங்க.”

“எல்லாவற்றையும் சொல்லிவிட்டாயா புத்தி கெட்டவனே?”

காவேரியம்மாள் தோட்டக் காரனை மெதுவாகக் கடிந்து கொண்டது. மாடியின் மேல் கதவோரத்தில் நின்ற கொண்டிருந்த காந்திமதியின் காதில் விழத்தான் செய்தது.

ஆவேசம் பிடித்தவள்போல் அவள் படிக்கட்டுகளில் இறங்கி ஓடிவந்தாள்.

“அவனை ஒன்றும் சொல்லாதீர்கள். அவனைக் கேட்க வேண்டியதையெல்லாம் என்னைக் கேளுங்கள். எல்லாவற்றையும் அவன் சொல்லி நான் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமையில் இல்லை. எல்லாமே எனக்குத் தெரியும்” என்று காந்திமதி தன்னை மறந்து கூவினாள்.

காவேரியம்மாளின் உடல் வெடவெட என நடுங்கியது. “என்ன சொல்கிறாய் காந்திமதி? ஏன் இப்படிப் பதற்றப் படுகிறாய்? உன் அகமுடையான் சரியாக வீட்டிற்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வருவதில்லை என்று தானே ஆத்திரப்படுகிறாய்? நான் சொல்கிறேன் கேள். அவசரமாக வியாபார விஷயமாக திடீரென ஜப்பான் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. போன மாதமே போயிருக்க வேண்டியது. கல்யாணத்தால் தடைப்பட்டது, அயல்நாட்டுப் பிரயாணம் என்றால் இலேசா? அதற்கு வேண்டிய பாஸ்போர்ட் முதலியன வாங்குவதற்காக அவன் அலைய வேண்டியிருந்தது. கடைசியில் கிடைத்தது. ஜப்பானுக்குப் பறந்திருக்கிறான். சீக்கிரம் வந்து விடுவான். வந்த பிறகு உன்னை விட்டுப் பிரியாமல் உன்னருகேயே இருப்பதைத் தவிர அவனுக்கு என்ன வேலையடீ காந்திமதி?" என்று காவேரியம்மாள் மிகச் சாந்தமாக, வார்த்தைகளை நிறுத்தி, இதயத்திலிருந்து வருவதுபோல் உணர்ச்சியைக் கூட்டி, அன்பு பரிமளிக்கப் பேசினாள், தன் மருமகள் ஆயாசத்தையும், ஆத்திரத்தையும் தீர்த்து விடலாமென்று -

ஆனால் காவேரியம்மாள் எதிர்பார்த்தற்கு நேர்மாறாக நடந்து விட்டது. காந்திமதியின் முகம் சிவந்தது. உடல் ஆடியது. "என்ன ஜப்பானுக்குப் போய்விட்டாரா! கட்டிய மனைவியிடம் கூடச் சொல்லாமல் அப்படியென்ன அவசர வேலை? அவசர வேலை இருப்பவர் அதையெல்லாம் முடித்துக்கொண்டு கல்யாணம் செய்து கொண்டிருப்பது தானே? அவர் இல்லாத வீட்டில் எனக்கு மட்டும் என்ன வேலை? நானும் இதோ போகிறேன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவர் திரும்பி வந்துக் கூப்பிட்டும் வருகிறேன்" என்று கூறி மாடிப்படிகளை ஒரு தாவாகத் தாவி ஏறினாள். சில நிமிடங்களில் கையில் சிறு பெட்டியுடன் மளமளவெனக் கீழே இறங்கி வந்து 'போய் வருகிறேன்' என்று கூடச் சொல்லாமல் வேகமாக வெளியே சென்றாள்.

திக்பிரமை பிடித்துச் செய்வதறியாது சில விநாடிகள் நின்ற காவேரியம்மாள் பிறகு நிலைமையை உணர்ந்து "அம்மா, காந்திமதி! காந்திமதி, காந்திமதி,- எங்கே போகிறாய்? நான் சொல்வதைக் கேள்" நான் சொல்வதை கேள் என்று கூவிக் கொண்டே வாசல் போர்டிகோ வரை ஓடினாள்.

அதற்குள் காந்திமதி வேகமாக நடந்து வெளிப்புறக் கேட்டருகே சென்றுவிட்டாள். கூர்க்கா ஸல்யூட் அடித்து வணங்கி நின்றான். காந்தி அவனையும் கவனிக்காது சாலை வழியே நடக்கலானாள்.

## 13

# கனவும் கல்யாணமும்

காலம் யாருக்காகவும் தன் கடமையைச் செய்வதில்லை. யாருக்காகவும் காத்திருப்பதும் இல்லை. விளைவுகளைப் பாராமல் சென்றதைக் கருதாமல் அது ஓடிக்கொண்டே இருக்கிறது. காலவெள்ளம் என்றும், காலப்புயல் என்றும் பற்பல விதமாக அழைக்கப்படும் அதன் வேகத்திலே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சிக்குண்டவர்கள் கோடி கோடி.

அவர்களுள் கோடீஸ்வரன் குடும்பமும் ஒன்று. குடும்பம் என்று சொல்ல ஏராளமான நபர்களா இருக்கிறார்கள்? கோடீஸ்வரனும் காவேரியம்மாளும் கந்தநாதனும் சேர்ந்த குடும்பத்தில் காந்திமதியும் கலந்து கொண்டாள். மூவரோடு நால்வராக அமைதி நிறைந்த வாழ்நாள் கழியும் என்று காவேரியம்மாள் எண்ணினாள். ஆனால் அந்த அம்மாள் நினைத்தபடி ஏதும் நடக்கவில்லையே! கல்யாணமே வேண்டாம் என்று சொன்ன கந்தநாதன் மனம் மாறிக் காந்திமதியைக் கைப்பிடிக்கச் சம்மதித்தவுடனே வாழ்க்கைப் படகு அமைதியாகச் செல்லும் என்று நினைத்தாள். தன் ஏராளமான ஆஸ்திக்கு வாரிசு கிடைத்துவிடும் என்று களிப்படைந்தார் கோடீஸ்வரன். காந்திமதியின் சகோதரனோ தன் கவலைவிட்டது: தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் நடந்துவிட்டது என்று மகிழந்தான். அழகான கணவன் கிடைத்துவிட்ட பெருமையில் உலவினாள் காந்திமதி. அவர்கள் நினைத்தபடி நடந்ததா? இந்தக் கேள்விக்குக் காலம் தான் விடையளிக்க வேண்டும் சரியாக. காலம் விடையளித்தது.

காந்திமதி வீட்டைவிட்டு வெளியேறியவுடன் காவேரியம்மாளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைச் சொல்லி முடியாது. கோடீஸ்வரனுக்கோ உள்ளுக்குள்ளே பெரும் வேதனையும் திகிலும் இருந்தாலும் மேலுக்குக் கவலை இல்லாதவர் போல் நடித்தார். தன் கௌரவம் என்ன

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஆகுமோ என்ற கவலை உள்ளுக்குள்ளே இருந்தாலும் வெளித்தோற்றத்திற்குத் தனது பிடிப்பும், நிலையும், தரமும், ஏதும் குறைந்து விடவில்லை. இரண்டொரு நாள்களில் எல்லாம் சரியாகி விடும் என்று நினைத்தார். ஆனால் அவர் நினைத்தது போல் எதையும் மூடி மறைக்கவில்லை. மனத்திலே இருப்பதை மறந்துவிட அவர் நினைத்தாலும் முடியவில்லை. எந்த விஷயத்திலும் சிறு தகராறு கூட வராத அந்தக் குடும்பத்தில் காவேரியம்மாளுக்கும், கோடீஸ்வரனுக்கும் மனத்தாங்கல் ஏற்படலாயின.

“அவளைப் போகுமாறு நீ விட்டிருக்கக் கூடாது. எனக்குப் போன் செய்திருக்கக் கூடாதா” என்று கோடீஸ்வரன் சாதாரணமாகக் கேட்டது கூட காவேரியம்மாளின் உள்ளத்தை நோகச் செய்து விட்டது.

பழியெல்லாம் தோட்டக்காரக் கிழவன் மீது வீழ்ந்தது. அவனுடைய வேலைக்குச் சீட்டு கிழிந்தது. இருநூறு ரூபா பணத்தை அவன் மீது விட்டெறிந்து அந்தக் கணமே அவனை வீட்டை விட்டு போகுமாறு சொல்லவிட்டார் குபேரர் கோடீஸ்வரன். காலாகாலமாய் உழைத்த அந்த நன்றியுள்ள வேலைக்காரன் ஒரு சஷண நேரத்தில் நாவை அடக்காததால் தெருவில் நிற்கும் நிலை ஏற்பட்டுவிட்டது! எவ்வளவோ கேட்டுக் கொண்டும் காந்திமதியின் சகோதரனை நேரே சென்று சந்தித்துப் பேசி அவளைத் திரும்பவும் வீட்டிற்கு அழைத்து வருமாறு தன் கணவரிடம் காவேரியம்மாள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எவ்வளவோ கூறியும் அவர் மறுத்துவிட்டார். “அதற்குத் தான் நான் அப்போதே சொன்னேன், நம் அந்தஸ்துக்குக் குறைந்த இடத்துச் சம்பந்தம் வேண்டாம் என்று. அவனுக்கு எந்தவிதமான அவமானமும் இல்லை. தங்கையை வீட்டுடனே என்றும் இருக்குமாறு செய்து விடுவான் சட்டத்தின் துணை நாடுவான். விவாகரத்துக்காக வழக்குப் போடுவான். ஏராளமான பணத்தை என்னிடமிருந்து கறக்கப்பார்ப்பான். கொடுத்துத் தொலைத்து விடுவோம்..” என்று முகம் சிவக்கப் பேசினார் அவர். காவேரியம்மாள் கண்களில் நீர் ததும்ப,“கொடுக்கப் போகும் பணத்தைக் கோர்ட்டு வழக்கு என்று ஆகித்தான் கொடுக்க வேண்டுமா? இப்போதே அவள் அண்ணிடம் கொடுத்துச் சரிசெய்வோமே! நம்மிடமிருந்து பணத்தைப் பறிக்க யாரோ திட்டமிட்டு வேலை செய்கிறார்கள்.”

“ஒருவர் கலைத்துதான் மனம் மாற வேண்டுமா? அவளும் ஒரு பெண் தானே! கல்யாணம் என்று ஒரு பெண்ணுக்கு எதற்காகச் செய்து வைப்பது! பட்டுப் புடவைகளாகக் கட்டிக் கொள்ளவும், தங்க நகை அணிந்து கொள்ளவும் காரில் போய் வரவும், வைரத்தோடு காதுகளில் டால் அடிக்கவும் மட்டும் தானா ஒரு பெண் பணக்கார வீட்டுப் பையனைக் கல்யாணம் செய்து கொள்கிறாள்? ஏழையானாலும் அவளுக்குப் பெண்மை உணர்ச்சி என்பது இல்லையா? அதுதான் போகட்டும், நாம் ஏன் கந்தநாதனுக்குக் கல்யாணம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செய்து வைக்க வேண்டும் என்று விரும்பினோம்? நம் குலம் விளங்க ஒரு கொழுந்து பிறக்க வேண்டும் என்பதற்காகத்தானே? அதை அடைந்து ஆனந்திக்க வழி இல்லாதபோது நமக்கும் பணம் இருந்து தான் என்ன பலன்? மருமகள் என்ற பெயருடன் ஒரு பெண்ணை வீட்டில் வைத்துத்தான் என்ன பலன்?" - இது போன்ற கோடீஸ்வரய்யர் பேசியதேயில்லை. உள்ளத்தில் கசப்புணர்ச்சி அதிகமாகியதால் அப்படிப் பேசுகிறாரோ என்று கூட காவேரி அம்மாள் எண்ணினாள். கணவரது முடிவுக்கு மீறி அவளால் ஏதும் செய்யவும் முடியாது.

"என்னதான் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நம் வீட்டுப் பெண் வெளியே வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க உங்களுக்கு ஆசையா?"- காவேரி அம்மாள் விம்மியவாறு கேட்டாள்.

"என் ஆசை, என் முடிவு என்று ஒன்றுமே இல்லை காவேரி! கொஞ்ச நாளைக்கு முன்பே ரகு என்னிடம் பிரமாதமாகச் சண்டை போட்டுவிட்டு போனான். உன்னிடம் நான் சொல்லவில்லை. 'பணம் காசு இருந்து என்ன பிரயோஜனம்? ஒரு பெண்ணின் வாழ்க்கையைத் துன்பப்படுமாறு செய்கிறீர்களே?' என்று பேசிவிட்டான். நான் அப்போதே எதிர்பார்த்தேன், இப்படி ஏதாவது நேர்ந்துவிடும் என்று. நம்மிடமிருந்து பணத்தைப் பறிக்க யாரோ திட்டமிட்டு வேலை செய்கிறார்கள்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“அதையே சொல்கிறீர்களே! பணத்தைப் பறிப்பதற்கு சதி செய்யட்டுமே, நாமே போய் காந்திமதியின் அண்ணனிடம் ரூபாய் நோட்டுக்களை வீசிவிட்டு வந்துவிடுவோம். ‘நீ பணத்தை எடுத்துக் கொள், காந்திமதியை அனுப்பிவிடு’ என்று கேட்டுக் கொள்வோம்.

“அடி பைத்தியமே! ரகு பணம் ஒன்றை மட்டும் குறிப்பாகக் கொண்டவனல்லன். அவன் போக்கே எனக்குப் புரியவில்லை. ஏன் அவசரப்படுகிறாய்? பொறுத்திருந்து பார்ப்போமே. ஜப்பானுக்குப் போய்ச் சேர்ந்து, கந்தநாதனின் கடிதம் வரட்டும். அதற்குப் பிறகு செய்ய வேண்டியதைச் செய்வோம்.”

“செய்யவேண்டியது என்ன தெரியுமா? மறுபடியும் காந்திமதி இந்த வீட்டிற்கு வந்துவிடவேண்டும். அவள் வீணை மீட்டி நான் கேட்டு ஆனந்திக்க வேண்டும். அவள் மருமகளாக இந்த வீட்டிற்கு வர ஆசைப்படாவிட்டாலும், மகளாகவாவது வருமாறு செய்யவேண்டும்”- காவேரியம்மாள் ஏதோ பிரமை பிடித்தவள் போல் பேசினாள். அவள் பேசுவதில் உள்ளர்த்தம் கோடீஸ்வரன் ஒருவருக்குத் தான் புரியும். அவர் தன் மனைவியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். அவள் அருகே வந்தார். அவளைத் தொட்டுப் பேசி எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. மஞ்சள் பூசாமலேயே பொன்நிறம் கொண்டிருந்த அந்த முகத்தில் சிறு சுருக்கங்கள் வீழ்ந்திருந்தாலும் களை குறையா அந்த முகத்திலே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வடியும் இருசொட்டுக் கண்ணீரை அவர் மெல்லத் துடைத்தார்.

காவேரி அம்மாளின் உடலும் சிலிர்த்தது. மேலும் இதயமே பொத்துக் கொண்டு பாய்வதுபோல் ‘பொல பொல’ வென்று கண்ணீர் பெருகியது.

“காவேரி! உன் மனசு எனக்குத் தெரியாதா? உன்னைப் புரிந்து கொள்ளும் சக்தி எனக்கில்லையா? நீ இப்போது இரண்டு காரணங்களுக்காக வேதனைப்படுகிறாய். ஒன்று குடும்ப கௌரவம் மற்றொன்று தாய்ப்பாசம். இரண்டும் தானே? குடும்ப கௌரவத்திற்காகக் கவலைப்படாதே. கோடீஸ்வரன் மருமகள் வீட்டை விட்டுப் போய்விட்டாள் என்று நாலுபேர் பேசிக் கொள்வர். நாலுபேருக்காக நாம் கவலைப்பட முடியுமா? இன்று இல்லாவிடில் என்றாவது நம் வீட்டைப் பற்றி நாலுபேர் பேசும் படியான நிலை ஏற்பட்டிருக்கும். அதற்கு நாம் என்ன செய்வது? நாம் போன ஜன்மத்தில் செய்த பூஜா பலன். நமக்கும் இப்படி ஒரு பிள்ளை பிறந்தது. நாம் அறியாததன்றோ. அறிந்தும் நாம் அதற்குத் தகுந்தது போல் நடந்து கொண்டிருக்க வேண்டும். கல்யாணம் செய்திருக்கக் கூடாது” என்று அவர் சொல்லிக் கொண்டு போனபோது காவேரி குறுக்கிட்டு,“நான் ஒப்புக் கொள்ளமாட்டேன் நீங்கள் சொல்வதை ஊரார் சொல்வது பொய்த்துப் போகும்படியாக என் மகன் மாறி விடுவான் பாருங்கள். நான் பாலக்கரை அனுமாருக்கு வேண்டிக்கொண்டே இருக்கிறேன். ஜப்பானுக்குப் போய்விட்டு வரும்போது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

புதிய கந்தநாதனாக அவன் வருவான் பாருங்கள். அதனால்தான் அவன் உடனே போகவேண்டும் என்று துடித்திருக்கிறான்... அதனால் தான் சொல்கிறேன். நிலைமை நிச்சயமாக மாறும்போது, காந்திமதி மட்டும் ஏன் வீட்டை விட்டு வெளியேறி அபக்கியாதியை ஏற்படுத்த வேண்டும்? அதனால் அவளைப் போய் அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள்" என்று கூறினாள்.

கோடீஸ்வரன் ஏதும் பதில் சொல்லவில்லை. மௌனமாக இருந்தான். அவர் மௌனமாக இருக்கிறார் என்றால் பலத்த சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறார் என்று அர்த்தம். அன்று, மறுநாள் அவர் தீவிரமாக யோசித்துவிட்டு ரகுவின் வீட்டிற்குச் செல்லக் காரில் ஏறினார். அப்போது தபால்காரர் ஒரு ரிஜிஸ்தர் தபாலைக் கொண்டு கொடுத்தார். அது காந்திமதியின் சகோதரன் ரகுவிடமிருந்து வந்திருந்தது.

## 14

# தோழியின் கணவன்

காந்திமதி திடீரென்று வீட்டிற்கு வந்தவுடன் ரகு திடுக்கிட்டான். தங்கையின் முகவாட்டத்தைக் கண்டான். ஏன் என்ன நேர்ந்தது என்று அவன் கேட்கவில்லை. அவன் ஓரளவு அறிந்திருந்தான். ஆனால் இப்படித் திடீரென்று வீட்டை விட்டு வெளியேறி அவள் வந்துவிடும் நிலை ஏற்படும் என அவன் நினைக்கவில்லை.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதி எதையும் மறைக்காமல் உள்ளது உள்ளபடி கூறினாள். பிறகு அழுகையை நிறுத்திவிட்டு,"நான் மறுபடியும் உனக்குச் சுமையாக வந்துவிட்டேன் அண்ணா! என்னைப் புக்ககத்துக்கு அனுப்பிவிட்டு கல்யாணம் செய்து கொண்டு நீங்கள் சுகமாக வாழ்வதற்குத் தடையாக நான் வேறு குறுக்கே நிற்கிறேனே" என்றாள்.

ரகு மெல்லச் சிரித்து,"நான் கல்யாணம் செய்து கொள்ளாததும் நல்லதாகப் போய்விட்டது. அதற்கு அந்த எலும்புருக்கி நோய்க்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அந்த வியாதியின் ஆரம்பச் சின்னங்கள் என்னிடம் உள்ளன. அதனால் மணவாழ்க்கையில் ஈடுபடாமல் இருப்பது நல்லதென்று டாக்டர் கூறினார். எனக்குக் கல்யாணமாகியிருந்து, உனக்கு ஒரு மன்னி வந்திருந்தால், இப்போது நீ வீட்டோடு வந்து விட்டதற்கு முணுமுணுக்கலாம். சண்டை சச்சரவு ஏற்படலாம். அதிலிருந்து தப்பித்து நாம் நிம்மதியாக வருங்காலத்தைப் பற்றி யோசிக்காலாமல்லவா?' என்றான்.

"அண்ணா" என்று பரபரப்புடன் கேட்டாள் காந்தி. "எலும்புருக்கி நோயா? சொல்லவே இல்லையே அண்ணா!" என்று கதறினாள் காந்திமதி.

"காந்தி! நீ வருத்தப்படவே கூடாது. உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரமே கொட்டிவிடும்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உனக்கு நல்வாழ்வு தேடித்தர கடைசி வரையில் பாடுபடுவேன். நான் எதிர்பார்த்தது தான் இது. இதனால் முன்பே வக்கீலையெல்லாம் கலந்து ஆலோசித்து விட்டேன். நல்ல வேளை இப்போது கொஞ்சம் பணமிருக்கிறது. கோடீஸ்வரனுக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டேன். கவலைப்படாமல் இரு. ஆனால் வேலை ஏதுமில்லாமல் வீட்டிலே தனிமையாக இருப்பது என்பது சைத்தானின் இருப்பிடமாகி விடும். அதனால் நாலு குழந்தைகளுக்குச் சங்கீதம் சொல்லிக் கொடு. ரேடியோவில் பாடுவதற்கும் ஏற்பாடு செய்து தருகிறேன். இரண்டு பெரிய மனுஷாள் வீட்டுக் குழந்தைகளுக்கு வீணை சொல்லிக் கொடுத்தால் கிடைக்கும் பணத்தில் நிம்மதியான வாழ்க்கை நடத்தலாம்" என்றான்.

காந்திமதிக்குச் சற்றுத் துணிவு ஏற்பட்டது.

"அண்ணா! வக்கீல் என்ன சொல்கிறார்? என்ன நோட்டீஸ் கொடுக்கப் போகிறார்?" என்று மெல்லக் கேட்டாள்.

"நோட்டீஸ் வேறு எதற்கு? விவாகரத்து கோரித்தான்."

"விவாகரத்தா? நம்மிடையே அந்த வழக்கம் இல்லையே அண்ணா! ஊர், உலகம் என்ன சொல்லும்?"

"காந்தி! ஊர் உலகம் இப்போது மட்டும் ஒன்றுமே சொல்லாமல் இருக்கப் போகிறதா? ஊர் உலகத்துக்காக நாம் ஒன்றைச் செய்யவோ செய்யாமல் இருக்கவோ முடியுமா? என்னைப் பொருத்தவரை உனக்கு நடந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கல்யாணம் ஒரு கனவு என்றே கருதுகிறேன். கனவு கலைந்து விட்டதாக நினைத்துக் கொள்."

தன் அண்ணா சொல்வது காந்திமதிக்குப் புரிந்தது. புரியாமலுமிருந்தது கனவு - கனவு என்று முணுமுணுத்த காந்திமதி தன் கழுத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். பொன் நிற மாங்கல்யம் தங்கக் கொடியில் கோக்கப்பட்டு மார்பிலே தவழ்ந்து கொண்டிருந்தது.

'கல்யாணம் ஒரு கனவா?' என்று அவள் ஒருமுறை கேட்டுக்க கொண்டாள். அவள் அதைப்பற்றி அதிகம் சிந்திப்பதற்கு முன்பு வாசலில் டாக்ஸி ஒன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது. சீதாவும் அவள் கணவனும் இறங்கிக் கொண்டிருந்தனர். சீதாவைச் சந்திக்க வேண்டும்போல் தோன்றியது. அதோ சீதாவே வந்துவிட்டாள். அவளை டாக்ஸிலிருந்து கைலாகு கொடுத்து இறக்கிய அவள் கணவன் வீட்டிற்கு உள்ளே வரும்வரை தோள்பக்கமாக அணைத்துக் கொண்டு அழைத்து வந்தான். ஓகோ! சீதா கருவுற்றிருக்கிறாளா?

காந்திமதி தன் வேதனையை மாற்றிக் கொண்டு "வா, சீதா வா! உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். வந்துவிட்டாய்!" என்று பரபரப்புடன் வரவேற்று அவளருகே நின்று கொண்டிருந்த அவள் கணவனையும் "வாங்கோ, இதோ இவர் தான் என் சகோதரர் ரகு" என்று தன் அண்ணனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

சீதா மெல்ல நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நானும் நினைத்தேன் நீயும் நினைத்தாய். இரு புத்திசாலிகள் எப்போதும் ஒரே மாதிரித்தான் நினைப்பார்கள்!” என்றாள். காந்திமதியின் தோழி சீதாவைக் கல்யாணம் ஆகும் முன்பும் கண்டிருக்கிறான். இப்போதும் பார்க்கிறான். அவளைப் பார்க்க வேதனை தான் அதிகமாகியது. அவர்கள் பேசியபோது ரகு அங்கிருந்து வேறு வேலை இருப்பது போல் சென்று விட்டான்.

சீதாவும், காந்திமதியும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். தான் இங்கே இருப்பது சீதாவுக்கு எப்படித் தெரியும் என்பது காந்திமதிக்குப் பெரும் கவலையாக இருந்தது. ஒரு வேளை புக்ககத்தை விட்டுப் புறப்பட்டு வந்திருப்பது தெரிந்திருக்குமோ என நினைத்தாள். அப்போது சீதாவின் கணவன் காந்திமதியைக் கடைக்கண்ணால் நோக்கியவாறு “சீதா! உன் தோழியை வெளியே போய் விட்டு வரலாம் என்று கூப்பிட்டேன். இப்படியே எவ்வளவு நேரம் வீட்டிலே அடைந்திருப்பதாம்?” என்றான்.

சீதா சிரித்தவாறு,“நீங்கள் தான் கூப்பிடுங்களேன். நீங்கள் பேசமாட்டீர்களா என்ன - ரொம்ப வெட்கமோ? பெண்கள் என்றால் பல்லை இளிப்பதில் குறைச்சல் இல்லை இங்கே சாது போல் நடிக்கிறீர்களா?”

கணவனிடம் எவ்வளவு உரிமையுடன் சீதா நடந்துகொள்கிறாள் அதைப் போல அவள் கணவனும்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவள் அதிர்ஷ்டம் தான் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள். அவளுக்கும் வெளியே போய்விட்டு வர வேண்டும் போல் தோன்றியது.

சாந்தோம் கடற்கதை மணலில் காந்திமதி ஏதோ கோலத்தைப் போட்டுக் கொண்டே சீதா பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருந்தாள். தன் வயிற்றில் வளரும் சிசு ஆணா பெண்ணா என்பதிலிருந்து, பெண்ணாய்ப் பிறந்தால் என்ன பெயர் வைக்கலாம் ஆணாய்ப் பிறந்தால் என்ன பெயர் வைக்கலாம் என்ற தன் ஆராய்ச்சி வரை அவள் பேசிக் கொண்டே போனாள்.

ஒளிமங்கி இருள் சூழ்ந்து கொண்டே வந்தது. காந்திமதியின் தோற்றத்தையே இமை கொட்டாமல் சீதாவின் கணவன் கவனித்துக் கொண்டிருந்தான் மங்கிய ஒளியில் காந்திமதியின் எழில் மனத்தைக் கவர்ந்தது. புதியதாக அளவெடுத்துத் தைக்கப்பட்டிருந்த ஜாக்கெட்டின் வடிவத்தில் மனத்தை லயிக்கவிட்டிருந்த அவன் விழிகளை ஓரிரு முறை காந்திமதி சந்தித்தாள். அவன் விழிகளில் தேங்கியிருந்த எண்ணத்தை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்றாலும் மற்றொரு முறை பார்க்காமலும் அவளால் இருக்க முடியவில்லை.

நன்றாக இருட்டிவிட்ட பிறகு கடற்கரையின் ஓரமாக மூவரும் சென்று நின்றனர். அலைகள் மெல்ல மெல்ல பாதத்தை வந்து நனைத்துத் திரும்பிக் கொண்டிருந்தன. திடீரென ஓர் அலை உயர்ந்து வந்து அவர்களைத் திணற

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அடித்தது. வேஷ்டியை முழங்கால் வரையில் உயர்த்திக் கட்டியிருந்தபடியால் சீதாவின் கணவனின் ஆடை நனையவில்லை. சீதாவும், காந்திமதியும் 'ஹோ ஹோ' வென்று கூவினார்கள். அவர்கள் புடவை முழங்கால் வரை நனைந்து விட்டது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே மணலில் கால் புதையப் புதைய நடந்து சென்றனர்.

டாக்ஸி ஒன்றைச் சீதாவின் கணவன் அழைத்தான். முதலில் சீதா ஏறிக்கொண்டாள். பிறகு காந்திமதி ஏறி அமர்ந்தாள். சீதாவின் கணவனும் அவளுடனேயே ஏறிக்கொள்ள முற்பட்டான். காந்திமதியின் உடல் சிலிர்த்தது.

## 15

# புஷ்பக விமானம்

"நோ, நோ - இங்கே இடமில்லை. முன் ஸீட், பிளீஸ்" என்று சீதா தன் கணவனுக்கு அன்புக் கட்டளை இட்டிராவிடில் சீதாவின் கணவன் காந்திமதியின் அருகிலேயே அமர்ந்திருப்பான். அதை உயர்ந்த நாகரிகம் என்று கருதி விட்டானோ என்னவோ! காந்திமதியின் உடல் 'வெடவெட' என நடுங்கிக் கொண்டிருந்தது. எப்போது வீட்டிற்கு வரப் போகிறோமென்றும் தோன்றிவிட்டது.

"என்ன காந்தி! ஒன்றுமே பேசமாட்டேன் என்கிறாய்"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்று சீதா கேட்டாள். “எங்கேயோ ஞாபகம் ஹ_ம்” என்று அவள் விலாவில் சுண்டுவிரலால் மெல்லக் குத்தினாள். உடலைச் சிலிர்த்துக்கொண்ட காந்திமதி பொய்ச் சிரிப்புச் சிரித்து “ஒன்றுமில்லை சீதா!” என்றாள்.

“தெரியுமே நீ ஒன்றுமில்லை என்று சொன்னாலும் உன் மனம் என்ன எண்ணுகிறது என்று எனக்குத் தெரியும். உன் நிலை எனக்குப் புரியாது தான் இருக்கிறது. காந்திமதி! வீணே மனத்தைக் குழப்பிக் கொள்வதில் அர்த்தம் இல்லை. நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறாயா?” என்றாள் சீதா.

அவள் என்ன சொல்லப் போகிறாள்? என்ன இவள் கேட்கப் போகிறாள் என்று சீதாவின் கணவன் வியப்படைந்தான். டாக்ஸி சென்று கொண்டிருந்தது.

சீதா சொன்னது காந்திமதிக்கு வியப்பை அளிக்கவில்லை. ‘விவாகரத்து செய்து கொண்டு விடுவது’ என்ற யோசனையை அவள் மிகச் சுலபமாகக் கூறிவிட்டாள். அண்ணாவும் அந்தக் கருத்துடனேயே இருக்கிறார். விவாகம் செய்து கொள்ளும் போது ‘ரத்து’ செய்து கொள்ளும் சந்தர்ப்பமும், இடமும் ஏற்படுத்தியா சடங்குகள் நடைபெறுகின்றன? ‘ரத்து செய்து கொண்டு பிறகு என்ன செய்வது? சீதா அதைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. ஆனால் அண்ணா ரகு சொல்லிவிட்டார் விவாகரத்தும் கிடைத்துப் பணமும் நிறையக் கிடைக்குமாம். அப்படிப்பட்ட ‘ஸ்ட்ராங் கேஸ்’

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்று வக்கீலும் சொல்லிவிட்டாராம்.

“உடனே பணத்தைக் கொடுத்துவிட கோடீச்வரய்யர் ஏமாளி இல்லை - அண்ணா” என்று சொல்லிப் பார்த்தாள் காந்திமதி.

“உடனே பணம் தந்துவிடுவார் என்று நான் சொல்லவில்லை. வழக்கு இழுத்துக் கொண்டே போகும். ஆனால் முடிவில் வெற்றி நமக்குதான்” என்று ரகு உற்சாகமாகத் தான் சொல்கிறார். அவர் எந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறாரோ? பெண் உள்ளம் அவருக்கு எப்படிப் புரியும்?

“ஏன் அண்ணா விவாகரத்து செய்துவிட்டு வீட்டிலே உட்கார்ந்து காலமெல்லாம் என்ன செய்வது?” என்று காந்திமதி கேள்வி ஒன்றை வீசினாள்.

அதற்கு உடனே பதில் சொல்லிவிடத்தான் ரகு முயன்றான்: “வீட்டிலே நீ சும்மா உட்காரப் போவதில்லையே காந்திமதி! குழந்தைகளுக்கு வீணையும் பாட்டும் சொல்லிதரப் போகிறாய். உன் கவனமெல்லாம் அதில் இருக்கும். அதுசரி, நீ உன் புக்ககத்தில் இருந்தால் மட்டும் காலமெல்லாம் என்ன செய்வாய்?”

காந்திமதி மௌனமாயிருந்தாள். “ஒரு பெண்ணுக்கு ஆயிரம் கஷ்டம் இருந்தாலும் புக்ககம் தான் கோயில் என்று ஏன் ரகுவுக்குத் தெரியவில்லை?’ என்று காந்திமதி எண்ணினாள். ஆனால் சொல்லவில்லை.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதி மௌனமாயிருப்பதைப் பார்த்த ரகு,"காந்தி நீ என்ன யோசிக்கிறாய் என்று எனக்குத் தெரியும். விவாகரத்து என்பது நம்மிடையே வழக்கத்திலில்லையே என்று யோசிக்கிறாய். மனத்திலே நிம்மதியும், இலட்சிய சித்தியும் அற்ற வாழ்க்கைப் பாதையில் பெரும் சுமையுடன் நடப்பதை விடச் சுமையை அகற்றிவிட்டு, மனப்பாரம் குறைத்து விட்டுச் செல்வது தான் நல்லது. அதோடு, உனக்குக் கல்யாணம் நான்தானே செய்து வைத்தேன்? கல்யாணத்திற்கு மறுபேச்சுப் பேசாமல் சம்மதித்தாய். இப்போது கல்யாண ரத்தை நானே ஏற்பாடு செய்கிறேன். அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு. உன் நன்மைக்குத் தான் சொல்கிறேன் காந்திமதி! கல்யாணமாகி அதிக நாள்களும் ஆகிவிடவில்லை. அதனால் சட்டப்படியும் சரி, சாஸ்திரப்படியும் சரி, நான் சொல்வது நியாயம் தான். மறுபடியும் அந்தக் கோடீஸ்வரன் பங்களாவுக்குள் நுழையும் ஆசையை விட்டு விடு. ஒருவேளை அவரும், அவர் மனைவியும், வந்து கூப்பிட்டாலும் கூப்பிடலாம் பேச்சிலே உன்னை மயக்கிவிடலாம். ஒருநாளும் நீ சம்மதிக்காதே. பதில் பேசாதே" என்று பெரும் பிரசங்கமே செய்து விட்டான். தன் சகோதரனுக்கு தன் மீதுள்ள அன்பும், அக்கறையும் காந்திமதியை மேற்கொண்டு ஏதும் பேச விடாமல் செய்தன.

ரகு சொன்னது போல் வீட்டைத் தேடி கோடீஸ்வரன் வரத்தான் செய்தார். இதற்கு முன்பே காந்திமதியை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அழைக்கப் புறப்பட்டபோது வக்கீல் நோட்டீஸ் ரகுவிடமிருந்து கிடைத்ததால் பிரயாணத்தைத் தடைபடுத்தினார். ஆனால் காவேரி அம்மாளின் வற்புறுத்தலும் தொந்தரவும் அவரை வீட்டிலே இருக்க விடவில்லை. மீண்டும் அவர் காந்திமதியை அழைக்க வந்தார். இதுபோல் அவர் பிறரிடம் தலை குனிற்து நிற்க வேண்டி அவருடைய அறுபதாண்டு வாழ்வில் நேர்ந்ததில்லை. இப்போது அவர் தன்னைவிட எவ்வளவோ மடங்கு அந்தஸ்தில் குறைந்த ரகுவிடம் பணிய வேண்டியிருக்கிறது. பணிதல் - அவர் அகராதியில் பிறர் வீட்டைத் தேடிப் போவது கூடத்தான்.

ரகு! கோடீஸ்வரனை, வாவென்று கூடச் சொல்லவில்லை. காந்திமதி வீட்டினுள்ளே சுருதிப்பெட்டி ஒலிக்க 'ஸரிகமபதநி' என்று சில குழந்தைகளுக்குப் பாடாரம்பம் செய்து கொண்டிருந்தாள். வெளியே யார் வந்திருப்பது என்று கூட அவளுக்குத் தெரியாது.

கோடீஸ்வரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். கார் டிரைவர் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். கோடீஸ்வரனே பெஞ்சியின் ஒரத்தில் உட்கார்ந்துகொண்டார். என்ன தான் ரகு திட வைராக்கியத்துடன் கோபமாக முகத்தை வைத்துக் கொண்டாலும், அவனால் பேசாமல் இருக்க முடியவில்லை. கோடீஸ்வரனை ஒருமுறை பார்ப்பதும், வாசலில் நிற்கும் காரைப் பார்ப்பதுமாகச் சிறிது நேரம் இருந்தான். 'வாங்கோ' என்று கூப்பிட்டிருக்க வேண்டும்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

'சௌக்கியமா?' என்றாவது கேட்டிருக்க வேண்டும். இரண்டும் இல்லாத போது பேச்சுத் தொடர் எப்படி ஆரம்பமாகும் என்றே தெரியவில்லை. ஆனால் கோடீஸ்வரனுக்கல்லவா காரியம் ஆகவேண்டும்? அவர் தன் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும் காவேரியின் விருப்பத்தை மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும் காவேரியின் விருப்பத்தை நிறைவேற்றவும் வந்திருக்கிறார். அவரும் மௌனமாக இருந்தால் சரியாகிவிடுமா? தொண்டையைக் கனைத்துக் கொண்டு,"காந்திமதி சௌக்யமா?' என்று கேட்டார்.

ரகு சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு,"ஹ_ம்..." என்றான்.

"அதென்ன ரகு, இப்படித் திடீரென்று கோபம்? நேரிலே கேட்கத்தான் வந்தேன்" என்று பட்டென்று விண்டு விட்டார் கோடீஸ்வரன். அவருள்ளத்தில் ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. பெண்ணைப் பெற்றவன் தலை குனிந்திருப்பது போலல்லவா அவர் நிலை இருக்கிறது.

"கோபமோ, தாபமோ... உங்களுக்குத்தான். என் வக்கீல் கடிதம் போட்டிருப்பாரே" என்றான் நெஞ்சில் எச்சிலை ஒரு மடக்கு விழுங்கியவாறு.

"ஆம் அதைப் பார்த்துவிட்டுத் தான் வருகிறேன். அதற்கு என் வக்கீல் பதில் சொல்லி நிலைமையை ரசாபாசமாக்க விரும்பாமல் நானே நேரே வந்தேன்" என்று கூறி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கொண்டார்.

“இன்னும் ரசாபாசம் என்ன வேண்டியிருக்கிறது? ஊர் உலகம் அறிந்துவிட்ட பிறகு மூடி மறைக்க என்ன இருக்கிறது? நான் தான் முட்டாள். உங்களுடைய பேச்சிலும், பணத்திலும் மயங்கி உள் விஷயம் அறியாதவாறு என் தங்கையைக் கொண்டு தள்ளிவிட்டேன். எனக்குத் தெரியாதது போல் ஊராருக்குத் தெரியாதா என்ன?” என்று அழுத்தமாகவே பேசினான்.

“மிஸ்டர் ரகு! ஏன் இப்படிப் பேசுகிறாய்? உன் தங்கையை எங்காவது தவறான இடத்திலா தள்ளிவிட்டாய்? உனக்குத் தெரியாமல் என்ன நடந்து விட்டது?” என்று கோடீஸ்வரனும் சற்று ஓங்கிய குரலில் கேட்டார்.

“இன்னும் என்ன நடக்க வேண்டும்? - ஐயோ - வேண்டாம், வேண்டாம். என் வாயால் சொல்ல வேண்டாம். என் ஆத்திரத்தை அதிகமாகச் செய்யாதீர்கள். நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்? சமாதானம் செய்து கொள்வதற்கா? உங்களுக்கு ஏதாவது சொல்ல விருப்பம் இருந்தால் பதில் கடிதம் போட்டு விட்டு போங்கள்” என்று ரகு சீறினான்.

கோடீஸ்வரன் உதட்டைக் கடித்துக் கொண்டார். “சண்டை என்று எழுந்தால் தானே சமாதானம் என்ற பேச்சு உண்டாகும்? நான் உன் தங்கையைப் பார்க்க வேண்டும்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவள் நல்ல பெண். என்னைக் கேட்காமலேயே புறப்பட்டு வந்துவிடுவாள். இல்லாவிட்டால், ஊருக்குப் போயிருக்கும் கந்தநாதன் வந்து கேட்டால் நான் என்னவென்று சொல்வேன்? அவன் வந்தபிறகு வேண்டுமானாலும் காந்தி கிளம்பி வரட்டும். அவனும், அவளும் சேர்ந்து வேண்டுமானாலும் வரட்டும். இப்போது, அவளைக் கூப்பிடு. நான் பேச வேண்டும்."- அவர் எப்படித் தான் இவ்வளவு தூரம் பேசிவிட்டாரோ!

ரகு அடிபட்ட வேங்கையைப் போலானான். "யார் வந்து கேட்பார்கள்? கந்தநாதனா? யார் அவன்? அவனுக்கும் என் தங்கைக்கும் என்ன சம்பந்தம்? அவன் ஊருக்குப் போகும்போது யாரிடம் சொல்லிவிட்டுப் போனான்? எதற்காகப் போனான்? அப்போது இல்லாத அக்கறை இப்போது மட்டும் எங்கிருந்து வந்தது? ஒருவருக்கும் தெரியாமல் ஜப்பானுக்குப் போய் புது மனிதனாக மாறிவிட வேண்டும் என்று மனப்பால் குடித்தால் முடியுமா? என் தங்கை உங்களுடன் பேசமாட்டாள்" என்று கூறியபடி சரேலென்று எழுந்து உள்ளே போய்விட்டான்.

கோடீஸ்வரன் சற்று நேரம் நின்றார். உள்ளே சென்ற ரகு காந்திமதியிடம் பேசுவது அவர் காதில் நன்றாக விழுந்தது. "பார்த்தாயா காந்திமதி! நான் இருந்திராவிடில் உன்னை அவர் அழைத்துக் கொண்டு சென்றிருப்பார்: இன்னும் அந்தப் பெரிய மனுஷன் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உன்னுடன் பேச வேண்டுமாம். நீ அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டாயாம். அவர் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ள உன் வாழ்வைப் பலிகொடுக்க விரும்புகிறார். என் உடலில் உயிருள்ளவரை நீ அந்த வீட்டில் அடியெடுத்து வைக்கச் சம்மதித்துமாட்டேன். சொல்லு, காந்தி சொல்லு. உனக்கு உன் அண்ணா வேண்டுமா? வேண்டாமா சொல்லு" என்று அவன் கூவினான்.

காந்திமதிக்கு வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. வாசலில் கோடீஸ்வரன் இன்னும் நின்று கொண்டிருக்கிறார். அவரைத் தன் அண்ணா நடத்தும் முறை சரியாகத் தோன்றவில்லை. அவர் மனத்தை ஏன் இவர் புண்படுத்துகிறார்? அவர் கௌரவத்திற்கு இவர் ஏன் பங்கம் விளைவிக்கிறார்?

"அண்ணா! அவரை ஏன் நிற்கவைத்தே பேசுகிறீர்கள்? வாசலில் இருந்து பேசுவது நியாயமா?" என்று காந்திமதி கேட்டாள்.

"ஓகோ! அவரை நானா வரச் சொன்னேன்? நானா நிற்கச் சொன்னேன்? உனக்கு இன்னும் அந்த வீட்டுப் பாசம் போகவில்லையென்றால் இப்போதே நீ போய்விடு. பெரிய கார் வாசலில் நிற்கிறது. உன்னை அழைத்துப் போக வந்த புஷ்பக விமானம். இப்போதே முடிவு செய்துவிடு. பிறகு கேஸ் நடக்கும் போது மனம் மாறி என்னைச் சந்தி சிரிக்க விட்டு விடாதே" என்று ரகு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஆவேசம் வந்தவன் போல் கூவினான்.

ரகுவின் தோற்றமும், பேச்சும் காந்திமதிக்குப் பயத்தை அளித்தன. "மீண்டும் திரும்பிப் புக்ககத்துக்குப் போகப் போவதாக யார் அண்ணா சொன்னார்கள்?" என்று ஒரே வார்த்தை கூறுவதற்குள் அவள் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. கண்ணீர் பொங்கி வழிந்தது. கைகளால் முகத்தை மூடிக்கொண்டு சிறு குழந்தை போல் எதிலே தேம்பித் தேம்பி அழுதாள்.

வாசலில் நின்ற நிழல் மறைந்தது. கார் புறப்பட்டுச் செல்லும் ஓசை கேட்டது.

## 16

# தப்பிய இரை

சீதாவின் கணவன் அன்று பகல் ஒரு மணிக்கு நல்ல பதை பதைக்கும் வெயிலில் வந்து காந்திமதியின் வீட்டின் கதவைத் தட்டினான். அப்பொழுது தான் சற்றுக் கண்ணயர்ந்திருந்தாள் காந்திமதி. அன்று வெள்ளிக்கிழமை. காலையில் சங்கீத வகுப்புக்கு வந்த சிறுமிகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு எண்ணெய் தேய்த்து அமைதியாகக் குளித்தாள். சங்கீதத்திலேயே இப்போதெல்லாம் மனம் லயித்திருந்த படியால் எந்தவிதக் கவலையும் அவள் உள்ளத்தை வாட்டவில்லை. ராகங்களை அவள் மனம் முணுமுணுத்துக் கொண்டிருக்கும். இசைப் பயிற்சிக்குப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

புத்தகங்களைப் பார்ப்பதில் பொழுது கழியும். கலகலவென்று சிரித்துக் கொண்டு வரும் சின்னஞ்சிறு சிறுமிகளைப் பார்த்து மகிழ்வதில் உள்ளம் அமைதி பெறும். அன்று எண்ணெய் குளியல் ஆன பிறகு கூந்தலை மெல்ல உலர்த்திய வண்ணம் வாயிற்படியருகே சிறிது நேரம் நின்றாள். இடுப்பு வரை வந்து தவழும் அந்தக் கூந்தலழகையும், தோடும் மூக்குப் பொட்டும் இல்லாமல் பளபளக்கும் மேனியையும் உடலுடன் ஒட்டினாற் போன்ற வாயில்புடவை அங்கங்களின் வாளிப்பை விகசிப்பதையும் ரசித்துப் பாராட்டி அவளுடன் பேச யார் இருக்கிறார்கள்? ஆனால் சீதா மட்டும் அந்த நிலையில் அவளைப் பார்த்திருந்தால் வியந்தே போயிருப்பாள். “கணவனை விட்டுப் பிரிந்திருக்கிறோம் என்ற கவலையால் அவள் உடல் ஏதாவது வாட்டமுற்றிருக்கிறதா பாருங்கள்?” என்று தன் கணவனிடம் சீதா கிசுகிசுத்திருப்பாள்.

காந்திமதி அதிக நேரம் தெருவைப் பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. எதிர் வெற்றிலைபாக்குக் கடைக்கு வருகிறவர் சிலர் பார்க்கும் பார்வை அவளை என்னவோ செய்தது. அதனால் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்துவிட்டாள். அந்தத் தனி வீடு ‘ஹோ’ என்று தான் இருந்தது. வேலைக்காரி பகல் இரண்டு மணிக்குத் தான் வருவாள்.

சாப்பிட்டோம் என்று பேர் பண்ணிவிட்டு அன்றைய தினசரியை எடுத்து வைத்துக் கொண்டு தரையில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

படுத்தாள். மயில் தோகைபோல் கூந்தல் விரிந்து தரையில் புரண்டு கொண்டிருந்தது. ஒரு பக்கம் கூடப் படித்திருக்க மாட்டாள் தூக்கம் சுகமாக அவளை அணைத்துக்கொண்டது. அப்போது தான் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்கவே காந்திமதி எழுந்து சென்று கதவைத் திறந்தாள். சீதாவின் கணவன் நிற்பதைக் கண்டவுடன் ஒருகணம் அவள் உடல் சிலிர்த்தது.

அவன் கையில் ஸ்வீட் பொட்டலத்துடன் அசட்டுச் சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான். என்ன சொல்வது, என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு கணம் நின்று கொண்டிருந்த காந்திமதி தன் நிலையைச் சமாளித்துக்கொண்டு,“வாங்கோ” என்று அழைத்தாள்.

“உன் அண்ணா இல்லையா?” என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் அவன். அவனுக்குத் தெரியாதா இந்த நேரத்தில் அவன் அண்ணன் வீட்டிலிருக்க மாட்டான் என்று.

“ஸவீட் உன் தோழிக்குக் குழந்தை பிறந்திருக்கிறது” என்று கூறி ஸ்வீட் பொட்டலத்தை நீட்டினான். காந்திமதிக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு எல்லையில்லை. சீதாவுக்குக் குழந்தை! அப்போதே போய்ப் பார்த்துவிட வேண்டும் என்று அவள் துடித்தாள்.

“எப்போ பிறந்தது என்ன குழந்தை? எங்கே இருக்கிறாள்?” என்று கேள்விமேல் கேள்விகளை அடுக்கினாள்.

“குழந்தையைப் பார்க்க உன்னை அழைத்துப் போகத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தான் வந்திருக்கிறேன்” என்று அவன் கூறிவிட்டு ஒருவிதமாகப் பார்த்தான்.

அவளுக்கு அந்தப் பார்வையை ஏனோ பிடிக்கவில்லை. அவனுடன் அதிகமாகப் பேசவும் தோன்றவில்லை. அதே சமயம் சீதாவின் குழந்தையை உடனே பார்க்கவேண்டும் போலவும் இருந்தது.

கடைசியில் சீதாவின் கணவன் தான் ஜெயித்தான். காந்திமதியை டாக்ஸியில் அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தான். தனிப்பட்ட நர்ஸிங் ஹோமில் தான் சீதா பிரசவித்திருந்தாள். வழவழப்பான தரை. சுத்தமான அறை. அமைதியான இடம். வெள்ளை வெளேரென்ற துணி விரிக்கப்பட்ட கட்டில். அருகே ஊசலாடும் இரும்புத் தொட்டியில் சின்னஞ்சிறு மேஜை. அதன் மீது ஒரு பிளாஸ்க். ஹார்லிக்ஸ் பாட்டில். இரண்டு சாத்துக்கொடிப் பழங்கள்.

சீதாவிடமிருந்து அவள் கணவன் அவசரமாகக் குழந்தையை மெல்லப் பெற்று காந்திமதியிடம் கொடுத்தான். கொடுக்கும்போது அவன் கரங்கள் காந்திமதியின் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டன.

இது என்ன சங்கடம்! ஏன் இந்த மனிதன் என்னிடம் இப்படி நடந்து கொள்கிறான்? சீதாவின் எதிரிலேயே இவ்வாறு செய்கிறானே. ஆரம்பத்திலேயே அவனது நடையும் செய்கையும், சேஷ்டையும் பாவனையும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவள் உள்ளத்தில் சந்தேகத்தைத் தோற்றுவித்தன.

தன் கரங்களை மெல்ல விடுவித்துக் கொள்ள முனைந்தாள் காந்திமதி. சீதா பார்த்துவிடப் போகிறாளே என்ற அச்சம். விவஸ்தை இல்லாது இப்படித் தீண்டுகிறானே என்ற வருத்தம். மெல்ல கரத்தை விடுவித்துக் கொண்ட காந்திமதியினால் சீதாவின் அருகே சென்றும் மனம் விட்டு ஏதும் பேசமுடியவில்லை.

"குழந்தை யாரைக் கொண்டிருக்கிறது சொல்லேன் காந்தி!" என்று சீதா கேட்டாள்.

அதற்குப் பதில் சொல்லும் நிலையில் காந்திமதி இல்லை. குழந்தை அப்பாவைத் தான் கொண்டிருந்தது. உருவத்தில் அப்பாவைக் கொண்டிருக்கட்டும் குணத்திற்கு வேண்டாம் என்று காந்தி மனத்தில் எண்ணிக் கொண்டாள். உள்ளத்து வேதனையை மறைத்துக் கொண்டு மேலுக்காக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள். அறையின் வெளியே சீதாவின் கணவன் கைப்பிடிச் சுவர்மீது சாய்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்.

காந்திமதி விடைபெறும் போது சீதா சொன்னாள்: "காந்திமதி! தினந்தோறும் வந்துவிட்டுப் போயேன். எனக்குப் பொழுதே போக மாட்டேன் என்கிறது."

காந்திமதி சிரித்தாள். "பொழுது போதவில்லை என்று சொல்லப்போகிறாய் பார்! குழந்தையைக் கொஞ்சும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

போது என் நினைவு வராது” என்றாள்.

சீதா பெருமூச்சு விட்டாள். “ஏன் சீதா என்ன நினைத்துக் கொண்டாய்?” என்று காந்திமதி கேட்டாள்.

“ஒன்றும் இல்லை உன் கரத்திலும் இப்படி ஒரு பாப்பா எப்போ தவழப் போகிறதோ என்று எண்ணினேன். பிறகு தான் ஏண்டாப்பா அப்படி நினைத்தோம் என்றும் தோன்றிவிட்டது!” என்றாள்.

காந்திமதியின் இதயத்தைப் பிடித்து யாரோ திருகுவது போல் தோன்றியது. சீதா ஏன் இப்படிக் கேட்கிறாள்? தெரிந்து தான் கேட்கிறாளா? என்னை வேதனைக்குள்ளாக்க வேண்டும் என்று கேட்கிறாளா? எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அவள் கரத்தில் இப்படி ஒரு குழந்தை தவழுமா? இந்த ஜன்மத்தில் அந்தப் பாக்கியம் உண்டா? அதற்குமேல் அவளால் ஏதும் நினைக்க முடியவில்லை.

மறுபடியும் அவளை வீட்டிற்குக் கொண்டு விட சீதாவின் கணவன் முன்வந்தான். அவனுடைய தீய குணத்துக்கு முடிவு கட்டி தக்கபடி உபதேசிக்க வேண்டும் என்பதற்காக டாக்ஸியில் செல்லக் காந்தியும் சம்மதித்தாள். டாக்ஸி நேரே வீடு நோக்கிச் செல்லவில்லை. கடற்கரையை நோக்கிச் சென்றது. காந்திமதி ஏதும் கேட்கவில்லை. அவளுடைய மௌனத்தைத் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு விட்டான் சீதாவின் கணவன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மணல் மேடருகே இருந்த பெரும் படகின் நிழலில் இருவரும் அமர்ந்தனர். காந்திமதியின் உள்ளம் எரிமலையாய்த் தகித்துக் கொண்டிருந்தது. அவன் உள்ளத்தில் புரிய முடியாத ஆனந்தம். தன் சமிக்ஞைகளுக்கு அவள் உடன்பட்டு விட்டாள் என்ற பரம திருப்தி. அமுதச் சொற்களை அள்ளி வீச அவன் துடித்துக் கொண்டிருந்தான். சொல்லம்புகளில் சீற்றம் எனும் நஞ்சைத் தடவி அவன்மேல் எய்யத் தருணம் பார்த்தாள் அவள்.

அவள் நினைத்தது போல் தான் அவன் நடந்து கொண்டான். தனக்குச் சதா அவள் நினைவு தான் என்று பிதற்றினான். அவளுடைய செழுமையான தோற்றம் முதன் முதல் சந்தித்தபோதே தன்னைக் கவர்ந்துவிட்டது என்று கூறினான். அவளுடைய இளமை இப்படி வீணாவது கண்டு வருந்துவதாகக் குழறினான்.

அவனுடைய ஒவ்வொரு சொல்லும் அவள் காதில் நாராசம் போல் வீழ்ந்து கொண்டிருந்தது. பளீரென்று அவன் கன்னத்தில் ஒன்று கொடுத்துவிட்டு ஓடோடிப் போய்விடலாமா என்ற அளவுக்கு ஆத்திரம் பொங்கியது. ஆனால் அந்த அளவுக்கு அவன் கடுஞ்செயலில் இறங்கவில்லை. பதில் பேசாமல் அவன் கூப்பிட்டும் திரும்பிப் பாராமல் மணலில் வேகமாக நடந்தாள். 'காந்தி, காந்தி' என்று அவன் அழைப்பது கொடூரமாக அவள் காதில் வீழ்ந்தது. திரும்பிக் கூட பாராமல் அவள் சாலையை அடைந்து டாக்ஸி ஒன்றை அழைத்து அதில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஏறி உட்கார்ந்து கொண்டாள். சீதாவின் கணவன் ஓடிவந்து கொண்டிருப்பது தெரிந்தது. 'சீக்கிரம் போ' என்று டாக்ஸி டிரைவரிடம் பரபரப்புடன் கூறினாள்.

17

# மருந்தும் மனமும்

இரண்டு நாள்களாகக் காவேரி அம்மாள் எழுந்திருக்கவே இல்லை. கோடீஸ்வரன் ரகுவைச் சந்தித்துவிட்டு வந்து கூறிய செய்திகள் அவளைத் திடுக்கிட வைத்தன. அந்த அதிர்ச்சி அவளை எழுந்திருக்க முடியாமல் செய்தது. ஒரு நாள் கூட குளித்துப் பூஜை செய்யத் தவறாதவள் அன்று படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை.

கோடீஸ்வரன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். 'இந்த சிறிய விஷயங்களுக்காக மனசை அலட்டிக் கொள்ளாதே இதனால் நமக்கு என்ன ஆகிவிட்டது? நாம் கவலைப்படுவது தெரிந்தால், இன்னும் நிலைமை மோசமாகும். நாம் பயந்துவிட்டோம் என்று எண்ணி இன்னும் நம்மை மிரட்டப் பார்ப்பார்கள். என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார். காவேரியம்மாள் எந்த வார்த்தையையும் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. ஜுர வேகத்தில் அரற்றுபவர்போல் அவள் ஏதேதோ பேசிக் கொண்டே இருந்தாள். உடனே வருமாறு கந்தநாதனுக்குத் தந்தி அடிக்கச் சொன்னாள். அப்போது கோடீஸ்வரனுக்குச் சிரிப்பே வந்துவிட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மனவேதனையை ஒருவாறு அடக்கிக் கொண்டு அவர் சொன்னார்: “உன் பிள்ளை போயிருக்கும் ஊர் என்ன திருநெல்வேலி என்று நினைத்தாயா, நாளையே வந்துவிட? ஜப்பான் தேசம், இங்கிருந்து பல ஆயிரம் மைல் தொலைவில் இருக்கிறது. அங்கே அவன் எந்த நகரத்தில் தங்கியிருக்கிறானோ? அப்படியே அந்த இடத்தின் பெயர் தெரிந்தாலும் அவன் உடனே வந்துவிட முடியுமா? ஹு_ம்,நீ என்ன சின்ன குழந்தையைப் போலப் படுத்துகிறாய் காவேரி! இப்பொழுது என்ன நேர்ந்துவிட்டது?” என்று குழைந்தார்.

அவர் இப்படிப் பேசி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ‘தன்னைவிட அவருக்குத் தான் மனவேதனை அதிகமாக இருக்கும். வெளியே சென்று நான்கு பேருடன் பேசிப் பழகும் அவருக்குத் தலைகுனிவு ஏற்படும்’ என்று காவேரியம்மாள் எண்ணினாள். ஆனால் அவர் ஏதும் தன் மனவேதனையை வெளிக்குப் புலப்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர் வழக்கம்போல் சுறுசுறுப்பாக இருந்தார். காரை எடுத்துக் கொண்டு வெளியே போய்வந்தார். டெலிபோனில் கம்பீரமாகப் பேசினார். அவரைப் பார்க்க வருபவர்களுடன் சுமுகமாகப் பேசினார். எல்லாருக்கும் அவர் குடும்பத்துக்கு நேர்ந்துள்ள விவகாரம் தெரியும். ஒருவராவது அவரிடம் அதைப் பற்றிப் பேசுவதற்குத் துணியவில்லை. அவருடைய முகத்தோற்றம் அவ்விதம். கடுமையான இதயம் படைத்தவர். சட்டெனத் தூக்கி எறிந்துவிடும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சுபாவமுள்ளவர் என்று அவரைப் பார்ப்பவர்கள் நினைக்கும் முகத்தோற்றமுள்ளவர். அதனால் ஒருவருக்கொருவர் அவரது மருமகள் தொடர்ந்திருக்கும் வழக்கைப் பற்றிப் பேசிக் கொண்டனரே தவிர, அவரை நேரிடையே அதுபற்றிக் கேட்கத் துணியவில்லை.

டோக்யோ நகரிலுள்ள ஒரு பெரிய ஹோட்டல் அறையில் தங்கியிருந்த கந்தநாதன் தனக்கு வந்த கோர்ட் நோட்டீசையும், தந்தையின் கடிதத்தையும் தாமோதரனிடம் காட்டி ஆலோசனை கேட்டுக் கொண்டிருந்தான். கடிதத்தைப் படித்து முடித்து தாமோதரன் பதில் ஏதும் சொல்லவில்லை. பெருமூச்சு ஒன்று தான் அவனால் விட இயன்றது.

"நீ என்ன நினைக்கிறாய் தாமு? வழக்கு விசாரணைக்கு ஆஜராகலாமா அல்லது ஒத்திவைக்குமாறு தவணை கேட்கலாமா?" என்று கேட்டான் கந்தநாதன்.

தாமோதரன் சற்று யோசித்தான். பிறகு,"கூடாது. வழக்கில் நாம் ஆஜராகப் போதுமான அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். மேலும் ஜப்பானுக்கு நாம் வந்திருப்பதே அவர்கள் வழக்கில் வெற்றியடையப் பெரும் காரணமாக அமைய இருக்கிறது. அதனால் விரைவில் நாம் திரும்பி விட வேண்டியது தான்" என்றான்.

"டாக்டர் கடைசியாக என்ன சொன்னார்?" என்று கந்தநாதன் தாமோதரனை நோக்கிக் கேட்டான். அவன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

குரலில் பரிதாபம் தொக்கி நின்றது. டாக்டர் ஹிமாம்ஷீ ஜப்பானில் பிரபல வைத்தியர். மனோவியாதி, நரம்புத் தளர்ச்சி, சோர்வு, களைப்பு, குழந்தை பெறுவதற்கான சிகிச்சை போன்ற வெளியே பகிரங்கமாகக் கூறமுடியா நோய்களைத் தீர்ப்பதில் மகா நிபுணர். அவரை ஒருமுறை சந்தித்து ஆலோசனை கேட்க மட்டும் நம் நாட்டு ரூபா மதிப்பில் ஆயிரம் ரூபா. தாமோதரன் அந்த டாக்டரிடம் ஏற்பாடு செய்து வைத்திருந்தபடி குறித்த நாள்களில் சந்தித்து கந்தநாதனின் உடலைப் பரிசோதிப்பதற்கான ஏற்பாடு செய்தான். டாக்டரும் சில மருந்து விவரங்களை எழுதிக் கொடுத்து, அதைச் சாப்பிட்டு விட்டு ஒரு வாரம் கழித்து அதன் விளைவுகளைத் தெரிவிக்குமாறு கூறியிருந்தார். சாம்பல் நிறத்தில் மண்ணைத் திண்பது போன்ற ருசியுடன் இருந்த அந்த மருந்து எந்தவித மாறுதலையும் அளிக்கவில்லை என்பதை உணர்ந்தான் கந்தநாதன். மறுபடியும் டாக்டரிடம் சென்று தெரிவித்தார்கள். டாக்டர் ஹிமாம்ஷீ கந்தநாதனை வியப்புடன் பார்த்தார்.

“இந்த மருந்தின் விலை என்ன தெரியுமா? ஆயிரம் ரூபா. ஒருமுறையில் குணம் தெரியவில்லை என்றால் மறுபடியும் சாப்பிட வேண்டும் என்றால் ஆயிரம் ரூபா செலவு செய்யவேண்டுமே! என்றார் டாக்டர்.

தாமோதரன் செலவுக்குத் தயங்கவில்லை. கந்தநாதனுக்கு விருப்பமில்லை தான். ஆனால் தாமோதரனின் பேச்சைத் தட்ட அவனால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முடியவில்லை. சுய கௌரவமும், குடும்ப கௌரவமும் என்ன ஆவது என்ற கவலை அவனுக்கு. மறுபடியும் அதே மருந்து பலனில்லை. தினசரி இன்ஜக்ஷன். தங்கமான உடம்பைப் பாழ்படுத்திக் கொள்வதாகக் கந்தநாதனுக்கு தோன்றியது. தாமோதரனின் அன்புக் கட்டளையை அவனால் தட்ட முடியவில்லை. கடைசியாக டாக்டர் கூறி விட்டார். ஆபரேஷன் ஒன்று செய்ய வேண்டும் என்று. என்ன வேண்டுமானாலும் நேர்ந்து விட்டுப் போகட்டும், ஒரு நாளும் ஆப்பரேஷனுக்குச் சம்மதிக்கக் கூடாது என்ற முடிவு செய்தான். ஆனால் அவன் எண்ணத்தின்படியே கோர்ட் சம்மன் வந்தவுடன் தான் தாமோதரன் உடனே புறப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். தாமோதரனுக்குத் தான் மிக வருத்தம். எடுத்த முயற்சி வெற்றிபெறவில்லையே என்ற கவலை வேறு. வழக்கிற்காகக் கோர்ட்டில் ஆஜராவதை கந்தநாதன் விரும்பவில்லை. எது நேரக்கூடாது என்ற அவன் விரும்பினானோ அது நேரும் நிலை ஏற்பட்டு விட்டது. கோர்ட்டில் கூண்டில் நிற்கவைத்து அவனை விசாரிப்பார்கள். எதிர்க்கட்சி வக்கீல் எப்படியெல்லாமோ கேள்விகள் கேட்பார். தாமோதரனிடம் இதைப்பற்றிக் கூறி, கோர்ட்டில் தலைகுனிந்து நிற்பதை விட விவாகரத்திற்குச் சம்மதித்து என் வேண்டுமோ கொடுத்துவிடலாமே என்று தன் யோசனையைத் தெரிவித்தான். ஏதோ தனக்கே ஏற்பட்ட துன்பம் போல் துடித்தான் தாமோதரன். ஏதோ தனக்கே ஏற்பட்ட துன்பம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

போல் துடித்தான் தாமோதரன். தன் யோசனைகள் ஏதும் கந்தநாதனுக்கு வெற்றியை அளிக்கவில்லையே என வருந்தினான். ஊருக்குத் திரும்பிப் போய் யோசித்துக் கொள்வோம் என்றான்.

திரும்பி வருவதற்கு விமானம் ஏறும் தேதியைத் தெரிவித்துத் தந்தைக்குக் கடிதம் எழுதிய கந்தநாதன் அங்கு சென்ற பிறகு என்ன செய்வது என்பதைப் பற்றி யோசிக்கலானான்.

# 18

# பாடும் மணிகள்

காந்திமதியின் சகோதரன் கேஸ் விஷயமாக சுறுசுறுப்பாக அலைந்து கொண்டிருந்தான். காந்திமதி அதில் கவனம் செலுத்தாமல் சங்கீத வித்யாலயத்திற்கு வரும் மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பிப்பதில் ஈடுபட்டிருந்தாள். காலை ஆறு மணியிலிருந்து ஒன்பது மணிவரையில் பொழுது பொழுது எப்படிப் போகிறது என்று தெரியாமலேயே கழிந்துவிடும். சிறுமிகளின் இனிய குரலும், அவர்கள் சுருதியுடன் சேர்ந்து பாடும்விதமும் அவள் உடலைச் சிலிர்க்கச் செய்யும். சங்கீத வகுப்பு முடிந்த பிறகு பொழுதைக் கழிப்பது அவளுக்குச் சற்றுச் சிரமமாயிருக்கும். தன் சகோதரனுக்குக் காலையிலேயே சமையல் செய்து சில நாள் வைத்திருப்பாள். சில நாள்கள் ஓட்டலிருந்து எடுப்புச் சாப்பாடு வந்திருக்கும்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மெல்லக் குளித்து அமைதியாய்ச் சாப்பிட்டு விட்டுச் சிறிது நேரம் வாயிலில் வந்து நிற்பாள். வீதியிலே செல்லும் வண்டிகளையும், வேகமாக ஆபீஸிற்கு விரைபவர்களையும் 'படபட'வென்று ஒலியை எழுப்பிக் கொண்டு செல்லும் ஆட்டோ ரிக்ஷாவையும் டாக்ஸியையும் சிறிது நேரம் பார்ப்பதில் அவள் பொழுதைக் கழிப்பாள்.

வீட்டின் அருகே உள்ள வெற்றிலை பாக்குக் கடையில் எப்போதும், கூட்டம் இருந்து கொண்டிருக்கும். பத்து மணிக்குமேல் அந்தக் கடையில் என்னதான் வேலை இருக்குமோ? ஸ்லாக்கும், புஷ்கோட்டும் அணிந்த இளைஞர்கள் சிகரெட்டைப் புகைத்தபடியே அன்றைய அரசியலைப் பற்றிப் பேசிக் கொண்டே எதிர் வீட்டை நோட்டம் விடுவார்கள். காந்திமதி அந்த நேரத்தில் வெளியே வந்து நிற்பாள் என்று அவர்களுக்குத் தெரியும் போலும்! காந்திமதி தங்களைத்தான் பார்ப்பதாக அவர்களுக்கு ஒரு பிரமை. அவள் விழிக் கோணத்தையும், வாளிப்பான தோற்றத்தையும் பற்றி அவர்கள் மெல்லப் பேசிக் கொள்ளத் தவறுவதில்லை. கடைக்காரன் வேறு அவர்களிடம் கற்பனைக் கதைகளை அளப்பான். கணவனை விவாகரத்து செய்து விட்டதாகக் கதைகள் கூறுவான். பகல் இரண்டு மணி வேளைக்குத் தெருச்சந்தடி அடங்கியிருக்கும் நேரத்தில் அவளுடைய 'காதலன்'தேடி வருவதாக அவன் கண்களைச் சிமிட்டிக் கொண்டு கூறுவான். இதைக் கேட்பதில் இளம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வெட்டுகளுக்கு ஆனந்தம்.

கணவனால் ஒதுக்கப்பட்டவர்கள் அல்லது தள்ளப்பட்டவர்கள் எப்படி எப்படியெல்லாம் சீரழிந்து தடுமாறிப் போய் விட்டனர் எனும் கதையைச் சற்று வயது முதிர்ந்த ஆனால் ஆசை முதிராத ஒருவர் கூறுவார். சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருப்பார்கள் வேலையற்றவர்கள். காந்திமதிக்கு இவை ஏதும் தெரியாது. தினசரி அலுவலில் காலை, மாலை ஒரு மணி நேரம் வெளிவாசலில் நிற்பதை ஒரு வழக்கமாகக் கொண்டாள்.

மடிப்புக் கலையாத டெரிலினும், பளபளவென வாரி விடப்பட்ட தலையுமாக சைக்கிளில் நூறு முறை அந்தப் பக்கமாகச் சுற்றி சுற்றி வருவார்கள் சில வாலிபர்கள். சில வீர வாலிபர்கள் வேகமாக சைக்கிளை ஓட்டிவந்து காந்திமதியின் வீட்டு வாயிலில் சரேலென பிரேக் போட்டு நிறுத்தி தங்கள் சாமர்த்தியத்தைக் காட்ட முயல்வார்கள்.

ஒரு நாள் மோகன் மோட்டார் சைக்கிளில் அந்தப் பக்கம் வந்தவன் சிகரெட் வாங்குவதற்காக அந்த வெற்றிலை பாக்குக் கடையருகே நின்றான். கறுப்புக் கூலிங் கிளாஸ் வழியாக அவனுக்குச் சட்டெனப் பார்வையில் பட்டது காந்திமதி தன் வீட்டு வாயிற் கதவுக்கருகில் நின்று கொண்டிருப்பது. அவளை எப்போதோ எங்கோ பார்த்த நினைவு அவனுக்கு ஏற்பட்டது. கடைக்காரனிடம் சிகரெட்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒன்றை வாங்கிப் பற்றவைத்தவாறு சற்று நேரம் நின்றான். அதற்குள் வீர வாலிபர்கள் மகாநாடு தொடங்கி விட்டது. ஒருவன் காந்திமதி அணிந்திருக்கும் அன்றைய ஆடையைப் பற்றி பேசுவான். 'இன்று செவ்வாய்க் கிழமை' என்றான் ஒருவன். காந்திமதி, செவ்வாய்க்கிழமையன்று நீல வாயிற் புடவையையும், கிளிப்பச்சை நிற ஜார்கெட்டும் சோளியும் அணிவது வழக்கம். அந்த ஆடை அலங்காரத்தை வைத்துக் கொண்டு அந்த ஆராய்ச்சியாளன் கிழமையைக் கணித்து விட்டான்.

மோகன் ஒரு பிளேயர்ஸ் பாக்கெட் வாங்கினான் ஒரு ஸ்பென்சர் கலர் ஐஸ் போட்டுச் சாப்பிட்டான். ஒவ்வொரு வாயாகப் பருகிக் கொண்டே கடைக்காரனிடம் பேச்சுக் கொடுத்து காந்திமதியைப் பற்றி அறிந்துகொண்டான். இப்போது அவனுக்கு நினைவு வந்து விட்டது. ஓகோ! கந்தநாதனின் மனைவியா - விவாகரத்து வழக்குத் தொடர்ந்திருப்பவளா? மோகனும் 'ஐஸி' என்று கூறியது ஏதோ பெரும் ரகசியம் தெரிந்து விட்டதுபோல் ஒலித்தது ஆமாம் அவனுக்குப் பெரும் ரகசியம் தெரிந்துவிட்டது தான. பிறர் ரகசியங்களையும், நடவடிக்கைகளையும் அறிவது தான் அவனுடைய வேலை. அதை அச்சிட்டுப் பத்திரிகையாக வெளியிட்டு சமூக சேவை செய்து கொண்டிருந்தான் 'பாடும் மணிகள்' (ஸிங்கிங் பெல்ஸ்) என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர். வெளியிடுபவர் எல்லாம் அவனே தான். அந்தப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பத்திரிகையை ஆரம்பித்த பிறகு அவனுக்குத் தாராளமாக வருமானம் வந்து கொண்டிருந்தது. அதற்கு முன்பு ஒரு பெயர் தெரியாத இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் ஏஜன்டாக இருந்தான். அந்தத் தொழில் 'கட்டுபடி' ஆகாது போன பிறகு மோட்டார் ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனி ஆரம்பித்தான். அப்போது தான் பல பெரிய மனிதர் சிநேகம் எல்லாம் அவனுக்கு ஏற்பட்டது. சோஷியல் கிளப்பில் அங்கத்தினராகி நாள் முழுவதும் பெரிய இடத்துப் பிள்ளைகளோடு அளவளாவும் 'தொழிலை'ச் செய்து வந்தான்.

அப்போது தான் மோகனுக்குப் பத்திரிகையொன்று ஆரம்பிக்க வேண்டும் எனும் ஞானோதயம் ஏற்பட்டது. அதற்குக் குரு பம்பாயினின்று வந்த டபிள்யு. எக்ஸ். மேனன் என்பவரே. அவர் பம்பாயில் ஆங்கிலப்பத்திரிகை ஒன்று நடத்திவந்தார். அதில் சகலவிதமான செய்திகளும் இடம் பெற்றன. அதற்குச் சென்னை நிருபராக ஒருவரை நியமிக்க வேண்டும் என்று சென்னையில் வந்து தங்கித் தேடியலைந்த போது மோகன் அவர் கண்களில் பட்டான். அவனுடைய டீக்கான தோற்றமும், சவடால் பேச்சும் பிறரை எளிதில் மயக்கிவிடும் சாமர்த்தியமும் அவரைக் கவர்ந்தன. மோகனைத் தன் நிருபராக நியமித்தார்.

அந்தப் பத்திரிகையின் சென்னை நிருபராக அவன் பணியாற்றிய போது ஏற்பட்ட அனுபவம் அவனைச் சிறிது காலத்திற்குள் சொந்தப் பத்திரிகை ஆரம்பிக்கத் தூண்டியது. மேனன் கற்றுக் கொடுத்த பாடம் அவனை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வெற்றிகரமான 'ஜர்னலிஸ்டாக' மாற்றியது. 'பாடும் மணிகள்' என்ற பத்திரிகையைத் தொடங்கினான். மாதப் பதிப்பாகவே முதலில் ஆரம்பித்தான். பிறகு திடீரென்று அதை வாரப்பதிப்பாக மாற்றினான். எல்லாம் உயர்ந்த விஷயங்களே அந்த பத்திரிகையில் பிரசுரமாயின. அதாவது உயர்ந்த இடத்து விஷயங்கள் தாம்! 'இரும்புத் தகடு கம்பெனி அதிபர் இசக்கி முத்துவுக்கு நடிகை ரஞ்சனா வீட்டில் என்ன வேலை?' என்று ஒரு முக்கியமான கேள்வியை எழுப்பிவிட்டு அதற்குத் தானே விடை கூறும் விதத்தில் பல அந்தரங்க விஷயங்களை எழுதுவான். படிப்பவர்களுக்கு ருசிகரமான வம்பு தான், பாடும் மணிகள் ஓசை பலருக்குச் சுவாரஸ்யமான பொழுது போக்காக இருந்தன. பலருக்குக் கோபத்தை அளித்தன. சிலர் வழக்குத் தொடர்ந்து விடுவதாகப் பயமுறுத்தினர். சிலர் பற்றி அவன் எழுதியிருந்த விஷயம் நகர் எங்கும் பரபரப்பை அளித்தது. பாடும் மணிகளின் விற்பனை எட்டு, பத்து மடங்கு என உயர்ந்தது.

மோகன் வருகிறான் என்றாலே பலர் அஞ்சினர். அவன் பேனாவில் சிக்கிவிடப் போகிறோமே என நடுங்கினர் பலர். ஓரிரு வழக்குகள் கூட அவன் மீது சிலரால் போடப்பட்டன. எதற்கும் அஞ்சாத துணிந்த கட்டையாகி விட்டான். அவன் சுடும் பார்வை பலர்மீது பாய்ந்தது. அந்த வெற்றிலை பாக்குக் கடை அருகே நின்று, காந்திமதியைக் கண்டு, அவள் கதையை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அறிந்துவிட்டவுடன் 'பெரும் விருந்து' கிடைத்துவிட்டது என்று அவனைக் கேட்க வேண்டுமா? கந்தநாதனின் மனைவி என்றவுடன் அவன் உள்ளத்தில் களிப்பு அதிகமாகியது. முழுச் செய்திகளையும் அவன் சேகரிக்கத் தொடங்கினான். அதற்கு முன்னோடியாக பெரும் புள்ளி கோடீஸ்வரனின் மகன்மீது அவருடைய மருமகள் விவாகரத்து வழக்குத் தொடர்ந்திருக்கும் செய்தியைப் பிரசுரித்தான்.

வியாபார வட்டாரங்களிலும், செல்வர்கள் முகாம்களிலும் எங்கும் 'விவாகரத்து'வழக்குப் பற்றியே பேச்சாக இருந்தது. கோடீஸ்வரன் கவனத்துக்கும் இந்தச் செய்தி கொண்டு வரப்பட்டது. முதலில் அவருக்கு அடங்காத கோபம் ஏற்பட்டது. பாடும் மணிகள் காரியாலயத்தின் டெலிபோன் எண்ணை அறிந்து போனில் ஆசிரியரைக் கூப்பிட்டு, சொந்தக் குடும்ப விஷயங்களைப் பற்றி எப்படி பத்திரிகையில் பிரசுரிக்கலாம் என்று கடிந்து கொண்டார். மோகன் தான் டெலிபோனில் பேசினான். ஆனால் யார் பேசியது என்று கோடீஸ்வரன் பேசிய பிறகு அடுத்த வாரம் வந்த பத்திரிகையில் மேலும் அவர் குடும்ப விவகாரம் இன்னும் காரசாரமாக எழுதப்பட்டிருந்தது. காந்திமதியின் சகோதரனை எப்படியோ மோகன் சந்தித்து வக்கீல் நோட்டீசில் கண்டுள்ளவற்றை நகல் எடுத்து வெளியிட்டு விட்டான். அது மேலும் பரபரப்பை அளித்தது. கந்தநாதன் பெரிய எஸ்டேட் முதலாளியின் மகன். அவனது சொந்த விஷயத்தைப் பற்றி 'பாடும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மணிகளில்' எழுதப்பட்டிருந்தது சரியென்றும், தவறு என்றும் இரண்டுவிதக் கருத்துகள் மக்களிடையே எழுந்தன. 'மக்கள்' என்று நாம் கூறுவது அந்தப் பத்திரிகையைப் படிக்கும் பிறரைப் பற்றி அறியும் ஆவல் கொண்டவர்களைப் பற்றித்தான்.

சீதாவின் கணவனும் அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்தான். காந்திமதி மீது அவனுக்கு உள்ளூர ஆத்திரம். தன் வெறுப்பை வெளியே காட்டிக் கொள்ளாமல் எப்படியாவது தனது வஞ்சகத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்பினான். தன் மனைவியிடம் பத்திரிகையில் வந்தவற்றைப் படித்துக் காட்டினான். சீதாவுக்கு வருத்தம் மேலிட்டது காந்திமதியும் அந்தப் பத்திரிகையைப் படித்துவிட்டு வருத்தப்பட்டிருப்பாள் என்று எண்ணினாள். சீதாவின் அனுதாபத்தை மெல்ல மாற்ற விரும்பிய அவள் கணவன்,"நீ என்னவோ உன் தோழியிடம் வருத்தப்படுகிறாய். அவள் உன்னைப் பற்றி ஒரு நாளாவது விசாரித்தது கிடையாது" என்றான்.

சீதா ஒரு கணம் திகைத்துவிட்டு,"என்னைப் பற்றி அவள் விசாரிக்கவில்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று சட்டெனக் கேட்டாள். அவள் கணவன் அசட்டுச் சிரிப்பு சிரித்தவாறு,"உன்னிடம் சொல்ல மறந்துவிட்டேன். சீதா கோபிக்காதே. நான் இரண்டு மூன்று முறை உன் சிநேகிதியைச் சந்தித்தேன். ஒருநாள் பீச்சுக்கு என்னுடன் வந்தாள். பாவம். ஹ_ம்.." என்று ஏதோ கூறவந்ததைப் பாதியில் நிறுத்திவிட்டது போல் கூறினான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சீதாவுக்கு மேலும் அறியப் பரபரப்பு ஒருபுறம் என்னிடம் சொல்லாமல் தன் கணவன் காந்திமதியின் வீட்டிற்குச் சென்றானே என்ற கோபம் ஒருபுறம். காந்திமதிக்கு என்ன துணிவு - தன்னிடம் கூடச் சொல்லாமல் தன் கணவருடன் நெருங்கிப் பழகுகிறாளே என்ற ஆத்திரம் ஒருபுறம். வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளாமல் மேலும் தன் கணவரின் வாயிலிருந்தே செய்திகளை அறிய விரும்பி,“என்ன பெருமூச்சு விடுகிறீர்கள் பாவம் என்கிறீர்கள் ஹ_ம் என்கிறீர்கள். என்ன விஷயம் என்று என்னிடம் தான் சொல்லுங்களேன்” என்று கேட்டாள்.

அவள் கணவன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் வந்துவிட்டது. “சீதா - நீ என்னைப் பூரணமாக நம்புகிறாய் அல்லவா?” என்ற பூர்வ பீடிகையுடன் தொடங்கினான்.

சீதா உதட்டைக் கடித்துக் கொண்டு,“ஆம் அதற்கு என்ன?” என்றாள்.

“சீதா - நீ வெகுளி. உன்னைப் போன்று வெறுத்ததை எல்லாம் பால் என்று நம்புபவள் அல்லள் உன் சிநேகிதி காந்திமதி…”

“சொல்லுங்கள் - ஏன் சுற்றி வளைக்கிறீர்கள்?”

“நான் சுற்றி வளைத்தால் அகப்படப் போவது உன் இடைதானே?” என்று கூறி கண்சிமிட்டிவிட்டு,“சீதா! உன் சிநேகிதிக்கும் கிட்டத்தட்ட உன் வயது தான் இருக்குமில்லையா?” என்றான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஆம்... அதற்கு என்ன?”

“அவள் வயதையுடைய நீ கணவனுடன் சுகமாக வாழ்ந்து ஒரு குழந்தையையும் பெற்றுக் கொண்டு விட்டாய்...”

அவன் மேலே சொல்ல வருவதற்குள்,“அடி, பாவி! என் மீதே கண்ணைப் போட்டுவிட்டாளா? இவளுக்குக் குழந்தை பிறப்பதை நானா தடுத்தேன்? தெய்வ சங்கல்பத்திற்கு நானென்ன செய்ய முடியும்” என்று கூறினாள். அவளைச் சமாதானப்படுத்துவது போல் அவள் கணவன் பாவனை செய்து,“சீதா ஆத்திரப்படாதே. அவள் தலைவிதி அப்படியாகி விட்டது. தாய்மைப் பாசம் பெண்களை எப்படி விட்டு விடும்? கடற்கரைக் காற்றும் தனிமையும் தன் சிநேகிதியின் கணவன் என்ற உரிமையும் காந்திமதியை மனம் திறந்து பேச வைத்து விட்டன” என்றான்.

அவன் முடிக்கவில்லை. சீதா சீறினாள். “போதும், போதும், மேலே ஏதும் பேசாதீர்கள். அவள் கள்ளி என்பது எனக்கு என்றோ தெரியும். என்னைப் பார்க்க வந்த வரனை மயக்கி அவள் மணந்து கொண்ட போதே என் அம்மா என்னை எச்சரித்தாள்” என்று கூறி விம்மினாள்.

அவளை மெல்ல அணைத்துக் கொண்ட அவள் கணவன்,“சீதா! நல்லவேளையாக கந்தநாதனை நீ மணப்பதினின்று காந்திமதி காப்பாற்றினாள். அதற்காக நீ அவளைப் பாராட்ட வேண்டும். இல்லாவிடில் நீ கந்தநாதனை மணந்திருப்பாய். மணந்திருந்தால் நம்ம

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ராஜாக்குட்டி போன்ற குழந்தையை நீ பெற்றிருக்க முடியுமா?"

அவன் இவ்வாறு கூறியவுடன் அவனைப் பளீரென அறையாத குறையாய்ப்பார்த்து, அவன் கரத்தை விலக்கி விட்டு,"தெரியும், தெரியும் உங்களுக்கும் சபலம் இருக்கும் என்பது. என்னைவிட அவள் அழகு. அவள் உங்கள் பாதாரவிந்தங்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சியிருக்கிறாள். அதற்காக அவளுக்கு வாழ்வளிக்கச் சம்மதித்து விட்டீர்கள் இல்லையா?' என்று சீறினாள்.

அவள் கணவன் மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொண்டான், தன் நாடகத்தை தானே வியந்து!

## 19

# ஊருக்கு ஒரு கும்பிடு

காந்திமதி வீட்டுக் கதவை பகல் ஒரு மணிக்குச் சீதாவின் கணவன் தட்டினான். காந்திமதி தூங்கவில்லை. கூடத்துத் தூணில் சாய்ந்தவாறு ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள். சீதாவின் கணவன் கதவை இடித்தான்.

அவனைப் பார்த்தவுடனேயே காந்திமதி திடுக்கிட்டாள். இவன் இப்போது எதற்காக வருகிறான் என்றே அவளுக்குப் புரியவில்லை. என்றாலும் வருபவர் முகத்தைக் கோண வைக்காமலும், அதே சமயத்தில் தான் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவும் விரும்பி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவசரமாக எழுந்து ஆடையைச் சரிசெய்து கொண்டு வாசல் ரேழிக்கருகே வந்தாள். சீதாவின் கணவன் அசட்டுச் சிரிப்புடன்,“காந்தி! பயப்படாதே நான் ஒன்றும் செய்துவிட மாட்டேன் ஓர் அவசரமான செய்தி சொல்வதற்காக வந்தேன்” என்றான்.

‘அவசரச் செய்தியா? என்னவாக இருக்கும்’ என்று காந்திமதிக்குப் புரியவில்லை. என்றாலும் அவனை ஏறிட்டு என்ன அவசரச் செய்தி என்று கேட்பவள் போல் நோக்கினாள்.

“காந்தி! என்னை நீ மன்னித்துவிடு உன்னிடம் தவறாக நடந்து கொண்டு விட்டேன். ஏதோ ஒருவித மயக்கம் என் கண்ணை மறைத்து விட்டது. அதற்கு என் மனைவி சீதாவும் ஒரு காரணம். அவள் உன்னை எனக்கு அறிமுகப்படுத்தினாள். சகஜமாகப் பழக அனுமதித்தாள். அத்துடனில்லாமல் உன்னைப் பற்றி என்னிடம் ரகசியமாகப் பலபல சொன்னாள்…” என்று கூறி அவன் பேச்சை நிறுத்தினான்.

சீதா என்ன சொல்லியிருப்பாள் என்ற ஆவல் காந்திக்குப் பிறந்தது. என்ன சொல்லியிருப்பாள்? சீதா என் உயிர்த்தோழி. என் அந்தரங்கம் முழுமையும் அறிந்தவள். அவள் என்ன சொல்லி இருப்பாள்? ஒரு நொடியில் காந்தியைக் கேள்விக்குறி வாட்டியது. பரிதாபமாக அவனைப் பார்த்தவாறு அவனிடமிருந்து மேற்கொண்டு செய்தி அறிவதற்காக மெல்லப் புன்முறுவல் பூத்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ரேழியை விட்டுக் கூடத்துக்கு அழைத்தாள். நாற்காலியில் உட்காருமாறு சொன்னாள்.

“வேண்டியது சொல்லியிருக்கிறாள்” என்று அவன் பேசத் தொடங்கினான். “நீயும் அவளும் உயிர்த் தோழிகளாம். பள்ளிக்கூடம் படிக்கும் காலத்தில் உன்னுடைய லட்சியக் கனவுகளைச் சீதாவிடம் ஒன்று விடாமல் கூறுவாயாம். எப்பேர்ப்பட்ட கணவனை மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதினின்று எப்படி எல்லாம் கணவனுடன் வாழ்க்கை நடத்தவேண்டும் என்றெல்லாம் சொல்வாயாம். காந்தி! என்னைப் பற்றித் தவறாக நினைக்காமல் இருந்தால் நான் சொல்கிறேன். ‘முதல் இரவை’ப் பற்றிக்கூட நீ ஒருநாள் சீதாவிடம் பேசினாயாம். சீதாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றதாம். நீ வர்ணிப்பதைத் தொடர்ந்து கேட்க வேண்டும் போலவும் தோன்றியதாம். கேட்கவும் கூச்சமாக இருந்ததாம்.”

சீதாவின் கணவன் இவ்வாறு சொல்லிக்கொண்டு வரும்போது காந்திக்கு வெட்கம் மேலிட்டது. முகம் குப்பென்று சிவந்தது. ஓர் ஆண்பிள்ளை முதல் இரவைப் பற்றி வர்ணிக்கும்போது அதைக் கேட்டுக் கொண்டு எந்தப் பெண்ணால் ஓடி ஒளியாமல் இருக்க முடியும்? “காந்தி! இதை நானாகச் சொல்லவில்லை என்பது உனக்குத் தெரியும். இதை ஏன் சொல்கிறேன் என்பதும் உனக்குத் தெரியும். உன் சிநேகிதியிடம் இவ்வாறு எல்லாம் நீ நெருங்கிப் பழகி அந்தரங்கத்தை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெரிவித்தாய். உன் அபிலாஷையைத் தெரிவித்தாய். முதல் இரவு அன்று கணவனுடன் எவ்வாறு ஊடல் செய்யவேண்டும் என்பதை விளக்கினாய். சிணுங்கியும், பிணங்கியும் பிறகு எவ்வாறு சரஸத்தில் சல்லாபத்தில் வென்று அவனன்பு பெறவேண்டும் என்பதையும் விளக்கினாயாம். சீதா பயந்து விட்டாளாம். உனக்கு எப்படி இவ்வளவும் தெரியும் என்று கேட்டாளாம். நீ படித்த புத்தகங்களின் பெயரைக் கூறினாயாம் அவள் திகைப்பு மேலும் அதிகமாகி விட்டதாம்.

“அப்படிப்பட்ட கனவுகள், எண்ணங்கள், அபிலாஷைகள் கொண்ட உனக்கு வாழ்க்கையில் சம்பவித்ததென்ன என்பதையும் என் வாழ்க்கைத் துணைவி சொல்லத் தவறவில்லை. அப்போது தான் என் ஆண் மனம் வேகமாக வேலை செய்ய் ஆரம்பித்தது. உன்னைப் பற்றி நான் கற்பனை செய்து கொண்டேன். உன் பருவம் பாழாவதாக நான் வேதனைப்பட்டேன். நான் முயன்றால் நீ எளிதில் இணங்கி விடுவாய் என்று தவறாகக் கணக்கிட்டு விட்டேன். அந்தரங்கமாக நானும் சீதாவும் சல்லாபித்துக் கொண்டிருக்கும் போது நான் வேடிக்கையாக உன் வடிவழகை, பருவச் சிறப்பை, மயக்கும் போதையை, தோற்றத்தைச் சுட்டிக் காட்டிப் பேசுவேன். அவளும் மெல்ல நகைத்தவாறு பேசாமல் இருப்பாள். எங்கள் வீட்டிற்கு நீ வரும் சமயத்திலும் நீ சிரிக்கப் பேசுவதும் நெருங்கிப் பழகுவதும் உனக்கு என்னிடம் விருப்பம் இருப்பதுபோல் தோன்றும். அன்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

குழந்தையைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு நீ வந்தாய். குழந்தையை எடுத்து மெல்ல உன் கரத்தில் கொடுத்தேன். மெத்தென்ற துணிகளுக்கு அடியில் உன் கரம் குழந்தையைத் தாங்கும்போது அக்கரத்தை நான் கெட்டியாக, அழுத்தமாக பிடித்துக் கொண்டேன். கையை வருடினேன். உன் பாதத்தின் மீது என் பாதத்தை மெல்லச் சீண்டினேன். நீ சிணுங்கவில்லை. அவையெல்லாம் என் அரக்கத் தன்மையைத் தட்டி எழுப்பின. அதனால் தான் கடற்கரையில் உன்னிடம் அவ்வாறு நடந்து கொண்டேன். அதற்கெல்லாம் மன்னிப்புக் கேட்பதற்காகத்தான் நான் இங்கு இன்று வந்தேன். அத்துடன்! காந்தி, சீதாவுக்கு என் எண்ணம் தெரிந்து விட்டது. உனக்கு ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தேன். அதை அவள் படித்துப் பார்த்து விட்டாள். அந்தக் கடிதம் அவளுக்கு ஆத்திரத்தை அதிகப்படுத்திவிட்டது."

காந்திமதி சற்று முன்பு நாணமுற்றாள். பிறகு சீதாவின் கணவன் உண்மையைக் கூறி மன்னிப்புக் கேட்பதைக் கண்டு இரக்கப்பட்டாள். இப்போது வியந்தாள்.

"கடிதமா?" என்று அவள் திகைத்தவாறு கேட்டாள். "ஆமாம், காந்தி! கடிதம் தான். இதோ இந்தக் கடிதம் தான் படித்துப் பாரேன். இதைப் படித்தால் யாருக்குதான் கோபம் வராது சொல்லு!" என்று சொல்லிக் கொண்டே கடிதத்தை ஒரு கையில் நீட்டி அவளது கரத்தில் தனது கரம் படுமாறு கொடுத்தான். அப்போது எங்கிருந்தோ

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கிளிக் என்ற சப்தம் கேட்டது. காந்திமதி அதைக் கவனிக்கவில்லை. சீதாவின் கணவனுக்கு அந்தச் சப்தம் என்னவென்று தெரியும். ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அதைப் படிக்கப் படிக்க காந்திமதியின் உடல் நடுங்கியது. அதிலிருந்து அக்கடிதத்தில் கண்டுள்ள வாசகங்கள் அவ்வளவு கீழ்த்தரமாக இருந்தன என்பதைச் சொல்லவும் வேண்டுமா? கடிதத்தைப் படித்து முடித்தவுடன் காந்திமதிக்கு அழுகையே வந்துவிட்டது. அவள் கண்களில் கண்ணீர் ததும்பியது. துக்கம் நெஞ்சை அடைத்தது. வெளியே சொல்வதற்குத் துடித்து நிற்கும் வேதனையால் இதயம் குலுங்கியது.

“இந்தக் கடிதத்தைப் படித்தால் சீதாவுக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்? சீதா எரிமலையாகி விட்டாள். உன்னையே தவறாக நினைத்து விட்டாள். என் ஆசைக்கு நீ உட்பட்டிருப்பது போல் மிகவும் சாமர்த்தியமாக நான் எழுதியிருப்பதைக் கண்டவுடன் அவள் உன்னை ஜன்ம விரோதியாக நினைத்து விட்டாள்…” அவன் சொல்லி முடிக்கவில்லை. காந்திமதி இதுவரை அடக்கி வைத்திருந்த துக்கம் மடை திறந்த வெள்ளம் போல் பாய்ந்தது. அவள் விம்மி விம்மி அழுதாள். குலுங்கிக் குலுங்கி அழுதாள். சீதாவின் கணவன் பாய்ந்து சென்று,“என்னை மன்னித்து விடு காந்தி! நான் சீதாவிடம் எல்லாம் கூறி சமாதானம் செய்துவிட்டேன். நீ வருத்தப்படாதே காந்தி! அழாதே காந்தி! துயரப்படாதே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்தி! என்று பலவாறு கூறி அவளைத் தேற்றினான். அவளை அணைத்துக் கொண்டான். அவள் சேலைத் தலைப்பால் அவள் விழிகளைத் துடைத்தான். அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான். கிளிக் என்ற சப்தம் மீண்டும் கேட்டது.

காந்திமதி அழுகையை நிறுத்தினாள். இன்னும் கேவல் இருந்து கொண்டே இருந்தது. அதற்குமேல் அங்கே இருக்கக் கூடாது என்று நினைத்து சீதாவின் கணவன்,"சரி நான் புறப்படுகிறேன். உனக்கு வருத்தத்தைத் தருவதற்கு நான் வந்ததாக நினைக்கக்கூடாது. எல்லா வேதனைகளையும் தவறுகளையும் நீக்குவதற்காக நான் வந்தேன். பிழைகளுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். சீதாவும் உன் மேல் ஏதும் வருத்தம் வைக்கவில்லை. அவளும் நானும் மற்றொரு நாள் வருகிறோம்" என்று கூறிக் கொண்டே, காந்திமதி படித்துவிட்டுக் கீழே போட்டிருந்த கடிதத்தை அவசர அவசரமாக எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

அவனுக்கு முன்பாக அங்கே இருந்து வெளியேறிய மோகன் மோட்டார் சைக்கிள் அருகே அவனுக்காக நின்று கொண்டிருந்தான், அவனைப் பின் ஸிட்டில் ஏற்றிக் கொண்டு போட்டோ ஸ்டுடியோவை நோக்கிச் செல்வதற்காக.

'கிளிக்' சப்தத்தின் முக்யத்துவம் காந்திமதிக்கு அப்போது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெரியவில்லை. ஒரு வாரம் கழித்து 'பாடும் மணிகள்' பத்திரிகையை எடுத்துக் கொண்டு காந்திமதியின் சகோதரன் வீட்டிற்குள் ஓடோடி வந்தான். அவன் முகம் பேயறைந்தது போல் இருந்தது. அவன் கரங்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது போன்ற அதிர்ச்சி அவனிடம் குடி கொண்டிருந்தது. அவனுடைய அந்தத் தோற்றத்தைப் பார்த்து காந்திமதி அதிர்ச்சியடைந்து விட்டாள்.

"அண்ணா, அண்ணா! உடம்புக்கு என்ன?" என்று ஓடிப்போய் அவன் கரங்களைப் பிடித்து நெற்றியைத் தொட்டுக் கேட்டாள். அவள் கையை விலக்கி, அவள் மீது சீறிவிழுந்து,"எனக்கு இன்னும் சாவு ஒன்றுதான் வரவில்லை. என்னை எதற்குத்தான் பகவான் இப்படி இந்த உலகத்தில் வாழ வைத்துக் கொடுமைப் படுத்துகிறானோ!" என்று தலையில் அடித்துக் கொண்டான்.

அவனுடைய கோபத்தின் காரணம் புரியாத காந்திமதி மேலும் அவனை வற்புறுத்திக் கேட்கவும், ஒரு சீற்றத்துடன் பாடும் மணிகளின் அந்த வாரப் பத்திரிகையை அவள் எதிரே வீசினாள். காந்திமதி அந்தப் பத்திரிகையில் வந்திருக்கும் போட்டோக்களைப் பார்த்தபோது திடுக்கிட்டாள். காந்திமதியுடன் சீதாவின் கணவன் நாற்காலியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது போல், ஒரு படம் காந்திமதி குடிக்கத் தண்ணீர் தருவது போல், அப்போது அவள் கரத்தை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவன் பிடித்துக் கொண்டிருப்பது போல், அவள் முதுகை அவன் தடவிக் கொடுப்பதுபோல், முகத்தினருகே…

ஐயோ காந்திமதியினால் அப்படங்களை மேற்கொண்டு பார்க்கச் சகிக்கவில்லை. அந்தப் பத்திரிகையைச் சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டு,“அடப்பாவிகளே! இப்படிக்கூட ஏமாற்றிப் பிழைப்பதற்கு ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறீர்களா? வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணி வீட்டிற்குள்ளே உன்னை நுழைய விட்டேன். நீ போட்டோ பிடிப்பவனையும் கூடவே அழைத்து வந்து என்னிடம் முதலைக் கண்ணீர் விட்டாய். செய்த தவறுகளுக்கு மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டாய். நான் இதயம் வெடித்து அழும்போது என் கண்ணீரைத் துடைப்பது போல் பாசாங்கு செய்து போட்டோவை வேறு விதமாக எடுக்கச் சொல்லிவிட்டாயா? நீ நன்றாக இருப்பாயா? உன் குலம் விளங்குமா? உன் பெயரைச் சொல்வதற்கு வம்சம் இருக்குமா? ஐயோ! எனக்கு இப்படி மாசு கற்பிப்பதற்கு நான் உனக்கு என்ன தவறு செய்தேன்? மனசாலும் நான் உன்னை எண்ணியிருப்பேனா? வேறு யாரையும் நினைத்திருப்பேனா? வாழ்நாள் முழுவதையும் சந்நியாசினிபோல் கழித்து முடிக்க நினைத்திருந்த என் உள்ளத்தை ஏன் இப்படி தணல்கொண்டு பொசுக்கிவிட்டாய்? ஐயோ-“ என்று அலறினாள். அடுத்த கணம் மயங்கிக் கீழே சாய்ந்து விட்டாள்.

ரகு திக்பிரமை பிடித்தவன் போலானான். தன் சகோதரி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அந்தப் பத்திரிகை குறிப்பிட்டிருப்பது போல் நடத்தை கெட்டவளாக ஒரு நாளும் இருக்கமாட்டாள் என்று அவன் உள்ளுணர்வு கூறியது. ஆனால் கண்ணால் காண்பதுஉண்மை என்பது போல் போட்டோ கூறுகிறதே. அதனுடன் அந்தக் கட்டுரையில் எழுதியவற்றைப் படிப்பதற்கே முடியவில்லையே. 'கோடீஸ்வரன் வீட்டு மருமகப் பெண்ணின் லீலைகள்' என்றல்லவா தலைப்புக் கொடுத்திருக்கிறான் பாவி! பகல் வேளையில் காந்திமதி சிருங்கார உடை அணிந்து வீட்டு வாசலில் ஒயிலாக நின்று பருவ வாலிபர்கள் மனத்தைச் சுண்டி இழுக்கிறாளாம். அப்படி மனம் மயங்கிய ஒருவனின் கதையைத்தான் அந்த உலகத்தைக் காக்கவந்த 'ரசஷக ஆசிரியர்' போட்டோ எடுத்துத் தத்ரூபமாகக்கொடுத்திருக்கிறாராம், தமது பொதுஜன சேவைக்காகவே நடத்தப்படும் பாடும் மணிகளில்! அந்தப் பத்திரிகை ஆசிரியர் கூறுவதை நம்புவதா? அல்லது இதோ காந்திமதி உள்ளம் வெடிக்க அலறித் துடித்து மயங்கிக் கிடப்பதை நம்புவதா?

"ஐயோ! ஆண்டவனே! நான் வாழ்நாள் எல்லாம் கஷ்டத்துடனும் வேதனையுடனுமே கழிக்க வேண்டும் என்பது தான் உன் திருவுளமோ?' என்றவாறு செய்வதறியாது உட்கார்ந்து விட்டான் ரகு.

# 20

# வழக்கு முடியுமுன்னே...

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒரு வாரத்திற்கு ரகு, எங்கேயும் வெளியே செல்லவில்லை. காந்திமதி படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே இல்லை. சங்கீத வகுப்புகள் நிறுத்தப்பட்டு விட்டன. அப்படியே நாள்கள் ஓட்டுவது என்பது இயலுமா. சென்னையில் இனி இருப்பதால் வீண் அபவாதம் தான் என்று வெளியே எந்த ஊருக்காவது போய்விட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். எந்த ஊருக்குச் செல்வது என்பதைப் பற்றித் தீவிரமாக யோசித்தார்கள்.

ரகுவுக்குத் தன் சிறு பிராயத்தில் வாழ்ந்து வளர்ந்த திருச்சி நினைவுக்கு வந்தது. மலைக்கோட்டையும், உச்சிப் பிள்ளையார் கோயிலும், மெயின்கார்டு கேட்டும், சிந்தாமணிப் படித்துறையும், ரயில்வே ஜங்ஷனும் ஒரு கணத்தில் அவன் மனத்திரையில் தோன்றி மறைந்தன. தாயுமான ஸ்வாமி தான் இப்போது அந்தக் குடும்பத்துக்கு அருளவேண்டும். காந்திமதியும் அதையே எண்ணினாள். மலைக் கோட்டைக்கு ஏறும் படிக்கட்டுக்கு அருகே சிறு வயதில் சங்கீதம் சொல்லிக் கொடுக்கப்படும் எனும் போர்டு ஒன்றைப் பார்த்த நினைவு அவனுக்கு இன்னும் பசுமையாக இருக்கிறது. அந்த வீட்டின் மாடியில் பருமனாக ஓர் அம்மாள் தன் நாலுகட்டை சுருதியில் 'ராராவேணு கோபாலா, என்ற வர்ணத்தைச் சொல்லிக் கொடுப்பதை அவன் பல முறை நின்று கவனித்துப் போயிருக்கிறான். பாட்டுக்கு ஏற்ற மாதிரி தொடையில் பொட்டு பொட்டென்று அந்தச்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சங்கீத விதூஷிணி தாளம் போடுவதும்,'ஞொய்ங்' என்று ஹார்மோனிய சுருதி எழுவதும் தெளிவாகக் கேட்கும்.

இப்போது திருச்சிக்குப் போய் இதே போல் அங்கே ஒரு சங்கீதப் பள்ளியை ஆரம்பித்து விட்டால் காலம் எப்படியோ ஓடிவிடும் என்ற திடமான முடிவுக்கு வந்துவிட்டான் ரகு. ரகு தன் யோசனையைச் சொன்னவுடன் காந்திமதி மறுத்து ஏதும் சொல்லவில்லை. சென்னைவாசம் அவளுக்கும் புளித்துப் போய்விட்டது.

'பாடும் மணிகளில்' காந்திமதியைப் பற்றி வந்த செய்திகளைக் கோடீஸ்வரனும் பார்த்தார். அந்தப் பத்திரிகையைக் கண்டாலே அவருக்கு வெறுப்பு. இப்படி தன் குடும்பத்தைக் கேவலப்படுத்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் அதன் ஆசிரியருக்கு நாமென்ன தீங்கு செய்தோம் என்று வேதனையுற்றார். காவேரியம்மாளின் உடல் நிலையும் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வந்தது. காந்தி வந்தாளா - கந்தநாதன் வந்தானா என்று கேட்டுக் கொண்டே இருந்தாள். பாடும் மணிகளில் காந்திமதியைக் குறித்து அவதூறாக எழுதப்பட்ட கட்டுரையைப் படித்த பிறகு, காந்தி மிகவும் வேதனையுற்றிருப்பாள் என்ற எண்ணத்தில், தான் போய் சமாதானப்படுத்த வேண்டும் என்று கோடீஸ்வரன் புறப்பட்டார்.காந்திமதியின் சகோதரன் தன்னை அலட்சியம் செய்வான் என்றும் அவருக்குத் தெரியும். கோர்ட்டில் வழக்குத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தொடர்ந்திருப்பவன் வீட்டிற்குச் செல்வதும் அவ்வளவு சரியன்று என்பதும் அவருக்குத் தெரியும் இருந்தாலும் காந்தியைப் பார்த்து ஒரு வார்த்தை பேசிவிட்டு வரப் புறப்பட்டார். தன்னுடன் ஒரு தோல் பையில் ஒரு லட்ச ரூபாய்க்கு நூறு ரூபாய் நோட்டுகளாகக் கொண்டு சென்றார். அந்தப் பையைக் காந்தியிடம் கொடுத்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன். ஆனால் வீடு காலியாக இருந்தது. முதல் நாளே ரகுவும், காந்தியும் சென்னை வாழ்க்கைக்குக் கும்பிடு போட்டுவிட்டுத் திருச்சிக்குச் சென்று விட்ட செய்தி அவருக்குத் தெரியாது.

காந்திமதியைக் காண முடியாதது கோடீஸ்வரனுக்குப் பெரும் ஏமாற்றத்தையே அளித்தது. அவளைச் சந்திக்க வேண்டிய அவசியம் வேறொரு காரணத்திற்காகவும் இருந்தது. கந்தநாதன் விமானத் தபால் போட்டிருந்தான். மறுவாரம் புதன்கிழமை புறப்பட்டு வருவதாகவும், அதற்குள் எப்படியும் காந்திமதியை வீட்டிற்கு அழைத்து வரவேண்டும் என்றும் அவன் தந்தையை வேண்டிக் கொண்டிருந்தான். அவன் வரும் போது காந்தி மாளிகையில் இருந்துவிட்டால்...

கந்தநாதன் வேண்டிக்கொண்டது நடக்கவில்லை. கந்தநாதன் வரும்போது வரவேற்கத் தன்னைத் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்களே என்பதை நினைக்கும்போது வேதனையாகத் தான் இருந்தது. வேதனை அந்த அளவோடு நிற்கவில்லை. இதயத்தில் பெரும் இடியை வானின்று இறங்கிக்கொண்டு வந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேதனையாக அமைந்தது. விமான நிலையத்திற்குத் தான் மட்டும் சென்று தன் மகனை வரவேற்க வேண்டுமே என்ற கவலை முதல் நாள் வரை இருந்தது.

மறுநாள் - அந்த நாள் அவர் வாழ்க்கையிலே பெரும் இடிவிழுந்த நாளாக மாறியது வழக்கம்போல் சாலையில் போர்டிகோவில் சாய்வு நாற்காலியில் வந்தமர்ந்து காபியை ஆற்றிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த கோடீஸ்வரனுக்கு அதிர்ச்சி கொடுக்கும் செய்தி சைக்கிள் மணி ஓசை மூலம் வந்தது. சைக்கிள் பையன் காலைத் தினத்தாளைக் கொண்டு கொடுத்துச் சென்றான். அந்தப் பத்திரிகையின் முன் பக்கத்தில் அந்தச் செய்தி வெளிவந்திருந்தது.

கந்தநாதனும், தாமோதரனும் சென்னைக்கு வர விமான டிக்கட்டு வாங்கிவிட்டனர். கல்கத்தா வந்து, கல்கத்தாவில் இறங்கி வேறொரு விமானத்தில் இடம் பிடித்து சென்னை வருவதாகத் தந்தி கொடுத்திருந்தான் கந்தநாதன் தன் தந்தைக்கு, மறுநாள் விமானக் கூடத்தில் மகனை வரவேற்கத் தந்தை செல்வார். ஆம் கோடீஸ்வரன் அப்படித்தான் நினைத்திருந்தார். ஆனால் விதி வேறுவிதமாக இருக்கிறதே.

முன்பக்கத்தில் கொட்டை எழுத்துகளில் வெளிவந்த அந்தச் செய்தியைப் படித்தவர் அனைவரும் அதிர்ச்சியடைந்தனர்.

“டோக்யோவிலிருந்து லண்டன் சென்று கொண்டிருந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விமானம் கல்கத்தாவை அடையுமுன்பே வழி தவறி அஸ்ஸாம் காடுகளில் விழுந்து தீப்பற்றி எரிந்தது. இன்னும் அந்தச் செய்தி விவரித்துவிட்டு விமானத்தில் பிரயாணம் செய்தவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டது. சென்னையைச் சேர்ந்த கந்தநாதனும், தாமோதரனும் அந்த விமானத்தில் தான் பிரயாணம் செய்தனர். விமானத்தில் பயணம் செய்தவர்களுள் ஒருவர் கூட பிழைக்காதபோது கந்தநாதனும், தாமோதரனும் தப்புவதேது?

கோடீஸ்வரன் அந்தத் தள்ளாத வயதில் தனது காரியாலய மானேஜருடனும் தாமோதரனின் தந்தை, மைத்துனருடனும் கல்கத்தா விரைந்து அங்கிருந்து கௌஹாதிக்கு விமானம் மூலம் சென்று, தனிப்பட்ட ஜீப் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு விபத்து நடந்த இடத்துக்குப் போக முயன்றாலும் ஐம்பது மைல் தொலைவுக்குத் தான் அவர்களால் செல்ல முடிந்தது. விசாரணை அதிகாரிகளும், இறந்தவர்களின் சொந்தக்காரர்களுமாக அங்கே கூடியிருந்தனர். விமானத்தின் எரிந்து பாகங்களையும், சடலங்களையும் கொண்டுவரச் சென்ற மீட்சிக் கோஷ்டி ஒரு வார காலத்திற்குப் பிறகு திரும்பிவந்து சேர்ந்தது. பயணிகள் உடல் யாவும் எரிந்து உருக்குலைந்து போயிருந்தால் அங்கே நெருங்கக் கூட முடியவில்லை என்று தெரிவித்தனர். என்றாலும் சிதறுண்டு கிடந்த பிரயாணிகளின் பொருள்களில் எரிந்து போகாதவற்றை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மட்டும் சேகரித்துக் கொண்டு வந்தனர். அவற்றுள் தாமோதரனின் கைப்பை ஒன்றும் கந்தநாதனின் கடிகாரம் ஒன்றும் மட்டுமே கிடைத்தன.

தள்ளாத வயதில் கோடீஸ்வரனுக்கும், காவேரியம்மாளுக்கும் ஏற்பட்ட பெரும் அதிர்ச்சியைக் கேட்ட அனைவரும் வருந்தினர். பாடும் மணிகள் ஆசிரியர் மோகன் கூட அதிர்ச்சியடைந்தான். யாரை வைத்துக் கொண்டு கோடீஸ்வரனைப் பற்றிய அவதூறுக் கட்டுரைகள் எழுதி வந்தானோ, அந்த நபரின் கோர விபத்து மோகனுக்கு அதிர்ச்சியை அளிக்காமல் என்ன செய்யும்?

காவேரியம்மாளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைப் பற்றி விவரிக்க முடியுமா?

திருச்சிக்கு சென்று சங்கீத பாடசாலை ஆரம்பித்த சில தினங்களுக்குள்ளேயே காந்திமதிக்கு விபத்தின் செய்தி கிடைத்தது. அவள் சகோதரனுக்குத் திக்பிரமையே பிடித்துவிட்டது. சித்தம் கலங்கியே விட்டது. தன்னைச் சுற்றிலுமுள்ள எந்தப் பொருள்களையும் அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. காந்திமதி தான் திடமான இதயத்துடன் மேற்கொண்டு ஆகவேண்டியவை பற்றிச் சிந்திக்கலானாள். அவள் நிலை பரிதாபமானதாகிவிட்டது. கணவனிடமிருந்து விவாகரத்து கோரி வழக்குத் தொடர்ந்திருப்பவள் அவள். அவளே இஷ்டப்பட்டுச் செய்தாளோ, இல்லையோ. வழக்கு அவள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கையெழுத்திட்டுத் தானே தொடரப் பட்டிருந்தது! விவாகம் ரத்தாகி தனக்கும் தான் கைபிடித்த கணவருக்கும் எந்தவிதத் தொடர்பும் பந்தமுமில்லை என் விடுதலை வாங்க முடிந்த அவளுக்கு இப்போது இக்கட்டான நிலை. வழக்கு வாங்க முடிந்த அவளுக்கு இப்போது இக்கட்டான நிலை. வழக்கு முடியவில்லை. ஆனால் கணவன் விபத்தில் மாண்டதாக செய்தி வந்துள்ளது. யோசனை கூறச் சகோதரனும் சுய நிலையிலில்லை. அவள் என்ன செய்வாள்?

அவள் குழப்ப நிலையை ஒருவாறு தீர்க்கவந்து சேர்ந்தாள். பழைய குடித்தன வீட்டிலிருந்த பாட்டி. காந்திமதிக்கு ஆதரவாக இருந்தாள். அப்போதும் இப்போதும் மனத்துயர் தீர்க்க வந்து சேர்ந்தாள்.

21

# யோகீஸ்வரர் அருள்வாக்கு

பருவகாலங்கள் வந்து வந்து சென்றன. கடுமையான வெயில் காய்ந்தது. புயல் அடித்தது. பெரு மழை பெய்தது. காவிரியில் வெள்ளம் வந்தது. மேட்டூர் அணை நிறைந்து வழிந்தது. பயிர்கள் நாசமாயின. குடிசைகளும், தாழ்வான பகுதியிலிருந்த வீடுகளும் வெள்ளத்தில் அமிழ்ந்தன.

பருவ மழை தவறியது. சொட்டுத் தண்ணீரைக் கூட மழை கொடுக்கவில்லை. நீர்த் தேக்கங்களில் தண்ணீர்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

குறைந்தது. ஆறு குளம் குட்டை வறண்டது. மீண்டும் பயிர்கள் தீய்ந்து அறுவடை பாழாகியது. நாட்டில் பொதுத் தேர்தல் வந்தது. மந்திரிசபை அமைந்தன மாநிலங்களில். உலகத்தின் பல நாடுகள் விடுதலை அடைந்தன. சிலவற்றில் திடீர் திடீர் என்று இராணுவப் புரட்சி நடைபெற்றது. ஏழு ஆண்டுகளில் பல மாறுதல்கள்!

உலகத்திலே இவ்வாறெல்லாம் மாறுதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சாதாரணக் குடும்பங்களில் எத்தனை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டன. சீதாவும் அவள் கணவனும் பெரியாறு ஏரியில் படகில் உல்லாசப் பயணம் சென்ற படகு கவிழ்ந்து குடும்பத்துடன் மூழ்கிவிட்டார்கள். ஒரு சமயம் காந்திமதி இட்ட சாபமாக இருக்குமோ? எப்படியோ அந்தச் செய்தி காந்திமதியின் காதுகளில் விழவில்லை. ஏனெனில் காந்திமதிக்கு அதைவிடப் பெரும் துக்கம் காத்திருந்தது. சித்தப்பிரமையால் துன்பப்பட்டு உடலும், உள்ளமும் மெலிந்து கடைசியில் நர்ஸிங்ஹோம் ஒன்றில் அவள் சகோதரன் ரகு உயிர்விட்டான். கடைசி காலத்தில் ஆயிரக்கணக்கான ரூபாயைச் செலவு செய்து பிரபல டாக்டர்களைக் கொண்டு வைத்தியம் பார்த்தாள்.

அவ்வளவு பணம் அவள் சங்கீத பாடசாலையினின்று வரவில்லை. ரேடியோவில் அவ்வப்போது பாடியதால் வரவில்லை. ஒருநாள் கோடீஸ்வரன் எஸ்டேட் மானேஜர் அவளைத் தேடி வந்தார். லட்ச ரூபாய்க்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவள் பெயருக்கு ஒரு செக்கும் ஓர் உருக்கமான கடிதமும் அவர் காந்திமதியிடம் சேர்ப்பித்தார். அந்தப் பணத்தை அவள் மறுத்திருக்கலாம். ஆனால், விமான விபத்தில் இறந்த கந்தநாதனின் டைரியில் காணப்பட்ட ஒரு குறிப்பிலே வழக்கு எப்படி முடிவடைந்தாலும் காந்திமதியின் சொந்தச் செலவிற்காக லட்சரூபாய் கொடுக்க வேண்டும் என்று கண்டிருந்ததால், மகனின் அபிலாஷையை நிறைவேற்ற அவர் தன் துக்கத்தையும் மறந்து முனைந்தார். அந்தப் பணம் ரகுவின் சிகிச்சைக்காகவும் பயன்பட்டது. ஆனால் ரகு இருந்து தான் பார்க்க கொடுத்து வைக்கவில்லை.

காந்திமதி வசதியான பங்களாவிற்குக் குடி புகுந்துவிட்டாள். கோடீஸ்வரன் கொடுத்த லட்சரூபாய் பாங்கியில் சேர்ந்தவுடனேயே, அதிர்ஷ்ட லட்சுமி அவளை நோக்கிப் புன்னகை புரிய ஆரம்பித்து விட்டாள். பத்திரிகையில் அவளுடைய சங்கீதத்தைப் புகழ்ந்து எழுத ஆரம்பித்தனர். ரேடியோவில் முழுநேரக் கச்சேரிக்குச் சந்தர்ப்பம் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். சென்னையில் இசை விழாக்களில் பாடுவதற்கு அவளுக்கு வாய்ப்புக் கிடைத்தது. தமிழ் இசைச் சங்க கச்சேரியில் காந்திமதியின் கச்சேரி மிகவும் சிறப்பாக அமைந்துவிட்டது. ‘எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே இளைத்தேன்’ என்ற சங்கராபரண ராகத்தில் மேல் ஸ்தாயியில் அவள் நிரவல் செய்தபோது கரகோஷம் செய்யாதவர்களே இல்லை எனலாம்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

குரலில் தெய்வீக அருள் சேர்ந்துவிட்டதால் சபை மண்டபத்தில் சூழ்ந்த நாதம் கேட்போர் இதயத்தில் சிலிர்ப்பையும், இசையில் அமிழ்ந்து விட்டது போன்ற பிரமிப்பையும் அளித்தது.

காந்திமதிக்கு அந்தப் பாட்டியும் அவளுடைய சிறு பேத்தியும் தாம் துணை. வீட்டிலே சமையற்காரி கூப்பிட்ட குரலுக்கு வேலைக்காரர்கள். இவ்வளவுக்கு வருமானம் தடையில்லாமல் வந்து கொண்டிருந்தது. காந்திமதிக்கு வெளியுலகில் பேரும் புகழும் பரவ ஆரம்பித்தவுடன், சங்கீத பாடசாலையில் தத்தம் குழந்தைகளைச் சேர்ப்பதற்குப் போட்டி போட்டுக் கொண்டு பெற்றோர்கள் வந்தனர்.

காந்திமதியின் சங்கீத ரசனை அறிந்த கருணாகரன் என்பவர் தன் எட்டு வயதுப் பெண்ணுக்கு வீணையும், வாய்ப்பாட்டும் கற்றுக் கொடுக்கக் காந்திமதியை அழைக்க அவள் வீட்டிற்கு வந்தார். அவர் சென்னையிலும் திருச்சிலுமாக மாறி மாறி பதினைந்து நாள்கள் இருப்பார். ஆனால் வீடு மட்டும் திருச்சி தில்லை நகரில் இருந்தது. வசதியான வீடு. அவருடைய மனைவி குணவதி. வீடு தேடிச்சென்று ஒருவருக்கும் சங்கீதம் கற்பிக்கும் பொறுப்பை காந்திமதி இதுவரை ஏற்றதில்லை. ஆனால் கருணாகரனின் மனைவி பகவதியின் அருள் வடிவும், இனிய பேச்சும் அவளை வெகுவாகக் கவர்ந்தன. கருணாகரனின் கார் வாரத்தில் மூன்று நாள்கள் வந்து அழைத்துச் சென்று திரும்பவும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொண்டுவிடும். கார் வரும்போது அநேகமாக பகவதியும், தாயுமானவர் கோயிலில் சுவாமி தரிசனத்திற்காக உட்கார்ந்து கொள்வாள். சங்கீதம் கற்றுத்தரும் ஆசிரியை என்று அவள் காந்திமதியைக் கருதாமல் தங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே நினைக்கத் தொடங்கினாள்.

இந்தச் சமயத்தில் தான் கருணாகரன் தன் மனைவியுடன் ஒருநாள் காலை காந்திமதியின் வீட்டிற்கு வந்து,"ஒரு மணி நேரத்தில் சென்னைக்குப் புறப்படப் போகிறோம், தயாராயிருங்கள்" என்று கூறிவிட்டுச் சென்னை செல்லும் காரணத்தையும் சொல்லிச் சென்றார்.

சென்னைக்கு வடநாட்டிலிருந்து பெரிய யோகீஸ்வரர் ஒருவர் வந்திருந்தார். அருளானந்தா என்று பெயர். அவர் இந்துமத சரித்திரங்களையும் புராணங்களையும் குறித்து ஆங்கிலத்தில் வெகு காலமாகச் சொற்பொழிவாற்றி சபையோரைப் பிரமிக்கச் செய்து வந்தார். நல்ல உயரம். தோளிலே புரளும் சிகை. முகத்தை மறைக்கும் அடர்த்தியான மீசை. எதிரேயுள்ளவரின் உள்ளத்தை ஊடுருவக் கூடிய விழி. காவி வர்ணத்தில் பட்டு ஜிப்பா அதே நிறத்தில் பஞ்சகச்ச வேட்டி. சொற்பொழிவு கடல்மடை திறந்தது போல் தான் அவரிடமிருந்து பரவியது.

வேதாந்த விசாரணைகளும், தர்க்க சாத்திரங்களும் கீதைப் பேருரைகளும், உபநிடத சாரங்களுமாக அவர்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சொற்பொழிவில் வந்துதிர்ந்தன. அருவி போல் ஆங்கிலத்தில் இயற்றிய சொற்பொழிவு சென்னை நகர பிரமுகர்களைப் பேரானந்தத்திலும் வியப்பிலும் ஆழ்த்தின.

மைதானமொன்றில் போடப்பட்டிருந்த பெரும் பந்தலில் ஆண்களும், பெண்களுமாக எள் போட்டால் எள் விட இடமின்றி நாள்தோறும் கூடினர். மின்சார விளக்கு ஒளியில் நார்மணிகளும், நங்கையரும் பட்டுப் புடவையும், வைரமும் ஜ்வலிக்க நாற்காலியில் பகட்டாக அமர்ந்து சொற்பொழிவைச் செவிமடுத்தனர். நகரத்துப் பெரும் புள்ளிகள் அரசியல் பிரமுகர்கள் வழக்கறிஞர்கள், ஓய்வு பெற்ற டாக்டர்கள் கூட கண் இமைக்காது அருளானந்தா அருளும் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் புதைந்து கிடக்கும் பேருண்மைகளை அனுபவித்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

இளம் பெண்களுக்கும், வாலிபர்களுக்கும் அவர் கூறும் பெரும் தத்துவங்கள் விளங்கவில்லை என்றாலும் ஆங்கிலம் அவரிடம் துள்ளி விளையாடுவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

அருளானந்தாவைச் சென்னைக்கு வரவழைத்தவர் கருணாகரனின் நெருங்கிய நண்பரான ஜெயராம் என்ற பிரபல வியாபாரி. அவருக்கு ஆழ்வார்பேட்டையில் பெரிய பங்களா மூன்று கார் நான்கு டெலிபோன். ஐந்து காரியதரிசி. இரண்டு மனைவிகள்! ஆனால் புத்திர

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பாக்யம் மட்டும் கிடையாது. அருளானந்தா சாஸ்திரப் புலமை மிக்கவர் என்பதுடன் மணி மந்திரங்களும், நோய்க்கு ஔடதங்களும் மனநோய்க்கு மருந்தளித்தலும் அறிந்தவராயிருந்தார். சோதிட சாத்திரம் அவரிடம் கௌரவம் பெற்றிருந்த அழகே தனி. ஜெயராமின் வீட்டில் அவர் வந்த தங்கிய அன்றே, அவரது மூத்த மனைவியை உடனே மைசூரில் உள்ள சாமுண்டேஸ்வரியைப் போய் தரிசித்து மூன்று நாள்கள் உபவாசம் இருக்குமாறும் நான்காம் நாளிலிருந்து அவரது உடலில் இதுவரை அறியாத மாறுதலைக் காணலாம் என்றும் திடீரென்று கூறினார்.

ஜெயராமனும் யோகீஸ்வரர் கூறியதை அரைகுறையாகத் தான் நம்பினார். என்றாலும், தனது பெரிய காரில் மனைவி புட்டம்மாளை அனுப்பி வைத்தார். நான்காம் நாள் கழித்து ஐந்தாம் நாள் ஜெயராமனை புட்டம்மா டெலிபோனில் கூப்பிட்டு இதுவரை தன் உடலில் ஒருவருக்கும் சொல்லி அறியாதவாறிருந்த உபாதை நீங்கிவிட்டதைப் பற்றியும் அந்த உபாதை என்ன என்பதைப் பற்றியும் ரகசியமாகக் கூறினாள்.

ஜெயராமன் யோகீஸ்வரரைத் தூக்கித் தலையில் வைத்துக்கொள்ளாத குறை தான். யோகீஸ்வரருக்கு அன்று முதல் அவர் அடிமையானார். அதனால் தேனாம்பேட்டை மைதானத்தில் பிரம்மாண்டமான பந்தலில் யோகீஸ்வரர் சொற்பொழிவாற்ற ஏற்பாடு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செய்தார். யோகீஸ்வரர் திறமையும், ஜெயராமன் செல்வாக்கும் செல்வமும் நகர முழுமையும் அருளானந்தரைப் பற்றிப் பேசுமாறு செய்துவிட்டன.

இளம் யோகீஸ்வரர் வாக்கு வன்மை மிக்கவர் - அவரைப் பற்றி இல்லாத பொல்லாததைக் கூறுபவர்களும் இருந்தார்கள். ஏனென்றால் பெண்கள் கூட்டம் தங்கள் குறைகளையும், தீராத நோய்களையும், மனக்குழப்பங்களையும் அவரிடம் கூறிப் பரிகாரம் காண காலை ஆறுமணிக்கே கூட ஆரம்பித்தது. மாலைகளும், தேங்காய் பழம் முதலியவையும், காணிக்கைகளுமாக அவர்கள் கொண்டு வந்து யோகீஸ்வரர் தங்கியிருக்கும் இடத்து வராண்டாவில் நிரப்பினர். ஆனால் யோகீஸ்வரர் எல்லாருடைய குறைகளையும் கேட்டு நிவர்த்திக்க முற்படுவதில்லை. கதவைத் திறந்து கொண்டு வெளியே வருவார். கூட்டத்தை ஒருமுறை பார்ப்பார். குறிப்பிட்ட ஒருவரை நடுக்கூட்டத்திலிருந்து அழைப்பார். “சீமந்தினி - இங்கே வா - காணாமல் போன மகனைப் பற்றித் தானே கேட்க வந்திருக்கிறாய்? என்பார். தன் அறைக்குள் காளிமாதாவின் பெரிய படத்தின் எதிரே உட்கார வைத்து காளியைத் தியானம் செய்து கொள்ளுமாறு கூறி, தானும் ஐந்து நிமிடம் நிஷ்டையில் ஆழ்ந்து பிறகு திடீரென்று கண்விழித்து,“போ - உன் மகன் ஆறாவது மாதம் திரும்பி வருவான்” என்பார். வயதான ஒரு மாதை அதுபோல் அழைத்து,“உன் மருமகள் பைத்தியம் தெளியாது. ஆனால் காளிமாதாவை தினம் தியானம் செய். நல்லதாகும்”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்பார்.

இப்படியாகக் கூட்டத்தில் யாரை அழைப்பார், யாரை அழைக்க மாட்டார் என்ற நிலையில் ஆறு மணி முதல் பத்து மணி வரை நூற்றுக்கணக்கான பெண்கள் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. பத்து மணிக்குப் பிறகு யாரும் யோகீஸ்வரரைத் தரிசிக்க முடியாது. ஜெயராமனின் வீட்டில் பூஜை செய்து, காணிக்கை ஏற்கப் போய்விடுவார். சிலரை மட்டும் அழைத்து, அவர்களுக்கு ஆரூடம் சொல்வது மற்றவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. ஏமாந்தவர்கள் வதந்திகளைப் பரவ விட்டனர். அருளானந்தா அதற்கெல்லாம் கவலைப்படவில்லை. அவருடைய பிரசங்கங்கள் நாளுக்கு நாள் சிறப்பாகக் கேட்போர் மனதைக் கவர்ந்தன.

ஒரு தொடர் முடிந்து பாகவத பிரசங்கத்துக்கு ஏற்பாடாகியது. அருளானந்தரின் புதுவித உரைகளைக் கேட்பதற்கு வேற்று மதத்தினர் சிலரும் ஆவலுடன் வந்திருந்தனர். அந்த உபந்யாசத் தொடருக்கு அன்று நீதிபதி ஒருவர் தலைமை தாங்க ஏற்பாடாகியிருந்தது. ஒவ்வொரு சிறு அம்சமும் அருளானந்தாவின் ஆலோசனையும் அனுமதியுமின்றி நடைபெறாது. அன்றைய பிரசங்க ஆரம்ப விழாவில் கடவுள் வணக்கம் பாடுவதற்கு யாரை அழைக்கலாம் என்று ஜெயராமன் யோசித்தார். சிலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டன. அருளானந்தரின் சம்மதம் கிடைக்கவில்லை. அந்தச் சமயம் கருணாகரன் வந்து சேர்ந்தார். அவர்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதியின் இசைத்திறமையை அறிவார். யோகீஸ்வரர் என்ன கூறுவார் என்று இருவரும் திகைப்பதற்கு வழியில்லாமல், திருச்சிப்பாடகி காந்திமதியின் பெயரைக் குறிப்பிட்டு விட்டார்கள். கருணாகரனுக்கு வியப்புடன் ஏற்பட்ட மகிழ்ச்சிக்குக் குறைவேயில்லை. சென்னையில் ஆயிரக்கணக்கான பேர் கூடியிருக்கும் பெரும் சபையில் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடும் பாக்யம் காந்திமதிக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமே என்று எண்ணினார். திருச்சியில் இருக்கும் காந்திமதியை அவர் எப்படி அறிந்தார்?

கருணாகரனும் அவர் மனைவியும் குறிப்பிட்ட நேரத்தில் காந்திமதியின் வீட்டிற்கு வந்தனர். வழக்கமாகக் காந்திமதியுடன் வரும் பாட்டிக்குக் காரில் இடமில்லாததால் வரமுடியவில்லை. தம்பூராவுடன் காந்திமதியும், பகவதியும் பின் ஸீட்டிலும், கருணாகரன் முன் ஸீட்டிலுமாக உட்கார்ந்தனர். கிளம்பும்போது மணி பகல் பதினொன்று. மாலை ஆறு மணிக்குப் பிரசங்கம் ஆரம்பம். யோகீஸ்வரரது வாக்கு வன்மை, அவரைப் பணிவதால் சித்தியாகும் காரியங்கள், அவரது பிரசங்கத்தைக் கேட்கக் கூடும் மக்கள் வெள்ளம் இப்படியாக யோகீஸ்வரரைப் பற்றியே வழி நெடுகப்பேசிக் கொண்டே வந்தனர். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பே சென்னை வந்து சேர்ந்து விட்டனர்.

அந்தப் பிரம்மாண்டமான பந்தலைப் பார்த்தவுடனேயே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காந்திமதிக்குப் பெரும் வியப்பு ஏற்பட்டது. எவ்வளவு கார்கள், எவ்வளபு சைக்கிள்கள்! நுழைவாசலில் வரிசையாக நிற்கும் இளம் பெண் தொண்டர்களின் மலர்ந்த முகமென்ன, பின்னர் சிறு மின்சார பல்புகள் பல வண்ணங்களில் ஒளி வீசும் நேர்த்தி என்ன, கொட்டகையில் வெளிச்சம் வீச ஒளி உமிழும் குழாய் விளக்குகள் என்ன, பச்சை வர்ண பிரம்பு நாற்காலியில் மதிப்புமிகு, பிரமுகர்கள் அமர்ந்து பிரசங்கம் ஆரம்பமாகப் போவதை எதிர்நோக்கியிருப்பதென்ன - மேடையின் அழகு தான் என்ன! யோகீஸ்வரர் நின்று பேசுவதற்கு ஓர் உயர்ந்த கூண்டும் அதில் ஒலி பெருக்கியைப் பொருத்தியிருக்கும் அழகு தான் என்ன! மேடையின் பின்புறத்துத் திரைச் சீலையில் அழகிய நடராசர் உருவம் ஒருபுறம் ஜகன்மாதாவும், யோகீஸ்வரர் வணங்கும் காளியும் ஒருபுறம் குழலூதும் கண்ணனும் அவன் இசையில் மயங்கிய ஆவினங்களுமான ஓவியம் ஒருபுறமுமாகத் தீட்டப்பட்டு மேடையின் மதிப்பை அதிகப் படுத்தின.

ஆறு அடிக்க ஐந்து நிமிடங்கள், சபையில் எங்கும் சலசலப்பு. அன்று தலைமை வகிக்கும் நீதிபதியுடன், இருவர் முன்செல்ல யோகீஸ்வரர் கம்பீரமாக நடந்து மேடையில் ஏறினார். ஜெயராமனும், கருணாகரனும் மேடைக்கருகே கைகட்டி நின்றனர். கடவுள் வணக்கம் பாடவந்த காந்திமதிக்கு என்றுமில்லாத படபடப்பு. சபைக் கூச்சம் என்று சொல்லிவிட முடியாது. வித்வத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சபைகளில் அவள் ஆண்டுதோறும் பாடவில்லையா?

அருளானந்தரை ஒரே ஒரு முறை தான் அவள் நோக்கினாள். அவரின் தோற்றம்,'ஸ்பாட்லைட்' எனப்படும் ஒளி வீச்சில் இன்னும் ஜ்வலித்துக் காட்சியளித்து. அவருடைய கூரிய கண்ணொளி அவள் உள்ளத்தில் பரபரப்பை அளித்ததா அல்லது அவரது கம்பீரத்தோற்றம் அவள் உள்ளத்தில் பரபரப்பை அளித்ததா தெரியவில்லை.

அவள் எப்படியோ நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு இளங்கோவடிகள் இயற்றிய "மூவுலகும் ஈரடியால் முறை நிறம்பா வகை முடிய" என்ற பாடலைப் பாடினாள். தம்பூராவின் சுருதி இல்லாமலேயே அவள் குரல் சுருதியுடன் இணைந்தது போல் ஒலித்தது. யோகீஸ்வரர் இமைகளை மூடிக்கொண்டு பெரிதும் பாடலை ரசித்தார். பாடலையும், பாடியவரையும் வெகுவாகப் பாராட்டியே அன்றைய சொற்பொழிவைத் தொடங்கினார். ஆங்கில மொழி அவர் நாவிலே தவழ்ந்து விளையாடியது. கட்டுண்ட நாகம் போல் சபையோர் மெய்மறந்து இருந்தனர். காந்திமதியின் மனநிலையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவள் இதயத்தில் ஏனோ சொல்லமுடியாத பரபரப்பு கடைசி வரையில் நிலவி வந்தது.

கூட்டம் முடிந்து கருணாகரன் தன் மனைவியுடன், காந்திமதியை அழைத்துக் கொண்டு ஜெயராமன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீட்டிற்குச் சென்றார். மாடியில் விசாலமான இடம் கருணாகரன் தங்குவதற்கு ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருந்தது. பகவதியும், கருணாகரனும் காந்திமதியின் பாடலினிமையை வெகுவாகப் புகழ்ந்தனர். மறுநாள் காலையில் யோகீஸ்வரரைத் தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஏற்பாட்டையும் செய்து கொண்டனர்.

யோகீஸ்வரருடைய அறையின் முன்பு வழக்கம்போல் ஏராளமான பெண்கள் கூடியிருந்தனர். காலையில் நீராடி,புஷ்பத் தட்டுடன் கூடியிருந்த பெண்கள் கூட்டத்தில் பகவதியும், காந்திமதியும் இருந்தனர்.

அருளானந்தர் பூஜையை முடித்துக் கொண்டு காலை ஆறு மணிக்கு அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். முதலில் அவர் வயதான ஒரு மாதை அழைத்தார். பிறகு மற்றொரு மாது. காந்திமதியும், பகவதியும் தங்களை யோகீஸ்வரர் எங்கே அழைக்கப் போகிறார் என்று பேசிக் கொண்டனர். அப்படி அழைத்தாலும் என்ன குறை தனக்கு இருக்கிறது அவரிடம் கேட்க என்று பகவதி நினைத்தாள். ஆனால் காந்திமதிக்கோ மனத்தை உருக்கிக் கொண்டிருக்கும் முக்கிய பிரச்னை இருந்தது. அவள் அதை யோகீஸ்வரரிடம் கேட்கலாம். காளிமாதா யோகீஸ்வரர் மூலமாக அதற்கு விடை கூறலாம்.

கதவு திறந்தது. யோகீஸ்வரர் மீண்டும் வந்தார். காந்திமதியை அழைத்தார். காந்திமதியின் உடல்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சிலிர்த்தது. யோகீஸ்வரர் எதிரில் பழத்தட்டை வைத்துவிட்டு வணங்கி எழுந்து நின்றாள்.

“இப்படி உட்காரு காந்திமதி” என்று யோகீஸ்வரர்…

“என்ன இது - அவர் எல்லாரையும் குழந்தாய் என்றல்லவா அழைக்கிறாராம். என்னை மட்டும் ஏனிப்படி…?” காந்திமதி நின்று கொண்டே இருந்தாள்.

“இப்படி உட்காரம்மா: உன் இனிய குரலை நேற்றுக் கேட்டு ஜகன்மாதாவும், குழலூதும் கோபாலனும், நடராசப் பெருமானும் மகிழ்ந்தனர்” என்று அவர் ஆங்கிலத்திலே கூறியபோது அவர் குரல் காந்திமதியின் உடலெங்கும் பரவி ஏதோ புரிய முடியாத சிலிர்ப்பை அளித்தது.

காந்திமதி தலைகுனிந்து நின்றாள். அவள் கண்களில் நீர் ததும்பியது.

“காந்திமதி - தெய்வ அருளால் இனிய குரல் படைத்திருக்கும் உன் வாழ்வில் உள்ள ஒரு குறையும் நீங்கிவிடும். இந்தா இந்த சாமந்தியை தலையில் சூடிக்கொள்” என்று கூறி ஒரு சாமந்தி மலரை எடுத்து அவளிடம் அளித்தார்.

‘வாழ்வில் உள்ள ஒரு குறையும் நீங்கிவிடும்’ என்ற அவரது வார்த்தை காந்திமதியின் செவி வழியே புகுந்து உடலெங்கும் பரவி ரீங்காரமிட்டது. ‘குறை நீங்கிவிடும்’‘குறை நீங்கிவிடும்’ என்று அவள் வாய்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முணுமுணுத்தது.

காந்திமதிக்கு என்னவோ யோகீஸ்வரரது பிரசங்கங்களைக் கேட்காமல் திருச்சிக்குச் செல்ல விருப்பமே இல்லை. கருணாகரன் குடும்பத்தார் பிரசங்கம் முடியும்வரை தங்கப் போவதாகக் கூறியபோது காந்திமதி தானும் தங்குவதாக தன்னை அறியாமலேயே கூறிவிட்டாள்.

நாள்தோறும் பிரசங்கம் தொடங்கும் முன்பு கீதை பாடப்பட்டது. ஆழ்வார் பாசுரங்கள் பாடப் பெற்றன. இனிய குரலில் காந்திமதியின் பாடலைக் கேட்கவே மக்கள் கூடலாயினர்.

காந்திமதி ஜெயராம் குடும்பத்து நெருங்கிய உறவினர் போலவே ஆகிவிட்டாள். யோகீஸ்வரருடைய பூசைக்கு வேண்டியவற்றை ஏற்பாடு செய்யும் ஜெயராமின் மனைவியுடன் தானும் உடனிருந்து ஒத்தாசை செய்து - பணிவிடை செய்யும் பேறு பெற்றாள். யோகீஸ்வரர் பிரசங்கத்துக்கு நன்கொடைகள் குவிந்த வண்ணமாக இருந்தன. அதில் குறிப்பிடத்தக்கது, எல்லாரையும் பிரமிக்க வைத்தது இருபதினாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் வந்ததைக் கூட்டத்தில் ஜெயராம் அறிவித்த செய்தி தான். பெயர் குறிப்பிட விரும்பாத நன்கொடையாளர் என்று அவர் கூறியது சபையோரிடையே மேலும் ஆச்சர்யத்தை அளித்தது.

நன்கொடை அளித்த தர்மிஷ்டரால் வெளியே எங்கும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நடந்து செல்லும் நிலையிலில்லை என்றும், அதனால் யோகீஸ்வரனின் பிரசங்கத்தைக் கேட்க வர முடியவில்லை என்றும், ஒருமுறை தரிசனம் செய்ய விரும்புவதாகவும் அவரது வீட்டிலே யோகீஸ்வரரை வரவழைத்து பாதபூஜை செய்ய விரும்புவதாகவும் ஜெயராம் வந்து மிகவும் பயபக்தியுடன் தெரிவித்தார்.

யோகீஸ்வரர் அந்தத் தர்மிஷ்டர் வீடு செல்வதற்குச் சம்மதித்தார். ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளன்று காலை வருவதற்குப் புறப்பட்டபோது ஒரு காரில் ஜெயராமும், கருணாகரனும் மற்றும் சில பிரமுகர்களும் சென்றனர். ஒரு காரில் யோகீஸ்வரர் சென்றார். மூன்றாவது காரில் பகவதி, காந்திமதி ஜெயராமின் மனைவி மூவரும் சென்றனர். கார் சென்று நிற்கும் வரை காந்திமதிக்கு எங்கே செல்கிறோம் என்பது தெரியாது. காரை விட்டு இறங்கியபோது தான் அவள் திடுக்கிட்டாள். அவள் வந்திருக்குமிடம், யோகீஸ்வரர் பாத காணிக்கை ஏற்க வந்திருக்குமிடம், இருபதாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தவரின் பங்களா… தனவந்தர் கோடீஸ்வரனுடையது.

அதோ! கோடீஸ்வரனும், அவருடைய தர்மபத்தினி காவேரியம்மாளும் வாயிற்படியருகே பயபக்தியுடன் வரவேற்க நிற்கிறார்களே! மிகவும் முதுமையடைந்து விட்டார்கள். கவலையாலும், துயரத்தாலும் மிகவும் மெலிந்து விட்டார்கள். எவ்வளவு ஆண்டுகள் கழிந்து விட்டன….!

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீட்டிற்குள் நுழையலாமா வேண்டாமா என காந்திமதி தயங்கினாள். ஆனால் அவளால் எப்படித் தனித்துத் திரும்பி வர முடியும்? கோடீஸ்வரனுடைய வீடு நடுஹாலில் யோகீஸ்வரன் அமர்ந்து பாசுரங்கள் சில பாட காந்திமதியை அழைக்கிறாரே - அதோ!

## 22

# நல்ல காலம் வருகிறது

காந்திமதியைச் சில பாசுரங்கள் பாடுமாறு யோகீஸ்வரர் பணித்தார். கோடீஸ்வரன் வீட்டு அதே கூடம். ஆனால் முன்பு இருந்த களை இல்லை. யோகீஸ்வரர் வரப்போகிறாரே என்பதற்காக ஏதோ ஒட்டடை அடிக்க முயன்றிருக்கிறார்கள். என்றாலும் தோரணம் போல் ஒட்டடை சில இடங்களில் தொங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளம் கூட பழுதாகி விட்டது போன்ற தோற்றம். கருணாகரனும், ஜெயராமும் மற்றும் ஓரிருவரே அமர்ந்திருந்தனர். யோகீஸ்வரர் ஓர் உயர்ந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். காவேரியம்மாள் சற்றுத் தள்ளினாற்போல் அமர்ந்திருந்தாள். காந்திமதியின் கண்களுக்கு அவர்களது தள்ளாத பருவம் தெரிந்தது. அவர்கள் தன்னைத் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்ற உறுதி காந்திமதிக்கு இருந்தது. அவர்கள் பார்வை மிகவும் மங்கி விட்டது செவிப்புலனின் சக்தியும் குறைந்துவிட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அதே கூடத்தில் பல வருடங்களுக்கு முன்பு அவள் தன் சகோதரனுடன் வந்ததும், காவேரியம்மாள் அவளைப் பாடுமாறு கூறியதும்,'காணக் கண் கோடி வேண்டும்' என்ற கீர்த்தனையைப் பாடியதும், அந்தப் பாட்டின் இனிமை போலவேஅவள் அந்த வீட்டு மருமகளாக வந்ததும் ஏதோ கனவுபோல் தான் அவன் மனத்திரையில் தோன்றின. புத்திரனை இழந்த சோகத்தால் நலிவுற்று, உயிரை மட்டும் கெட்டியாகக் கையில் பிடித்துக் கொண்டு இந்த உலகத்தில் வாழும் தன் மாமனார், மாமியாரைப் பார்க்கும்பொழுது அவள் நெஞ்சில் சொல்லமுடியாத வேதனை ஏற்பட்டது. மருமகளைப் பிரிந்தார்கள் கௌரவத்தை இழந்தார்கள் மகனையும் இழந்து நடைப் பிணமாக வாழும் அவர்களுடனே அருகிலேயே இருந்து ஏன் தொண்டாற்றிக் காலங்கழிக்கக் கூடாது? லட்ச ரூபாயை அவர்கள் கொடுத்தபோது மறுக்காமல் வாங்கிக் கொண்டோமே என்ன உறவு முறையோடு பெற்றுக் கொண்டோம்? ஏன் இப்போது மட்டும் அந்த உறவு முறை தோன்றவில்லை?

காந்திமதியின் மனத்திரையில் சஞ்சலச் சலனங்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. அதே சமயம் வாய் மட்டும் பாடலைப் பாடிக் கொண்டிருந்தது. யோகீஸ்வரரிலிருந்து அங்கே கூடியிருப்பவர்கள் வரை அனைவரும் பாடலை ரசித்துக் கொண்டிருந்தனர். பாட்டு முடிந்தது. யோகீஸ்வரர் சத் விஷயங்கள் சிலவற்றைப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பேசினார். நேரமாகிறது என்ற குறிப்பை ஜெயராம் உணர்த்தினார். புன்முறுவல் பூத்த யோகீஸ்வரர் கையமர்த்தி, கோடீஸ்வரனை நோக்கி,"உங்களுடைய தர்ம சிந்தனைக்கும், நல்ல குணத்திற்கும் ஒரு குறைவும் நேராது" என்றார்.

கோடீஸ்வரன் மெல்லச் சிரித்துக் கொண்டு,"கடவுள் என்னைத் தான் மிகவும் சோதித்து விட்டார்" என்றார்.

"சோதித்து விட்டார் என்று தானே சொன்னீர்கள் இல்லையா? இனி சோதிக்கமாட்டார் என்பது அதிலே புதைந்திருக்கிறதல்லவா? அதனால் இனி உங்கள் மனக்கிலேசம் மெல்ல மெல்லக் குறையும்" என்றார் யோகீஸ்வரர்.

காவேரி அம்மாள் விம்மும் குரலில்,"இனி குறையத்தான் என்ன இருக்கிறது? ஜகன்மாதாவின் திருவிளையாடல் அவ்விதம் என்றால் நாம் என்ன செய்ய முடியும்?" என்றாள்.

"ஜெய்பவானி! எனக்குப் புரிகிறது ஏதோ ஒருகணம் உங்களுக்கு மாதா மனக்கிலேசம் ஏற்படுத்தினாள். அது பூர்வ ஜன்ம பலாபலன்களின் விளைவு. இருந்தாலும் தங்களுக்கு ஆண்டவனின் அருள் பூர்ணமாக இருக்கிறது. தாங்கள் எதனால் மனக்கிலேசம் கொண்டீர்களோ அது தீர்ந்துவிடும். இன்னும் சில தினங்களில் வெளிச்சம் ஏற்படும்" என்று கூறி குங்குமச் சிமிழினின்று பிரசாதம் எடுத்து அளித்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

புறப்பட எழுந்த யோகீஸ்வரர் ஒருகணம் கோடீஸ்வரனை நோக்கி,"இதுதான் தங்கள் பங்களாவோ?" என்று கேட்டார். யோகீஸ்வரரின் வார்த்தைகளில் ஏதோ விடிவு கண்டு விட்டவர்போல் மயங்கியிருந்த கோடீஸ்வரன் திடீரென கனவிலிருந்து விழித்துக் கொண்டவர்போல்,"ஆமாம், ஆமாம். ஏழையின் குடில். வாருங்கள் வாருங்கள்... சிரமம் பாராமல் தங்கள் பாததூளியை இந்தக் கிரஹம் எங்கும் படரச் செய்யுங்கள். அதனால் இந்த இல்லத்தில் புது ஒளி பரவட்டும்..." என்று பரபரப்புடன் கூறினார்.

யோகீஸ்வரருடன் மற்றவர்களும் அந்தப் பங்களாவின் வனப்பைக் காணத் தொடர்ந்தனர். உடன் செல்லலாமா வேண்டாமா என்று தயங்கிய காந்திமதியை ஏதோ ஒரு சக்தி உந்திச் சென்றது.

அதோ அதே மாடிப்படிக்கட்டுகள் மாடியில் ஏறியவுடன் சிறுகூடம். கூடத்தின் இருபுறமும் அறைகள். அதோ கடற்கரை நோக்கிய அறை. அங்கே அதே ஜன்னல். அறை நடுவே அதோ அந்தக் கட்டிலும், படுக்கையும் இன்னும் அப்படியே இருக்கின்றனவே. அந்த அறையில் பெரிய புகைப்படம் பிரேம் போட்டு மாட்டப்பட்டிருந்தது. அதற்கு மாலை போடப்பட்டிருந்தது. யாருடைய படம்? யார் மாலை அணிவித்திருப்பார்கள்? அருகே சிறு விளக்கு எரிகிறதே? யார் ஏற்றியிருப்பார்கள்?

எங்கிருந்தோ வீணையின் நாதம் ஒலிப்பதுபோல்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தோன்றுகிறது. அதே மேஜை. மேஜை விளக்கு காந்திமதியின் நெஞ்சைப் பிடித்து யாரோ திருகுவது போல் தோன்றியது. விம்மி விம்மி அழவேண்டும் போல் தோன்றியது. மாமனார், மாமியார் கால்களில் வீழ்ந்து பாதங்களைப் பிடித்துக் கொண்டு 'ஹோ' வென்று அலறவேண்டும் போல் தோன்றியது.

யோகீஸ்வரர் ஏன் தன்னைப் பார்க்கிறார்... முக்காலும் உணரக் கூடிய சக்தி உடைய அவருக்குத் தான் ஒரு காலத்தில் இந்த வீட்டில் வாழ்ந்த செய்தி தெரிந்திருக்குமோ? அவருக்குத் தெரிந்திருக்கட்டும் அல்லது மற்றவருக்குத் தெரிந்திருக்கட்டும். அதோ தர்மமே உருவாக நிற்கிறாரே காவேரியம்மாள் அவருக்கு மட்டும் தெரிய வேண்டாம். தெரிந்தால் எவ்வளவு வருத்தப்படுவார்கள். எவ்வளவு தூரம் வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள், இந்த வீட்டை விட்டுப் போக வேண்டாம் என்று. எவ்வளவு தூரம் சொன்னார்கள்? ஏதோ வேகத்தில் ஓடினேன். என்னைச் சுற்றி ஒரு மாயை அப்போது சூழ்ந்த என்னை மறைத்தது. கல்யாணம்... வாழ்க்கை... கணவன் என்றாலே நான் வேறுவித அர்த்தம் கொண்டிருந்தேன். புற வாழ்க்கைப் போலியை நம்பினேன். ஹ_ம் எல்லாம் பழங்கதையாய் மெல்லப் போய்விட்டது. கணவனை வேண்டாம் என்று சொன்ன பிறகு, சட்ட பாஷையில் விவாகரத்து என்ற முடிவுக்கு வந்தபிறகு கணவனை இழந்தேன். நான் சமூகத்தில் எப்பெயரிட்டு அழைக்கத் தகுந்தவள். கல்யாணமாகாத

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கன்னியா? மாஜி மணப்பெண்ணா? மாஜி சுமங்கலியா? உம் அதைப் பற்றி என்னைக் கேள்வி கேட்க ஆளில்லை. எனக்கு ஏற்பட்ட செல்வாக்கும், செல்வமும், சமூகத்தில் என் நிலையை உயர்த்தி விட்டன. ஆனால் என் மனசாட்சி? இதோ இந்த மாளிகையில் நியாயமாக ராணிபோல் உலவ வேண்டிய நான் இன்று தொடர்பு ஏதும் இல்லாதவள் போல் வந்து நிற்கிறேன்.

காந்திமதி அங்கேயே நின்று கொண்டிருந்தாள். எல்லாரும் கீழே இறங்கிப் போய்விட்டார்கள். ஆனால் பகவதி 'காந்திமதி காந்திமதி' என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்து ஸ்தம்பித்து நின்றுவிட்ட அவளை அழைத்துச் சென்று விட்டாள்.

ஆனால் காந்திமதி - காந்திமதி என்ற குரல் அந்த மாளிகையில் ரீங்காரமிட்டது. காவேரியின் உள்ளத்திலும், கோடீஸ்வரன் உள்ளத்திலும் பெருங் கேள்வியை அன்றிரவே எழுப்பிவிட்டது.

## 23

# யோகீஸ்வரர் வாக்கு

இந்தக் கதையை முடிக்கும் நிலைக்கு வந்த பிறகு கூட நாம் 'ஸஸ்பென்ஸ்' எனப்படும் மறைபொருளை விடுவித்து உங்களிடம் கூறாமல் இன்னும் இருப்பது சரியில்லை. காந்திமதியின் உள்ளத்தை கோடீஸ்வரன் மாளிகையில் புலப்படுத்திய

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நாம் யோகீஸ்வரரது உள்ளத்தை மட்டும் ஏன் சொல்லவில்லை? யோகீஸ்வரர், முனிபுங்கவர் என்றால் அவர்களுக்கும் இதயம், எண்ணம், உணர்ச்சி என்பதேதும் கிடையாதா? அருளானந்தர் கோடீஸ்வரன் வீட்டிற்குக் காணிக்கை பெறுவதற்கு உடனே வரச் சம்மதிப்பானேன்? சென்னையில் எவ்வளவோ பிரமுகர்கள் வேண்டி வேண்டி அழைத்திருக்கின்றனர். இதயத்திலே வைத்துப் பூசை செய்பவர்கள் வணங்கி வணங்கி வருந்தி வருந்திக் கூப்பிட்டிருக்கின்றனர். என்றாலும் திடீரென்று கோடீஸ்வரன் வீட்டிற்குச் செல்வானேன்? அவரது மாளிகையில் ஒவ்வோர் அறையாகப் போய்ப் பார்ப்பானேன்?

அந்த விசாலமான கூடத்தில் உட்கார்ந்திருக்கும் போது அவர் விழிகள் அறையைச் சுற்றி வட்டமிட்டன. மாடிப் படிக்கட்டுகள் ஒவ்வொன்றையும் மெதுவாகவே கடந்தார். மாடியறையை அடையும் போது அவர் ஆழ்ந்த சிந்தனையில் ஏன் அமிழ்ந்தார்? அவருக்கு ஏதாவது நினைவு வந்து விட்டதா?

ஆம் அவருக்குப் பூர்வாச்ரம நினைவு வந்துவிடத் துணை செய்தது. அந்த நினைவு மறுநாள் காந்திமதியின் பணிவிடையின் போது அதிகமாகியது.

ஜெயராமின் பங்களாவில் அதிகாலை நான்கு மணியைக் குறிக்கும் கடிகார மணியோசை எழுந்தது. வழக்கமாக எழுந்து யோகீஸ்வரருக்கு வெந்நீர் வைத்து அவர்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஸ்நானம் செய்வதற்கு ஏற்பாடு செய்யும் ஜெயராமின் மனைவியால் அன்று படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியவில்லை. கடுமையான தலைவலியும் குளிர்காய்ச்சலும் அந்த அம்மாளைப் பிடித்திருந்தன. என்றாலும் கடமை தவறாது இருப்பதற்காக மெல்ல தட்டுத் தடுமாறி எழுந்து தன் அறையை விட்டு வெளிக் கூடத்திற்கு வந்தாள். அங்கு தான் காந்திமதி படுத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு உறக்கமே வரவில்லை. இரவெல்லாம் விழித்துக் கொண்டே பலவித யோசனைகளில் அமிழ்ந்த வண்ணம் படுத்திருந்தாள். கடிகாரத்தில் ஒவ்வொரு மணியும் அடிப்பது அவள் செவிகளில் தெளிவாக வீழ்ந்தது. அப்போது தான் ஜெயராமின் மனைவி தட்டுத்தடுமாறி எழுந்து வருவது அவளுக்குத் தெரிந்தது. காந்திமதி துள்ளி எழுந்து அந்த அம்மாளை மெல்லப் பிடித்து உட்கார வைத்தாள். உடல் தீபோல் கொதிப்பதை அறிந்தாள். அந்த நிலையிலும் யோகீஸ்வரருக்குப் பணிவிடை செய்யும் கடமை உணர்ச்சியைக் கண்டு மனம் நெகிழ்ந்து அந்த அம்மாளைப் போய்ப் படுத்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு, தானே காரியங்களைச் செய்ய விரைந்தாள்.

யோகீஸ்வரர் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுறுசுறுப்பாக எழுந்து குளிக்கும் அறையை நோக்கி துவட்டிக்கொள்ளும் சிறு துணியுடன் சென்றார். அவரது மேனியின் முழு வடிவமும் அப்போது தான் தெரிந்தது. மேலே ஏதும் போர்த்திக் கொள்ளாமல்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வெற்றுடம்புடன் தான் காட்சியளித்தார். அவர் குளிக்கும் அறைக்குள் நுழையும்போது, காந்திமதி விரைந்து பின்புறமாக அவரைத் தொடர்ந்து வந்தவள் ஒருகணம் ஸ்தம்பித்து நின்று விட்டாள். யோகீஸ்வரரின் முதுகில் தெரிந்த அந்த மச்சம்தான் அவளைத் திகைப்படையச் செய்து அவளுக்கு இரண்டு நாள்களாக ஏற்பட்ட சந்தேகத்தைத் தெளிவுப்படுத்தியது. ‘ஹா’ என்று கூவ முற்பட்ட தன் குரலையும் அவள் மெல்ல அடக்கிக் கொண்டாள். பிறகு பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானாள்.

யோகீஸ்வரர் குளித்துவிட்டு வழக்கம்போல் ஆடையணிந்து கொண்டு பூசை அறைக்கு வந்தார். காந்தமதி எல்லா ஏற்பாடுகளையும் செய்வதைக் கண்டு அவர் மெல்லிய புன்முறுவல் செய்து,“ஜெய்பவானி” என்று கூறிவிட்டு,“ஜகன்மாதாவுக்குப் பணிவிடை செய்ய இன்று நீ வந்ததே, நல்லகாலம் உனக்குப் பிறந்துவிட்டதற்கு அறிகுறி” என்று கூறினார்.

பூஜைக்கு முன்பு ஏதும் பேசாத யோகீஸ்வரர் இவ்வாறு கூறியவுடன் காந்திமதி மெல்ல கடைக்கண்ணால் யோகீஸ்வரரை நோக்கி, தைர்யத்தை வரவழைத்துக் கொண்டு,“ஆமாம், நல்ல காலம் வந்து விட்டது என்ற உறுதி ஏற்பட்டவுடனேயே நான் எப்போதும் காளிமாதாவின் காலடியில் இருந்து பணிவிடை செய்ய முடிவு செய்து விட்டேன்” என்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

யோகீஸ்வரர் அவளைக் கூர்ந்து நோக்கினார். அவருக்கு அன்று வழக்கப்படி நிஷ்டையில் ஆழ்ந்திருக்கும் எண்ணமே ஏற்படவில்லை. பாடகி காந்திமதியின் பேச்சு அவருக்கு வியப்பை அளித்திருக்க வேண்டும். “நல்ல காலம் வந்து விட்டது என்பதை எப்படிக் கண்டுபிடித்தாய்?” அவர் கேள்வியில் இருந்த கூர்மை விழிகளிலும் தெரிந்தது. காந்திமதி ஒருமுறை யோகீஸ்வரரை ஏறிட்டு நோக்கினாள். பிறகு,“தங்களுடைய சொல் எனக்கு நம்பிக்கை அளித்தது” என்றாள்.

யோகீஸ்வரர் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. மற்றவர் சலனத்தைப் போக்கும் அருளானந்தருக்குச் சலனத்தை அளித்து விட்டதோ காந்திமதியின் பதில்? இருந்தாலும் யோகீஸ்வரர் மௌனமாக இருந்துவிடவில்லை.

“என் சொல் நம்பிக்கையை அளித்துவிட்டது என்றால் ஜகன்மாதாவின் அருள் தான். ஆனால் உன் மனக்குறை நீங்க எந்தவிதத்தில் என் சொல் உனக்கு நம்பிக்கையை அளித்தது என்பதை எனக்குத் தெரிவிக்கலாமா?”

இது என்ன இருவரும் எதையோ மறைத்துக்கொண்டு பேசுவது போல் தோன்றுகிறதே. காந்திமதியின் உள்ளத்தில் நம்பிக்கை மட்டுமல்ல துணிவும் பிறந்து விட்டதோ? அவள் இதழ்களில் மெல்லிய நகை இழையோடுகிறதே...!

“சொல் மட்டுமன்று சுவாமி! நீங்கள் அளித்த சாமந்தி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எனக்குத் தைர்யத்தை அளித்தது. சாமந்தியைத்தொடர்ந்து 'உன் வாழ்வில் உள்ள ஒரு குறையும் நீங்கி விடும்' என்று கூறிய உங்கள் தேவ வாக்கு - என் நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. என் குறை தீரக்கூடியதன்று - ஆனால் நீங்களோ குறை தீர்ந்துவிடும் என்றீர்கள்."

"ஆம், தீர்ந்து விடும், என்று சொன்னது என் வாக்கா! அன்று. தேவி வாக்கு."

"சுவாமி! என் குறை உங்களுக்குத் தெரிந்திருக்கும் - அது தீர்க்கக்கூடிய குறையா? சுவாமி, தேவியின் சித்தம் எப்படிக் குறையைத் தீர்க்கப் போகிறதோ என்ற கவலை தான் இப்போது எனக்கு..."

"கவலைப்படலாமா? தேவி வாக்குப் பொய்யாகுமா?"

"அபசாரம் அபசாரம். அப்படி நான் சொல்லவில்லை. தாங்கள் என் நிலையை முற்றும் உணர்ந்திருப்பீர்கள். அதெப்படி சாத்தியமாகுமோ என்ற கவலை தான் எனக்கு."

"நீ எதைச் சொல்கிறாய் என்று எனக்குத் தெரியும். காந்திமதி! திருமணம் ஆனவுடன் ஏதோ பூர்வஜென்ம பாப நிகழ்ச்சியால் கணவனை விட்டுப் பிரிந்தாய். இல்லையா?"

"ஆமாம் சுவாமி! எதையும் பகுத்துணராத பருவம். என் சகோதரனும் என் வாழ்வையே உயிராகக் கருதி என்னைக் கணவனிடமிருந்து விடைபெற்றுக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொள்வதற்காக வழக்குத் தொடர்ந்தார்.”

“நீயும் தானே சம்மதித்தாய்? உன் கணவரிடமிருந்து நீ என்ன எதிர்பார்த்தாய்? உனக்கு என்ன ஏமாற்றமாகியது. ஏன் விடைபெற விரும்பினாய்? உன் கணவர் தீயகுணம் உடையவரா? பொல்லாதவரா? அல்லது உன் மாமனார், மாமியார் கொடுமைப்படுத்தினரா?”

“ஆகா! அப்படி நான் ஏதாவது மறந்து கூடக் கூறியிருந்தேனென்றால் கொடும் நகரத்தில் ஆழ்த்தப்படுவேன். சுவாமி! நேற்று நீங்கள் விஜயம் செய்திருந்தீர்களே… அடையாறில் உள்ள பங்களாவிற்கு உங்கள் பாத தூளியைப் பெற விரும்பி அந்த வீட்டின் எல்லா இடங்களுக்கும் தங்களை அழைத்துச் சென்றாரே ஒரு பெரியவர் - அவர் தான் சுவாமி என் மாமனார். ஹ_ம் நான் ஏதோ புதிய விஷயத்தை உங்களிடம் தெரிவிப்பது போல் சொல்கிறேன். தங்களுக்குத் தெரியாதது ஏதாவது உண்டா? அந்தப் பெரியவரைப் பற்றியோ, அந்த வீட்டு மகாலட்சுமி போன்ற என் மாமியாரைப் பற்றியோ, நான் தவறுதலாக என்ன கூறமுடியும்? ஆனால் அவர்கள் என்னை மருமகளாக ஏற்க வேண்டி என்னிடமிருந்து முக்கியமான செய்தியை மறைந்துவிட்டனர். அதனால் தான் நான் வீட்டினின்று சென்றுவிட நேர்ந்தது. அதுகூடத் தவறு என்று இப்போது தெரிந்திருக்கிறது.”

“தவறை உணர்ந்துவிட்டாயே. நல்லகாலம் உடனே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வந்துவிட்டது என்று அர்த்தம்."

"சுவாமி! எனக்கு நல்லகாலம் வருவது இருக்கட்டும். தாங்கள் நேற்று அடையாறு பங்களாவில் பெரியவர் கோடீஸ்வரனுக்கு என்ன அருள் செய்தீர்கள்? அவர் புத்திர சோகத்தால் நொந்து போயிருக்கிறார். அவருக்குப் புத்தொளி ஏற்படும் என்றீர்கள். அவருக்கு நல்லகாலம் என்றால் எனக்கும் நல்லகாலம் தானே!"

"ஆமாம், காந்திமதி ஆமாம். என் வாக்கு இதுவரை பொய்த்ததில்லை..." என்று கூறிய யோகீஸ்வரர் காந்திமதியின் உள்ளத்தில் இருப்பதை அறிந்துவிடுபவர் போல் நோக்கினார்.

"மன்னிக்க வேண்டும் சுவாமி! தங்கள் வாக்கின் மேன்மையைக் குறித்து ஊர் உலகமே போற்றுகிறது. ஆனால் - எனக்கும் - என் மாமனாருக்கும் வாழ்வில் ஒளி ஏற்பட வேண்டுமென்றால் அதற்கு நாங்கள் மறுபிறவி அன்றோ எடுக்க வேண்டும்?"- இப்படிக் கூறிவிட்டு காந்திமதி யோகீஸ்வரரைக் கீழ்க்கண்ணால் நோக்கினாள். துணிவும், சகஜபாவமும் அவள் பேச்சில், பாவனையில் ததும்பத் தொடங்கிவிட்டது போலும்!

யோகீஸ்வரர் கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும், காந்திமதியின் முகத் துணர்ச்சியைக் கவனிக்காதில்லை. அவரும் மெல்ல நகைத்தார். ஆனால் அடர்ந்த தாடியையும் மீசையையும் தாண்டி அந்தச் சிரிப்பு வெளியே தெரிய நியாயமில்லை. "மறு பிறவியா? மறு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பிறவி எடுக்காமலே இந்தப் பிறவிலேயே எதிர்பார்க்கலாம்...” என்று யோகீஸ்வரர் கூறினார். அதைக் கேட்டு காந்திமதி திடுக்கிடுவாள் என்று எதிர்பார்த்தார். ஆனால் காந்திமதி ஏதும் சலனமின்றி அமர்ந்திருந்தாள். பொழுது நன்றாக விடிந்துவிட்டது. எல்லாரும் எழுந்து நடமாடும் ஓசை எங்கும் கேட்டது. யோகீஸ்வரரைத் தரிசிக்க வெளியே பக்தர்கள் கூட ஆரம்பித்து விட்டனர்.

சட்டென்று யோகீஸ்வரர் எழுந்தார். காந்திமதி அதற்குமேல் அங்கே நிற்கவில்லை. அந்த அறையில் இருக்கும் மற்றொரு கதவின் வழியே வெளியே சென்று விட்டாள். அன்று முழுவதும் அவள் எதிலும் ஈடுபாடு கொள்ளவில்லை. ஏதேதோ நினைவுகள் - எண்ணங்கள் புரியாத குழப்பங்கள் சிந்தையில் தோன்றி அவளைச் சிறகடித்துப் பறக்க வைத்தன.

## 24

# தேவியின் சித்தம்

அருளானந்தரின் சொற்பொழிவு அன்றைய தினத்துடன் முடிவடைந்தது. அன்று நல்ல மழை. வானமே பொத்துக் கொண்டது போல் கொட்டியது. பேரிடி இடித்தது. மின்னல் அந்தப் பெரும் பந்தலுக்குள் நுழைந்து செல்வது போல் கோட சூரியஒளி வீசிச் சென்றது. இவ்வளவு இயற்கை இடையூறிலும் கூட்டத்திற்குக் குறைவில்லை. சொற்பொழிவாளர்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

யோகீஸ்வரரைப் பாராட்டிப் பேசினார்கள். காணிக்கைகள் குவிந்தன. காந்திமதியின் பாடலுடன் சொற்பொழிவு இனிது நிறைவேறியது. அன்று பம்பாய்க்குச் செல்லும் ரயிலில் இடம் கிடைக்கவில்லை என்று ஜெயராம் தெரிவித்தார். மறுநாள் பம்பாய் மெயிலில் இரண்டு ஸீட்டுகள் எப்படியாவது ரிஸர்வ் செய்யுமாறு யோகீஸ்வரர் கேட்டுக் கொண்டார். பம்பாயில் பத்து நாள்கள் கீதைப் பிரசங்கத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. விமானத்தில் ஜெயராம் ரெட்டியும், கருணாகரனும் வருவதாக ஏற்பாடு.

இரண்டு டிக்கட்டுகள் யாருக்கு என்ற கேள்வி எல்லார் மண்டையையும் உடைத்தது. கடைசியில் காந்திமதி யோகீஸ்வரருடன் செல்கிறாள் என்றவுடன் அனைவரும் ஒருவரை ஒருவர் கேள்விக் குறியுடன் பார்த்துக்கொண்டனர். அபிப்ராயம் ஏதும் உருவாகும் முன்பே பம்பாய் மெயிலில் யோகீஸ்வரரை ஏற்றுவதற்கான ஆயத்தங்கள் செய்ய அனைவரும் முனைந்தனர்.

பம்பாய் மெயிலில் புறப்பட ஐந்தே நிமிடம் இருக்கும்போது தான் யோகீஸ்வரரின் கார் காந்திமதியுடனும், ஜெயராமுடனும், ஸ்டேஷனை வந்தடைந்தது. முதல் வகுப்புப் பெட்டியில் இரண்டே பேர் தான். கடைசி வரை வேறு யாரும் வராததால் வண்டி புறப்பட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

யோகீஸ்வரரும், காந்திமதியும் மட்டும் அந்தப் பெட்டியில் தனியே அமர்ந்திருந்தனர். காந்திமதி ஏதோ புத்தகத்தின் பக்கங்களைத தள்ளலானாள். யோகீஸ்வரர் கீதா ரகஸ்யம் எனும் புத்தகத்தைப் படிக்கலானார். வெளியே மழை ‘சோ’ என்று பெய்து கொண்டிருந்தது. காரிருளைக் கிழித்து கொண்டு பம்பாய் மெயில் விரைந்து கொண்டு இருந்தது யோகீஸ்வரர் புத்தகத்தை மூடிவைத்தார்.

“காந்திமதி...! இரு தினங்களுக்கு முன்பு சொன்னேன் அல்லவா அந்த நல்ல நாள் உனக்குச் சம்பவிக்கும் வேளை வந்துவிட்டது” என்று கூறி காந்திமதியின் விழிகளை நேருக்கு நேர் சந்தித்தார். காந்திமதி தலை குனியவில்லை. வியப்படையவில்லை. அவள் முகம் சலனம் ஏதுமற்றிருந்தது.


“இதுபோன்ற இடத்தில் அந்த வேளை வரும் என்று எனக்குத் தெரியும்” என்றாள் காந்திமதி.

“உனக்குத் தெரியுமா? பம்பாய்க்கு உன்னை அழைத்துப் போகப் போகிறேன் என்பது உனக்குத் தெரியுமா?”

“தெரியாது. ஆனால் இதுபோன்ற தனிமையான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எனக்குத் தெரியும். இது போன்ற சமயத்தில் என்னுடைய வாழ்வு மீண்டும் மலரப் போகும் செய்தியைத் தாங்கள் கூறுவீர்கள் என்று எனக்குத் தெரியும்” என்று காந்திமதி கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

யோகீஸ்வரர் திடீரென எழுந்தார். விரைந்த, காந்திமதியின் அருகே வந்து அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டு,"என்ன சொல்கிறாய் காந்திமதி? என்னைவிட தபோவலிமை மிகுந்தவள் போல் பேசுகிறாயே.." என்றவுடன் காந்திமதி அவரது இரு கரங்களையும் எடுத்துத் தன் விழிகளில் ஒற்றிக் கொண்டு,"சுவாமி! தங்களுடைய கரம் பிடித்த தங்கள் துணைவிக்கு தங்கள் தபோ வலிமையில் கடுகளவாவது இல்லாமல் இருக்குமா?" என்று கூறும்போது அவள் விம்மினாள். அவள் கண்களில் நீர் தளும்பியது. உணர்ச்சி மிகுதியால் நெஞ்சை அடைத்தது.

வெளியே கடுமழை இடியுடன் பெய்து கொண்டிருந்தது. யோகீஸ்வரர் திடுக்கிட்டார். அவர் குரலில் அவரை அறியாமல் 'ஹாங்' என்ற ஒலி எழுந்தது. "காந்திமதி! என்னை இன்னான் என அறிந்து கொண்டு விட்டாயா?" என்று அவர் கூறும்போது காந்திமதி மண்டியிட்டு அவரது பாதங்களைப் பிடித்துக் கொண்டு,"சுவாமி! இன்னும் என்னைச் சோதனை செய்யாதீர்கள். தாங்கள் இன்னும் மாறு வேடத்திலேயே இருந்து என்னை வேதனைக்கு உள்ளாக்காதீர்கள். நான் பழைய காந்திமதி அல்லள், கேவலம் உடல் ஒன்றுக்காக மட்டும் தான் கணவன் தேவைப் படுகிறான் என்று எண்ணிக் கொண்டிருந்த காந்திமதி அல்லள். நான் மறுபிறவியே எடுத்து விட்டேன். இப்பிறவியில் என் கலி தீர்க்க உடனே வேடம் நீக்கி வாருங்கள் சுவாமி!" என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கதறினாள்.

காந்திமதியைத் தன் இரு கரங்களாலும் தூக்கி மெல்ல அவளை அணைத்துக் கொண்டு,"காந்திமதி! என்னை நீ அடையாளம் எப்படிக் கண்டு கொண்டாய்?" என்று கேட்டார்.

"தங்களை என்னால் அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் தங்களைக் கண்டது முதல் என் மனத்தில் மட்டும் சொல்லொணா உணர்ச்சி கொந்தளித்து எழுந்து கொண்டிருந்தது. நேற்று முன்தினம் தாங்கள் ஸ்நானம் செய்ய ஏற்பாடுகளை நான் செய்ய வரும்போது தங்கள் முதுகிலுள்ள கரு மச்சம் என் கண்களில் பட்டுவிட்டது. அதைக் கொண்டு தங்கள் குரல், நடை, பாவனை யாவற்றையும் கூர்ந்து கவனித்து உறுதி செய்துகொண்டேன். ஆனால் என்னால் நிச்சயமாக நம்பமுடியவில்லை, விமான விபத்தில் இறந்தவர் எப்படி யோகீஸ்வரராய் வர முடியும் என்ற எண்ணம் என்னைக் கலக்கியது. உங்கள் பேச்சும், தாங்கள் அருள் செய்ததும் என் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தன. மேலும் உறுதிபடுத்திக் கொள்வதற்காகவே, தாங்கள் பம்பாய்க்கு அழைத்தவுடன் வரச் சம்மதித்தேன். இல்லாவிடில் ஒரு பெண் வேறு ஆடவருடன் முதல் வகுப்பில் தனியே வரச் சம்மதிப்பாளா? சுவாமி! சொல்லுங்கள். சொல்லுங்கள் தாங்கள் இறந்தது உண்மை இல்லையா? எப்படிப் பிழைத்து வந்தீர்கள் என்பதைச் சொல்லுங்கள்" என்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

யோகீஸ்வரர் அமர்ந்து கொண்டார். கந்தநாதனான அவரும் நண்பர் தாமோதரனும் டோக்கியோவிலிருந்து புறப்பட்டதும், அஸ்ஸாம் அருகே விமானம் விபத்துக்குள்ளாகியதையும் சொல்லத் தொடங்கினார். பருவநிலை கோளாறு காரணமாக விமானம் மலையில் மோதிச் சிதறி வீழ்ந்தது. கந்தநாதனும வெகு தொலைவில் தூக்கி எறியப்பட்டான். அவன் உடல் எங்கும் தீக்காயங்கள். எவ்வளவு நேரம் அவ்வாறு கிடந்தானோ. விழித்து எழுந்தபோது ஒரு பர்ணசாலையொன்றில் சுற்றிலும் தாடியும், மீசையும் சடை முடியும் கொண்ட முனிவர்கள் சூழ்ந்திருக்கக் கண்டான்.

எழுந்திருக்க முடியாதபடி இடுப்பிலே பலத்த அடிபட்டு இருந்தது. முதுகுத் தண்டே முறிந்து விட்டது போன்ற உணர்ச்சி. அவர்கள் பேசும் மொழி கந்தநாதனுக்குப் புரியவில்லை. ஆனால் கல்லூரியில் ஸம்ஸ்கிருதம் படித்திருந்தானாகையால் ஏதோ கொஞ்சம் கொஞ்சம் அவர்களுடன் பேச முடிந்தது. பல மாதங்கள் அவன் படுக்கையில் கிடந்தான். முனிவர்கள் போல் தோன்றிய அந்த மனிதர்களின் தலைவர் ஒருநாள் கந்தநாதனை வந்து பார்த்தார். கந்தநாதனின் வரவாறு முழுமையும் அவர் அறிந்தார். ஜப்பானில் சரி செய்ய முடியாத கந்தநாதனின் உடல் குறைபாட்டை அந்த முனிவர் தலைவர் பல பச்சிலைகளைத் தவறாமல் மூன்று மாதங்கள் உட்கொள்ளச் செய்து குணப்படுத்தினார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உடலும் தங்கம்போல் பளபளத்தது. படுக்கையில் அவன் இருந்த நாள்களில் சகல புராண, இதிகாசங்கள், வேத வேதாந்தங்கள், உபநிஷதங்கள் ஆகியவற்றைத் தலைவரும் சிஷ்யர்களும் வடமொழியில் கற்பித்தனர். நயங்களை எடுத்துக் கூறினர். தேவி உபாசனை மந்திரங்களும் செவியில் ஓதப்பட்டன. தாந்திரிகத்தில் அவன் கற்றுணரவும் தலைவர் வழி செய்தார். ஆண்டுகள் ஓடிக் கொண்டே இருந்தன. கந்தநாதன் முற்றிலும் புது மனிதனாக ஆனான். அவன் இருக்குமிடம் பூமியில் எந்தத் திசையில் இருக்கிறது என்று கூட அவன் அறிய முடியாத நிலை இருந்தது. அவனும் அறிய முற்படவில்லை. நண்பன் தாமோதரனை இழந்து, மனைவியையும் சட்டப்படி பிரிந்து இந்த உலகில் ‘கந்தநாதன்’ என்ற பெயரில் வாழ்வதில் பயன் இல்லை என்ற முடிவுக்கு வந்ததால் கானகத்திலேயே காலத்தைக் கழித்துவிடத் தீர்மானித்தான். தேவி உபாசனையும், மந்திர தந்திரப் பயிற்சியும், பழைய நிலையை மறக்க உதவின.

ஏழெட்டு வருடங்கள் ஓடியிருக்கலாம். ஒருநாள் அந்தக் கானகத்தினின்று சாதுக்கள் எல்லாம் கும்பமேளாவில் கலந்து கொள்ளப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கந்தநாதனும் தன் நீண்ட சடையுடனும், தாடி மீசையுடனும் கோவண ஆடையுடனும் புறப்பட்டான். கும்பமேளா பெரும் ரகளையில் முடிந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் நெரிசலில் உயிர் நீத்தார்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கந்தநாதன் அந்தக் கோரக் காட்சியைக் கண்டு மனம் நொந்து தனியாக ஓரிடத்தை நாடி நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டான். அவனைக் காப்பாற்றிய சாதுக்கள் கூட்டத்தினின்று பிரிந்து விட்டான். சில நாள் கழித்து ஒவ்வோர் ஊராகச் சுற்றிக் காசி வந்து சேர்ந்தான். அங்கு தான் தன் பெயரை அன்பானந்தர் என்று மாற்றிக் கொண்டான். ஏதேச்சையாக ஒரு மில் அதிபர் காரில் ஏறப்போனவரைச் சட்டென்று தடுத்து நிறுத்தி,“ஓர் ஆபத்து காத்திருக்கிறது. சட்டென்று காசி விசுவநாதர் இருக்கும் திக்கை நோக்கி நமஸ்காரம் செய்’ என்று கூறவும், அவர் திக்பிரமையுற்றவராய் ஒன்றும் சொல்லத் தெரியாமல் வணங்கிய சமயம் எங்கிருந்தோ துப்பாக்கிக் குண்டு சரேல் என்று பாய்ந்து வந்து குறி தவறி சுவரில் பாய்ந்து சிதறியது. யோகீஸ்வரனின் ஞான திருஷ்டியை அந்த முதலாளி பாராட்டி தன்னுடனேயே சில காலம் இருக்க வேண்டினார். ஆனால் அன்பானந்தர் மறுத்து விட்டார். பாரத நாடு முழுவதும் சுற்றி, நல்லுரைகளை மக்களுக்குத் தெரிவிக்க விரும்பினார். அந்த தொழிலதிபர் உதவியால் பல நகரங்களுக்குச் செல்ல ஏற்பாடாகியது. அப்போது முதல் அன்பானந்தரின் புகழ் பரவ ஆரம்பித்தது. சென்னைக்கும் வந்து புகழ் கொடியை நாட்டும் சந்தர்ப்பம் கிட்டியது.

நடந்தவற்றைச் சுருக்கமாக யோகீஸ்வரர் கூறியதைக் கேட்டு வந்த காந்திமதி கடைசியாக,“நீங்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இறந்துவிட்டீர்கள் என்று ஊர் உலகம் எல்லாம் நம்பியது உங்கள் பெற்றோர் சோகத்தில் ஆழ்ந்தனர். நான் பேதைப் பெண். ஏதும் செய்ய முடியாது தவித்தேன். ஊர் உலகத்துக்கு அன்பைப் போதிக்கும் நீங்கள் உங்கள் கல் நெஞ்சத்தைச் சற்று இளகவிட்டு, வந்திருக்கக் கூடாதா?" என்றாள்.

யோகீஸ்வரர் மெல்ல நகைத்தார். "இல்லை, காந்திமதி இல்லை. நான் வராதது மிகவும் நியாயம். அப்போது வந்திருந்தால் மட்டும் உன்னுடன் நான் வாழ்ந்திருக்க முடியுமா? நான் புதிய மனிதன் என்பதை அப்போது நிரூபிக்கவும் முடியாதே" என்றார்.

"இப்போது நீங்கள் வந்து உங்கள் உருவத்தைத் தெரியப்படுத்தியதால் மட்டும் என்ன பலன்? நீங்கள் புதிய மனிதராக மாறி புதுப் பிறவி எடுத்தது போல் வாழ்வதா? உங்கள் வரையில் பெயரும் புகழும், பெருமையும். எனக்கு என்ன சுவாமி அதனால் பலன்? ஊர் உலகம் எனது கரம்பிடித்த கணவர் மீண்டும் வந்துவிட்டதாக ஒப்புக்கொண்டு விடுமா?"

"காந்திமதி! உலகம் ஒப்புக் கொள்ளட்டும் ஒப்புக் கொள்ளாதிருக்கட்டும். நீ ஒப்புக் கொள்ளுகிறாய் அல்லவா? நான் தான் உன்னை அக்னி சாட்சியாக மணந்தவன் என்பதை நம்புகிறாய் அல்லவா? அந்த ஓர் இரவில் என் கரங்களைத் தீண்டினாய். என் முதுகைத் தடவிக் கொடுத்தாய். என் விழிகளை உற்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நோக்கினாய். அவற்றை மறந்திருக்க மாட்டாய். ஆனால் நான் என் குறைபாட்டை மறைக்க என்னென்னவோ நாடகமாடினேன். உன்னிடம் கூறாமல் வெளியூர் பயணம் புறப்பட்டேன். ஜப்பானிலிருந்து வெற்றிகரமாகத் திரும்பாவிடினும் அஸ்ஸாம் மலைக் காடுகளிலிருந்து வெற்றிகரமாகத் திரும்பி விட்டேன். என் உடல் வஜ்ரம் போல் ஆகிவிட்டது. தாதுக்களைப் பெரிதும் வளர்க்கும் சர மூலிகைகள் என் உடல் ரத்தத்தில் ஊறிவிட்டன. உன் இளம் வயதுக் கனவையும், ஆசையையும் தீர்க்கப் புதுக் கந்தநாதனாக வந்துவிட்டேன். என்னுள் எழும் காமத்தீயை என் தவ வலிமையால் அடக்கிக் கொண்டேன். ஆனால் உன்னைக் கண்டவுடன் என்னுள் பாச உணர்வு விசுவரூபமெடுத்தது. இதைத் தெரிவிக்கத்தான் உன்னையும் என்னுடன் பம்பாய்க்கு அழைத்தேன். பம்பாய் ஓட்டலில் உன்னிடம் இவற்றையெல்லாம் கூறலாம் என் எண்ணினேன். ஆனால் அவ்வளவு நேரம் கூடத் தாமதிக்க தேவி விடவில்லை. ஓடும் ரயிலிலேயே வேளையைக் கூட்டுவித்துவிட்டாள். காந்திமதி! வா, என் அருகே வா. எந்தச் சுகத்தை நீ எதிர்பார்த்து ஏமாந்தாயோ அதை இன்றே அளிக்கிறேன். பம்பாய் சென்றவுடன் நான் உன்னைப் பதிவுத் திருமணம் செய்து கொள்கிறேன். விபத்தில் நான் இறக்கவில்லை என்று பத்து வருடங்கள் கழித்துக் கூறினால் யாரும் நம்ப மாட்டார்கள். அதனால் நாம் புதிய பிறவி எடுத்ததுபோல் தம்பதிகளாவோம்…"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அது என்ன. தட தட கட கட பட பட... அண்டம் இடிந்து விழுந்து விட்டதா?

ஹே....ஹ_...ஹ்ரீ...ஹ_ம்...ஜங்... என்று ஒலிக்கிறதே என்ன ஒலி...

யோகீஸ்வரர் கரங்களில் இதுவரை பிணைந்திருந்த காந்திமதி சட்டென்று தீயை மிதித்தது போல் விலகினாள். வேடனைக் கண்ட மான்போல் மிரண்டு ஒதுங்கினாள். ஓடும் வண்டியின் கதவுக்கருகில் ஓடிப்போய் நின்று கொண்டாள். “சுவாமி... சுவாமி! வேண்டாம். காந்திமதியின் கணவன் என்ற பெயர் யோகீஸ்வரராகப் பிரபலமாகிய தங்களுக்கு வேண்டாம். அரும்பாடுபட்டுக் கிடைத்த பெரும் பெயரை இந்தப் பேதைப் பெண் காந்திமதியினால் இழந்து விடாதீர்கள். இன்று நாமிருவரும் தனியே முதல் வகுப்பில் பிரயாணம் செய்வதையே என்ன கூறி அவதூறாகப் பரப்பப் போகிறார்களோ? கழுகுபோல் திரியும் சில பத்திரிகைக்காரர்களுக்கு இந்தச் செய்தி தெரிந்தாலே வந்தது மோசம். எனக்கு எந்தவிதக் கவலையுமில்லை. ஆனால் தங்களைத் தெய்வமாக நினைத்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பக்தர்களை ஏமாற்றமடையச் செய்துவிடாதீர்கள். இந்தக் காந்திமதி கணவனில்லாமல் காலத்தை ஓட்டிவிட முடியும். அல்லது தங்களை அடைந்தாலும் எந்தவித சுகமும் எனக்கு ஏற்படாது. தவ வலிமை மிக்கவரை மயக்கி விட்டாள். விசுவாமித்திரரை தவ வலிமை இழக்கச்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செய்த மேனகையாகி விட்டாள் என ஏசுவர். ஆனால் தாங்கள் அப்படியல்லர். தவ வலிமையால் உடலைப் புடம் போட்ட பொன்னாகக் கொண்டவர். மந்திர - தந்திரத்தால் மக்கள் மனத்தில் பெரும் நம்பிக்கையை ஊட்டும் வல்லமை படைத்தவர் பாண்டித்யத்தால் ஏராளமான பிரமுகர்கள் போற்றிப் புகழ்ந்து தங்களைக் குருவாகக் கருதும் உயர் பீடத்தை அடைந்தவர். கம்பீரமான தங்கள் தோற்றத்திலே மயங்கித் தங்களுக்குத் தத்தம் இதயத்தில் உயர்ந்த இடத்தை அளித்திருப்பவர்கள் பலர். அவர்களுடைய உயர்ந்த எண்ணத்தில் மண் விழச் செய்யாதீர்கள்.

உங்கள் பேச்சைக் கேட்கவரும் பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களைப் பற்றித் தவறாகப் பேச இடங்கொடாதீர்கள். இந்தக் காந்திமதியின் கணவனாக நீங்கள் மீண்டும் ஆகி என் உடலுக்கும், உள்ளத்துக்கும் திருப்தி அளிப்பதை விட மிகப் பெரிய செயல்கள் தங்கள் எதிரே நிற்கின்றன. அவற்றைப் பாழ்பட விடாதீர்கள். எல்லாவற்றையும் விட காவியுடை அணிந்தவர்களுக்கும் தவவலிமை மிக்கவர்களுக்கும் தீர அவப்பெயரை ஏற்படச் செய்யாதீர்கள். வேண்டாம். வேண்டாம். நான் உங்கள் எதிலே இருப்பதால் உங்கள் மனம் கெடும். இதயம் சலனமடையும். தவம் கெடும். தர்ம உபதேசங்கள் தாழ்வடையும். அன்பானந்தராகவே வாழ்ந்து எனக்கு மறுவாழ்வும் திருமணத்தின் பயனையும் அளிப்பதாக நினைத்து உயர்நிலையிலிருந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

குப்புற வீழ்ந்து விடாதீர்கள்.

ஆனால் அன்பானந்தர் பாய்ந்து சென்று,"காந்திமதி நில் நில். நான் ஜப்பான் சென்றதும் உனக்காக. பிழைத்து கானகத்தில் மூலிகைகளை உண்டு உடல் நலம் பெற்றதும் உனக்காக. சென்னையில் பிரசங்கம் செய்ய வந்தது உனக்காக. உன்னைச் சந்தித்த பிறகு எனக்கு ஏன் இந்த வேஷம்? பாம்பு சட்டையை உரித்து விடுவது போல் இந்தத் தோற்றத்தை களைந்து விடுகிறேன். இடையில் புனே நகரிலேயே இறங்கிவிடுவோம். காவி உடை களைந்து, தாடி மீசை சடைநீக்கிப் புது உருவம் பூணுவேன். வேண்டுமானால் மனித சஞ்சாரமற்ற இடம் சென்று வாழ்வோம். நீ அற்புதப் பாடல்களைப் பாடிக் கொண்டே இரு. நான் கேட்டுக் கொண்டே இருப்பேன். இருவரும் காலத்தைக் கழிப்போம். போகாதே காந்திமதி - போகாதே" என்று சொல்வதற்குள் "இல்லை இல்லை நான் விதியை மாற்றுவேன்... என்று கூறிக்கொண்டே காந்திமதி கதவைத் திறந்து வேகமாக ஓடும் ரயிலிலிருந்து அந்தக் காரிருளில் கீழே குதித்து விட்டாள்.

ஆனால் அவள் மட்டும் அநாதையாகக் குதிக்கவில்லை. இன்ஜினுடன் சேர்ந்து ஐந்தாறு பெட்டிகளும் முதல் வகுப்பு உட்பட திடீரென தடம் புரண்டு தூக்கி எறியப்பட்டன. ரயில் தண்டவாளத்தில் ஏற்பட்டிருந்த நாச வேலை காரணமாக பம்பாய் மெயில் தடம் புரண்டது. நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அன்பானந்தர் பெரிதாக நகைத்தார்.

“காந்தி! என் விழியில் நிறைந்தவளே! ஓர் உண்மையான பெண்ணின் தேவையைப் பூர்த்தி செய்வது தான் புருஷ லட்சணம். திருமண மந்திரங்கள் என்ன சொல்கின்றன தெரியுமா? என் தாயின் சொல்லுக்குப் பணிந்து உன்னை ஏற்றேன். கணவன் மனைவி உடல் தொடர்பு இல்லாமல் இலட்சியத் தொடர்புடன், அன்புச் சிந்தனையுடன் நல்ல நண்பர்களாக வாழக்கூடாதா? நான் அப்போது சிந்திக்கவில்லை ஓர் உத்தம ஸ்திரியின் கற்பு குலையாமல் காப்பது தான் உண்மையான கணவனின் தர்மம். அதை நிறைவேற்றாமல் போய் விடுவேனோ என்று பயந்தேன். ஆனால் விதி வேறுவிதமாக விளையாடி விட்டது” என்று உணர்ச்சிபூர்வமாகப் பேசிக் கொண்டே காந்திமதியின் தோள்களை வலுவாகப் பற்றப் பாய்ந்தார்.

“இல்லை, சுவாமி! இல்லை. விதியை நீங்களும் நம்புகிறீர்கள். ஆனால் நானும் நம்புகிறேன். விதியை மாற்ற முடியாதா அல்லது விதி ஏதாவது இப்போது வழிகாட்டாதா…உங்கள் நற்பெயரைக் குலைக்க மாட்டேன்..” என்று கூறியபடியே காந்தி, அவரிடமிருந்து விடுபடப் போராடி வண்டியின் ஓர்புரம் சென்றாள்.

மறுநாள் அந்தக் கோர விபத்தை வர்ணித்து எழுதியிருந்த நாளிதழ்களில் சிறு தலைப்பிட்டு நிருபர் கண்ட செய்தியையும் வெளியிடத் தவறவில்லை. “…

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தமது சொல் வன்மையால் கேட்போரை மெய்மறக்கச் செய்துவந்த அன்பானந்தர் பம்பாய் மெயில் முதல் வகுப்புப் பெட்டியில், பம்பாயில் நடைபெற இருந்த பிரசங்கத் தொடருக்காகச் சென்று கொண்டிருந்தவர் விபத்தில் மரணமடைந்தது ஈடுசெய்ய முடியாத நஷ்டம். பக்திப் பாடல்களைப் பாடி லட்சோப லட்சம் மக்களை மகிழ்விக்கும் பிரபல பாடகி காந்திமதி அவர்களும் மெயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். விபத்து அவர் உயிரையும் கொள்ளை கொண்டது. காந்திமதியின் மறைவு சங்கீத உலகுக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டம்."

செய்தியைச் சென்னையில் பார்த்த ஜெயராமும் கருணாகரனும் கண்ணீர் பெருகி அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை.

அடையாறு பங்களாவில் நல்ல காலம் வரும் என்ற நம்பிக்கையில் கோடீஸ்வரனும், காவேரியம்மாளும் எவ்வளவு காலம் காத்திருக்கப் போகிறார்களோ?

முற்றும்

Click & Join - https://t.me/tamilbooksworld